(ண). 2023 ஆம் ஆண்டிற்கான நிகழ்ச்சித் திட்டத்தின்படி செலவுக்கூற்று (ACA 2(i) படிவம்) மற்றும் திறைசேரி அச்சு குறிப்புகள் SA-10 இன்படி, 2023 ஆம் ஆண்டில் மூலதன சொத்துக்களை கையகப்படுத்துவதற்கான செலவு ரூபா மில்லியன் 11,605.50 என்றபோதிலும் திறைசேரியினால் பராமரிக்கப்படும் மொத்த நடைமுறையில்லா சொத்துக்கள் கணக்கு அறிக்கை (SA 82) இன்படி மதிப்பாய்வு ஆண்டில் சொத்துக்களை கொள்வனவு செய்தல் 3,698.37 மில்லியன் ரூபாவாக இருந்ததால், சொத்துகளின் செலவினம் ரூபா மில்லியன் 7,907.13 குறைவாக காட்டப்பட்டுள்ளது.

(த). அமைச்சின் நிதிக்கூற்றின்படி, 2023 டிசம்பர் 31 ஆம் திகதிக்கு நடைமுறையல்லா சொத்துக்களின் பெறுமதி ரூபா மில்லியன் 204,292.96 ஆக இருந்தபோதிலும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட சுகாதார அமைச்சு மற்றும் அதன் கீழுள்ள 63 நிறுவனங்களுக்கான 2023 டிசம்பர் 31 ஆம் திகதியில் காணப்பட்ட நடைமுறையில்லா சொத்துக்கள் பற்றிய விபரங்களை குறிக்கும் கணினி மென் பிரதிகளின்படி, அந்த சொத்துகளின் பெறுமதி 215,870.86 மில்லியன் ரூபா என குறிப்பிடப்பட்டிருந்தது. அதன்படி 11,577.90 மில்லியன் ரூபா வித்தியாசம் அவதானிக்கப்பட்டது.

(ந). 2018 ஆம் ஆண்டின் பின்னர் பேராதனை வைத்தியசாலை வளாகத்தில் சிறுநீரக சிகிச்சை பிரிவொன்றும் மற்றும் பேராதனை பல்கலைக்கழகத்தின் ஒதுக்கீட்டின் கீழ் 03 மாடிகள் கொண்ட சத்திர சிகிச்சை வாட்டுத் தொகுதி நிர்மாணிக்கப்பட்ட போதிலும், அந்த கட்டிடத்தின் பெறுமதியை கண்டறிந்து கணக்கு வைக்கப்படவில்லை.

(ப). 2023 டிசம்பர் 31 ஆம் திகதிக்கு மொத்த நடைமுறையில்லா சொத்துக்கள் கணக்கு அறிக்கை (SA 82) இன்படி மற்றும் மதிப்பாய்வு ஆண்டிற்கான நிதிக்கூற்றில் நடைமுறையில்லா சொத்துக்களின் தொடக்க இருப்பு 204,292.96 மில்லியன் ரூபா என குறிப்பிடப்பட்டுள்ள போதிலும், 2024 ஆம் ஆண்டிற்கான மொத்த நடைமுறையில்லா சொத்துக்கள் கணக்கு அறிக்கை (SA 82) இன்படி 2024 ஜனவரி 01 நிலவரப்படி அந்த பெறுமதி 263,472.20 மில்லியன் ரூபா ஆகும். அதன்படி 59,179.24 மில்லியன் ரூபா வித்தியாசம் காணப்பட்டது. மேலும் இந்த வித்தியாசத்திற்கான காரணம் கணக்காய்வில் விளக்கப்படவில்லை.

(ம). அமைச்சு மற்றும் அதனுடன் இணைந்த நிறுவனங்களில் 2023 டிசம்பர் 31 ஆம் திகதியில் காணப்பட்ட நடைமுறையில்லா சொத்துக்கள் பற்றிய தகவல்களைக் காட்டும் கணினி மென் பிரதிகளின்படி 03 திட்டங்களுடன் தொடர்புடைய 1,857.48 மில்லியன் ரூபா மதிப்புள்ள நடைமுறையில்லா சொத்துக்கள் 2024 ஆம் ஆண்டின் மென் பிரதிகளில் தொடக்க இருப்புகளாக சேர்க்கப்படவில்லை.

(ய). 2024 ஆம் ஆண்டுக்கான திறைசேரி அச்சு குறிப்புகள் SA-10 இன்படி, 2024 ஆம் ஆண்டில் மூலதன சொத்துக்களை கையகப்படுத்துவதற்கான செலவு 15,723.34 மில்லியன் ரூபா என்றபோதிலும், திறைசேரியின் மொத்த நடைமுறையில்லா சொத்துக்கள் கணக்கு அறிக்கையின்படி மதிப்பாய்வு செய்யப்பட்ட ஆண்டில் சொத்துக்களை கொள்வனவு செய்தல் 10,713.70 மில்லியன் ரூபாவாக இருந்ததால், சொத்துக்களுக்கான செலவினம் 5,009.64 மில்லியன் ரூபா குறைவாக காட்டப்பட்டுள்ளது.

(ர). அமைச்சின் நிதிக்கூற்றின்படி, 2024 டிசம்பர் 31 ஆம் திகதியில் காணப்பட்ட நடைமுறையில்லா சொத்துக்களின் செலவு 254,485.18 மில்லியன் ரூபா ஆகும். கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட சுகாதார அமைச்சு மற்றும் அதனுடன் இணைந்த 61 நிறுவனங்களில் 2024 டிசம்பர் 31 நிலவரப்படி நடைமுறையில்லா சொத்துக்கள் பற்றிய தகவல்களைக் காட்டும் கணினி மென் பிரதிகளின்படி சொத்துக்களின் செலவினம் 243,639.47 ஆகும். அதன்படி, 10,845.71 மில்லியன் ரூபா வித்தியாசம் அவதானிக்கப்பட்டது.

(ல). கோவிட் 19 அவசர சிகிச்சை மற்றும் சுகாதார அமைப்புகளை தயார்படுத்தலுக்கான மூன்றாவது மேலதிக நிதியளிக்கும் திட்டத்தின் நிதி ஒதுக்கீட்டின் மூலம் 2022 ஆம் ஆண்டில் 173.13 மில்லியன் ரூபா செலவில் 6800 லீட்டர் வெற்று ஒக்சிஜன் சிலிண்டர்கள் (Oxygen Cylinders) 3764 கொள்வனவு செய்யப்பட்டு வைத்தியசாலைகளுக்கு வழங்கப்பட்ட போதிலும், அந்த சொத்துக்களின் செலவு அமைச்சின் நடைமுறையில்லா சொத்துக்களின் கீழ் கணக்கு வைக்கப்படவில்லை.

(வ). அமைச்சின் கீழ் செயற்படுத்தப்பட்ட 02 திட்டங்களுடன் தொடர்புடைய நிதிக்கூற்றின்படி, 2024 டிசம்பர் 31 நிலவரப்படி, மொத்தம் 46.44 மில்லியன் ரூபா நடைமுறையில்லா சொத்துக்கள் காணப்பட்டதுடன், இந்த சொத்துக்கள் அமைச்சின் நிதிசாரா சொத்துக்களின் கீழ் கணக்கு வைக்கப்படவில்லை.

(ழ). நாவலப்பிட்டி மாவட்ட பொது வைத்தியசாலை 2023 ஆம் ஆண்டு மத்திய அரசால் கையகப்படுத்தப்பட்டதுடன், அதன் அனைத்து நடைமுறையில்லா சொத்துக்களும் கணக்கு வைக்கப்பட வேண்டும் என்றபோதிலும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட புதிய CIGAS கணினி மென்பொருளின்படி, ஏனைய இயந்திரங்கள் மற்றும் உபகரண செலவு 5.17 மில்லியன் ரூபா மட்டுமே நடைமுறையில்லா சொத்துக்களாக கணக்கு வைக்கப்பட்டுள்ளது.

(ள). 2024 ஆம் ஆண்டின் மொத்த நடைமுறையில்லா சொத்துக்கள் கணக்கு அறிக்கையில் (SA 82), போக்குவரத்து உபகரணங்களின் கீழ் கப்பல்கள் என குறிப்பிடப்பட்டுள்ள 1.15 மில்லியன் ரூபா காட்டப்பட்டுள்ளதுடன், அதில் சுமார் 382,440 மில்லியன் ரூபா மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்குரிய சொத்துக்கள் என கணினி மென் பிரதியில் சேர்க்கப்பட்டுள்ளது. மீதமுள்ள 764,880 ரூபா தலைப்பு எந்த நிறுவனத்திற்குரியது என்பது குறித்து கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட CIGAS கணினி மென் நகலின் மூலம் உறுதிப்படுத்தப்படவில்லை.

(ற). கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட 2023 டிசம்பர் 31 ஆம் திகதிக்கு சுகாதார அமைச்சு மற்றும் அதனுடன் இணைந்த வைத்தியசாலைகள்/ நிறுவனங்கள் 63 இல் காணப்பட்ட நடைமுறையில்லா சொத்துக்கள் பற்றிய தகவல்களை குறிப்பிடும் கணினி மென்பொருள் பிரதிகளின்படி வைத்தியசாலைகள்/ நிறுவனங்கள் 27 இன் காணி மற்றும் வைத்தியசாலைகள்/ நிறுவனங்கள் 04 இன் கட்டிடங்கள் மதிப்பிடப்பட்டு கணக்கு வைக்கப்படவில்லை. மதிப்பீட்டு ஆண்டில் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட சுகாதார அமைச்சு மற்றும் அதனுடன் இணைந்த வைத்தியசாலைகள்/ நிறுவனங்கள் 61 இன் 2024 டிசம்பர் 31 ஆம் திகதியில் காணப்பட்ட நடைமுறையில்லா சொத்துக்கள் பற்றிய தகவல்களை குறிப்பிடும் கணினி மென்பொருள் பிரதிகளின்படி வைத்தியசாலைகள்/ நிறுவனங்கள் 05 இன் காணி மற்றும் ஒரு வைத்தியசாலையின் கட்டிடம் மதிப்பிடப்பட்டு கணக்கு வைக்கப்படவில்லை என்பதுடன், கணக்கு வைக்கப்பட்ட தகவல்களின் துல்லியத்தை சரி பார்க்க போதுமான ஆதாரங்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை.

(ன). சீமாட்டி றிஜ்வே சிறுவர் வைத்தியசாலைக்கு நன்கொடையாகப் பெறப்பட்ட விலை/பெறுமதி முறையாக மதிப்பிடப்படாத 97 வகையான உபகரணங்கள்/பொருட்களைச் சேர்ந்த 237 அலகுகள் மற்றும் செலவு/பெறுமதி மதிப்பிடப்பட்ட 07 வகையான உபகரணங்கள்/பொருட்களுக்கான ரூபா. 2,219,825 செலவு/பெறுமதியான 20 அலகுகளை நடைமுறையில்லா சொத்துக்களாக கணக்கு வைக்கப்படவில்லை.

1.6.2 **பணி முற்பண கணக்கு**

1997 ஆம் ஆண்டு முதல் தீர்க்கப்படாமல் முன்னோக்கி கொண்டுவரப்படும், மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்குரிய ரூ. 362,702 பணி முற்பண இருப்பு 2021 ஆம் ஆண்டில் தீர்க்கப்படாத பணி முற்பண இருப்பு என பணி முற்பண கணக்கிற்கு மாற்றப்பட்டுள்ளதுடன், அந்த இருப்பு மதிப்பாய்வு ஆண்டிலும் தீர்க்கப்படவில்லை.

1.6.3 கணக்காய்விற்கு ஆதாரங்கள் இல்லாமை

மொத்த செலவினம் ரூபா மில்லியன் 254,485.18 ஆன நடைமுறையல்லா சொத்துகள் தொடர்பான விரிவான உப அட்டவணை, பொருட்கள் கணக்கெடுப்பு மற்றும் CIGAS நிகழ்ச்சித் திட்டத்தின்படி குறிப்பிடப்படும் சொத்துகள் பற்றிய தகவல்கள், கடந்த ஆண்டு டிசம்பர் 31 ஆம் திகதிக்கு காணப்பட்ட சொத்துக்கள் இருப்புக்கு சரி செய்யப்பட்ட 2.46 மில்லியன் ரூபாவிற்கு, மதிப்பாய்வு ஆண்டில் சொத்துக்கள் கொள்வனவு செய்தல் என கணக்கு வைக்கப்பட்ட 10,713.70 மில்லியன் ரூபா சொத்துக்கள்

மற்றும் 19,703.18 மில்லியன் ரூபா சொத்துக்கள் அழித்தல் தொடர்பான விரிவான உப அட்டவணை சமர்ப்பிக்கப்படவில்லை என்பதால் அந்த பெறுமதி திருப்திகரமாக சரிபார்க்க முடியாது. இடமாற்றம் பெற்றுச்சென்ற, பதவி நீக்கப்பட்ட, பதவி வெறிதாக்கப்பட்ட மற்றும் ஓய்வுபெற்ற 62 உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய 12.71 மில்லியன் ரூபாவிற்கான உரிய சொத்து/ வாகன கடன் கோவைகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. அமைச்சில் உள்ள வாகனங்களின் பயன்பாடு தொடர்பாக செயற்திறன் மதிப்பீட்டுக்காக தேவையான 2021, 2022 மற்றும் 2023 ஆகிய மூன்று வருடங்களுக்கான தகவல்களும் கணக்காய்விற்கு சமர்க்கவில்லை என்பதுடன், இதைத்தவிர பல்வேறு விடயங்கள் தொடர்பாக 36 தகவல் கோரல் கடிதங்கள் மூலம் கணக்காய்விற்குத் தேவையான தகவல்கள் கோரப்பட்ட போதிலும் 2024 ஏப்ரல் 11 ஆம் திகதியிலும் சமர்ப்பிக்காமை மற்றும் முழுமையான தகவல்கள் சமர்ப்பிக்காமை போன்ற காரணங்களினால் உரிய துறைகள் முறைப்படி கணக்காய்வு செய்ய முடியவில்லை. சில தகவல் கோரல் கடிதங்கள் அனுப்பப்பட்டு 40 மாதங்களுக்கு மேற்பட்ட காலம் கடந்துள்ளது.

2. **பிற சட்டத் தேவைகள் குறித்த அறிக்கை**

2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் பிரிவு 6(1)(ஈ) இன் படி, நான் பின்வரும் விடயங்களை அறிவிக்கின்றேன்.

(அ) நிதிக்கூற்றானது முன்னைய ஆண்டுகளுடன் ஒத்திருக்கின்றது என்றும்

(ஆ) முன்னைய ஆண்டின் நிதிக்கூற்று தொடர்பாக என்னால் வழங்கப்பட்ட பின்வரும் பரிந்துரைகள் செயற்படுத்தப்படவில்லை.

முந்தைய ஆண்டுக்குரிய அறிக்கையின் பந்திக் குறிப்பு	செயற்படுத்தப்படாத பரிந்துரை	இந்த அறிக்கையின் பந்தி குறிப்பு
1.6.1 (அ)	இந்தப் பிழைகள் சரி செய்யப்பட்டு, அடுத்த ஆண்டுக்கான நிதிக்கூற்றுகளில் தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்பட வேண்டும்.	1.6.1 (அ)
1.6.1 (ஆ)	- அவ்வாறே -	1.6.1 (ஆ)
1.6.1 (இ)	- அவ்வாறே -	1.6.1 (இ)
1.6.1 (ஈ)	மாற்றங்களுக்கான காரணத்தைக் கண்டறிந்து தேவையான சரி செய்தல்கள் செய்யப்பட்டு, அடுத்த ஆண்டுக்கான சரியான நிதிக்கூற்றுகள் தயாரித்து சமரப்பித்தல் வேண்டும்.	1.6.1 (ஈ)
1.6.1 (உ)	- அவ்வாறே-	1.6.1 (உ)
1.6.1 (ஊ)	- அவ்வாறே-	1.6.1 (ஊ)
1.6.1 (எ)	கணக்கு வைக்காத அனைத்து சொத்துக்களையும் இணங்கண்டு கணக்கு வைத்து அடுத்த ஆண்டுக்கான சரியான நிதிக்கூற்றுகள் தயாரித்து சமரப்பித்தல் வேண்டும்.	1.6.1 (எ)

1.6.1 (ஏ)	திட்டத்தின் கீழ் கையகப்படுத்தப்பட்ட அனைத்து சொத்துக்களும் கணக்கு வைக்கப்பட்டது என்பதை உறுதிப்படுத்தும் எழுத்துமூல சான்றுகள் உடனடியாக கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும்.	1.6.1 (ஏ)
1.6.1 (ஐ)	மாற்றங்களுக்கான காரணத்தைக் கண்டறிந்து தேவையான சரி செய்தல்கள் செய்யப்பட்டு, அடுத்த ஆண்டுக்கான சரியான நிதிக்கூற்றுகள் தயாரித்து சமர்ப்பித்தல் வேண்டும்.	1.6.1 (ஐ)
1.6.1 (ஒ)	- அவ்வாறே -	1.6.1 (ஒ)
1.6.1 (ஓ)	திட்டத்தின் கீழ் கையகப்படுத்தப்பட்ட அனைத்து சொத்துக்களும் கணக்கு வைக்கப்பட்டது என்பதை உறுதிப்படுத்தும் எழுத்துமூல சான்றுகள் உடனடியாக கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும்.	1.6.1 (ஓ)
1.6.1 (ஔ)	உடனடியாக இந்த சொத்துக்கள் மதிப்பிடப்பட்டு கணக்கு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.	1.6.1 (ஔ)
1.6.1 (க)	இந்த பிழையை சரி செய்து அதனை கணக்காய்விற்கு சமர்ப்பித்தல் வேண்டும்.	1.6.1 (க)
1.6.1 (ச)	கணக்காய்வில் கோரப்பட்ட சகல தகவல்களையும் நிறுவனத்தினால் வழங்கப்பட வேண்டும் என்பதுடன், அழிக்கப்பட்ட சொத்துக்களுக்குரிய சரி செய்தல்கள் நிதிக்கூற்றுகளில் மேற்கொள்ளப்பட வேண்டும். மேலும் கணக்கெடுப்பு சபை அறிக்கை பெறப்பட்டதன் பின்னர் முரண்பாடுகள், பற்றாக்குறைகள் மற்றும் காணாமல் போதல் ஏதாவது இருப்பின் நிதி ஒழுங்குவிதிகள் 757(2) இன்படி செயற்படுதல் வேண்டும்.	1.6.1 (ங)
1.6.1 (ட)	அனைத்து நன்கொடைகளும் முறையாக கணக்கு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.	1.6.1 (ச)
1.6.1 (ண)	மாற்றங்களுக்கான காரணத்தைக் கண்டறிந்து தேவையான சரி செய்தல்கள் செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.	1.6.1 (ஞ)
1.6.1 (த)	- அவ்வாறே -	1.6.1 (ட)
1.6.1 (ந)	- அவ்வாறே -	1.6.1 (ண)
1.6.1 (ய)	- அவ்வாறே -	1.6.1 (த)
1.6.1 (ம)	கணக்கு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.	1.6.1 (ந)

3. **நிதி மீளாய்வு**

3.1 பணி முற்பண முகாமைத்துவம்

மதிப்பாய்வு செய்யப்பட்ட ஆண்டுக்காக திட்டமிடப்பட்டவாறு கோரப்பட வேண்டிய தொகை 409,585 மில்லியன் ரூபா என்றபோதிலும், திட்டமிட்ட தொகையை விடவும் குறைவாக 348,817.40 மில்லியன் ரூபா கோரப்பட்டுள்ளது. அதன்படி பணி முற்பண திட்டமிடல் மூலம் எதிர்பார்க்கப்பட்ட நோக்கம் நிறைவேற்றப்படவில்லை என்பது கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது.

3.2 **செலவு முகாமைத்துவம்**

நிதி ஒழுங்குவிதிகள் 50 இல் குறிப்பிடப்பட்டுள்ள விதிமுறைகளின் படி துல்லியமான மற்றும் யதார்த்தமான மதிப்பீடுகள் தயாரிக்கப்படவில்லை என்பதை பின்வரும் அவதானிப்புகளில் இருந்து உறுதிப்படுத்தப்பட்டது.

(அ) 2024 ஆம் ஆண்டுக்கான வரவு செலவு திட்டத்தின் ஊடாக 02 மீண்டுவரும் செலவின விடயங்களுக்காக வழங்கப்பட்ட 34 மில்லியன் ரூபா மொத்த ஒதுக்கீடு, நிதி ஒழுங்குவிதிகள் 66 மற்றும் 69 இன் ஊடாக வேறு செலவின விடங்களுக்கு மாற்றப்பட்டுள்ளது.

(ஆ) 2024 ஆம் ஆண்டுக்கான வரவு செலவு திட்டத்தின் ஊடாக 8 மீண்டுவரும் செலவினங்கள் மற்றும் 3 மூலதன செலவு விடங்களுக்காக தயாரிக்கப்பட்ட 10,115.50 மில்லியன் ரூபா மொத்த ஒதுக்கீட்டில் 65 சதவீதம் முதல் 97 சதவீதம் வரை நிதி ஒழுங்குவிதிகள் 66 மற்றும் 69 இன் ஊடாக வேறு செலவின விடங்களுக்கு மாற்றப்பட்டுள்ளது.

(இ) 2024 ஆம் ஆண்டுக்கான வரவு செலவு திட்டத்தின் ஊடாக 10 மீண்டுவரும் செலவினங்கள் மற்றும் 3 மூலதன செலவு விடங்களுக்காக தயாரிக்கப்பட்ட முறையே 2,132.70 மில்லியன் ரூபா மற்றும் 24 மில்லியன் ரூபா என 2,156.70 மில்லியன் ரூபாவான ஒதுக்கீடு, துணை மதிப்பீட்டின் ஊடாக மற்றும் நிதி ஒழுங்குவிதிகள் 66 மாற்றங்கள் மூலம் முறையே 18.995 மில்லியன் ரூபா மற்றும் 8,974.97 மில்லியன் ரூபா என 100 சதவீதம் முதல் 3557 சதவீதம் வரை அதிகரிக்கப்பட்டுள்ளது.

(ஈ) 7 மீண்டுவரும் செலவினங்கள் மற்றும் 21 மூலதன செலவு விடங்கள் உட்பட 28 செலவு விடயங்களுக்காக தயாரிக்கப்பட்ட மொத்தம் 9,385 மில்லியன் ரூபாவிற்கான ஆரம்ப ஒதுக்கீடும் மீதமாக இருந்தது.

(உ) 48 மூலதன செலவு விடங்கள் மற்றும் 18 மீண்டுவரும் செலவின விடயங்களுக்காக தயாரிக்கப்பட்ட 49,134.28 மில்லியன் ரூபாவான ஆரம்ப ஒதுக்கீட்டில் 1,536.81 மில்லியன் ரூபா வேறு செலவு விடயங்களுக்கு மாற்றப்பட்ட பின்னர் எஞ்சிய 47,597.47 மில்லியன் ரூபா மொத்த நிகர ஒதுக்கீட்டின் 33,271.33 மில்லியன் ரூபா ஒதுக்கீடு பயன்படுத்தப்படவில்லை. இந்த மீதம் நிகர ஒதுக்கீட்டின் 50 சதவீதம் முதல் 99 சதவீதம் வரை இருந்தது.

(ஊ) 5 மீண்டுவரும் செலவினங்கள் மற்றும் 4 மூலதன செலவு விடங்கள் உட்பட 9 செலவு விடயங்களுக்காக நிதி ஒழுங்குவிதிகள் 66 இன் ஊடாக தயாரிக்கப்பட்ட 344.92 மில்லியன் ரூபா மேலதிக ஒதுக்கீட்டில் 280.65 மில்லியன் ரூபா மீதமாக இருந்ததுடன், அந்த மீதமுள்ள தொகையின் சதவீதம் மேலதிக ஒதுக்கீட்டின் 45 சதவீதம் முதல் 98 சதவீதம் வரை இருந்தது.

(எ) ஹோமியோபதி முறையை மேம்படுத்துவதற்கான மூலதன செலவின விடயம் (111-02-19-002-2509) நோக்கங்களுக்கு மாறாக, கரையான்களை கட்டுப்படுத்துவதற்காக 198,000 ரூபா மீள்வரும் செலவு செய்யப்பட்டுள்ளது.

3.3. **பொறுப்புகள் மற்றும் கடப்பாடுகளுக்கு வருதல்**

சுகாதார அமைச்சினால் செலவுத் தலைப்பு இலக்கம் 111 இன் கீழ் கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்ட நிதிநிலை அறிக்கைகளின் குறிப்பு (iii) படிவத்தின்படி (திறைசேரியினால் சமரப்பிக்கப்பட்ட மொத்த கடப்பாடுகள் மற்றும் பொறுப்புகள் அறிக்கை – SA 92) 2024 டிசம்பர் 31 நிலவரப்படி காணப்பட்ட பொறுப்புகளின் இருப்பு 47,920,624 ரூபா என்பதுடன், கடப்பாடுகளின் இருப்பு 128,657,938 ரூபா ஆகும். இது தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வில் பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) நிதி ஒழுங்குவிதிகள் 94 (i) இன்படி, வேறு விதமான ஏற்பாடுகள் வழங்கப்பட்ட சந்தர்ப்பங்கள் தவிர்ந்த வருடாந்த மதிப்பீடுகளில் அதற்கான நிதி ஒதுக்கீடு இருப்பின் எந்தவொரு திணைக்களத்தினாலும் பணி, சேவை அல்லது வழங்கலுக்கும் எந்தவொரு செலவு அல்லது கடப்பாடுகளுக்கும் கட்டுப்படாதிருத்தல் வேண்டும் என்பதுடன், ஏற்கும் பொறுப்புகள் மற்றும் செலவினங்களின் அளவு ஒருபோதும் நிதி ஆண்டுக்காக வழங்கப்பட்ட ஒதுக்கீட்டு அளவை விட மேற்படாதிருத்தல் வேண்டும். எனினும் அமைச்சிற்கு உரித்தான நிறுவனங்களினால் செயல்பாட்டுத் திட்டத்தின் கீழ் 34 செலவின விடயங்களுக்கு வழங்கப்பட்ட ஒதுக்கீட்டின் மீதியை மீறி 2,616,174,615 ரூபா பொறுப்புகளின் கீழ் கொண்டுவரப்பட்டுள்ளதுடன், அபிவிருத்தி திட்டத்தின் கீழ் ஒரு செலவின விடயத்திற்கு வழங்கப்பட்ட ஒதுக்கீட்டின் மீதியை மீறி 14,720 ரூபா பொறுப்புகளின் கீழ் கொண்டுவரப்பட்டுள்ளது. அதன்படி மொத்தம் 2,616,189,335 ரூபா ஒதுக்கீட்டை மீறி பொறுப்புகளுக்கு கொண்டுவரப்பட்டுள்ளமை கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது.

(ஆ) வருடாந்த வரவு செலவு மதிப்பீட்டில் உள்வாங்கப்பட்ட அல்லது புதிதாக சேர்க்கப்படும் செலவு விடயங்கள் தவிர்ந்த, செயற்பாட்டு மற்றும் மேம்பாட்டு நிகழ்ச்சிகளின் கீழ் 7 செலவின விடயங்களுக்காக மொத்தம் 5,469,261,442 ரூபா பொறுப்பு என குறிப்பிடப்பட்டுள்ளது. மேற்படி செலவின விடயங்களுக்கு எவ்வளவு நிதி ஒதுக்கப்பட்டது அல்லது அந்த ஒதுக்கீட்டை மீறி பொறுப்புகளுக்கு கொண்டுவரப்பட்டதா என்பது குறித்து கணக்காய்வில் உறுதி செய்ய முடியவில்லை.

(இ) கடப்பாடு மற்றும் பொறுப்புகள் தகவல்களின் விரிவான ஆய்வின் போது பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

i. அரசாங்க அச்சக கூட்டுத்தாபனத்தின் 2024 டிசம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுகளில் சுகாதார அமைச்சின் கீழுள்ள நிறுவனங்களில் இருந்து ரூ. 1,397,414 இற்கான வர வேண்டிய நிலுவைகளின் கீழ் கணக்கு வைக்கப்பட்ட போதிலும் அமைச்சின் பொறுப்புக் கூற்றில் அந்த வைத்தியசாலைகளுக்குரிய அந்த பெறுமதிகள் பொறுப்புகள் என குறிப்பிடப்படவில்லை.

ii. 2024 ஆம் ஆண்டின் இலங்கை திரிபோஷா நிறுவனத்தின் நிதிக்கூற்றின்படி ரூ. 238,736,767 சுகாதார அமைச்சினால் கிடைக்க வேண்டிய நிலுவை என கணக்கு வைக்கப்பட்டுள்ள போதிலும் 2024 டிசம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுகளில் சுகாதார அமைச்சின் நிதிக்கூற்றில் பொறுப்புகளின் கீழ் ரூ. 235,506,882 ஆன மதிப்பு மட்டுமே காட்டப்பட்டுள்ளதால் ரூ. 3,229,885 இற்கான வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

iii. மதிப்பாய்வு ஆண்டில் அமைச்சின் நிதிக்கூற்றுடன் சமர்ப்பிக்கப்பட்ட பொறுப்புகள் பற்றிய கூற்றின்படி அரச மருந்தக கூட்டுத்தாபனத்தினால் பெறப்பட்ட மருத்துவ

விநியோகங்களுக்காக அந்த நிறுவனத்தின் பொறுப்பு 1,096,528,498 ரூபா என்பதுடன், அரச மருந்துகள் உற்பத்திக் கூட்டுத்தாபனத்தினால் மருத்துவப் பொருட்களுக்காக அந்த நிறுவனத்திற்கு எவ்வித பொறுப்புகளும் இல்லை என காட்டப்பட்டுள்ளது. எனினும், அந்த இரு நிறுவனங்களின் 2024 ஆம் ஆண்டுக்கான நிதிக்கூற்றுகளின்படி மருத்துவ விநியோகப் பிரிவினால் செலுத்த வேண்டிய மதிப்பு முறையே 38,317,971,241 மற்றும் 1.777,456,658 என குறிப்பிடப்பட்டுள்ள காரணத்தால் முறையே 37,221,442,743 மற்றும் 1,777,456,658 ரூபாவிற்கான வித்தியாசம் அவதானிக்கப்பட்டது. இந்த வேறுபாடுகளை அடையாளம் கண்டு தேவையான திருத்தங்கள் செய்யப்படவில்லை.

iv. கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின்படி உயிரியல் மருத்துவ பொறியியல் பிரிவினால் கொள்வனவு செய்யப்பட்ட உயிரியல் மருத்துவ உபகரணங்களுக்காக 2024 டிசம்பர் 31 நிலவரப்படி ரூ. 346,502,552 ரூபா செலுத்தவேண்டிய நிலுவை காணப்பட்ட போதிலும், 2024 டிசம்பர் 31 நிலவரப்படி அமைச்சின் நிதக்கூற்றில் அந்த தொகை பொறுப்பு என குறிப்பிடப்படவில்லை.

3.4 பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர்/ கணக்கீட்டு உத்தியோகத்தரினால் வழங்கப்பட வேண்டிய சான்றுறுதி

2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38 வது பிரிவின் விதிகளின்படி, பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினால் பின்வரும் விடயங்களில் சான்றுறுதியளித்தல் வேண்டும் என்ற போதிலும், அவ்வாறு செய்திருக்கவில்லை.

கணக்காய்வாளர் நாயகத்திற்கு தேவையான விதத்தில் குறிப்பிட்ட காலத்தினுள் அனைத்து கணக்காய்வு வினவல்களுக்கும் உரிய பதில்கள் வழங்கப்படுவதை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினால் உறுதிப்படுத்தப்படல் வேண்டும். எனினும், அறிக்கையின் பிரிவு 4.7 இன்படி கணக்காய்வு வினவல்களுக்கு பதிலளிக்கப்படவில்லை.

3.5 சட்டங்கள், விதிமுறைகள் மற்றும் ஒழுங்குமுறைகள் இணங்காமை

அவதானிப்புகள்		இணங்காமை
சட்டங்கள், விதிமுறைகள் மற்றும் ஒழுங்குமுறைகள் பற்றி	பெறுமதி (ரூ)	
(ஆ) அரச நிர்வாக சுற்றறிக்கை i. 2008 டிசம்பர் 31 ஆம் திகதிய 30/2008 எனும் இலக்க சுற்றறிக்கை	-	தனி நபர் ஒருவருக்கு 250,000 ரூபாவிற்கு மேல் இடர் கடன் வழங்க முடியாது என்றபோதிலும், அதற்கு இணங்காதவாறு 2024 ஆம் ஆண்டில் 06 உத்தியோகத்தர்களுக்கு அந்த வரம்பை மீறி இடர் கடன் வழங்கப்பட்டுள்ளது.
ii. 2021 டிசம்பர் 24 ஆம் திகதிய 26/2021 எனும் இலக்க சுற்றறிக்கையின் பிரிவு 03	76,000	2024 ஆம் ஆண்டில் அரச உத்தியோகத்தர்களுக்கு செலத்தப்பட்ட விசேட முற்பணம் அதே ஆண்டில் அறவிடப்பட வேண்டும் எனினும், 2024 டிசம்பர் 31 நிலவரப்படி 59 உத்தியோகத்தர்களிடம் இருந்து அறவிப்பட வேண்டிய விஷேட முற்பண நிலுவை 76,000 ரூபா ஆகும்.

iii. 2009 ஏப்ரல் 16 ஆம் திகதிய 09/2009 எனும் இலக்க சுற்றறிக்கை	39,717,626,615	அனைத்து அரச ஊழியர்களும் அலுவலகத்திற்கு வருவதையும் மற்றும் வெளியேறுவதையும் உறுதிப்படுத்த விரல் அடையாள இயந்திரங்கள் பயன்படுத்த வேண்டும் என்பதுடன், நேரங்களின் அடிப்படையில் மேலதிக நேர கொடுப்பனவுகள் மற்றும் விடுமுறை தின கொடுப்பனவுகள் போன்றவை வழக்கமான வேலை நேரத்திற்குப் பிறகு செலுத்தப்படும் கொடுப்பனவுகளுக்கு நேரத்தின் அடிப்படையில் செலுத்தப்பட்டால் அந்த நேரத்தை விரல் அடையாள இயந்திரங்கள் மூலம் உறுதிப்படுத்த வேண்டும். எனினும், அதன்படி நடவடிக்கை எடுக்காமல் மதிப்பாய்வு ஆண்டில் மேலதிக நேர மற்றும் விடுமுறை தின கொடுப்பனவாக 39,717,626,615 ரூபா செலுத்தியுள்ளது.
iv. 2016 டிசம்பர் 29 ஆம் திகதிய 30/2016 எனும் இலக்க சுற்றறிக்கையின் பிரிவு 3.1	-	அரச வாகனங்களின் ஒவ்வொரு எரிபொருள் பரிசோதனையும் 12 மாத காலத்தின் பின்னர் அல்லது 25,000 கி.மீ தூரம் ஓடிய பின்னர் அல்லது இயந்திரத்தின் முக்கிய பழுதுபார்ப்பின் பின்னர் ஆகியவற்றில் எது முதலில் வருகிறதோ அதன்பின்னர் மீண்டும் எரிபொருள் பரிசோதனை செய்ய வேண்டும் எனினும், அவ்வாறு நடவடிக்கை எடுக்காத சந்தர்ப்பங்கள் உள்ளன. கேகாலை போதனா வைத்தியசாலையில் பாவிக்கும் 12 வாகனங்கள் மற்றும் களுத்துறை நாகொட போதனா வைத்தியசாலையின் 15 வாகனங்கள் தொடர்பாக அத்தகைய எரிபொருள் பரிசோதனை மேற்கொள்ளவில்லை.

3.6. **வரி தேவைகளுடன் இணங்காமை**

பின்வருவன அவதானிக்கப்பட்டன.

(அ) 2002 ஆண்டின் 14 ஆம் இலக்க பெறுமதி சேர் வரிச் சட்டத்தின் அத்தியாயம் 2 இன் பிரிவு 10 இன்படி மஹமோதர போதனா வைத்தியசாலை, தேசிய வருமான திணைக்களத்தின் பெறுமதி சேர் (VAT) இற்காக பதிவு செய்ய தேவையற்ற அரச நிறுவனம் என்ற போதிலும், உணவகத்தின் வாடகையின் பேரில் 2018 ஆகஸ்ட் முதல் 2023 ஒக்டோபர் வரை மொத்தம் 513,833 ரூபா பெறுமதி சேர் வரியாக அறவிட்டுள்ளது.

(ஆ) ஜேர்மன் இலங்கை நட்பு மகளிர் வைத்தியசாலையில் நோயாளிகள் மற்றும் சிற்றூழியர்களுக்காக சமைக்கப்பட்ட உணவிற்குத் தேவையான உலர் உணவுப் பொருட்கள் விநியோகத்தின் போது உலர் உணவுப் பொருட்கள் விநியோகத்தருக்கு 2023 ஆகஸ்ட் மாதம் முதல் 2024 டிசம்பர்

வரையிலான காலத்திற்காக மொத்தம் 3,918 மில்லியன் ரூபா பெறுமதி சேர் வரியாக செலுத்தப்பட்டுள்ளதுடன், 2002 ஆண்டின் 14 ஆம் இலக்க பெறுமதி சேர் வரிச் சட்டத்தின் 2024 ஜனவரி 01 ஆம் திகதி முதல் அமுலுக்கு வந்த பெறுமதி சேர் வரியிலிருந்து விலக்கு அளிக்கப்பட்ட பொருட்களுக்கு வரி செலுத்தியதன் மூலம் அரசாங்கத்திற்கு இழப்புகளை ஏற்படுத்தியுள்ளமை அவதானிக்கப்பட்டது.

3.7. **முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

பின்வருவன அவதானிக்கப்பட்டன.

(அ) சுகாதார அமைச்சினால் ஸ்ரீ ஜயவர்தனபுர வைத்தியசாலைக்கு 213 சந்தர்ப்பங்களில் 65 மருத்துவப் பொருட்கள் மற்றும் காகிதாதிகள் வகைக்குரிய 216,094 அலகுகளை இலவசமாக வழங்கியுள்ளதுடன், இந்தப் பொருட்களை இலவசமாக வழங்குவதற்கு பெறப்பட்ட முறையான அனுமதி /ஒப்புதலை கணக்காய்விற்கு சமர்ப்பிக்கவில்லை. மேலும், எந்தவொரு மருந்து அல்லது சத்திர சிகிச்சை பொருளையும் இலவசமாக வழங்கும் போது அந்த மருந்து அல்லது சத்திர சிகிச்சைப் பொருள் நோயாளியிடமிருந்து எந்த கட்டணமும் அறவிடாது இலவசமாக வழங்கப்படுவதை உறுதி செய்வதற்கான வழிமுறைகள் அமைச்சில் இல்லை என்பது உறுதிப்படுத்தப்பட்டது.

(ஆ) நிதி, பொருளாதார நிலைப்படுத்தல் மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சின் 2024 ஜனவரி 10 ஆம் திகதிய 01/2024 எனும் வரவு செலவு சுற்றறிக்கையின் 11.6 பந்தியின் ஊடாக முறையான ஒப்புதல் இன்றி அரசாங்க நிதியைப் பயன்படுத்தி காப்பீட்டுத் திட்டங்கள், சலுகை கடன் திட்டங்கள் மற்றும் மருத்துவ கட்டணம் செலுத்துதல் போன்ற திட்டங்களை செயற்படுத்தக்கூடாது என குறிப்பிடப்பட்டுள்ள போதிலும், அந்த விதிமுறைகளுக்கு மாறாக மற்றும் ஹோமியோபதி வைத்தியசாலைக்கு தனிப்பட்ட கொள்கைத் தீர்மானங்களைப் பெறாமல் தங்கியிருந்து சிகிச்சை பெறும் நோயாளிகளுக்கு லங்கா ஹொஸ்பிட்டல் (தனியார்) நிறுவனத்தின் மூலம் ரூ.1,001,496 மதிப்புள்ள ஆய்வுகூட சேவைகளை 2024 ஆம் ஆண்டுக்காக பெறப்பட்டுள்ளன.

(இ) நோயாளி கண்காணிப்பு கற்கைக்காக பரிந்துரைக்கப்பட்ட 06 நிறுவனங்களினால் காலி தேசிய வைத்தியசாலைக்கு பரிந்துரைக்கப்பட்ட வெளிநாட்டு மாணவர்களுக்காக வைத்தியசாலைக்கு செலுத்துவதற்கு அந்த தனியார் நிறுவனங்களினால் மாணவர்களிடமிருந்து அறவிடப்படும் கட்டணங்கள், வைத்தியசாலைக்கு வெளியே உள்ள ஒரு தன்னார்வ அமைப்பால் நிர்வகிக்கப்படும் தர மேம்பாட்டு நிதி எனப்படும் நிதிக்கு வரவு வைக்கப்பட்டுள்ளன. 2020 முதல் 2024 வரையான காலத்தினுள் மொத்தம் 32.52 மில்லியன் ரூபா மதிப்புள்ள நிதி இவ்வாறு வரவு வைக்கப்பட்டுள்ளதுடன், இதில் மொத்தம் 31.88 மில்லியன் ரூபா செலவும் அந்த நிதியிலிருந்து செய்யப்பட்டுள்ளதுடன், 2024 டிசம்பர் 31 நிலவரப்படி, அந்த நிதி கணக்குகளில் 6.648 மில்லியன் ரூபா இருப்பு மீதமாக இருந்தது. இவ்வாறு அறவிடப்படும் கட்டணம் வைத்தியசாலைக்கு புறம்பான வேறு நிதியத்திற்கு வரவு வைப்பதற்கு அதிகாரம் அளித்த தரப்பினர் இதற்கு பொறுப்பானவர்கள் என்பதும் அவதானிக்கப்பட்டது. மேலும், இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் நிதி ஒழுங்குவிதிகள் 177 இன்படி அரசாங்க சேவைக் கட்டணம் மற்றும் வருமானம் போன்ற அனைத்து வருமானங்களும் அரச வருமானத்தில் வரவு வைக்கப்பட வேண்டும்.ஆனால் அதன்படி நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

(ஈ) பதுளை போதனா வைத்தியசாலையில் நிர்மாணிக்கப்பட்டு வரும் பத்து மாடி கட்டிடத்தின் கட்டுமான பணிகளுக்கு மற்றும் கட்டுமான பணிகளில் ஈடுபட்டுள்ள ஊழியர்களின் நுகர்வுக்கும் தேவையான நீரைப் பெறுவதற்கு வைத்தியசாலை நிர்வாகத்தின் அனுமதியின்றி, திட்டம் ஆரம்பிக்கப்பட்ட 2020 ஜனவரி 30 ஆம் திகதியில் இருந்து கணக்காய்வுத் தினமான் 2024 செப்டம்பர் 30 ஆம் திகதி வரை வைத்தியசாலை குழாய் அமைப்பில் இருந்து நீரைப் பெற்றதன் மூலம் ரூ. 506,100 நிதி இழப்பு ஏற்பட்டுள்ளது.

(உ) கொழும்பு தேசிய வைத்தியசாலையின் மருத்துவக் கழிவுகளை அகற்றுவதற்கான கொடுப்பனவுகள் தொடர்பில் பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

i. மருத்துவ கழிவுகளை அகற்றுவதற்குத் தேவையான கொள்கலன்களை ஒப்பந்ததாரர்வழங்காத நிலையில் அது தொடர்பில் கவனம் செலுத்தாமல், 2017 ஜனவரி 01 ஆம் திகதி முதல் 2019 மார்ச் மாதம் 31 ஆம் திகதி வரையிலான கால கட்டத்தில் அகற்றப்பட்ட 1,012,139 கிலோ மருத்துவக் கழிவு அகற்றுவதற்கு ஒரு கிலோவிற்கு ரூபா 28.24 வீதம் மொத்தம் 28,582,808 ரூபா கொள்கலன் கட்டணங்கள் உள்ளடங்களாக விநியோகத்தருக்கு செலுத்தியுள்ளது. மேலும், 2019 ஏப்ரல் 01 ஆம் திகதி முதல் 2022 ஜூலை 31 ஆம் திகதி வரையிலான கால கட்டத்தில் அகற்றப்பட்ட 2,628,815 கிலோ மருத்துவக் கழிவு அகற்றுவதற்கு ஒரு கிலோவிற்கு ரூபா 3.81 வீதம் மொத்தம் 10,015,785 ரூபா கொள்கலன் கட்டணங்கள் உள்ளடங்களாக விநியோகத்தருக்கு செலுத்தியுள்ளது. இவ்வாறு கூடுதலாக செலுத்தப்பட்ட கொள்கலன் கட்டணத்தை மீள பெறுவதற்கு கணக்கிடும் போது மேற்படி கொள்கலன்களின் எண்ணிக்கையின் அடிப்படையில் கணக்கீடு செய்யப்பட்டதால் 10,381,561 ரூபா குறைவாகக் கணக்கிடப்பட்டுள்ளது.

ii. கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின்படி, 2019 ஏப்ரல் 01 ஆம் திகதி முதல் 2022 ஜூலை 31 ஆம் திகதி வரையான காலத்திற்காக மாத்திரம் மருத்துவக் கழிவுகளை அகற்றுவதற்காக கொள்வனவு செய்யப்பட்ட கொள்கலனுக்காக ரூ.44,277,874 செலவிடப்பட்ட போதிலும், அந்த காலத்திற்காக ஒப்பந்ததாரரிடம் இருந்து ரூ.5,013,636 இனை மட்டுமே அறவிட கணக்கீடு செய்யப்பட்டதால் அந்த காலத்திற்காக ரூ. 39,264,238 அரசாங்கம் அறவிடவேண்டியிருந்தது.

(ஊ) 2020 ஆகஸ்ட் 28 ஆம் திகதிய இல. 01/2020 எனும் அரச நிதி சுற்றறிக்கையின் பகுதி II இல் பிரிவு 05 இன் மூலம் அறிமுகப்படுத்தப்பட்ட அரச நிறுவனங்களினால் சேவைகளை வழங்குவதற்காக அறவிடப்படும் கட்டண திருத்தம் மற்றும் புதிய கட்டண அறவீடு தொடர்பான விதிகள் மேலும் திருத்தப்பட்டு நிதி பொருளாதார நிலைப்படுத்தல் மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சினால் வெளியிடப்பட்ட அரச நிதி சுற்றறிக்கை இலக்கம் 01/2020 (III) இன்படி, பாராளுமன்றத்தினால் அங்கீகரிக்கப்பட்ட ஒரு சட்டம் அல்லது வேறு ஏதேனும் சட்டத்தின் மூலம் எந்த ஏற்பாடும் செய்யப்படாத சந்தர்ப்பங்களில் அரச நிறுவனங்களினால் பொது மக்களுக்கு சேவைகள் வழங்கும் போது அறவிடப்படும் கட்டணங்கள் 3 ஆண்டுகளுக்கு ஒருமுறை மீளாய்வு செய்யப்பட வேண்டும் என குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும் அந்த மதிப்பாய்வின் பின்னர் கட்டண திருத்தம் செய்ய அரச நிறுவனங்களுக்கு தேவை ஏற்படின், 03 ஆண்டுகளுக்கு குறையாத மற்றும் 04 ஆண்டுகளுக்கு மேற்படாத காலத்திற்கு 15 சதவீதத்தால் உரிய கட்டணங்களை அதிகரிக்க பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. அரச வைத்தியசாலைகளில் பொது மக்களுக்கு வழங்கும் கட்டண வாட்டு வசதிகள் மற்றும் இலங்கையர் அல்லாதவர்களுக்கான சுகாதார சேவைகளுக்கான கட்டணங்களை அறவிடுதல் தொடர்பில் கட்டணங்களை அங்கீகரிப்பது தொடர்பில் சுகாதார அமைச்சரின் 2023 ஏப்ரல் 10 ஆம் திகதிய அமைச்சரவை விஞ்ஞாபனத்தின் 2.1 பந்தியின்படி, விலையுயர்ந்த புதிய தொழில்நுட்பம், அதாவது நோயறிதல் முறை அறிமுகப்படுத்தப்பட்ட காரணத்தாலும், ஊழியர்களின் சம்பளம் மற்றும் ஊதிய அதிகரிப்பு காரணத்தாலும் தற்போதுள்ள கட்டணம் அறவிடும் பொறிமுறை காலாவதியாகி விட்டது எனவும், வழங்கப்படும் சேவைகளுக்காக செலவு மற்றும் அறவீடு என்பவற்றுக்கு இடையே தெளிவான பொருத்தமின்மை இருப்பதாகவும் அவதானிக்கப்பட்டது எனவும், அந்த விஞ்ஞாபனத்தின் 2.2 வது பந்தியின்படி, நியாயமான விலையில் இலங்கை மக்களுக்கும் மற்றும் குடிமக்கள் அல்லாதவர்களுக்கும் அரச வைத்தியசாலைகளினால் வழங்கப்படும் சுகாதார சேவைகளுக்கான கட்டணங்களை திருத்துவதற்கான ஒரு பொறிமுறையை அறிமுகப்படுத்த வேண்டியதன் அவசியம் இருப்பதாகவும், இதற்காக சுகாதார அமைச்சிற்குள் ஒரு குழு நியமிக்கப்பட்டு முன்மொழியப்பட்ட முறையை செயல்படுத்த முன்மொழிவதாகவும் குறிப்பிடப்பட்டுள்ள போதிலும் அதற்கேற்ப குறைந்த செலவில் அல்லது கவரேஜ் கட்டண

அமைப்பு முறைமையொன்று 2025 ஏப்ரல் 01 ஆம் திகதியிலும் செயல்படுத்தப்படவில்லை என்பது கொழும்பு தேசிய வைத்தியசாலையில் கட்டணம் செலுத்தும் வாட்டுகளுக்கான கட்டணம் அறவிடுதல் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது.

(எ) கண்டி தேசிய வைத்தியசாலையில் ரூ. 20 கட்டணத்தில் பயன்படுத்தக்கூடிய ஒரு கழிப்பறை அமைப்பு முறை செயல்பாட்டில் உள்ளதுடன், அதற்கான டிக்கெட்டுகளை விற்பனை செய்வதற்கும் கழிப்பறைகளை சுத்தம் செய்வதற்கும் வைத்தியசாலை சுத்திகரிப்பு சேவையின் இரு ஊழியர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். மேலும் மேற்குறிப்பிட்ட பயனாளிகளின் விருப்பத்திற்கு ஏற்ப கட்டணம் செலுத்தும் கழிப்பறையில் அதனை சுத்தம் செய்ய தனியாக ஒரு ஊழியரும் நியமிக்கப்பட்டுள்ளார். அதன்படி, அரசாங்க நிதியின் ஊடாக மூன்று ஊழியர்களுக்காக நாளொன்றுக்கு ரூ. 3,450 + (மேலதிக நேர கொடுப்பனவு) செலுத்தப்படுவதுடன், பணம் கணக்கிடப்பட்டு வங்கியில் வைப்புச்செய்வதற்காக இன்னும் மூன்று ஊழியர்கள் தங்கள் நேரத்தை செலவிட வேண்டியிருந்தது. எவ்வாறாயினும், 02 கழிப்பறை அமைப்புகளில் இருந்தும் 2024 ஆம் ஆண்டின் முதல் 05 மாதங்களில் ரூ. 1,585,816 இனை வருமானமாக பெறப்பட்ட போதிலும், அதனை ஒருங்கிணைந்த நிதியத்தில் வைப்புச் செய்யாமல் வைத்தியசாலை அபிவிருத்தி நிதியத்தில் வைப்புச் செய்து வைத்தியசாலையின் பல்வேறு தேவைகளுக்கு பயன்படுத்தப்பட்டுள்ளது.

(ஏ) கண்டி தேசிய வைத்தியசாலையில் 64 மில்லியன் ரூபாவிற்கும் மேற்பட்ட பெறுமதியான 06 உயிரியல் மருத்துவ பொறியியல் உபகரணங்களை முறையான ஒப்பந்தம் இன்றி பழுதுபார்ப்பதற்காக வெளி முகவர் நிறுவனத்திற்கு வழங்கப்பட்டுள்ளது. இந்த உபகரணங்கள் 2024 செப்டெம்பர் 19 நிலவரப்படி வைத்தியசாலையிலிருந்து வெளியே எடுத்துச் செல்லப்பட்டு 1 மாதம் முதல் 18 மாதங்கள் வரை கடந்த போதிலும் பழுதுபார்க்கப்பட்டு வைத்தியசாலைக்கு கொடுக்கப்படவில்லை என்பதுடன், இதில் 04 உபகரணங்களுக்கு அந்த முகவர் நிறுவனம் ரூ. 10,254,110 பழுதுபார்ப்பதற்கான கட்டணமாக அறவிடப்பட்டுள்ளதுடன், மேலும் சுமார் 16 மில்லியன் ரூபா மதிப்புள்ள 02 உபகரணங்களுக்காக ரூ. 11,254,840 இற்கான மதிப்பீட்டையும் வழங்கியுள்ளது. எனினும், அவ்வாறு ஒரு முகவர் நிறுவனத்திற்கு வழங்கப்பட்ட உபகரணங்கள் பழுதுபார்த்தல் தொடர்பில் பின்தொடர்தல் அல்லது கண்காணிப்புகள் மேற்கொள்ளப்படவில்லை.

(ஐ) சிறிமாவோ பண்டாரநாயக்க விஷேட சிறுவர் வைத்தியசாலையில் 2005 ஆம் ஆண்டில் நிறுவப்பட்ட MRI ஸ்கேன் இயந்திரம் 2018 ஆம் ஆண்டில் ஒரு சிலிண்டர் அதில் மோதிய காரணத்தால் ரூ.15,812,500 செலவில் பழுதுபார்க்கப்பட்டுள்ளது. பழுதுபார்க்கப்பட்ட 05 நாட்களின் பின்னர் சரி செய்ய முடியாத நிலையில் செயல் இழந்தமை தொடர்பில் வைத்தியசாலை முரண்பட்ட கருத்துக்களை முன்வைத்துள்ளதுடன், அதற்கான முறையான விசாரணைகள் நடத்தப்படவில்லை. அவ்வாறு சரி செய்ய முடியாத நிலையில் இருந்த இயந்திரம் தொடர்பாக, கடந்த காலத்துடன் தொடர்புடையதாக 2019 மார்ச் 18 ஆம் திகதி சேவை ஒப்பந்தம் செய்து அதற்காக ரூ. 3,632,720 இனை சேவைக் கட்டணமாக நிறுவனத்திற்கு செலுத்தப்பட்ட போதிலும், 2024 டிசம்பர் 31 வரையிலும் இயந்திரம் இயல்பு நிலைக்கு சரி செய்யப்படவில்லை.

(ஒ) மருத்துவ விநியோகப் பிரிவினால் தரம் தோல்வியுற்ற மருந்துகள், சத்திர சிகிச்சைப் பொருட்கள் மற்றும் ஆய்வுகூட பொருட்களை அழித்தலுக்காக 2023 மற்றும் 2024 ஆம் ஆண்டுகளில் முறையே ரூ. 109,756,890 மற்றும் ரூ. 13,487,006 உட்பட ரூ. 123,243,896 இனை ஒரு தனியார் நிறுவனத்திற்கு செலுத்தியுள்ளது. இது தொடர்பில் பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

i. மருத்துவ விநியோகப் பிரிவினால் தரத் தோல்வியுற்ற மருந்துகள், சத்திர சிகிச்சைப் பொருட்கள் மற்றும் ஆய்வுகூட பொருட்களை அழிப்பதற்கான செலவினங்களுக்காக 2023 ஆம் ஆண்டுக்கான வருடாந்த மதிப்பீட்டின் மூலம் நிதி ஒதுக்கீடுகளை பெறவில்லை என்பதுடன், அதற்காக நிதி ஒழுங்குவிதிகள் 68 இன்படி, புதிய செலவின தலைப்பு

உருவாக்குவதற்கும் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. அதன்படி, அழித்தல் செலவினமாக ஒக்சிசன் வினைப் பொருட்கள் மற்றும் நுகர்வுப் பொருட்கள் கொள்வனவு செய்தல் எனும் செலவின தலைப்பின் கீழ் (111-02-25-003-1204) கணக்கு வைக்கப்பட்டதால் 2023 மற்றும் 2024 ஆம் ஆண்டுகளில் நிதிக்கூற்றுகளில் மருத்துவ விநியோக செலவு முறையே ரூ. 109,756,890 மற்றும் ரூ.13,487,006 இனால் மிகையாக மதிப்பிடப்பட்டுள்ளது.

ii. மருத்துவ விநியோகப் பிரிவினால் மத்திய சுற்றாடல் அதிகார சபையில் பதிவு செய்யப்பட்ட மற்றும் இதற்கு முன்னர் விலைமனுக்கள் சமரப்பிக்கப்பட்ட நிறுவனங்களில் இருந்து 2022 ஆகஸ்ட் 25 ஆம் திகதி விலைமனுக்கள் கோரப்பட்டுள்ளதுடன், அதன்படி இரண்டு நிறுவனங்களினால் சமர்ப்பிக்கப்பட்ட விலைகள் 2022 செப்டெம்பர் 22 ஆம் திகதி தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவிற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. இதற்கிடையில் ஒரு 3.9 நிறுவனத்தினால் சுகாதார அமைச்சின் செயலாளருக்கு சமர்ப்பிக்கப்பட்ட கடிதத்தின்படி 2018 ஜூன் 26 ஆம் திகதி முதல் 10 வருடங்கள் வரை சுகாதார அமைச்சு, அந்த தனியார் நிறுவனம் மற்றும் மத்திய சுற்றாடல் அதிகார சபை ஆகியவற்றுக்கு இடையே முத்தரப்பு ஒப்பந்தம் நடைமுறையில் இருப்பதாக குறிப்பிடப்பட்டுள்ளதை அடிப்படையாகக் கொண்டு அந்த ஒப்பந்தத்தின் நிபந்தனைகளின்படி அழித்தல் செயற்பாடுகளை மேற்கொள்வது பொருத்தமானது என தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவினாலும் 2022 செப்டெம்பர் 30 ஆம் திகதிய கொள்ளல் குழுவில் தீர்மானிக்கப்பட்டது. தரத் தோல்வியுற்ற மருந்துகள், சத்திர சிகிச்சைப் பொருட்கள் மற்றும் ஆய்வுகூட பொருட்களை ஒரு கிலோவிற்கு ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விலையை (ரூ. 260) செலுத்துவதற்கும் அரச வாகனங்கள் கிடைக்காத சந்தர்ப்பங்களில் மட்டும் மேல், மத்திய மற்றும் மேல் மாகாணங்கள் தவிர்ந்த ஏனைய மாகாணங்களுக்கு ஒரு கிலோமீட்டருக்கு ரூ. 200 அல்லது மேற்படி ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தொகை ஆகிய இரண்டில் குறைவாக உள்ள தொகையை செலுத்த அனுமதி வழங்கப்பட்டுள்ளது. எனினும், உரிய நிறுவனத்தினால் ஒரு கிலோவிற்கு ஒப்பந்த விலையை விட ரூ. 117 அதிகமாக (ரூ.387) நிர்ணயம் செய்து விலைகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன எனவும், குறைந்த விலை சமர்ப்பிக்கப்பட்ட விலைமனுதாரியின் ரூ.99.84 இற்குப் பதிலாக ஒப்பந்த விலையான கிலோவிற்கு ரூ. 260 வீதம் செலுத்துவதற்கு இணங்கியுள்ளது. அதன்படி, அதன்படி, 2022 நவம்பர் 01 ஆம் திகதி முதல் அழித்தல் செயற்பாடுகளை ஆரம்பிக்குமாறு மருத்துவ விநியோக பணிப்பாளரினால் தனியார் நிறுவனத்திற்கு அறிவித்துள்ள போதிலும் அதன்போது ஒப்பந்தத்தில் உள்ளடங்கும் மாகாணங்கள் தவிர ஏனைய மாகாணங்களில் மருத்துவ கழிவுகளை அழித்தலுக்காக ஒரு ஆஸ்திரேலிய திட்டத்தின் மூலம் கொண்டுவரப்பட்ட இயந்திரத்தைப் பயன்படுத்தல் தொடர்பாக அல்லது பிற மாகாணங்களுக்கு விலைமனு கோராமலும், ஒப்பந்த விடய நோக்கம் குறித்து ஆராயாமலும் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு மற்றும் கொள்ளல் மதிப்பீட்டுக் குழு என்பவற்றால் உரிய அனுமதி வழங்கியமை அவதானிக்கப்பட்டது.

iii. இதற்கேற்ப, முத்தரப்பு ஒப்பந்தத்தின் 111 (a) பிரிவின் கீழ் மேல், மத்திய மற்றும் தென் மாகாணங்களில் சுகாதார அமைச்சின் கீழ் இயங்கும் வைத்தியசாலைகளில் உள்ள மருத்துவ கழிவுகள் மற்றும் உடன்படிக்கையின் A -2 பட்டியலின் கீழ் பட்டியலிடப்பட்ட அனைத்து மாகாணங்களுக்குரிய வைத்தியசாலைகளிலும் உள்ள சைட்டோடொக்சிக் (Cytotoxic) கழிவுகள் உள்ளடக்கப்பட்ட ஆனால் அதற்கு முரணாக, மருத்துவ விநியோகப் பிரிவினால் மேல், தென் மற்றும் மத்திய மாகாணங்களை தவிர்ந்த பிற மாகாணங்களில் உள்ள மருத்துவ கழிவுகள் அகற்றும் பணிகளை 33 சந்தர்ப்பங்களில் இந்த தனியார் நிறுவனத்திற்கு ஒப்படைத்திருந்தது. அதன்படி, 208,520 கிலோ கழிவுகளை அழித்தலுக்காக ரூ. 62,430,286 செலுத்தப்பட்டிருந்ததுடன், அந்த கழிவுகள் சைட்டோடொக்சிக் அல்லது சைட்டோடொக்சிக் அல்லாதவையாக அந்த நிறுவனத்தினால் வகைப்படுத்தப்படவில்லை. எனினும், அந்த நிறுவனம் வழங்கிய Clinical Waste Collection Document ஆவணத்தின்படி, இதில் 18 நிறுவனங்களின் கழிவு வகைகள் காலாவதியான மருந்துகள் என குறிப்பிடப்பட்டுள்ளன.

iv. 2015 இலக்கம் 05 எனும் தேசிய ஔடதங்கள் ஒழுங்குபடுத்தல் ஆணையக சட்டத்தின் 3(ஆ) இன்படி, மருந்துகள், மருத்துவ உபகரணங்கள் மற்றும் எல்லை சார் தயாரிப்புகளை அகற்றலுடன் தொடர்பான அனைத்து அம்சங்களுக்குமான மத்திய ஒழுங்குபடுத்துநராக செயற்படுவது, ஆணையகத்தின் முதன்மை நோக்கம் என்பதுடன், இதற்கு இணக்கமாக தேசிய ஔடதங்கள் ஒழுங்குபடுத்தல் ஆணையகத்தினால் காலாவதியான மற்றும் தேவையற்ற மருந்துகளை அகற்றுவதற்கான ஒரு வழிகாட்டல் தொகுப்பை 2021 பெப்ரவரி 01 ஆம் திகதி வெளியிட்டுள்ளது. அதன்படி, மருந்து அகற்றல் நடவடிக்கைகள், தேசிய ஔடதங்கள் ஒழுங்குபடுத்தல் ஆணையத்தின் அங்கீகாரம் பெற்ற உத்தியோகத்தரின் மேற்பார்வையில் மேற்கொள்ளப்பட வேண்டும் என்பதுன், அகற்றல் செயற்பாட்டுக்கு முன்னர் ஆணையத்தின் முன் அனுமதி பெற்றிருக்க வேண்டும். எனினும், மருத்துவ விநியோகப் பிரிவினால் மருந்துகளை அழிக்கும் போது தேசிய ஔடதங்கள் ஒழுங்குபடுத்தல் ஆணையத்தின் முன் அனுமதி பெறப்படாமல் அந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன், பதிலாக ஒவ்வொரு நிறுவனங்களிலும் அழித்தலுக்கான திகதி ஒதுக்கப்பட்டதற்கான கடித பிரதிகள் மற்றும் அழித்தல் நடவடிக்கைகள் முடிந்த பின்னர் தொடர்புடைய விபரங்களைக் கொண்ட "அகற்றல் சான்றிதழ்கள் (Destruction Certificates)" தேசிய ஔடதங்கள் ஒழுங்குபடுத்தல் ஆணையத்தின் தலைமை நிர்வாக அதிகாரியிடம் அனுப்பப்பட்டிருந்தன.

3.8 **உப பணி முற்பணம் வழங்குதல் மற்றும் தீர்த்தல்**

பின்வருவன அவதானிக்கப்பட்டன.

(அ) 2020 ஆகஸ்ட் 28 ஆம் திகதிய 01/2020 எனும் இலக்க அரச நிதி சுற்றறிக்கையின் திருத்தப்பட்ட நிதி ஒழுங்குவிதி 371 (2) மற்றும் 371 (5) இன்படி, பணிகளை முடித்து 10 நாட்களுக்குள் பெறப்பட்ட சூழ்நிலை உப பணி முற்பணம் கணக்கை தீர்தல் வேண்டும் என்ற போதிலும், அமைச்சினால் இதற்கமைய நடவடிக்கை எடுக்கப்படாத சந்தர்ப்பங்கள் காணப்பட்டன. விபரங்கள் பின்வருமாறு,

i. மதிப்பாய்வு ஆண்டில் 16 சந்தர்ப்பங்களில் பெறப்பட்ட மொத்தம் ரூபா மில்லியன் ரூ. 707.414 இல் உரிய பணிகள் முடிந்த பின்னர் மீதமிருந்த ரூ. 134,928 ஐ திருப்பி செலுத்துவதில் 07 நாட்களில் இருந்து 100 நாட்கள் வரையிலான தாமதம் ஏற்பட்டுள்ளது.

ii. மதிப்பாய்வு ஆண்டில் 179 சந்தர்ப்பங்களில் பெறப்பட்ட மொத்தம் 7,542,159 ரூபா உப பணி முற்பணத்தில் உரிய பணிகள் முடிந்த பின்னர் மீதமிருந்த ரூ. 1,752,931 ஐ திருப்பி செலுத்துவதில் 05 நாட்களில் இருந்து 68 நாட்கள் வரை காலதாமதம் ஏற்பட்டுள்ளது.

iii. 2024 ஆம் ஆண்டில் பல்வேறு நிகழ்ச்சித் திட்டங்களுக்காக உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்ட எரிபொருள் முற்பணம் பணி நிறைவடைந்ததும் உடனே தீர்க்கப்பட வேண்டும் எனினும், மதிப்பாய்வு ஆண்டினுள் 21 சந்தர்ப்பங்களுக்கான ரூபா 371,933 இனை தீர்ப்பதற்கு 01 - 06 மாதங்கள் தாமதித்துள்ளது.

iv. மதிப்பாய்வு ஆண்டில் பல்வேறு நிகழ்ச்சித் திட்டங்களை நடாத்துவதற்காக 10 சந்தர்ப்பங்களில் மாகாண சுகாதார செயலாளர்களுக்கு வழங்கப்பட்ட ரூ. 2,190,450 நிதியில் அந்த நிகழ்ச்சித் திட்டங்கள் நடத்தப்பட்ட பிறகு மீதமிருந்த ரூ. 390,000 இனை திருப்பி செலுத்துவதில் 44 நாட்களில் இருந்து 227 நாட்கள் வரை காலதாமதம் ஏற்பட்டது.

(ஆ) 2024 ஆம் ஆண்டில் மருத்துவ விநியோகப் பிரிவின் முற்பணப் பதிவேட்டின்படி, 48 சந்தரப்பங்களில் பெறப்பட்ட முற்பணம் உரிய பணி முடிந்த பிறகு 03 நாட்கள் முதல் 109 நாட்கள் வரை 08 அதிகாரிகளினால் நிறுத்தி வைக்கப்பட்டன. மேலும், 2024 ஜூலை 05 அன்று

நடைபெறவிருந்த குழுக் கூட்டம் ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு 03 நாட்களுக்கு முன்பே அறிவிக்கப்பட்ட போதிலும், அந்த கூட்டத்திற்காக 2024 ஜூலை 04 ஆம் திகதி பதவிநிலை உத்தியோகத்தரின் பெயரில் ரூ.35,000 முற்பணத்தை பதவிநிலை உத்தியோகத்தர் அல்லாத ஒரு உத்தியோகத்தரினால் பெற்றுக்கொள்ளப்பட்டு, அந்த பணத்தை 63 நாட்கள் வைத்திருந்த பின்னரே செலுத்தியுள்ளார். அந்த பணத்தை வைத்திருந்த நிலையில், 2024 ஜூலை 12 ஆம் திகதி நடைபெற்ற அதே குழுக் கூட்டத்திற்காக வேறு உத்தியோகத்தர் ஒருவரின் பெயரில் ரூ. 35,000 முற்பணம் பெறப்பட்டுள்ளது. மேலும், சில பணி முற்பணத்திற்குரிய பணிகளை நிறைவேற்றுவதற்கு 22 நாட்களுக்கு முன்பே பெறப்பட்டுள்ளது எனவும், மீண்டும் முற்பணம் வழங்கும் போது அதற்கு முன் பெறப்பட்ட முற்பணம் திருப்பி செலுத்தப்படாமல் இருந்தமையும், சம்பந்தப்பட்ட திட்டங்களுக்கு உரிய செலவுக் கணிப்புகள் முறையாக தயாரிக்கப்படாமை காரணமாக, 14 சந்தர்ப்பங்களில் பெறப்பட்ட முற்பணத்தில் 50% இற்கும் அதிகமாக நிதி மீதமாகிறது என்றும், முற்பணப் பதிவேடு அவசியமான தகவல்களுடன் முறையாக பராமரிக்கப்படவில்லை என்பதும் அவதானிக்கப்பட்டது.

(இ) சுகாதார அமைச்சிற்குரிய மதிப்பாய்வு ஆண்டில் 16 சந்தர்ப்பங்களில் பெறப்பட்ட ரூ.494,690 பணி முற்பணம், தொடர்புடைய பணிக்காக பயன்படுத்தப்படாமல் 04 நாட்களில் இருந்து 81 நாட்கள் வரை வைத்திருந்து பின்னர் திருப்பி செலுத்தப்பட்டது.

(ஈ) இலங்கை பல் வைத்தியசாலை மற்றும் அனுராதபுரம் போதனா வைத்தியசாலையில் 2002 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளில் இடம்பெற்ற நிதிக் கொள்ளைகளில் ஏற்பட்ட இழப்புகளை ஈடுசெய்ய திறைசேரியினால் வழங்கப்பட்ட நிதியில், 2024 டிசம்பர் 31 நிலவரப்படி செலுத்தப்படாத முறையே ரூ. 2,288,037 மற்றும் ரூ. 6,321,785 முற்பணங்கள், நிதிக்கூற்றுகளில் (ஏசிஏ- 5) பல்வேறு முற்பணங்களின் கீழ் குறிப்பிடப்படவில்லை.

(உ) 2024 டிசம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்காக சமர்ப்பிக்கப்பட்ட அரச அலுவலர்களின் முற்பணம் "B" கணக்கின் சீராக்கல் கூற்று தொடர்பில் பின்வருவன அவதானிக்கப்பட்டன.

i. 2024 டிசம்பர் 31 நிலவரப்படி, பணியில் இருந்த உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய மொத்தம் 1.84 மில்லியன் ரூபா கடன் நிலுவைத் தொகையில் 15 உத்தியோகத்தர்களின் பதவிகள் குறிப்பிடப்படவில்லை என்பதுடன், 2.24 மில்லியன் ரூபாவான 14 உத்தியோகத்தர்களின் தேசிய அடையாள அட்டை குறிப்பிடப்படவில்லை.

ii. 2024 டிசம்பர் 31 நிலவரப்படி, பணியில் இருந்த 31 உத்தியோகத்தர்களுக்கு 2023 டிசம்பர் 31 அன்று இருந்த கடன் நிலுவைகள் 2024 ஆம் ஆண்டில் அறவிடப்படவில்லை என்பது அவதானிக்கப்பட்டது. இதன்படி, இந்த உத்தியோகத்தர்கள் உண்மையில் பணியில் இருந்தார்களா என்ற சந்தேகத்தை கணக்காய்வில் நிராகரிக்க முடியவில்லை.

iii. 2024 டிசம்பர் 31 நிலவரப்படி, பணியில் இருந்த 2069 உத்தியோகத்தர்களுடன் தொடர்புடைய 2023 ஆம் ஆண்டு இறுதியில் காணப்பட்ட பேரிடர் கடன் நிலுவைகளில், 2024 ஆம் ஆண்டில் அறவிடப்பட்ட கடன் தொகை தொடர்பாக கணக்காய்வில் சிக்கல்கள் ஏற்பட்டன.

iv. 2024 டிசம்பர் 31 நிலவரப்படி, பணியில் இருந்த 184 உத்தியோகத்தர்கள் தொடர்பாக 2023 ஆம் ஆண்டிற்குள் பேரிடர் கடன் நிலுவைகள் அறவிடப்படவில்லை என்பதுடன், ஏற்க முடியாத மதிப்பில் பேரிடர் கடன் நிலுவைகள் மற்றும் 2024 டிசம்பர் 31 ஆம் திகதியன்று மொத்த கடன் நிலுவை அதிகரித்திருந்தது.

v. 2024 ஆம் ஆண்டு சீராக்கல் கூற்றில் இணைப்பு 3 இன்படி பிற அரச அமைச்சுகள் / திணைக்களங்களுக்கு இடமாற்றம் பெற்று சென்ற உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிட வேண்டிய நிலுவைத் தொகை 49.14 மில்லியன் ரூபா ஆகும். 2004 ஒக்டோபர் 11 ஆம் திகதிய இலக்கம் 118 எனும் வரவு செலவு சுற்றறிக்கையின்படி, உத்தியோகத்தர் ஒருவர் இடமாற்றம் செய்யப்பட்ட இரண்டு மாதங்களுக்குள் கடன் நிலுவைத் தொகையை செலுத்தவில்லை என்றால், இடமாற்றம் பெற்றுச்சென்ற திணைக்களத்தில் அவர் பணியாற்றுவதை உறுதி செய்து அந்த திணைக்களத்திற்கு எழுத்துமூலம் அறிவிக்க வேண்டும். மூன்றாவது மாதத்தில் இடமாற்றம் வழங்கப்பட்ட திணைக்களத்தினால் மாத கணக்குச்சுருக்கத்தின் மூலம் குறிப்பிட்ட கடன் நிலுவைத் தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதுடன், மூன்று மாதங்களின் பின்னர் அந்த கடன் நிலுவைத்தொகையை காட்டாதிருப்பதற்கு பொறுப்புக்கூற வேண்டும். எனினும் 2024 டிசம்பர் 31 நிலவரப்படி அமைச்சு மற்றும் அதற்குரித்தான 61 நிறுவனங்களுடன் தொடர்பான 49.14 மில்லியன் ரூபா கடன் நிலுவை தொடர்பாக தாபன விதிக்கோவையின் xxiv அத்தியாயத்தின் 1:6 மற்றும் 1:7 ஆகிய பிரிவுகளின் பிரகாரம் மற்றும் மேற்குறிப்பிட்டவாறு நடவடிக்கை எடுக்கவில்லை. இந்த கடன் நிலுவையில் ரூபா மில்லியன் 40.69 ஆன கடன் நிலுவைகள் 5 வருடங்களுக்கு மேலான பழைய நிலுவைகள் என்பதுடன், அது மொத்த கடன் நிலுவையில் 83 சதவீதமாகும். மிகுதி கடன் நிலுவைகளில் ரூபா மில்லியன் 7.30 கடன் நிலுவை 03 மாதங்களை தாண்டிய கடன் நிலுவைகள் ஆகும். அதன்படி, மொத்த கடன் நிலுவையில் ரூபா மில்லியன் 47.99 அதாவது, 98 சதவீதம் உத்தியோகத்தர்களின் கவனயீனம் காரணமாக ஏற்பட்ட கடன் நிலுவை என்பது கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது.

vi. 2023 டிசம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்காக சமர்ப்பிக்கப்பட்ட முற்பணம் "B" கணக்கில் 3.1 இணைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள மஹரகம அபேக்ஷா வைத்தியசாலை மற்றும் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலை தொடர்பான முறையே 32 மற்றும் 65 உத்தியோகத்தர்களின் கடன் நிலுவையை உறுதிப்படுத்துவதற்கான கையொப்பங்களை சமர்ப்பிக்கவில்லை.

vii. சீராக்கல் கூற்றில் உப அட்டவணை இல 3.2.3 இல் குறிப்பிடப்பட்டுள்ள சுகாதார அமைச்சு மற்றும் அதனுடன் தொடர்புடைய நிறுவனங்களுக்கு இடமாற்றம் பெற்று வந்துள்ள உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய கடன் நிலுவைகளில் மொத்தம் 1 மில்லியன் ரூபா மதிப்புள்ள கடன் நிலுவை 22 தொடர்பாக இடமாற்றம் பெற்றுச்சென்ற உத்தியோகத்தர்களின் பதவி குறிப்பிடப்படவில்லை என்பதுடன், 10.84 மில்லியன் ரூபா கடன் நிலுவை 159 தொடர்பாக உத்தியோகத்தர்களின் தேசிய அடையாள அட்டை குறிப்பிடப்படவில்லை.

viii. உப அட்டவணை 3.3 இன்படி, மாகாண சபைகளுக்கு இடமாற்றம் பெற்ற உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய 37.23 மில்லியன் ரூபா கடன் நிலுவைத் தொகையில் 1.33 மில்லியன் ரூபா கடன் நிலுவை 11 தொடர்பாக உரிய சேவை நிலையங்கள் குறிப்பிடப்படவில்லை.

ix. உப அட்டவணை 3.3 இல் குறிப்பிடப்பட்டுள்ள 1.55 மில்லியன் ரூபா கடன் நிலுவையில் உள்ள 27 உத்தியோகத்தர்களின் பதவி குறிப்பிடப்படவில்லை. மேலும் அதில் 30.08 மில்லியன் ரூபா கடன் நிலுவையில் 601 இற்குரிய உத்தியோகத்தர்களின் தேசிய அடையாள அட்டை இலக்கங்கள் குறிப்பிடப்படவில்லை.

x. உப அட்டவணை 3.3 இல் குறிப்பிடப்பட்டுள்ள 691,508 ரூபா கடன் நிலுவை 49 தொடர்பான உத்தியோகத்தர்கள் இடமாற்றம் பெற்றுச்சென்ற மாகாண சபை நிறுவனங்களை உறுதியாக கண்டறிய முடியவில்லை.

xi. உப அட்டவணை 3.3 இல் குறிப்பிடப்பட்டுள்ள மொத்தம் 4.98 மில்லியன் ரூபா கடன் நிலுவை 82 சுகாதார அமைச்சிற்குரிய நிறுவனங்களுக்கு இடமாற்றம் பெற்ற உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய கடன் நிலுவை ஆகும்.

xii. உப அட்டவணை 3.3 இல் குறிப்பிடப்பட்டுள்ள இடமாற்றம் பெற்ற உத்தியோகத்தர்களின் இடமாற்றம் பெற்ற நிலையங்களை குறிப்பிடும் போது மாகாண சபை வைத்தியசாலைகள் மற்றும் சுகாதார அமைச்சின் கீழுள்ள வைத்தியசாலைகளின் பெயர்கள் சரியாக குறிப்பிடப்படவில்லை என்பது அவதானிக்கப்பட்டது.

xiii. உப அட்டவணை இலக்கம் 3.2.2 உள்ளிடப்பட்ட 2024 டிசம்பர் 31 நிலவரப்படி அறவிடப்பட வேண்டிய 11.37 மில்லியன் ரூபா கடன் நிலுவை சுகாதார அமைச்சிற்குரிய வைத்தியசாலைகள் மற்றும் பிற சுகாதார நிறுவனங்களுக்கு இடமாற்றம் பெற்ற உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய கடன் நிலுவைகள் ஆகும். 2019, 2020, 2021, 2022 மற்றும் 2023 ஆகிய நான்கு ஆண்டுகளுக்கான கணக்காய்வு அறிக்கையின் ஊடாக இந்த நிலைமை தங்களின் அவதானத்திற்கு உட்படுத்துவதுடன், ஒரே செலவின தலைப்பில் உள்ள நிறுவனங்களுக்கு இடையே கடனாளி மற்றும் கடன்நிலுவைகள் இருக்கமுடியாது என்பதால் இந்த கடன் நிலுவைகள் குறித்து ஆய்வு செய்து தீர்ப்பதற்கான நடவடிக்கை எடுக்குமாறு பரிந்துரைக்கப்பட்ட போதிலும், 2024 டிசம்பர் 31 ஆம் திகதி வரை இந்த கடன் நிலுவைகளை கண்டறிவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

xiv. பதவி நீக்கப்பட்ட 195 உத்தியோகத்தர்களிடமிருந்து 2024 டிசம்பர் 31 ஆம் திகதிக்கு அறவிடப்படவேண்டிய கடன் நிலுவை 9.95 மில்லியன் ரூபா என்பதுடன், அதில் 7.31 மில்லியன் ரூபா அதாவது 73 சதவீதத்திற்கு நிகரான 5 வருடங்களுக்கு மேற்பட்ட நிலுவைகள் என்பதுடன், 9.28 மில்லியன் ரூபா அதாவது 93 சதவீதம் ஒரு வருடத்திற்கு மேற்பட்ட பழைய நிலுவைகள் ஆகும்.

xv. மொத்தம் 193,134 ரூபா கொண்ட பதவி வெறிதாக்கப்பட்ட 06 உத்தியோகத்தர்களின் பதவி குறிப்பிடப்படவில்லை என்பதுடன், மொத்தம் 6.68 மில்லியன் ரூபா மதிப்பான 103 உத்தியோகத்தர்களின் தேசிய அடையாள அட்டை இலக்கங்கள் குறிப்பிடப்படவில்லை.

xvi. சேவையை வெறிதாக்கிய 1224 உத்தியோகத்தர்களிடமிருந்து மொத்தம் 45.28 மில்லியன் ரூபா கடன் நிலுவை அறவிட வேண்டிய இருந்ததுடன் அதில் 11.28 மில்லியன் ரூபா அதாவது 25 சதவீதமான கடன் நிலுவைகள் 5 வருடங்களுக்கு மேலான பழைய நிலுவைகள் என்பதுடன், 25.11 மில்லியன் ரூபா அதாவது 55 சதவீதம் ஒரு வருடத்திற்கும் மேற்பட்ட கடன் நிலுவைகள் ஆகும். இந்த நிலுவைகள் ஒவ்வொரு ஆண்டும் தொடர்ந்து அதிகரித்து வருவதுடன், கடனை அறவிடுவதற்கு போதுமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டதாக கணக்காய்வில் திருப்தியடைய முடியவில்லை.

xvii. மொத்தம் 1.31 மில்லியன் ரூபா கொண்ட சேவையில் இருந்து விலகிய 56 உத்தியோகத்தர்களின் பதவி குறிப்பிடப்படவில்லை என்பதுடன், மொத்தம் 11.04 மில்லியன் ரூபா ஆன 376 உத்தியோகத்தர்களின் தேசிய அடையாள அட்டை இலக்கங்கள் குறிப்பிடப்படவில்லை.

xviii. ஓய்வுபெற்ற 257 உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய கடன் நிலுவை 18.22 மில்லியன் ரூபா என்பதுடன் அதில் 5.79 மில்லியன் ரூபா அதாவது 32 சதவீதமான கடன் நிலுவைகள் ஒரு வருடத்திற்கு மேலான பழைய நிலுவைகள் ஆகும்.

xix. மொத்தம் 510,083 ரூபா கொண்ட ஓய்வு பெற்ற 6 உத்தியோகத்தர்களின் பதவி குறிப்பிடப்படவில்லை என்பதுடன், மொத்தம் ரூபா 727,724 ஆன 20 உத்தியோகத்தர்களின் தேசிய அடையாள அட்டை இலக்கங்கள் குறிப்பிடப்படவில்லை.

xx. 2024 டிசம்பர் 31 நிலவரப்படி, மரணித்த உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய கடன் நிலுவை 8.65 மில்லியன் ரூபா என்பதுடன், அதில் 29 உத்தியோகத்தர்களிடம் இருந்து அறவிடப்பட வேண்டிய மொத்தம் 1.72 மில்லியன் அதாவது 20 சதவீதமான கடன் நிலுவை ஐந்து வருடங்களுக்கு மேலான பழைய நிலுவைகள் ஆகும். தாபன விதிக்கோவையின் xxiv அத்தியாயத்தின் 4.4 தொடக்கம் 4.6 வரையான பிரிவுகளின்படி செயற்படாத காரணத்தால் கடன் நிலுவைகளில் 4.77 மில்லியன் ரூபா அதாவது 55 சதவீதமானவை ஒரு வருடத்திற்கு மேலான கடன் நிலுவைகள் ஆகும்.

xxi. மரணித்த 19 உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 600,620 கடன் நிலுவைகளில் உரிய உத்தியோகத்தர்களின் தேசிய அடையாள அட்டை இலக்கங்கள் குறிப்பிடப்படவில்லை.

xxii. தாபன விதிக்கோவையின் XXIV அத்தியாயத்தின் உப பிரிவு 3:7 இன்படி, கடன் தொகை வழங்கப்பட்ட நாளில் இருந்து நிர்ணயிக்கப்பட்ட விகிதத்தில் வட்டி அறவிடப்பட வேண்டும் என்றாலும், ரிஜ்வே சீமாட்டி சிறுவர் வைத்தியசாலை அந்த உப பிரிவை மீறிய சந்தர்ப்பங்கள் கணக்காய்வில் அவதானிக்கப்பட்டதுடன், உத்தியோகத்தர்களுக்கு இடர் கடன் வழங்கும் போது அந்த கடன் வழங்கப்பட்ட நாளில் இருந்து உரிய மாதத்திற்குரிய நாட்களுக்கு வட்டி கணக்கிடாமல் அடுத்த மாதத்தில் இருந்து வட்டி கணக்கிடத் தொடங்கியுள்ளது. இவ்வாறு 22 சந்தர்ப்பங்களில் ரூ. 10,926 மதிப்புள்ள வட்டி அறவிடப்படவில்லை.

xxiii. இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் தாபன விதிக்கோவையின் XII அத்தியாயத்தின் 18:4:3 பிரிவின்படி, சம்பளமற்ற மகப்பேற்று விடுமுறை பெறும் உத்தியோகத்தர்களிடமிருந்து அரசாங்கம் அறவிட வேண்டிய கடன் மற்றும் முற்பணத்தை உடனடியாக அறவிடுவதற்கு திருப்திகரமான ஒரு முறை பின்பற்றப்பட வேண்டும் எனினும், அதன்படி சிலாபம் வைத்தியசாலையின் பணிப்பாளரினால் அவ்வாறு விடுமுறை பெறும் உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிட வேண்டிய தொகை மாதாந்தம் கணக்குப் பிரிவிற்கு செலுத்துமாறு அறிவுறுத்தப்பட்ட போதிலும், அவ்வாறு செலுத்த வேண்டிய விதவைகள் மற்றும் அநாதைகள் ஓய்வூதிய பங்களிப்புகள், அக்ரஹார காப்பீட்டு தொகை, இடர் மற்றும் கடன் முற்பணத் தொகைகள் எதுவும் கணக்குப் பிரிவிற்கு செலுத்தப்படவில்லை.

3.9 **வைப்பு**

பின்வருவன அவதானிக்கப்பட்டன

(அ) 2024 டிசம்பர் 31 நிலவரப்படி, CIGAS அமைப்பின் பிரகாரம் வைப்பு கணக்கு சுருக்கம் மற்றும் சுகாதார அமைச்சின் தனிநபர் கணக்கு சுரக்க பதிவுகளுக்கும் இடையே 10.58 மில்லியன் ரூபா நிகர வித்தியாசம் இருந்தது.

(ஆ) நிதி ஒழுங்குவிதிகள் 571 (3) இன்படி, அமைச்சின் கீழுள்ள 20 நிறுவனங்களுக்குரிய 02 வருடங்களுக்கு மேற்பட்ட மொத்தம் ரூபா. மில்லியன் 1,215.40 இற்கான வைப்பு நிலுவைகள் தீர்ப்பதற்கு அல்லது அரச வருவாயில் சேர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

(இ) சுகாதார அமைச்சின் பொது வைப்புக் கணக்கு தொடர்பான உப அட்டவணைகளை ஆராய்ந்த போது கொழும்பு தெற்கு போதனா வைத்தியசாலை தொடர்பான 68 சந்தர்ப்பங்களில் 3.93 மில்லியன் ரூபா மதிப்புள்ள 06 மாதங்களுக்கும் மேலாக பணமாக்கப்படாத காசோலைகள் தொடர்பில் நிதி ஒழுங்குவிதிகள் 396 இன்படி நடவடிக்கை எடுக்காமல் பொது வைப்புக் கணக்கில் வைக்கப்பட்டிருந்தது.

(ஈ) மஹமோதர போதனா வைத்தியசாலையில் வெளிநாடு சென்ற இரண்டு வைத்தியர்களுக்குரிய மொத்தம் ரூ. 103,190 மதிப்புள்ள மேலதிக நேர கொடுப்பனவு 2022 ஆகஸ்ட் 29 ஆம் திகதி முதல் பொது வைப்புக் கணக்கில் வைக்கப்பட்டிருந்தது.

(உ) ரிஜ்வே சீமாட்டி சிறுவர் வைத்தியசாலையில் வெளிநாடு சென்ற இரண்டு தாதி உத்தியோகத்தர்களுக்குரிய மொத்தம் ரூ. 8,376 மதிப்புள்ள மேலதிக நேர கொடுப்பனவு 2024 டிசம்பர் 31 நிலவரப்படி, பொது வைப்புக் கணக்கில் வைக்கப்பட்டிருந்தது.

(ஊ) களுத்துறை தேசிய சுகாதார நிறுவனத்தின் முகாமைத்துவ உதவியாளர் உத்தியோகத்தர்களின் சம்பள வைப்புத் தொகையாக ரூ. 101,250 இருப்பு, 2019 ஒக்டோபர் முதல் 2022 ஒக்டோபர் வரை பொது வைப்புக் கணக்கில் வைக்கப்பட்டிருந்ததுடன், அது கணக்காய்வில் சிக்கலாக இருந்தது.

(எ) நிதி ஒழுங்குவிதிகள் 396 (அ) இன்படி செலுத்த வேண்டிய காசோலைகள், சேல்லுபடியாகும் காலம் காலாவதியான காசோலைகள் என்பதுடன், ரிஜ்வே சீமாட்டி சிறுவர் வைத்தியசாலையின் பொது வைப்புக் கணக்கு தொடர்பான உப அட்டவணைகளை ஆராய்ந்த போது ரூ. 443,397.01 மதிப்புள்ள 06 மாதங்களுக்கும் மேலான பணமாக்கப்படாத 03 காசோலைகள் தொடர்பில் நிதி ஒழுங்குவிதிகள் 396 இன்படி நடவடிக்கை எடுக்காமல் பொது வைப்புக் கணக்கில் வைக்கப்பட்டிருந்தது.

4. செயற்பாட்டு ஆய்வு

4.1 செயற்திறன்

4.1.1 பொறுப்புகள் நிறைவேற்றப்படாமை

அமைச்சினால் மதிப்பாய்வு ஆண்டில் செயல் திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ள நடவடிக்கைகளின் முன்னேற்றத்தை கணக்காய்விற்கு சமர்ப்பிக்காததால், எதிர்பாரத்த அளவிலான நிறைவை அடையத் தவறியமை, எதிர்பாரத்த விளைவுகளை (Outcome) அடையத்தவறியமை, திட்டத்தை நிறைவு செய்யாமல் கைவிடப்பட்டமை மற்றும் திட்ட செயல்படுத்தலில் தாமதம் ஆகியவற்றை ஆராய முடியவில்லை.

4.1.2 எதிர்பார்க்கப்பட்ட நிறைவு மட்டத்தை அடையாமை

பின்வருவன அவதானிக்கப்பட்டன.

(அ) சுகாதார அமைச்சின் செயலாளரின் 2023 ஜூன் 16 ஆம் திகதிய BO7/01/2023 எனும் இலக்க கடிதம் மூலம் மின்சாரம் மற்றும் வலு சக்தி நெருக்கடிக்கு தீர்வாக வைத்தியசாலைகள் மற்றும் சுகாதார நிறுவனங்களுக்கு சூரிய பேனல்களை நிறுவ திட்டமிடப்படும் என குறிப்பிடப்பட்டுள்ள போதிலும், சூரிய பேனல்களை நிறுவுவதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுக்காத

காரணத்தால், பொலன்னறுவை தேசிய சிறுநீரக விஷேட வைத்தியசாலையில் மாதாந்த மின்சார செலவினமாக சுமார் 10 மில்லியன் ரூபா விட குறைக்க முடியவில்லை.

(ஆ) பொலன்னறுவை தேசிய சிறுநீரக விஷேட வைத்தியசாலையில் சிறுநீரக நோயுடன் தொடர்பான ஆராய்ச்சிகளை மேற்கொள்வதற்காக ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு பிரிவை நிறுவுவதற்கு சீன அரசாங்கத்திடமிருந்து மானியமாகப் பெறப்பட்ட 20 வகைகளைச் சேர்ந்த 55 உபகரணங்கள், அந்த பிரிவு நிறுவப்படாத காரணத்தால் பயன்படுத்தப்படாமல் வைத்தியசாலை களஞ்சியத்தில் சேமிக்கப்பட்டுள்ளன. மேலும், இந்த உபகரணங்களை பயன்படுத்தாததால் தொழில்நுட்ப ரீதியில் காலாவதியாகக்கூடிய சாத்தியக்கூறு குறித்து கவனம் செலுத்தப்படவில்லை.

(இ) கேகாலை போதனா வைத்தியசாலையில் 2023 மற்றும் 2024 ஆம் ஆண்டுகளில் முறையே சத்திர சிகிச்சைக்காக பதிவு செய்யப்பட்ட நோயாளிகள் 1794 மற்றும் 1436 இல் 732 மற்றும் 708 நோயாளிகள் மட்டுமே சத்திர சிகிச்சைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.இது 50 சதவீதத்திற்கும் குறைவானதாகும்.

4.1.3 எதிர்பார்க்கப்பட்ட பலனை (Outcome) அடையாமை

2021 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட பொலன்னறுவை தேசிய சிறுநீரக விஷேட வைத்தியசாலையின் தீவிர சிகிச்சைப் பிரிவு கணக்காய்வுத் தினமான 2025 பெப்ரவரி 10 நிலவரப்படி 03 ஆண்டுகளுக்கும் மேற்பட்ட காலம் கடந்துள்ள போதிலும் அது செயற்படவில்லை என்பதுடன், அதனை செயற்பாட்டு நிலைக்கு கொண்டுவருவதற்கு பொறுப்பான தரப்பினர் கவனம் செலுத்தவில்லை.

4.1.4 திட்டத்தை நிறைவு செய்யாது கைவிடல்

மாகாண சபை ஒதுக்கீட்டில் 2016 நவம்பர் 01 ஆம் திகதி தொடங்கப்பட்ட ரூ. 218,443,000 மதிப்பீட்டு பெறுமதியான எம்பிலிப்பிட்டிய மாவட்ட பொது வைத்தியசாலையின் வெளிநோயாளர் பிரிவு அமைந்துள்ள கட்டிடத்தின் பணிகள் 2018 டிசம்பர் 31 ஆம் திகதி நிறைவு செய்வதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும், தரைத் தளத்தில் சுமார் 30 சதவீத பணிகள் மட்டும் முடிந்த பிறகு கட்டுமான பணிகள் பாதியிலேயே நிறுத்தப்பட்டிருந்தது.

4.1.5 திட்டத்தை முடிப்பதில் தாமதம்

சிலாபம் பொது வைத்தியசாலையில் இடப் பற்றாக்குறையை நிவர்த்தி செய்வதற்காக ரூ.1,170,171,946 மதிப்பீட்டு செலவில் 2016 ஆண்டு முதல் பின்வரும் 03 கட்டிடங்களின் கட்டுமானப் பணிகள் ஆரம்பிக்கப்பட்ட போதிலும், 2024 டிசம்பர் 31 ஆம் திகதியிலும் முடிக்கப்படவில்லை.

(அ) விபத்து பிரிவு கட்டுவதற்கான கடுமையான தேவையை கருத்தில் கொண்டு 501.21 மில்லியன் ரூபா மதிப்பீட்டுத் தொகைக்கு 609 நாட்களுக்குள் நிறைவு செய்யும் வகையில் 2018 ஜனவரி 15 ஆம் திகதி பணிகள் ஆரம்பிக்கப்பட்ட போதிலும், இந்த கட்டுமானம் 2024 ஆம் ஆண்டின் இறுதியில் கைவிடப்பட்டிருந்தது.

(ஆ) அரச பொறியியல் கூட்டுத்தாபனத்தினால் 2018 பெப்ரவரி 19 ஆம் திகதி தொடங்கப்பட்ட ரூ.583,778,828 மதிப்பீட்டு பெறுமதியான 05 மாடிகளைக் கொண்ட மருத்துவ வாட்டுத் தொகுதி கட்டிடம் 2020 ஆம் ஆண்டு இறுதிக்குள் முடிக்கப்படவிருந்த போதிலும், அதன் கட்டுமானப் பணிகள் நிறுத்தப்பட்டிருந்ததுடன், அதன் ஒப்பந்த காலம் சுமார் 1700 நாட்களைத் தாண்டியிருந்தது.

(இ) வைத்தியசாலையில் கடுமையான இடப் பற்றாக்குறை காரணமாக, சத்திர சிகிச்சைக்கூடம் மற்றும் தீவிர சிகிச்சைப் பிரிவை மிக துரிதமாக நிறுவ வேண்டிய அவசியத்தை கருத்தில் கொண்டு வழங்கமான கட்டிடத்தை கட்டுவதற்கு எடுக்கும் காலத்தை குறைக்க, இரும்பை

பயன்படுத்தி ஒரு தற்காலிக கட்டிடத்தை 06 மாத்திற்குள் கட்ட திட்டமிடப்பட்ட போதிலும், 2024 ஆம் ஆண்டு இறுதியிலும் கட்டிடத்தின் 02 வது மாடியின் பணிகள் முடிக்கப்படவில்லை. இந்த தாமதத்திற்கு ஒப்பந்ததாரரின் இலட்சியம், திட்டங்களைத் தயாரிப்பதற்கு முன் தேவைகளை அடையாளம் காணாததால் பின்னர் திட்டங்களை மாற்றுதல், கட்டுமான தளத்தின் சாத்தியக்கூறு தொடர்பில் ஆய்வு இல்லாமல் திட்டம் மற்றும் மதிப்பீடு தயாரித்தல், பில் செலுத்துவதில் தாமதம் என்பவை காரணங்களாகும். இதன் விளைவாக, இந்த கட்டுமானத்தின் 85.18 மில்லியன் ரூபா கட்டுமான மதிப்பீட்டு செலவை 131.95 மில்லியன் ரூபா வரை அதிகரிக்குமாறு ஒப்பந்ததாரர் 2021 மே 31 அன்று கோரிக்கை விடுத்துள்ளார். அத்தகைய சூழ்நிலையில் அரசாங்க நிதி தேவையற்ற முறையில் மேலதிகமாக செலவிடல் மற்றும் நோயாளர் பராமரிப்பு சேவைகளை முறையாக வழங்குவதில் தடைகளும் இருந்தன.

4.2 **கொள்வனவுகள்**

பின்வருவன அவதானிக்கப்பட்டன.

(அ) சுகாதார அமைச்சிற்குரிய இல KP - 0050 எனும் (Land Rover Discovery 04) வாகனத்தை பழுதுபார்த்தல் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வில் பின்வருவன அவதானிக்கப்பட்டன.

i. 2022 ஆகஸ்ட் 03 ஆம் திகதி விலைமனுக்கள் கோரப்பட்ட பின்னர் 2022 ஆகஸ்ட் 09 ஆம் திகதி வாகனத்தை பழுதுபார்ப்பதற்காக ரூ. 51,000 மதிப்பீட்டில் ஒரு நிறுவனத்திற்கு அனுப்பப்பட்டது. வாகனத்தை ஆராய்ந்த பிறகு 2022 செப்டெம்பர் 16 ஆம் திகதி அந்த நிறுவனத்தினால் ரூ. 1,297,050 என்ற புதிய மதிப்பீட்டை சமர்ப்பித்துள்ளது. அதன் பின்னர் 2022 செப்டெம்பர் 21 அன்று இந்த பழுதுபார்ப்பதற்காக இந்த வகை வாகனத்திற்கான உள்ளூர் முகவர் நிறுவனத்திடம் இருந்து மதிப்பீடு கோரப்பட்டதுடன், அந்த நிறுவனத்தால் ரூ. 1,995,655 மதிப்பீட்டை 2022 ஒக்டோபர் 11 ஆம் திகதி சமர்ப்பித்துள்ளது. 2022 நவம்பர் 04 ஆம் திகதி கொள்ளல் தீர்மானத்தின்படி, 2022 நவம்பர் 08 ஆம் திகதிய விலைமனுக் கோரல் கடிதத்திற்கு அமைய 08 நிறுவனங்களிடமிருந்தும் கடிதம் தபால் நிலையத்திற்கு அனுப்புவதற்கான ஆவணத்தின்படி 13 நிறுவனங்களில் இருந்து விலைமனு கோரப்பட்ட போதிலும், இந்த நேரத்தில் உள்ளூர் முகவர் நிறுவனத்திடம் இருந்து விலைமனுக்கள் பெறுவதற்கு எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை.

ii. நியமிக்கப்பட்ட தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு உறுப்பினர்கள் மூவரில் விடய அறிவுள்ள இயந்திர பொறியியலாளர் கையொப்பமிடாத தொழில்நுட்ப மதிப்பீட்டு அறிக்கை 2022 நவம்பர் 30 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டுள்ளதுடன், அந்த அறிக்கையின்படி, குறைந்த விலையைச் சமர்ப்பித்த நிறுவனத்திற்கு பழுதுபார்ப்பு வழங்க பரிந்துரைக்கப்பட்டது. 2022 டிசம்பர் 02 ஆம் திகதி கூடிய அமைச்சின் கொள்முதல் குழு "E" இனால் இந்த வாகனத்தை பழுதுபார்ப்பதற்கு இந்த வாகன வகையின் உள்ளூர் முகவர் நிறுவனத்தினால் 2022 ஒக்டோபர் 11 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பீட்டின் அடிப்படையில் மேற்கொள்வதற்கு அனுமதி வழங்கியுள்ளது. கொள்முதல் தீர்மானத்தின்படி, 2022 டிசம்பர் 02 இந்த வாகனம் பழுதுபார்ப்பதற்கு உள்ளூர் நிறுவனத்திற்கு அனுப்பப்பட்டதுடன், அந்த நிறுவனத்தினால் 2022 டிசம்பர் 16 ஆம் திகதி ரூ. 2,124,076 மதிப்புள்ள புதிய மதிப்பீட்டை சமர்ப்பித்துள்ளது. இந்த புதிய மதிப்பீட்டுக்குப் பதிலாக பழைய மதிப்பீட்டின்படி பழுதுபார்ப்பை செய்து தருமாறு 2022 டிசம்பர் 19 ஆம் திகதி பணிப்பாளர் (போக்குவரத்து) இனால் கோரப்பட்ட போதிலும் அதற்கு அந்த நிறுவனம் ஒப்புக்கொண்டதற்காக எந்த ஆதாரமும் கோப்பில் இல்லை.

iii. 2023 பெப்ரவரி 13 ஆம் திகதி முகவர் நிறுவனத்தினால் ரூ. 420,668 ஒரு மேலதிக மதிப்பீட்டை சமர்ப்பித்துள்ளதுடன், 2023 பெப்ரவரி 27 ஆம் திகதி அதற்கான அனுமதி நிறுவனத்திற்கு வழங்கியுள்ளது. மீண்டும் 2023 ஆகஸ்ட் 17 ஆம் திகதி ரூ. 11,927,210

ஆன ஒரு மேலதிக மதிப்பீட்டை சமர்ப்பித்துள்ளதுடன், அதை ஆய்வு செய்த போக்குவரத்து பணிகள் மற்றும் இயந்திர பொறியியலாளர் வாகனத்தை அமைச்சிற்கு கொண்டுவர பரிந்துரையை அவரின் திகதி குறிப்பிடாத கடிதத்தின் மூலம் வழங்கியுள்ளது. எனினும் பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தர் அது தொடர்பில் கவனம் செலுத்தவில்லை என்பதுடன், மீண்டும் 2024 பெப்ரவரி 19 ஆம் திகதி போக்குவரத்து அதிகாரியினால் ஒரு அறிக்கை பணிப்பாளர் (போக்குவரத்து) இற்கு வழங்கப்பட்டுள்ளதுடன், அதில் உதிரிப் பாகங்களை பயன்படுத்தி பழுதுபார்க்கப் பட்டதாகவும் சமர்ப்பிக்கப்பட்ட பில் செலுத்தப்பட வேண்டும் எனவும் குறிப்பிடப்பட்டிருந்தது. எனினும் சமர்ப்பிக்கப்பட்ட பில் கோப்பில் சேர்க்கப்படவில்லை.

iv. 2022 டிசம்பர் 02 ஆம் திகதி இந்த வாகனம் பழுதுபார்ப்பதற்காக உள்நாட்டு முகவர் நிறுவனத்திற்கு அனுப்பப்பட்டு சுமார் 18 மாதங்களின் பின்னர் 2024 மே 28 ஆம் திகதி அவசரமாக பழுதுபார்த்து அமைச்சிற்கு ஒப்படைக்குமாறும், அவ்வாறு செய்ய முடியாதவிடத்து 07 நாட்களுக்குள் வாகனத்தை அமைச்சிற்கு ஒப்படைக்குமாறு முகவர் நிறுவனத்திற்கு அறிவித்துள்ளது. அவசரமாக பழுதுபார்த்து ஒப்படைக்கப்பட வேண்டிய வாகனம் என்று நடவடிக்கை எடுக்கப்பட்ட போதிலும், சாரதியினால் 2022 ஜூலை 28 ஆம் திகதி அறிவிக்கப்பட்ட குறைபாடுகளை சரி செய்து வாகனத்தை அமைச்சிற்கு கொண்டுவர இரண்டு வருடங்களுக்கு மேற்பட்ட காலம் கடந்துள்ள போதிலும் 2024 டிசம்பர் மாதத்திலும் அது சாத்தியப்படவில்லை.

(ஆ) மதிப்பாய்வு ஆண்டில் ஹோமியோபதி வைத்தியசாலைக்கு கொள்வனவு செய்யப்பட்ட 03 ஆய்வுகூட உபகரணங்களுக்கு கொள்முதல் வழிகாட்டுதல்களின் 8.12.3 (அ) வது பந்தியின் பிரகாரம், வழங்கப்பட்ட பொருட்கள், விபரக்குறிப்புகள் மற்றும் பிற ஒப்புக் கொள்ளப்பட்ட விதிமுறைகளுக்கு அணங்குவதாக நிலையப் பொறுப்பு அதிகாரியினால் சான்றிதழ் வழங்கப்பட வேண்டும் என குறிப்பிடப்பட்டுள்ள போதிலும், அதன்படி நடவடிக்கை எடுக்காமலும் மற்றும் அதன் செயல்பாட்டை சரி பார்க்காமலும் சம்பந்தப்பட்ட நிறுவனங்களுக்கு 2,366,443 ரூபா செலுத்தியுள்ளது.

(இ) கண்டி தேசிய வைத்தியசாலையினால் நோயாளர் பராமரிப்பு சேவையின் தரத்தை மேம்படுத்தும் நோக்கில் 2018 பெப்ரவரி 08 ஆம் திகதி ரூபா. 18,024,548 இனை செலவு செய்து மின்சார பயணிகள் போக்குவரத்து வாகனங்கள் 06 உம், மின்சார அன்புலன்ஸ் 04 உம் கொள்வனவு செய்யப்பட்டன. மின்சார வாகனங்களுக்கான விபரக் குறிப்புகள் மற்றும் தெரிவு செய்த விலைமனுதாரிகளின் விபரக்குறிப்புகள் தயாரிக்கும் போது கணிசமான தொழில்நுட்ப விலகல்கள் இருந்தன என தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு அறிக்கையின் ஊடாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. மேலும் இந்த வாகனங்களை மேம்படுத்துவதற்காக பரிந்துரைக்கப்பட்ட போதிலும் அந்த வாகனங்களை சோதனை செய்தமைக்கான அல்லது மேம்படுத்தியமைக்கான அறிக்கை சமர்ப்பிக்கவில்லை. அதன்படி, கொள்ளல் வழிகாட்டல் கோவையின் 8.12.1 (ஆ) மற்றும் 8.12.2 (அ) இன்படி செயற்படுத்தப்படவில்லை. இருப்பினும் இந்த வாகனங்கள் கொள்வனவு செய்யப்பட்டு 2 வருடங்களின் பின்னர் மேடுகள் ஏறுவதற்கு இயந்திர திறன் போதுமானதாக இல்லை என பயன்பாட்டிலிருந்து நீக்கப்பட்டுள்ளது. கேள்வி கேவணங்களின் விபரக்குறிப்பு 4 (b) இன்படி, 05 வருட பராமரிப்பு ஒப்பந்தம் செய்யப்பட வேண்டும் எனினும், மின்சார வாகன விநியோகத்தருடன் அத்தகைய பராமரிப்பு ஒப்பந்தம் செய்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை.

(ஈ) கண்டி தேசிய வைத்தியசாலையில் உலர் உணவுப் பொருட்களுக்கான மதிப்பீடுகளைத் தயாரிக்கும் போது 2022/ 2023 ஆம் ஆண்டுகளில் ரூ. 260,410,438 என மிகைப்படுத்தப்பட்ட மதிப்பீடு தயாரித்த காரணத்தால் அந்த விலைமனுவிற்கான செயற்திறன் பிணை அதிக பெறுமதியை காட்டியதால் ஏனைய போட்டி ஏலங்களை சமர்ப்பிக்கக்கூடிய விலைமனுதாரிகள் ஊக்கம் இழப்பதற்கான வாய்ப்பு காணப்பட்டது.

(உ) கண்டி போதனா வைத்தியசாலையின் பொது சிற்றுண்டிச்சாலை 2024 ஆம் ஆண்டுக்காக குத்தகைக்கு வழங்கும் போது உணவுகளின் விலை தொடர்பிலும் 30 சதவீதம் எடை விதிக்கப்பட்டது. அதனால் அதிக விலைக்கு விலைமனு சமர்ப்பித்த விலைமனுதாரியின் உணவு விலைகளும் அதிகம் என்பதால், இரண்டாவது அதிக விலைக்கு விலைமனு சமர்ப்பித்த விலைமனுதாரிக்கு பொது சிற்றுண்டிச்சாலையை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டது. எனினும், உரிய விலைமனுதாரி சிற்றுண்டிச்சாலையை நடத்தும் போது தொடர்ந்து ஊழியர்கள் தவிர்த ஏனைய நபர்களுக்கு தனது விருப்பப்படி ஒப்பந்த விலையை விட அதிக விலைக்கு உணவுகளை விற்பனை செய்கிறார். எனினும், இது தொடர்பில் வைத்தியசாலை நியாயமான நடவடிக்கைகளை பின்பற்றி அதனை கட்டுப்படுத்த எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை.

(ஊ) கண்டி தேசிய வைத்தியசாலையின் நலன்புரி சிற்றுண்டிச்சாலைக்கான டெண்டர் கோரும் போது, ஊழியர்களுக்கு உணவு விற்கப்படும் விலைகளும், வெளியாளர்களுக்கு உணவு விற்கப்படும் விலைகளும் தனித்தனியாக வழங்கப்பட்டன. வைத்தியசாலை ஊழியர்களுக்கு மிக குறைந்த விலையில் உணவு விற்பனை செய்யப்பட்ட போதிலும், வெளியார்களுக்கு அதைவிட இரண்டு மடங்கை விடவும் அதிகமான விலைக்கு விற்கப்பட்டன. தூரப் பிரதேசங்களில் இருந்து வைத்தியசாலைக்கு சிகிச்சைக்காக வரும் நோயாளிகள் மற்றும் நோயாளர்களை பார்க்கவரும் நபர்களுக்கு வைத்தியசாலை வளாகத்தினுள் உணவுகளை வாங்கமுடியுமான ஒரே இடம் இந்த சிற்றுண்டிச்சாலை என்றபோதிலும், அங்கு அவர்களுக்கு நியாயமான விலையில் உணவுகள் விற்கப்படவில்லை என்பதால் அவர்கள் பெரும் சிரமங்களை எதிர்கொண்டனர். அவ்வாறு அதிக விலையில் உணவை வாங்கினாலும் சிற்றுண்டிச்சாலையில் இடவசதியின்மை காரணமாக அதனை அங்கிருந்து சாப்பிட முடியாத நிலை காணப்பட்டது.

(எ) சிறிமாவோ பண்டாரநாயக்க விஷேட சிறுவர் வைத்தியசாலையின் சுத்திகரிப்பு சேவை ஒப்பந்தம் 2024 பெப்ரவரி முதல் 2025 பெப்ரவரி வரை கையெழுத்திட ஒப்புக்கொள்ளப்பட்டிருந்த போதிலும், தொடர்புடைய சேவை ஒப்பந்தம் 05 மாதங்கள் தாமதித்து 2024 ஜூலை மாதத்தில் கையெழுத்திடப்பட்டது என்பதுடன், ஒப்பந்தம் இல்லாத காலத்தில் வைத்தியசாலை பெற்ற சேவைகளின் மதிப்பு ரூ. 16,510,195 ஆகும். மேலும், ஒப்பந்ததாரர் பரிந்துரைக்கப்பட்ட தரநிலைகளுக்கு ஏற்ப இரசாயனப் பொருட்களை வழங்குகிறார் என்பதை வைத்தியசாலை நிர்வாகம் உறுதி செய்யவில்லை என்பதுடன், ஒப்பந்ததாரர் பரிந்துரைக்கப்பட்ட தரநிலைகள் அல்லாத இரசாயனப் பொருட்களை வழங்கியதன் மூலம் ஒப்பந்ததாரர் ஒப்பந்தத்தின் விதிமுறைகளை மீறிய சந்தர்ப்பங்களும் இருந்தன.

(ஏ) சிறிமாவோ பண்டாரநாயக்க விஷேட சிறுவர் வைத்தியசாலையினால் வழங்கப்படும் சேவைகளை கணினிமயமாக்குவதற்கான E-Health System திட்டத்தை நிறுவுவதற்கு 02 சந்தர்ப்பங்களில் விலைமனுக்கள் கோரப்பட்டுள்ளதுடன், இரண்டாவது சந்தர்ப்பத்தில் ரூ. 19,496,857 (வட் வரி இன்றி) மதிப்பில் அதாவது முதல் சந்தர்ப்பத்தை விட ரூ. 879,105 கூடுதல் விலைக்கு மற்றும் முதல் சந்தர்ப்பத்தில் 05 வருட காலத்திற்கு பழுதுபார்ப்பு மற்றும் மாற்றீடு கட்டணங்கள் இன்றி, 25 வருட உத்தரவாக் காலம் என காணப்பட்ட அனுகூலத்திற்கு பதிலாக 03 வருட உத்தரவாதக் காலம் மற்றும் உத்தரவாதக் காலத்தின் பின்னர் 10 வருடங்களுக்கு ரூ. 3,500,00 இற்கு பராமரிப்பு சேவை 10 வருடங்கள் என அரசாங்கத்திற்கு பாதகமான விதத்தில் ஒப்பந்தம் வழங்கப்பட்டது. மேலும் இந்த கொள்முதல் நடவடிக்கை அமைச்சினால் மேற்கொள்ளப்பட வேண்டும் என்ற போதிலும், வைத்தியசாலை பிராந்திய கொள்ளல் குழுவினால் மேற்கொள்ளப்பட்ட பின்னரே அமைச்சின் அனுமதி பெறப்பட்டுள்ளது. இருப்பினும், 2019 நவம்பர் 19 ஆம் திகதி முடிக்கப்பட்டு ஒப்படைக்கப்பட்ட இந்த திட்டம் 2024 டிசம்பர் 31 நிலவரப்படி, அதனை செயல்படுத்துவதற்கான திட்டங்களோ அல்லது தொழில்நுட்ப உபகரணங்களை கொள்வனவு செய்யும் திட்டங்களோ இல்லாமல் முற்றிலும் செயலற்ற நிலையில் இருந்தது.

(ஐ) கம்பளை ஆதார (போதனா) வைத்தியசாலையின் பாதுகாப்பு சேவை வழங்குவதற்கான வவுச்சர்களைத் தயாரிக்கும் போது, பொய்யான பெயர்களை வழங்கியமைக்காக ஒரு அலுவலரிடமிருந்து தலா ரூ. 200 வீதம் 129 சந்தர்ப்பங்களில் மொத்தம் 25,800 கழிக்கப்பட்டுள்ள

போதிலும், ஏல நிபந்தனை 19 இன்படி தவறான கையொப்பமிடல், ஒப்பந்தத்தை முழுமையாவோ அல்லது பகுதியாகவோ நிறைவு செய்வதற்கான குற்றம் என்றபோதிலும், செயற்திறன் பிணையை அரசிற்கு உடமையாக்க அல்லது ஒப்பந்தத்தை இரத்துச் செய்ய நடவடிக்கை எடுக்கவில்லை.

(ஒ) சுகாதார மற்றும் சுதேச மருத்துவ அமைச்சின் 2015 மே 28 ஆம் திகதிய 01- 21/2015 எனும் இலக்க பொது சுற்றறிக்கையின் 6.1 வது பந்தியின்படி, வைத்தியசாலை கனிஷ்ட ஊழியர்களுக்கு வைத்தியசாலையின் உள்ளே நுகர்வுக்காக வழங்கப்படும் அரை உணவு சுற்று என மதிய உணவு அல்லது இரவு உணவு என ஒரு வேளை உணவு மட்டுமே அடங்க வேண்டும் என குறிப்பிடப்பட்டுள்ள போதிலும், சமைத்த உணவு வழங்குவதற்கான ஒப்பந்த பணி தொடர்பாக மாத்தளை மாவட்ட பொது வைத்தியசாலையினால் தயாரித்து வெளியிடப்பட்ட டெண்டர் ஆவணத்தில், கனிஷ்ட ஊழியர்களுக்கு வழங்கப்படும் அரை உணவு சுற்றில் மதிய உணவும் இரவு உணவும் என 02 உணவு வேளைகள் இருக்க வேண்டும் என தவறான முறையில் குறிப்பிடப்பட்டிருந்தது. ஆவணங்களில் குறிப்பிடத்தக்க குறைபாடுகள் இருந்த போது, அமைச்சின் கொள்ளல் குழு "C" இனால் 2023 செப்டம்பர் 19 ஆம் திகதி அதற்கான அனுமதியை வழங்கி, 2024 ஜனவரி 18 ஆம் திகதி பிழையான டெண்டர் ஆவணங்களை அடிப்படையாகக் கொண்டு எடுக்கப்பட்ட வைத்தியசாலை கொள்ளல் குழு முடிவையும் அங்கீகரித்துள்ளது.

(ஓ) அரை உணவுச் சுற்றில் மதிய உணவும் இரவு உணவும் என 02 உணவு வேளைகள் இருக்க வேண்டும் என தவறாக குறிப்பிட்டு, விலைமனு கோரல் மற்றும் அதனை அடிப்படையாகக் கொண்டு கொள்ளல் தீர்மானம் எடுக்கப்படதன் விளைவாக, தெரிவு செய்யப்பட்ட விலைமனுதாரியினால் அரை உணவுச் சுற்றுக்காக உயர் விலைகளை குறிப்பிட்டு விலைமனுக்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளமை மத்திய மாகாணத்தின் பிற வைத்தியசாலைகளுக்கான விலைகள் தயாரிப்பதற்கான ஒப்பீட்டின் போது கவனிக்கப்பட்டது. அதன்படி, சமைக்கப்பட்ட ஒரு உணவு வேளைக்கு இரண்டு வேளை உணவிற்கான கட்டணம் செலுத்தப்பட்டதால், 2024 ஜனவரி 01 ஆம் திகதி முதல் 2024 ஏப்ரல் 31 ஆம் திகதி வரையிலான 4 மாத காலத்திற்கு கிட்டத்தட்ட ரூ. 3,695,875 அதிகமாக செலுத்தியுள்ளது. 2024 ஆம் ஆண்டின் மீதமுள்ள 08 மாதங்களுக்கு கிட்டத்தட்ட 7,391,750 ரூபா கூடுதலாக செலுத்தப்பட்டிருக்கலாம்.

(ஔ) ஹம்பாந்தோட்டை பொது வைத்தியசாலையில் சுத்திகரிப்பு சேவை பெறல் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வில் பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

i. உரிய டெண்டர் நிபந்தனைகளின்படி, இலங்கை தரச் சான்றிதழுக்கு (SLS Standards) இணங்குவதாக தொழிற்துறை தொழில்நுட்ப நிறுவனத்தினால் ((ITI) சான்றளிப்பட்ட இரசாயனப் பொருட்கள் அவற்றில் உள்ள இரசாயனக் கலவை மற்றும் அளவுகள் என்பன முறையாகக் குறிப்பிட்டு முத்திரையிட்ட பொதிகளில் வழங்கப்பட வேண்டும். எனினும், விநியோக நிறுவனத்தினால் வைத்தியசாலைக்கு வழங்கப்பட்ட சுத்திகரிப்புப் பொருட்களில் உற்பத்தித் திகதி, காலாவதி திகதி, தொகுதி இலக்கம், அளவு என்பன பொதிகளில் கைகளால் எழுதப்பட்டு முத்திரையிடாத பொதிகளில் இரசாயனப் பொருட்கள் வழங்கப்பட்டுள்ளதுடன், இலங்கை தரநிலைகள் நிறுவனத்தின் சான்றுறுதி காணப்படாத சந்தர்ப்பங்களும் அவதானிக்கப்பட்டன.

ii. டெண்டர் நிபந்தனைகளின்படி, நிறுவனத் தலைவரினால் சுத்திகரிப்புப் பணி தொடர்பான நிலப்பரப்பு, கட்டிட விபரங்களை வழங்கவில்லை என்பதுடன், டெண்டர் நிபந்தனைகளின் 2.19 இன்படி, சுத்திகரிப்பு ஊழியர்களின் தினசரி வருகைப் பதிவேடுகளை அதிகாரம் அளிக்கப்பட்ட உத்தியோகத்தர் ஒருவரினால் சரிபார்த்து சான்றளித்தல் மற்றும் ஏல நிபந்தனை இலக்கம் 2.7 இன்படி சுத்திகரிப்பு பணிக்காக சேவையில் ஈடுபடுத்த வேண்டிய குறைந்தபட்ச ஆண் தொழிலாளர்களின் எண்ணிக்கையில் ஈடுபடுத்தல் மற்றும் 16.3 வது நிபந்தனையின்படி சுத்திகரிப்பு பணிக்காக பயன்படுத்தப்படும் இரசாயனப் பொருட்கள் உரிய தரத்தில் உள்ளனவா என்பதைச் சரிபார்க்கும் தொற்றுக் கட்டுப்பாட்டு பிரிவினால்

பரிசோதிக்கப்பட்டு சான்றளிக்கப்பட வேண்டும் என்ற நிபந்தனைகள் நிறைவேற்றப்படவில்லை.

(க) அனுராதபுரம் போதனா வைத்தியசாலையின் பாதுகாப்பு சேவை அரசாங்கத்துடன் இணைக்கப்பட்ட தனியார் நிறுவனம் ஒன்றுக்கு 20 ஆண்டுகளுக்கும் மேலாக தொடர்ச்சியாக வழங்கப்பட்டுள்ளதுடன், அந்த நிறுவனத்திற்கு எதிராக பல்வேறு தரப்பினராலும் முறைப்பாடுகள் அளிக்கப்பட்டுள்ள போதிலும், கொள்ளல் தீர்மானம் எடுக்கும் போது அது தொடர்பில் கவனம் செலுத்தாமல் 2024 ஒக்டோபர் 01 ஆம் திகதி முதல் மார்ச் 31 ஆம் திகதி வரை 06 மாத காலத்திற்கு ரூ. 23,975,022 இற்கு விலைமனுக்கள் கோராமல் அதே நிறுவனத்திற்கு மீண்டும் ஒப்பந்தத்தை வழங்கியுள்ளது. மேலும், தனியார் பாதுகாப்பு நிறுவனத்தின் ஊழியர்களின் நாளாந்த வருகை, புறப்பாடு மற்றும் சேவை சுழற்சியில் பணியமர்த்தப்படும் ஊழியர்களின் எண்ணிக்கை ஆகியவற்றை சரிபார்க்க எந்த முறைமையும் நிறுவப்படவில்லை என்பது அவதானிக்கப்பட்டது.

(ங) அனுராதபுரம் போதனா வைத்தியசாலையினால் அமைச்சரவைத் தீர்மானத்தின் அடிப்படையில், 2023/2024 ஆம் ஆண்டுக்கான சுத்திகரிப்பு சேவை 20 ஆண்டுகளுக்கும் மேலாக மேற்கொள்ளப்பட்ட அதே தனியார் நிறுவனத்திற்கு விலைமனுக்கள் கோரப்படாமல் வழங்கப்பட்டுள்ளது. மேலும் கொள்ளல் தீர்மானம் மற்றும் நிபந்தனைகளின்படி, சுத்திகரிப்பு சேவைக்காக பயன்படுத்தப்படும் இரசாயனப் பொருட்கள் உரிய தரத்தில் இருக்க வேண்டும் என ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்டுள்ள போதிலும், 2024 ஒக்டோபர் 22 ஆம் திகதி வைத்தியசாலையின் நிறுவன நிர்வாகத்தினால் மேற்கொள்ளப்பட்ட ஆய்வின் போது சுத்திகரிப்பு இரசாயனப் பொருட்கள் உரிய தரத்தில் இல்லை என்பது கண்டறியப்பட்டது. 2024 செப்டெம்பர் 15 ஆம் திகதியுடன் ஒப்பந்த காலம் நிறைவடைந்துள்ள போதிலும் சுத்திகரிப்பு பணி தொடர்ச்சியாக இருந்தமை அவதானிக்கப்பட்டது.

(ச) நாகொட போதனா வைத்தியசாலைக்கு மீன் தவிர்ந்த ஏனைய உலர் உணவுப் பொருட்களை வழங்குவதற்காக செய்து கொள்ளப்பட்ட ரூ. 147,765,120 ஒப்பந்த தொகைக்கு உலர் உணவுப் பொருட்களின் விநியோகத்திற்காக கொடுப்பனவுகள் மற்றும் வழங்கப்பட்ட உணவுகள் தொடர்பான ஆய்வில் பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

i. ஒரே விநியோகத்தர் மட்டுமே பல ஆண்டுகளாக தொடர்ந்து விலைமனுக்களை சமர்ப்பித்திருத்தல் மற்றும் அதே விநியோகத்தருக்கு டெண்டர் வழங்கப்பட்டதன் காரணத்தால் போட்டியுடனான ஏல விலைகளில் மிகவும் நியாயமான மற்றும் சாதகமான விநியோகத்தர் ஒருவரை தேர்ந்தெடுக்கும் வாய்ப்பை வைத்தியசாலை தவறவிட்டுள்ளது.

ii. விநியோகத்தருடன் செய்து கொண்ட ஒப்பந்தத்தின்படி, தோல் நீக்கப்பட்ட கோழி இறைச்சியை வழங்க ஒப்புக்கொண்ட போதிலும், தொடர்ந்து ஒரு கிலோவிற்கு ரூ. 1,580 என்ற அதிக விலைக்கு தோலுடன் கூடிய கோழி இறைச்சி வழங்கப்பட்டுள்ளமை முறைப்பாடுகள் பதிவு புத்தகத்தில் உள்ள குறிப்புகள், பொது சுகாதார பரிசோதகர்கள் அறிக்கை மற்றும் விநியோகத்தர் கோழி இறைச்சி விநியோகத்தின் போது மேற்கொள்ளப்பட்ட கள ஆய்வுகளில் உறுதிப்படுத்தப்பட்டது. தோல் நீக்கப்பட்ட கோழி இறைச்சி ஒரு கிலோ இந்த காலக்கட்டத்தில் சுமார் ரூ. 1,000 இற்கு சந்தையில் கொள்வனவு செய்யமுடியும். அவ்வாறு இருக்கும் போது ரூ. 1,580 எனும் அதிக விலைக்கு தோலுடன் கூடிய கோழி இறைச்சிக்காக கொள்வனவு செய்யப்பட்ட ஒவ்வொரு கிலோவிற்கும் ரூ. 500 இற்கும் மேல் கூடுதலாக செலுத்த வேண்டியிருந்தது.

iii. உலர் உணவு விநியோகத்தர் தோலுடன் கூடிய கோழி இறைச்சியை தோல் நீக்கி துண்டுகளாக வெட்டும் போது ஒரு துண்டு கொண்டிருக்க வேண்டிய நிறை குறையும்

என்ற குற்றச்சாட்டை தவிர்ப்பதற்காகவும், உறைந்த தோலுடன் கூடிய கோழி இறைச்சியை வெட்டுவதற்கும் அதிக நேரம் எடுப்பதால் உணவு சமைப்பதில் ஏற்படும் தாமதத்தை குறைப்பதற்கும் சமையல்காரர் தோலுடன் கோழியை சமைப்பதற்கு நடவடிக்கை எடுத்துள்ளார்.இந்நிலைமை நோயாளிகளுக்கு சிக்கல்களுக்கு வழிவகுக்கும் மிகவும் மோசமான நிலை என்று பொது சுகாதார பரிசோதர்கர் அறிக்கைகள் சுட்டிக்காட்டியுள்ளன.

iv. மேலும், உலர் உணவு விநியோகத்தரினால் வழங்கப்பட்ட தேயிலைத் தூள் தரமற்றது என ஆய்வு அறிக்கைகள் மூலம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளதுடன், வழங்கப்பட்ட காய்கறிகளும் சேறும் சகதியுமாக இருப்பதை முறைப்பாடுகள் பதிவு புத்தகத்தில் உள்ள குறிப்புகள் உறுதிப்படுத்திய போதிலும் இது தொடர்பாக எடுக்க வேண்டிய நடவடிக்கைகளை எடுக்காமல் வழங்கப்பட்ட உலர் உணவுப் பொருட்களுக்கான பணம் செலுத்தப்பட்டுள்ளது.

(ஞ) நாகொட போதனா வைத்தியசாலையின் சுத்திகரிப்பு சேவை தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வில் பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

i. சுத்திகரிப்பு சேவை ஒப்பந்தத்தின்படி, தெரிவுசெய்யப்பட்ட ஒப்பந்ததாரரின் சேவைகளின் செயற்திறன் திருப்தியற்றதாக சுகாதார செயலாளர் கண்டறிந்தால் அல்லது ஒப்பந்ததாரர் ஒப்பந்த நிபந்தனைகளை மீறினாலோ ஒப்பந்ததாரரின் செயற்திறன் பிணை உரிமையை இரத்துச் செய்து ஒப்பந்ததாரரை கருப்புப் பட்டியலில் சேர்ப்பதற்கு சுகாதார செயலாளருக்கு அதிகாரம் உண்டு. இருப்பினும், 2023 ஆம் ஆண்டில் சுத்திகரிப்பு இரசாயனப் பொருட்களின் தர ஆய்வின் போது தொழில்துறை தொழில்நுட்ப நிறுவனத்தின் (ITI) மாதிரி ஆய்வு அறிக்கை தோல்வியடைந்த நிலையில் வைத்தியசாலை பணிப்பாளரினால் 2024 ஜனவரி 08 ஆம் திகதிய கடிதத்தின் மூலம், சுத்திகரிப்பு சேவை வழங்கும் நிறுவனத்தினால் பயன்படுத்தப்படும் இரசாயனப் பொருட்கள் தரமற்றவை என்று சுகாதார அமைச்சின் பிரதிப் பணிப்பாளர் நாயகம் (விநியோகம்) இற்கு அறிவித்துள்ள போதிலும் ஒப்பந்தத்தை நிறுத்துவதற்கு அல்லது ஒப்பந்ததாரரை கருப்பப் பட்டியலில் சேர்க்க நடவடிக்கை எடுக்காமல் 2023/2024 ஆம் ஆண்டுக்கான சுத்திகரிப்பு ஒப்பந்தமும் அதே தனியார் நிறுவனத்திற்கு வழங்கப்பட்டது.

ii. ஒப்பந்த நிபந்தனைகளின்படி, சுத்திகரிப்பு சேவைக்காக பயன்படுத்தப்படும் இரசாயனப் பொருட்கள் உரிய தரத்தில் உள்ளன என்பதை நிரூபிக்க தொழில்துறை தொழில்நுட்ப நிறுவனத்தின் தர ஆய்வு அறிக்கை சமர்பபிக்க வேண்டும் என்றபோதிலும், இந்த நிறுவனம் மேற்படி அறிக்கையை சமர்ப்பிக்கவில்லை என்பதை தொழில்நுட்ப மதிப்பீட்டுக்குழு கவனித்துள்ள போதிலும் அமைச்சின் கொள்ளல் குழு அந்த அறிக்கையை சமர்ப்பிப்பதற்கு உட்பட்டு ஒப்பந்தத்தை வழங்குவது பொருத்தமானது என பரிந்துரை செய்துள்ளது. எனினும், 2023/2024 ஆம் ஆண்டுக்கான தர ஆய்வு அறிக்கை 2024 ஆம் ஆண்டு இறுதி வரையிலும் சமர்ப்பிக்க நடவடிக்கை எடக்கவில்லை என்பதுடன், சுகாதார அமைச்சினாலும் அது குறித்து அவதானம் செலுத்தவில்லை.

iii. ஒப்பந்தத்தின்படி, வைத்தியசாலையின் சுத்திகரிப்பு சேவைகளை வழங்க தினமும் 140 தொழிலாளர்கள் மற்றும் 06 வேலை கண்காணிப்பாளர்கள் பணியமர்த்தப்பட வேண்டும் என்றபோதிலும், 2023 ஒக்டோபர் முதல் 2024 செப்டெம்பர் வரையான காலத்தில் ஒவ்வொரு மாதமும் பணியமர்த்தப்பட வேண்டிய தொழிலாளர்களின் எண்ணிக்கை 207 முதல் 40 பேர் வரை குறைவாகவே இருந்தது. மேலும், இதன்படி தினமும் 09 மணித்தியால சேவை சுழற்சியின்படி 140 தொழிலாளர்கள் பணியமர்த்தப்பட வேண்டும் என்றபோதிலும், பணியமர்த்தப்பட்ட தொழிலாளர்களின் எண்ணிக்கை 127 ஆகும்.

iv. சுத்திகரிப்பு சேவை வழங்கும் தனியார் நிறுவனத்தில் பணியாற்றும் ஊழியர்களுக்காக சேவை அறக்கட்டளை நிதி மற்றும் ஊழியர் சேமலாப நிதியத்திற்கு செலுத்த வேண்டிய பங்களிப்புத் தொகை முறையே 12 சதவீதம் மற்றும் 03 சதவீதம் ஆகியவற்றின் மொத்தம் 15 சதவீதமாக ரூ. 1,207,478 இனை ஊழியர்களின் சம்பளத்தில் இருந்து கழிக்கப்பட்டு வைத்தியசாலையினால் ஒப்பந்ததாரருக்கு செலுத்தப்பட்டுள்ளது. எனினும், மீண்டும் அந்த பங்களிப்புத் தொகையை ஊழியர் சம்பளத்தில் இருந்து கழிக்கப்பட்டு ஒப்பந்ததாரர் தம்வசம் வைத்திருந்தமை தொழிலாளர் சட்டம் மற்றும் தொடர்புடைய விதிமுறைகளை மீறுவதாகும்.

4.3 சொத்து முகாமைத்துவம்

பின்வருவன அவதானிக்கப்பட்டன.

(அ) சுகாதார அமைச்சிற்கு சொந்தமான 32- 2344 எனும் இலக்க வாகனத்தை பழுதுபார்த்தல் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வில் பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

i. இந்த வாகனத்தின் இயந்திரத்தில் எண்ணெய் தடித்த நிலையில் இருப்பதாக 2020 ஜனவரி 24 ஆம் திகதி வாகன சாரதியினால் பணிப்பாளர் (போக்குவரத்து) இற்கு அறிவித்துள்ளார். அதன்படி, பணிப்பாளர் (போக்குவரத்து) இனால் இந்த வாகனத்திற்கான மதிப்பீட்டை பெறுவதற்காக 2020 ஜனவரி 27 ஆம் திகதி முகவர் நிறுவனத்திற்கு அனுப்பப்பட்டது. இதன்படி, வழங்கப்பட்ட மதிப்பீடு தொடர்பான எந்தவொரு ஆவணமும் அல்லது வாகனம் பழுதுபார்த்துள்ளதாக தெரிவிக்கும் எந்தவொரு தகவலும் கோவையில் இல்லை. ஒரு ஆண்டுக்கும் மேற்பட்ட காலம் கடந்த நிலையில் 2021 மார்ச் 06 ஆம் திகதி இந்த வாகனம் அமைச்சிற்கு மீண்டும் கொண்டு வருவதற்கு அதற்கான பணி நிலையத்தில் ஒப்படைக்குமாறு முகவர் நிறுவனத்திற்கு அறிவிக்கப்பட்டிருந்தது. இந்த வாகனத்தை செயற்பட செய்யமுடியாத நிலையில் இருப்பதாக வாகனத்தின் சாரதி மீண்டும் 2021 மே 13 ஆம் திகதி பணிப்பாளர் (போக்குவரத்து) இற்கு தெரிவித்திருந்தார். 2021 மார்ச் 10 ஆம் திகதி போக்குவரத்து பணிகளின் தலைவரும் பொறியியலாளரும் வாகனத்தை பரிசோதனை செய்து,அதற்கான அறிக்கையொன்று வழங்கப்பட்டுள்ளதுடன், பணிப்பாளர் (போக்குவரத்து) இனால் 2021 மே 17 ஆம் திகதி இந்த பழுதுபார்ப்புக்காக வாகனத்தினை அற்றுத்து பரிசோதனை செய்து மதிப்பீடு ஒன்றை வழங்குமாறு நிறுவனத்திற்கு அறிவிக்கப்பட்டது. இந்த நிறுவனத்திடமிருந்து வழங்கப்பட்ட மதிப்பீடு கோவையில் இருக்கவில்லை என்பதுடன், மீண்டும் இந்த வாகனம் பரிசோதனை ஓட்டத்திற்கு உட்படுத்தப்பட்டு 2021 செப்டெம்பர் 03 ஆம் திகதி போக்குவரத்து பணிகளின் தலைவரினால் அறிக்கையொன்று வழங்கப்பட்டுள்ளது.

ii. 2021 செப்டம்பர் 08 ஆம் திகதி இந்த பழுதுபார்ப்பு மேற்கொள்வதற்காக விலைகள் கோரப்பட்டு, பணிகளின் தலைவரினால் வழங்கிய பரிந்துரையின்படி, இந்த பழுதுபார்த்தலுக்கு குறைந்த விலை சமர்ப்பித்த நிறுவனத்திற்கு ரூ. 394,703 இற்கு வழங்கப்பட்டது. விலை கோரல் கடிதத்தின்படி பழுதுபார்த்தல் பணிக்காக தேவைப்படும் காலத்தை அறிவிக்க வேண்டும் என ஒப்பந்த நிபந்தனை இருந்த போதிலும், இந்த நிறுவனம் எடுக்கும் கால அளவை குறிப்பிடவில்லை. வாகனத்தை பழுது பார்க்க ஒப்படைக்க முன்னர் எடுக்கும் காலம் தொடர்பில் எந்த உடன்பாடும் எட்டப்படவில்லை

என்பதுடன், வாகனத்தை நிறுவனத்திடம் ஒப்படைக்கும் போது பழுதுபார்த்து ஒப்படைக்கப்பட வேண்டிய காலம் குறிப்பிடப்படவில்லை.

iii. பழுதுபார்ப்பதற்காக வாகனத்தை ஒப்படைத்து சுமார் 13 மாதங்களின் பின்னர் பற்றுச் சீட்டை 2023 ஜனவரி 23 ஆம் திகதி சமர்ப்பித்துள்ளதுடன், அது 2023 மார்ச் 29 ஆம் திகதி கொடுப்பனவிற்காக சமர்ப்பிக்கப்பட்டது. இந்த வாகனத்தின் பழுதுபார்ப்பின் பின்னர் 85,000 கிலோமீட்டர் ஓடுவதற்கு உத்தரவாதம் அளிக்கப்பட்டுள்ளது. எனினும், பழுதுபார்க்கப்பட்ட பின்னர் வாகனம் ஓடியதற்கான எந்த ஆதாரமும் இல்லை. பழுதுபார்க்கப்பட்ட பிறகு வாகனம் முல்லேரியா முற்றத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

iv. மேற்படி பழுதுபார்ப்பின் பின்னர் ஆரம்ப சுகாதார சேவையை வலுப்படுத்தும் திட்டத்தின் கீழ் மீண்டும் இந்த வாகனம் பழுதுபார்க்கப்பட்டதாக கணக்காய்விற்கு தெரிவிக்கப்பட்ட போதிலும், அந்த பழுதுபார்ப்புக்கான விலைகள் கோரப்பட்ட திகதி, அந்த பழுதுபார்ப்பதற்காக வாகன திருத்தும் நிலையத்திற்கு வாகனத்தை ஒப்படைத்த திகதி மற்றும் பழுதுபார்க்கப்பட்ட பின்னர் வாகனம் அமைச்சிற்கு ஒப்படைக்கப்பட்ட திகதி என்பன தொடர்பான தகவல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை.

(ஆ) சுகாதார மற்றும் வெகுஜன ஊடக அமைச்சிற்குச் சொந்தமான PB - 7902 எனும் இலக்க வாகனம் பழுதுபார்த்தல் தொடர்பில் மேற்கொள்ளப்பட்டகணக்காய்வில் பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

i. இந்த வாகனத்தை பழுதுபார்த்து இயக்க வேண்டும் என சாரதி ஒருவரினால் 2021 டிசம்பர் 13 ஆம் திகதி கடிதம் மூலம் தெரிவித்துள்ளதுடன், போக்குவரத்து பணி தலைவரினால் 2021 டிசம்பர் 14 ஆம் திகதி வழங்கப்பட்ட பரிந்துரையின்படி, 2021 டிசம்பர் 27 ஆம் திகதி 14 நிறுவனங்களில் இருந்து விலைமனுக்கள் கோரப்பட்டுள்து. 5 நிறுவனங்களில் இருந்து பெறப்பட்ட விலைகளில் ரூ.652,460 என்ற குறைந்த விலை சமர்ப்பித்த நிறுவனத்திற்கு விடய நோக்கத்தை மாற்றி ரூ. 382,460 இற்கு தொடர்புடைய பழுதுபார்ப்புகளை செய்ய போக்குவரத்து பணி தலைவரினால் 2022 பெப்ரவரி 02 ஆம் திகதி பரிந்துரை வழங்கியுள்ளது. அதன்படி, 2022 ஜூன் 08 ஆம் திகதி உரிய நிறுவனத்திற்குவாகனம் அனுப்பப்பட்டது.

ii. 2021 ஜனவரி 05 ஆம் திகதி மாத்தறை பொது வைத்தியசாலை பணிப்பாளரினால் வாகனமொன்று வழங்குமாறு பணிப்பாளரிடம் (போக்குவரத்து) கோரியுள்ளதுடன், போக்குவரத்து பணி தலைவரினால் இந்த வாகனத்தை பழுதுபார்த்து ஓட்டுவது நன்மை பயக்கும் என்பதால் வைத்தியசாலை செலவில் பழுதுபார்ப்பதற்காக வழங்க பரிந்துரை செய்துள்ளது.

iii. இந்த வாகனம் பத்தரமுல்ல பகுதியில் வீதியோரத்தில் நீண்ட காலமாக நிறுத்தப்பட்டுள்ளதாக கணக்காய்விற்கு கிடைத்த தகவலின் அடிப்படையில், 2023 ஜனவரி 10 ஆம் திகதி அமைச்சின் விசாரணைப் பிரிவு மற்றும் போக்குவரத்து பிரிவின் உத்தியோகத்தர்களுடன் ஆய்வு செய்யப்பட்டது. இது தொடர்பில் ஒரு விசாரணை மேற்கொண்டு கயக்காய்விற்கு அறிக்கை அளிக்க வேண்டும் என்ற வாய்மொழி கோரிக்கையின் பிரகாரம் விசாரணை பிரிவு செயற்படவில்லை என்பதுடன், சிரேஷ்ட உதவிச் செயலாளர் (விசாரணை) இனால் 2023 ஜனவரி 12 ஆம் திகதி இது தொடர்பில் ஆராய்ந்து தேவையான நடவடிக்கை எடுக்குமாறு பணிப்பாளர் (போக்குவரத்து) இற்கு அறிவித்துள்ளார்.

iv. 2025 ஜனவரி 02 ஆம் திகதி இந்த வாகனத்திற்குரிய கோப்பு கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படும் வரை இந்த விடயம் தொடர்பில் எந்த நடவடிக்கையும் பொறுப்பான

உத்தியோகத்தரினால் எடுக்கப்படவில்லை என்பதுடன், இந்த வாகனம் முல்லேரியா வாகன பிரிவிற்கு எடுத்துச் சென்று எந்த நோக்கத்திற்கும் பயன்படுத்தப்படாமல் முற்றத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.

(இ) பொலன்னறுவை தேசிய சிறுநீரக விஷேட வைத்தியசாலையின் சத்திர சிகிச்சை நுகர்வுப் பொருட்கள், மருத்துவ உபகரணங்கள் மற்றும் 61 சமயலறை உபகரணங்கள் என்பன பயன்படுத்தப்படாமல் காணப்பட்டதுடன், தேவையான பிற வைத்தியசாலைகளுக்கு வழங்குவதற்கு நடவடிக்கைகளும் எடுத்திருக்கவில்லை.

(ஈ) பொலன்னறுவை தேசிய சிறுநீரக விஷேட வைத்தியசாலைக்கு சீன அரசாங்கத்தினால் பெறப்பட்ட 77 மருத்துவ உபகரணங்களுக்கு உள்நாட்டு பிரதிநிதிகள் இல்லாததால், உபகரணங்களின் சேவை மற்றும் பராமரிப்புக்கான ஒப்பந்தங்கள் எதுவும் செய்யப்படவில்லை என்பது அவதானிக்கப்பட்டதுடன், இந்த உபகரணங்கள் பழுதுபார்க்க வேண்டியிருந்தால் அல்லது செயலிழந்தால் இந்த உபகரணங்கள் பயன்பாட்டிலிருந்து அகற்றப்பட வேண்டும் என்பது அவதானிக்கப்பட்டது.

(உ) பொலன்னறுவை தேசிய சிறுநீரக விஷேட வைத்தியசாலையின் குருதி மாற்றூட்டல் பிரிவில் காணப்படும் குருதி மாற்றூட்டலுக்கு பயன்படுத்தப்படும் 04 Hemodialysis இயந்திரங்கள் 2025 பெப்ரவரி 13 ஆம் திகதி இடம்பெற்ற கணக்காய்வின் பௌதீக ஆய்வின் போது செயலிழந்து காணப்பட்டமை அவதானிக்கப்பட்டது.

(ஊ) பொலன்னறுவை தேசிய சிறுநீரக விஷேட வைத்தியசாலைக்கு சீன அரசாங்கத்தினால் நன்கொடையாக வழங்கப்பட்ட 04 மருத்துவ உபகரணங்கள் செயலிழந்து காணப்பட்டதுடன், இந்த உபகரணங்களுக்கு உள்நாட்டு பிரதிநிதி இல்லாததால், உதிரிப்பாகங்கள் பெற முடியாத காரணத்தால் பழுதுபார்க்கப்படாமல் செயலிழந்துள்மை அவதானிக்கப்பட்டது.

(எ) பொலன்னறுவை தேசிய சிறுநீரக விஷேட வைத்தியசாலைக்கு சீன அரசாங்கத்தினால் நன்கொடையாக வழங்கப்பட்ட Anesthesia Machine உபகரணத்துடன் தொடர்பான தாய் நிறுவனம் வங்குரோத்து நிலை காரணமாக உதிரிப்பாகங்களை பயன்படுத்தி அந்த உபகரணங்களை பழுதுபார்க்க முடியவில்லை என்பது அவதானிக்கப்பட்டது.

(ஏ) அவுஸ்திரேலியா கடன் உதவியின் கீழ் அமைச்சினால் செயல்படுத்தப்பட்ட அரச வைத்தியசாலைகளில் மருத்துவ கழிவுகள் முகாமைத்துவ திட்டத்தின் கீழ் எம்பிலிப்பிட்டிய மாவட்ட பொது வைத்தியசாலை மற்றும் இரத்தினபுரி போதனா வைத்தியசாலைகளில் நிறுவப்பட்டுள்ள மருத்துவ கழிவு முகாமைத்துவ இயந்திரம் (மெட்டாமைசர்) முறையே 2024 ஏப்ரல் 22 மற்றும் ஏப்ரல் 23 ஆம் திகதிகளில் இருந்து செயலிழந்து காணப்பட்டது. இதன் காரணத்தால் வைத்தியசாலை வளாகத்தில் தொற்று மற்றும் கூர்மையான கழிவுகள் குவிக்கப்பட்டுள்ள காரணமாக சிக்கல் நிலை உருவாகி இருந்தது.

(ஐ) கொரோனா தொற்றுக் காலத்தில் பயன்பாட்டுக்காக 2021 ஆம் ஆண்டில் எம்பிலிப்பிட்டிய வைத்தியசாலைக்கு கிடைக்கப்பெற்ற 06 Air Sterilizer இயந்திரங்கள் 2024 ஜூன் 18 கணக்காய்வுத் தின நிலவரப்படி வைத்தியசாலை வளாகத்தில் செயலற்று காணப்பட்டன.

(ஒ) 2017 ஜூன் 30 ஆம் திகதி இரத்தினபுரி போதனா வைத்தியசாலைக்கு ஒப்படைக்கப்பட்ட இரத்த வங்கி அமைந்துள்ள கட்டிடத்தின் ஸ்லாப் (Slab) வழியாக தண்ணீர் கசிந்து வருவதாக இரத்த வங்கி அதிகாரிகள் வைத்தியசாலை பணிப்பாளரிடம் தெரிவித்துள்ள போதிலும், 2024 நவம்பர் 28 ஆம் நிலவரப்படி அதே நிலையிலேயே காணப்பட்டது.

(ஓ) இரத்தினபுரி போதனா வைத்தியசாலையின் வாட்டு மற்றும் கிளினிக் பிரிவுகள் 21 இற்கு 91 மருத்துவ உபகரணங்கள் 2014 – 2024 இடைப்பட்ட காலம் உடைந்து பயன்படுத்த முடியாத நிலையில் இருந்தன.

(ஒள) கொழும்பு வடக்கு போதனா வைத்தியசாலைக்காக ஒதுக்கப்பட்ட வைத்தியசாலையில் இருந்து சுமார் 2.5 கிலோமீட்டர் தொலைவில் உள்ள எலபிடிவல வீட்டுத் தொகுதியில் ஒரு திட்டமிடப்பட்ட வீடும் 25 பொது சேவைகள் வீடுகளும் இருந்தன. இந்த எலபிடிவல வீட்டுத் தொகுதியில் உள்ள வீடுகள் திருமணமான மருத்துவர்களுக்கு மட்டுமே ஒதுக்கப்பட்டுள்ளதுடன், 2025 ஜனவரி மாதம் 15 மற்றும் 16 ஆம் திகதிகளில் மேற்கொள்ளப்பட்ட பௌதீக ஆய்வில் இந்த வீடுகளில் 19 வீடுகள் காலியாக இருந்தன. அதில் 18 வீடுகள் 4 ஆண்டுகளுக்கும் மேலாக வெற்றிடமாக இருப்பது கணக்காய்வில் தெரியவந்துள்ளது. இந்த வீடுகள் மற்றும் சுற்றியுள்ள சூழல் முறையாக பராமரிக்கப்படாத காரணத்தால் தற்போது பயன்படுத்தப்படும் மற்றும் பயன்படுத்தப்படாத வீடுகளும் பாழடைந்து வருகின்றன.

(.·.) கொழும்பு வடக்கு போதனா வைத்தியசாலையின் எலபிடிவல வீட்டுத் தொகுதியில் சுகாதார ஊழியர்களுக்காக ஒதுக்கப்பட்டிருந்த F கட்டிடத்தின் பின்புற பகுதியில் இந்த கட்டிடத்தின் டெனேஜ் குழிகள் அமைக்கப்பட்டிருந்ததுடன், அந்த தரையில் வெளி நபர்களால் வாழை பயிரிடப்பட்டிருந்தது. இந்த காணியை சுற்றி பாதுகாப்பு வேலி அல்லது எல்லை நிர்ணயங்கள் இருக்கவில்லை என்பதுடன், இந்த நிலத்தை வைத்தியசாலையின் உடமை அல்லது சுகாதார அமைச்சின் உடமை என ஆராய்ந்து வேலி அமைத்து அரச சொத்துக்களை பாதுகாப்பதற்கு எவ்வித நடவடிக்கைகளும் எடுத்திருக்கவில்லை.

(க) நிதி மற்றும் வெகுஜன ஊடக அமைச்சினால் வெளியிடப்பட்ட 2017 டிசம்பர் 21 ஆம் திகதிய 02/2017 எனும் சொத்து முகாமைத்துவ சுற்றறிக்கையின் 01 (i) இன்படி, வாகன உரிமை தொடர்பில் காணப்படும் சிக்கல்களை 2018 ஜூன் 30 ஆம் திகதிக்கு முன்னர் தீர்ப்பதற்காக, பதிவு உரிமைகள் இல்லாமல் பாவிக்கும் வாகனங்களை பதிவு உரிமம் உள்ள நிறுவனங்களின் ஒப்புதலுடன் நிறுவனத்தின் பெயரில் பதிவு செய்வதற்கு அல்லது பதிவு உரிமம் உள்ள நிறுவனங்களுக்கு முறையாக மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். எனினும், சுதேச மருத்துவ பிரிவினால் பயன்படுத்தப்படும் 03 வாகனங்களுக்கு இவ்வாறு எந்த நடவடிக்கையும் எடுத்திருக்கவில்லை.

(ங) பொலன்னறுவை போதனா வைத்தியசாலையின் 7 மருத்துவ உபகரணங்கள் நோயாளர் பராமரிப்புக்காக பயன்படுத்துவதற்கு, அழித்தலுக்கு அல்லது வேறு வைத்தியசாலைகளுக்கு வழங்க நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ச) பொலன்னறுவை போதனா வைத்தியசாலையின் எலும்பியல் பிரிவின் ஊடாக 2024 ஆம் ஆண்டில் திருகோணமலை, மாத்தளை, தம்புள்ளை, மட்டக்களப்பு, மொனராகலை, பதுளை போன்ற இடங்களில் நோயாளிகளுக்கு சேவைகளை வழங்குகின்ற போதிலும், போதுமான ஊழியர்கள் இல்லாமை, 03 உடற்பயிற்சி ECG இயந்திரங்கள் மற்றும் 24 மணி நேரமும் செயலில் உள்ள 03 இரத்த அழுத்த இயந்திரங்கள் செயலிழந்து காணப்படுவதுடன், தொடர்புடைய இயந்திர விநியோக நிறுவனங்கள் மூடப்பட்டதால் அவற்றை பழுதுபார்க்க முடியாத நிலை காணப்பட்டதால் நோயாளி பராமரிப்பு சேவைகள் பாதிக்கப்பட்டன.

(ஞ) குருணாகல் போதனா வைத்தியசாலையின் கண் கிளினிக், இருதய மருத்துவ கிளினிக் மற்றும் நோயாளிகளின் ஸ்கேன் (Scan) பரிசோதனைகள் என்பன மேற்கொள்ளும் போது போதுமான அளவு உபகரணங்கள் இல்லாத காரணத்தால் வைத்தியசாலை நடவடிக்கைகளை மேற்கொள்ளும் போதும் மற்றும் நோயாளிகளும் சிரமங்களை எதிர்கொள்வது அவதானிக்கப்பட்டது.

(ட) குருணாகல் போதனா வைத்தியசாலை அமைந்துள்ள நிலம் குருணாகல் பிரதேச செயலகத்தின் பெயரில் உள்ளதுடன், குருணாகல் வைத்தியசாலை பெயரில் மாற்ற எந்த நடவடிக்கையும் எடுத்திருக்கவில்லை. இந்த பிரச்சனையைத் தீர்க்க 2024.07.12 ஆம் திகதி பிரதேச செயலாளரின் 4/5/1/60 கடிதம் மூலம் வைத்தியசாலை காணியில் அத்துமீறி குடியிருப்பவர்கள் தொடர்பான அறிக்கை கோரப்பட்டிருந்த போதிலும், 2024 ஒக்டோபர் மாதம் கணக்காய்வுத் தினம் வரையிலும்,

அந்த அறிக்கையை வழங்குவதற்கு தேவையான நடவடிக்கையும் எடுக்கவில்லை என்பதுடன், அத்துமீறி குடியிருப்பவர்களை அடையாளம் காண எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

(ண) மருத்துவ விநியோகப் பிரிவினால் 2021 முதல் 2022 ஆம் ஆண்டு வரையிலான காலப்பகுதியினுள் கண்டி தேசிய வைத்தியசாலைக்கு கிடைக்கப்பெற்ற சுமார் 14,568,119 ரூபா மதிப்புள்ள உபகரணங்கள் கிடைக்கப்பெற்ற தினத்தில் இருந்து பயன்படுத்தப்படாமல் 2024 ஆகஸ்ட் 29 நிலவரப்படி களஞ்சியத்தில் இருந்தது.

(த) கம்பளை ஆதார (போதனா) வைத்தியசாலையின் இல 60- 7017 என்ற வேன் முழுமையான பழுதுபார்ப்புக்காக அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்களிடமிருந்து விலைமனுக்கள் கோரப்பட்டு, ரூ. 398,500 என்ற மிகக்குறைந்த விலைமனு சமர்ப்பித்த நிறுவனத்திற்கு 2023 டிசம்பர் 31 ஆம் திகதி அனுப்பப்பட்டது. வாகனத்தை பழுதுபார்த்து 03 மாத காலத்தினுள் வழங்குவதாக அந்த நிறுவனம் உறுதியளித்திருந்தாலும், 2025 மார்ச் 31 ஆம் திகதியிலும் வேன் பழுதுபார்க்கப்பட்டு வழங்கப்படவில்லை என்பதுடன், அத்தியவசிய மருந்துகளை மருத்துவ விநியோகப் பிரிவிற்கு மற்றும் பிற மருத்துவக் களஞ்சியங்களுக்கு அனுப்புவதற்கு தொடர்ந்து பயன்படுத்தப்பட்ட இந்த வாகனம் நீண்ட காலமாக கேரேஜில் இருப்பதால் சுகாதார சேவை நடவடிக்கைகளை வினைத்திறனாக மேற்கொள்வதில் தடைகள் ஏற்பட்டன.

(ந) கம்பளை ஆதார (போதனா) வைத்தியசாலையின் L.G.N 02 திட்டத்தை செயல்படுத்துவதற்காக 2017 நவம்பர் 03 ஆம் திகதி களஞ்சியத்திற்கு பெறப்பட்ட Dot Matrix Printer 07 ஆனது 06 வருடங்களுக்கு மேலாக எவ்வித பாவனையும் இன்றி களஞ்சியத்திலேயே இருந்தன.

(ப) நுவரெலியா மாவட்ட பொது வைத்தியசாலையில் பகுதியளவு கட்டி முடிக்கப்பட்டு மிகவும் பழைய 3600 சதுர அடி பரப்பளவு கொண்ட, மூழ்கும் அல்லது இடிந்து விழும் அபாயத்தில் உள்ள ஒரு கட்டிடம், வைத்தியசாலை சுத்திகரிப்பு ஊழியர்களால் பயன்படுத்தப்பட்டு வருவதுடன், அந்த கட்டிடத்தை உடனடியாக முறையாக அகற்றி அந்த வளாகத்தை பயனுள்ள நோக்கங்களுக்கு பயன்படுத்த எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

(ம) நுவரெலியா மாவட்ட பொது வைத்தியசாலைக்குரிய 0.4401 ஹெக்டயர் நிலப்பரப்பு, 07 குடும்பங்களைச் சேர்ந்த 12 குடியிருப்பாளர்களினால் சுமார் 15 வருடங்களுக்கு மேலாக சட்டவிரோதமாக ஆக்கிரமிக்கப்பட்டுள்ளதுடன், இது தொடர்பில் எந்த முறையான நடவடிக்கையும் எடுத்திருக்கவில்லை.

(ய) நுவரெலியா மாவட்ட பொது வைத்தியசாலை அமைந்துள்ள காணியை வைத்தியசாலையினால் சுவீகரிப்பதற்கு அல்லது 4.6824 ஹெக்டயர் புதிய வைத்தியசாலை காணி அல்லது கட்டிடங்களை மதிப்பீடு செய்து கணக்கு வைப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

(ர) நுவரெலியா மாவட்ட பொது வைத்தியசாலைக்குச் சொந்தமான 15 பேர்ச்சஸ் நிலம் சமூக மண்டபம் கட்டுவதற்காக நுவரெலியா மாநகர சபைக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள போதிலும், அந்த நிலம் வாகனங்களை நிறுத்துவதற்காக பயன்படுத்தப்பட்டு வந்துள்ளதுடன், காணி வழங்கப்பட்ட நோக்கத்திற்கு பயன்படுத்தப்படாததால், அக்காணியை மீள பெற நடவடிக்கை எடுக்கவில்லை.

(ல) மாத்தளை மாவட்ட பொது வைத்தியசாலையின் 3 ஆய்வுகூடங்களில் 1 முதல் 10 ஆண்டுகள் வரை பயன்படுத்தப்படாமல் இருந்த 21 ஆய்வுகூட உபகரணங்கள் மற்றும் சாதனங்கள் பழுதுபார்க்கப்பட்டு பாவனைக்கு எடுப்பதற்கு அல்லது முறையாக அப்புறப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்காது அந்த ஆய்வுகூடத்திலேயே வைக்கப்பட்டிருந்தன.

(வ) அரசாங்க நிதியைப் பயன்படுத்தி அபிவிருத்தி நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு முன்னர், உரிய நிலத்தை முறையாக அளவீடு செய்து சட்டபூர்வமாக உரிமையைப் பெறுவதற்கு, உரிமைச் சான்றிதழை பெறுவது அவசியமாக இருந்த போதிலும், மில்லியன் கணக்கான ரூபாய் உள்ளூர் மற்றும் வெளிநாட்டு நிதியைப் பயன்படுத்தி அபிவிருத்தி செய்யப்பட்ட அனுராதபுரம் போதனா வைத்தியசாலை அமைந்துள்ள நிலத்தின் உரிமையை வைத்தியசாலைக்கு அல்லது சுகாதார அமைச்சிற்கு பெறுவதற்கு எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. வைத்தியசாலை நிலத்தின் உரிமையை சட்டப்பூர்வமாகப் பெறப்படாத காரணத்தால், வைத்தியசாலை பூமியின் பாதுகாப்பை உறுதிப்படுத்த முடியவில்லை. மேலும், வைத்தியசாலை நிலத்தின் ஒரு பகுதியை 12 அங்கீகரிக்கப்படாத ஆக்கிரமிப்பாளர்கள் ஆக்கிரமித்துள்ளதுடன், அதனுடன் தொடர்பான வழக்குத் தீர்ப்பில் மீண்டும் கையகப்படுத்த நீதிமன்ற உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருந்தாலும், கணக்காய்வுத் தினமான 2024 டிசம்பர் நிலவரப்படி, அந்த காணியை மீண்டும் வைத்தியசாலை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர வைத்தியசாலை நிர்வாகம் எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை.

(ழ) அனுராதபுரம் போதனா வைத்தியசாலையில் கழிவுகளை எரிப்பதற்காக 2014 ஆம் ஆண்டு நிறுவப்பட்ட எரியூட்டி 2022 ஆம் ஆண்டு முதல் செயல்படாமல் இருந்ததுடன், அதனை பழுதுபார்ப்பதற்கு 2022 ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தில் வரியின்றி ரூ. 392,895 இற்கு பிராந்திய கொள்முதல் குழுவினால் ஒப்புதல் அளித்திருந்தாலும், கணக்காய்வுத் தினமான 2024 டிசம்பர் 11 ஆம் திகதியிலும் அந்த இயந்திரம் பழுதுபார்ப்பதற்கு அல்லது அகற்றுவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை என்பதுடன், இயந்திரம் அழிந்து போகும் நிலைக்கு விடப்பட்டிருந்தது.

(ள) UNISEF நிறுவனத்தினால் அனுராதபுரம் போதனா வைத்தியசாலைக்கு வழங்கப்பட்ட புதிய எரியூட்டி (Incinerator) 2023 நவம்பர் மாதம் வைத்தியசாலை வளாகத்தில் நிறுவப்பட்டுள்ளதுடன், 06 மாதங்களுக்கும் மேலாக இந்த இயந்திரம் இயக்கப்படவில்லை. பின்னர் சுமார் ஒரு மாதம் இயங்கிய பின்னர் 2024 டிசம்பர் 11 நிலவரப்படி அது செயற்படாமல் இருந்தது.

(ற) அனுராதபுரம் போதனா வைத்தியசாலையின் Metamizer மற்றும் Incinerator இயந்திரங்களை இயக்க தேவையான நடவடிக்கைகளை எடுக்கத் தவறியதாலும், புதிய Incinerator இயந்திரம் செயலிழந்ததாலும் மருத்துவக் கழிவுகளை அகற்றுவதற்காக 2023 ஆம் ஆண்டில், 2024 ஆம் ஆண்டின் முதல் இரண்டு மாதங்களிலும் மற்றும் 2024 ஆகஸ்ட், ஒக்டோபர் ஆகிய மாதங்களிலும் முறையே வெளித் தரப்பினருக்கு 39.95 மில்லியன் ரூபா, 24.14 மில்லியன் ரூபா, 49.09 மில்லியன் ரூபா என மொத்தம் 113.18 செலுத்தப்பட்டது. இந்த உபகரணத்தை பழுதுபார்த்து பயன்படுத்துவதன் மூலம் வெளித் தரப்பினருக்கு செலுத்தப்படும் தொகையைக் குறைப்பதற்கான சாத்தியம் குறித்து கவனம் செலுத்தவில்லை. மேலும் கேகாலை போதனா வைத்தியசாலைக்கு சுகாதார அமைச்சினால் செயல்படுத்தப்பட்ட அரச வைத்தியசாலைகளின் மருத்துவக் கழிவு முகாமைத்துவ திட்டத்தின் கீழ் சுமார் 701,335.83 அமெரிக்க டொலர் செலவில் Metamizer இயந்திரம் வழங்கப்பட்ட போதிலும், அதன் செயலிழப்பு மற்றும் அகற்றப்பட்ட கழிவுப் பொருட்களை அப்புறப்படுத்துவதற்கான முறை இல்லாததால், அந்த இயந்திரம் 2024 ஏப்ரல் 25 ஆம் திகதி முதல் முற்றிலுமாக பயன்படுத்தப்படாமல் பயன்பாட்டிலிருந்து நீக்கப்பட்டுள்ளது.

(ன) அனுராதபுரம் போதனா வைத்தியசாலையின் உயிர்வேதியியல் ஆய்வுகூடத்தில் உள்ள Erb XL 360 எனும் பகுப்பாய்வு இயந்திரம், வைத்தியசாலைக்கு ஒரு புதிய பகுப்பாய்வு இயந்திரம் கிடைத்த பிறகு பல ஆண்டுகளாக குறைந்த மட்டத்தில் பயன்படுத்தப்பட்டு ஆண்டின் இறுதியில் பயன்படுத்தப்படவில்லை என்பதுடன், அதனை முறையாக மீண்டும் பயன்படுத்துவதற்கு அல்லது மற்றொரு பொருத்தமான தரப்பினருக்கு வழங்குவதற்கு வைத்தியசாலை அதிகாரிகள் எவ்வித கவனமும் செலுத்தவில்லை.

(ஜ) அங்கொடை மனநல நிறுவனத்திற்குச் சொந்தமான மருத்துவர்களுக்கான உத்தியோகபூர்வ இல்லங்களில் 2009 ஆம் ஆண்டு முதல் ஒரு மருத்துவர்களுக்கான உத்தியோகபூர்வ இல்லமும், 2019 ஆம் ஆண்டு முதல் மற்றொரு மருத்துவர்களுக்கான உத்தியோகபூர்வ இல்லமும் மூடப்பட்டிருந்தன. இந்த இல்லங்கள் நீண்ட காலமாக மூடப்பட்டிருந்ததால் அந்த வீடுகளின் உதிரிப் பாகங்கள் காணாமல் போயிருந்தமை கள ஆய்வின் போது அவதானிக்கப்பட்டது. மேலும் இந்த வீடுகள் சட்ட விரோதச் செயல்களுக்குப் பயன்படுத்தப்படுவதாக கணக்காய்வில் தெரியவந்தது.

(ஸ) கொழும்பு தேசிய வைத்தியசாலையினால் 1,350,000 அமெரிக்க டொலர்களுக்கு கொள்வனவு செய்யப்பட்ட PET- CT Scanner இயந்திரம் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வின் போது பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

i. இந்த இயந்திரம் 2016 ஜூன் 10 ஆம் திகதி கால் - கை வலிப்பு பிரிவில் நிறுவப்பட்ட போதிலும்,இயந்திரத்தை இயக்குவதற்கும் நோயாளி பரிசோதனைகளை நடத்துவதற்கும் தேவையான பிற வசதிகள் மற்றும் உதிரிப் பாகங்களை வழங்குவதில் ஏற்பட்ட தாமதங்கள் காரணமாக விநியோகத்தர் வழங்கிய 03 ஆண்டு உத்தரவாதக் காலத்தில் 80 சதவீதம் முடியும் வரை இந்த இயந்திரத்தைப் பயன்படுத்தி பரிசோதனைகளை நடத்த தொடங்கவில்லை. இதன் விளைவாக, உத்தரவாதக் காலத்தில் நடத்தப்பட்ட 13 பரிசோதனைகளில் நோயாளிகளின் எண்ணிக்கை 80 மட்டுமே ஆகும்.

ii. கொழும்பு தேசிய வைத்தியசாலையில் CT Scan பரிசோதனைகளை மேற்கொள்வதற்காக 03 CT Scanner இயந்திரங்கள் உள்ளதுடன், இது தவிர, PET- CT Scanner இயந்திரத்தையும் பயன்படுத்தி 2018 ஆம் ஆண்டு முதல் CT Scan பரிசோதனைகளும் செய்யப்பட்டு வருகின்றன. மேலும் 2023 டிசம்பர் 31 ஆம் திகதி நிலவரப்படி இந்த இயந்திரத்தைப் பயன்படுத்தி செய்யப்பட்ட CT Scan பரிசோதனைகளின் எண்ணிக்கை 7337 ஆகும். இயந்திரத்தின் பயனுள்ள ஆயுள், அது எத்தனை முறை இயக்கப்படுகிறது என்பதை பொறுத்தது என்பதுடன், இவ்வாறு அதிக மதிப்புள்ள PET- CT Scanner இயந்திரத்தை பயன்படுத்தி CT Scan பரிசோதனைகள் செய்வதற்கு பயன்படுத்துவதன் மூலம் இயந்திரத்தின் பயனுள்ள ஆயுளையும், அதன் எதிர்கால செயற்திறனையும் பாதிக்குமா என்பது தொடர்பில் அல்லது PET- CT Scan பரிசோதனைகள் மற்றும் CT Scan பரிசோதனைகள் ஆகிய இரண்டையும் செய்வதன் மூலம் மிகவும் பயனுள்ள நோய் கண்டறிதலுக்கு பயன்படுத்த முடியுமா என்பது குறித்து உயிரியல் மருத்துவ பொறியியல் பிரிவிலிருந்து எந்த உறுதிப்படுத்தலும் பெறப்படவில்லை.

iii. 2023 ஒக்டோபர் வரை FDG கிடைப்பதையும் மற்றும் இருக்கக்கூடிய வளங்களையும் கருத்தில் கொண்டு PET- CT Scan பரிசோதனையை வாரத்திற்கு ஒரு முறையாவது செய்ய முடியும். அதன்படி வருடத்திற்கு குறைந்தது 52 பரிசோதனைகள் செய்யலாம் என்ற போதிலும், 2016 ஆம் ஆண்டு முதல் 2018 ஆம் ஆண்டு வரை எந்த சோதனைகளும் செய்யப்படவில்லை என்பதுடன், 2019 ஆம் ஆண்டு முதல் 2023 ஆம் வரையான காலப்பகுதியில் 20 முதல் 28 நாட்களுக்கிடையில் 159 முதல் 257 பரிசோதனைகள் மட்டுமே செய்யப்பட்டுள்ளன.

iv. அதிக கதிரியக்க FDG எனப்படும் பொருள் நோயாளிக்கு செலுத்தப்பட்டு PET- CT Scanner பரிசோதனைக்காக தொடர்ச்சியான மின்சாரம் இயந்திரத்திற்கு தேவைப்படுவதால், இந்த PET- CT Scanner இயந்திரத்திரத்திற்குரிய UPS (Uninterruptable Power Supply) உபகரணத்தில் உள்ள பேட்டரிகளின் ஆயுள் காலம் முடிவடைந்தது என 2023 நவம்பர் 02 ஆம் திகதி சம்பந்தப்பட்ட பிரிவின்

கதிரியலாளரினால் வைத்தியசாலை நிர்வாகத்திற்கு அறிவித்துள்ள போதிலும், தேவை நிறைவேற்றப்படவில்லை.

v. 2015 மே 07 ஆம் திகதி சுகாதார மற்றும் சுதேச வைத்திய அமைச்சின் அமைச்சரவையினால் நியமிக்கப்பட்ட நிலையான கொள்ளல் குழுவின் தீர்மானத்தின்படி, இந்த இயந்திரத்தில் பரிசோதனைகள் மேற்கொள்ள முன்னர் கதிரியக்க மருத்துவர் அல்லது கதிரியலாளர்கள் இருவருக்கு 04 வார காலத்திற்கு விரிவான ஒரு பயிற்சி (Epilepsy Programs are in Operation) நரம்பியல் நோய் தொடர்பான வெளிநாட்டு மையத்தில் வழங்குவதற்கும் மற்றும் உயிரியல் மருத்துவ பொறியியலாளர் ஒருவருக்கு இயந்திர உற்பத்தி தொழிற்சாலையில் 02 வார பயிற்சியும் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என குறிப்பிடப்பட்டுள்ள போதிலும், அவ்வாறான பயிற்சிகள் வழங்கப்பட்டமைக்கான தகவல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை.

(ஷ) கொழும்பு தேசிய வைத்தியசாலையில் நிறுவப்பட்டுள்ள MRI Scanner இயந்திரத்தை உயர் மின்னழுத்தம் மற்றும் மின் தடைகளில் இருந்து பாதுகாக்கப் பயன்படுத்தப்படும் UPS உபகரணத்தில் உள்ள பேட்டரி பலவீனமாக இருப்பதாக 2020 ஆகஸ்ட் 26 ஆம் திகதி உறுதிசெய்யப்பட்டு 04 ஆண்டுகளுக்கும் மேலாகியும் அந்த UPS உபகரணத்தை சரி செய்ய உரிய துறையினர் தவறி உள்ளதுடன், இந்த UPS உபகரணத்தில் உள்ள சிக்கல் சூழ்நிலைகளை தீர்க்க தவறியதால் 2024 ஆம் ஆண்டில் மட்டும் 05 முறை செயலிழந்தது. இது தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வில் பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

i. ஒரு தனியார் நிறுவனம், 2020 ஒக்டோபர் 09 ஆம் திகதிய கடிதத்தில் UPS உபகரணத்தின் பேட்டரி மாற்றப்பட வேண்டும் என அறிவித்து ஆய்வு அறிக்கையுடன், 96 பேட்டரிகளை மாற்றுவதற்கு ரூ. 3,461,760 (வரியின்றி) விலை சமர்ப்பித்துள்ளதுடன், உயிரியல் மருத்துவ பொறியியல் பிரிவினால் அதற்கு 3 ஆண்டுகளுக்குப் பிறகு 2023 ஒக்டோபர் 10 ஆம் திகதி அதற்காக ஒரு யுனிட்டுக்கு ரூ.10,080,000 செலவில் UPS உபகரணத்திற்கான பேட்டரி 96 இனை வாங்கியுள்ளது. அதன்படி, ஒரு பேட்டரியை கொள்வனவு செய்வதற்காக ரூ. 6,618,240 இனை மேலதிகமாக செலவிட்டுள்ளது.

ii. UPS பேட்டரி கொள்வனவ செய்வதற்காக, 2023 ஜூன் 22 ஆம் திகதி செய்யப்பட்ட ஆடர் மூலம் 02 மாதங்களுக்குள் அதாவது 2023 ஆகஸ்ட் 21 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் இந்த UPS பேட்டரி விநியோகிக்க வேண்டும் எனினும், 50 நாட்கள் தாமதித்து அதாவது 2023 ஒக்டோபர் 10 ஆம் திகதி உயிரியல் மருத்துவ பொறியியல் பிரிவிற்கு பேட்டரி வழங்கப்பட்டது.

iii. கொள்ளல் வழிகாட்டல் கோவையின் 2.8.5 இன்படி, பிராந்திய கொள்ளல் குழுவிற்கு உதவும் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவிற்கு 03 உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட வேண்டும் என குறிப்பிடப்பட்டுள்ள போதிலும், இதற்கு மாறாக மேற்படி கொள்வனவிற்காக நியமிக்கப்பட்ட தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவிற்கு ஒரு உத்தியோகத்தர் மட்டுமே நியமிக்கப்பட்டுள்ளார்.

iv. இலங்கை தேசிய வைத்தியசாலையின் கால் - கை வலிப்பு பிரிவிற்கு பெறப்பட்ட 96 UPS பேட்டரிகளில் 32 பேட்டரிகள் மட்டுமே 2023 ஒக்டோபர் 17 அன்று நிறுவப்பட்டன. மீதமுள்ள 64 பேட்டரிகளில் 40 இனை ரிஜ்வே சீமாட்டி சிறுவர் வைத்தியசாலைக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன், மீதமுள்ள 24 பேட்டரிகளின் பயன்பாடுகள் குறித்த எந்த தரவுகளும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கவில்லை.

v. பேட்டரி உற்பத்தி நிறுவனத்தின் பயனர் கையேட்டின்படி, UPS பேட்டரி களஞ்சியப்படுத்தும் வெப்பநிலை மற்றும் காலத்தைப் பொறுத்து UPS பேட்டரிகளின் கொள்ளளவு மாறுபடும் என்பதால், தேசிய வைத்தியசாலையில் கிட்டத்தட்ட ஒரு வருடமாக MRI Scanner இயந்திரத்தின் மின்சுற்றுக்கு இணைக்காமல் காணப்பட்ட 32 பேட்டரிகளின் கொள்ளளவு அளவை மீண்டும் சரிபார்க்க வேண்டுமெனினும், இவ்வாறு மேற்கொண்டதற்கான தகவல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை.

vi. MRI Scanner இயந்திரத்தின் UPS உபகரணத்திற்காக கொள்வனவு செய்யப்பட்டு பொருத்தப்படாத TECHIFINE(DC 12-100) 64 பேட்டரிகளுக்குப் பதிலாக பொலித்தீன் உறைகள் (சீல்கள்) இல்லாமல் வழங்கப்பட்ட இந்திய ரூபா 16,763 மதிப்புள்ள OPTI 100 (12v / 100 Ah) 64 பேட்டரிகள். 2023 ஜூலை மாதம் தயாரிக்கப்பட்டுள்ளதுடன், கணக்காய்வுத் தினத்தின் போது, சுமார் 14 மாதங்கள் கடந்துள்ளதால் அந்த பேட்டரிகளின் திறனுக்கு ஏற்பட்ட சேதம் தொடர்பில் ஆய்வு செய்தல் வேண்டும். மேலும், இது தொடர்பில் உயிரியல் மருத்துவ பொறியியல் பிரிவின் பொறுப்பான அதிகாரிகளின் பரிந்துரையைப் பெறுவதன் அவசியம் மற்றும் ஏதேனும் இழப்பு ஏற்பட்டிருப்பின் பொறுப்பான தரப்பினரிடம் இருந்து அறவிடப்பட வேண்டும் என்றாலும் அவ்வாறு செய்யப்பட்டதாக தகவல் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை.

vii. MRI Scanner இயந்திரத்தின் UPS பேட்டரியை விநியோகித்த தனியார் நிறுவனத்தின் கள பரிசோதணை அறிக்கையின்படி றிஜ்வே சிறுவர் சீமாட்டி வைத்தியசாலையின் CT Scanner இயந்திரத்தின் UPS உபகரணம், குளிரூட்டி இல்லாத காரணத்தால் அதிக வெப்பநிலையில் இருந்ததாகக் குறிப்பிடப்பட்டுள்ளதுடன், இவ்வாறு UPS பேட்டரி மற்றும் உபகரணங்களின் அதிக வெப்பநிலை காரணமாக, அவற்றின் பயனுள்ள ஆயுள் மற்றும் திறனில் ஏற்படும் தாக்கம் குறித்து உயிரியல் மருத்துவ பொறியியல் பிரிவு கவனக் குறைவாக இருந்தது.

viii. கால் - வலிப்பு பிரிவில் உள்ள MRI Scanner இயந்திரத்தின் UPS உபகரணத்திற்காக இரண்டு வகையான பேட்டரிகளை இணைப்பது பொருத்தமானதா என்பதை பேட்டர்களை வழங்கிய நிறுவனத்தினால் சோதிக்கப்பட்டதுடன், அத்தகைய இரண்டு வகையான பேட்டரிகளை ஒன்றாக இணைக்க பரிந்துரைக்கவில்லை என்று அந்த நிறுவனத்தினால் 2023 டிசம்பர் 06 ஆம் திகதி உயிரியல் மருத்துவ பொறியியல் பிரிவின் உயிரியல் மருத்துவ பொறியியலாளருக்கு அறிவித்த போதிலும், அது தொடர்பான பரிந்துரைகள் அடங்கிய அறிக்கை உயிரியல் மருத்துவ பொறியியலாளருக்கு சமர்ப்பிக்கவில்லை.

ix. கொழும்பு தேசிய வைத்தியசாலைக்கு வழங்கப்பட்ட சுமார் 32 பேட்டரிகள் MRI Scanner இயந்திரத்தின் மின் அமைப்புடன் இணைக்கப்படாமல் UPS சாதனத்தில் பொருத்தப்பட்டிருந்ததுடன், மீதமுள்ள 64 பேட்டரிகளுடன் 96 பேட்டரிகள் UPS சாதனத்துடன் இணைக்கத் தேவையான கேபிள்களை கொழும்பு தேசிய வைத்தியசாலையினால் கொள்வனவு செய்வதற்கு நடவடிக்கை எடுத்த போது கொள்முதல் தேவையை அடையாளம் கண்டு, விபரக் குறிப்புகள் மற்றும் கேள்வி ஆணங்களைத் தயாரிக்காத காரணத்தால் கேபள் கொள்வனவு செய்வதற்கு அதிக காலம் செலவிடப்பட்டதால் பேட்டரி கொள்முதலின் நோக்கங்களை அடைய முடியவில்லை.

4.4 **நிதி முறைக்கேடுகளின் வடிவத்தில் பரிவர்தனைகள்**
பின்வருவன அவதானிக்கப்பட்டன.

(அ) அமைச்சின் பணிப்பாளர் (தகவல்) ஆக பணியாற்றும் மருத்துவ அலுவலரின் வெளிநாட்டுப் பயணம் குறித்து மேற்கொள்ளப்பட்ட மாதிரி கணக்காய்வின் போது பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

i. இந்த உத்தியோகத்தரினால் இரண்டு கடவுச்சீட்டுகளைப் பயன்படுத்தி மேற்கொண்ட வெளிநாட்டுப் பயணங்கள் தொடர்பாக குடிவரவு மற்றும் குடியகல்வுத் துறையிடமிருந்து பெறப்பட்ட தகவல்களுடன் அலுவலரின் தனிப்பட்ட கோவையை ஆராய்ந்த போது, 2013 ஜனவரி 21 ஆம் திகதி முதல் 2024 ஜூலை 12 வரை அலுவலர் மேற்கொண்ட 18 வெளிநாட்டுப் பயணங்களுக்கான அனுமதிகள் அவரது தனிப்பட்ட கோப்பில் சேர்க்கப்படவில்லை.

ii. 2015.04.21 முதல் 2015.04.25 ஆம் திகதி வரையிலான வெளிநாட்டு விடுமுறை விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரினால் அங்கீகரிக்கப்பட்டிருந்தாலும், கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்ட அலுவலரின் கோப்பில் விடுமுறைக்கான அனுமதி தொடர்பான கடிதம் எதுவும் சேர்க்கப்படவில்லை.

iii. அலுவலருக்கு 2015.11.27 ஆம் திகதி முதல் 2015.12.07 ஆம் திகதி வரை அனுமதியளிக்கப்பட்ட விடுமுறை, அலுவலர் சுகயீனம் காரணமாக 2015.12.02 நாடு திரும்பி 2015.02.03 ஆம் திகதி மீண்டும் பணிக்கு சமூகமளித்ததால், விடுமுறையை திருத்துவதற்கு 2015.02.03 ஆம் திகதி கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. அதன்படி, 2016.01.09 ஆம் திகதி கடிதம் மூலமாக விடுமுறையை 2015.11.27 ஆம் திகதி முதல் 2015.12.03 ஆம் திகதிவரை திருத்தப்பட்டு அனுமதி வழங்கப்பட்டது. எனினும் அலுவலர் உண்மையில் நாடு திருப்பிய திகதி 2015.11.27 ஆகும்.

iv. அலுவலர் 2017.04.10 ஆம் திகதி முதல் 2017.04.15 ஆம் திகதி வரை வெளிநாட்டு விடுப்பு அனுமதிக்கப்பட்டுள்ளதுடன், அவர் 2017.04.08 ஆம் திகதி வெளிநாடு சென்று 2017.04.29 ஆம் திகதி மீண்டும் இலங்கை திரும்பியுள்ளார். அதன்படி, 2017.04.16 ஆம் திகதி முதல் 2017.04.29 ஆம் திகதிவரை அலுவலர் முறையான அனுமதியின்றி வெளிநாடு சென்றுள்ளமை அவதானிக்கப்பட்டது.

v. அலுவலருக்கு அனுமதி வழங்கப்பட்ட 2018.11.19 ஆம் திகதி முதல் 2018.11.23 ஆம் திகதி வரை வெளிநாட்டு விடுமுறையை இரத்துச் செய்வதற்கு பிரதிப் பணிப்பாளர் நாயகம் (மருத்துவ சேவை I) இன் 2018.12.21 ஆம் திகதிய TCS/H/AL/11996 எனும் இலக்க கடிதத்தில் வழங்கப்பட்டுள்ளது. இருப்பினும், அலுவலரின் வெளிநாட்டுப் பயணத் தரவுகளின்படி, அவர் 2018.11.17 முதல் 2018.11.26 வரை வெளிநாடு சென்றுள்ளார்.

vi. அலுவலருக்கு அனுமதியளிக்கப்பட்ட வெளிநாட்டு விடுவிப்பு தொடங்கும் திகதிக்கு முன்னர் வெளிநாட்டுக்குச் சென்று விடுமுறை முடிந்த திகதிக்கு பின்னர் நாடு திரும்பிய 20 சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டதுடன், அந்த மாற்றங்களுக்கான முறையான அனுமதி பெற நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஆ) சுகாதார மற்றும் வெகுஜன ஊடக அமைச்சிற்குரிய இல PD - 0736 எனும் வாகனத்திற்கு டயர்கள் பொருத்துவது தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வில் பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

i. இந்த வாகனத்திற்கு 04 டயர்களைப் பெறுவதற்கு சாரதியினால் திகதியிடப்படாத கடிதம் சமர்ப்பித்துள்ளதுடன், அது 2023.02.06 அன்று பணிப்பாளர் (போக்குவரத்து) இனால் அங்கீகரிக்கப்பட்டது. அந்த கோரிக்கையின்படி, இந்த வாகனத்திற்கு இறுதியாக டயர்கள் பெறப்பட்ட திகதி 2020.11.19 என குறிப்பிடப்பட்டுள்ள போதிலும், வாகன பதிவு புத்தகத்தின்படி 2021.04.06 ஆம் திகதி இந்த வாகனத்திற்கு 04 டயர்கள் வழங்கப்பட்டுள்ளன. பணிப்பாளர் (போக்குவரத்து) இனால் 2023.02.06 ஆம் திகதி கோப்பில் உள்ளீடு இலக்கம் 65 இன்கீழ் 04 டயர்கள் வழங்குவதற்கு அனுமதி அளித்துள்ளார். வாகன பதிவு புத்தகத்தின்படி 2023.03.04 ஆம் திகதி ரூ. 245,741.57 செலவில் Ferentino வகைக்குரிய 04 டயர்கள் வாகனத்திற்கு வழங்கப்பட்டன.

ii. 2024 மார்ச் 19 ஆம் திகதி இந்த வாகனத்திற்கு 04 டயர்கள் வழங்குமாறு சாரதியினால் கோரப்பட்டுள்ளதுடன், பணிப்பாளர் (போக்குவரத்து) இனால் அதே நாளில் கோப்பில் உள்ளீடு இலக்கம் 87 இன்கீழ் அனுமதியளித்துள்ளார். வாகன பதிவு புத்தகத்தின்படி 2024.09.30 ஆம் திகதி (திகதி 2024.09.30 அல்லது 2024.04.30 என்பது தெளிவாக தெரியவில்லை) ரூ.193,520 செலவில் Farroad வகைக்குரிய 04 டயர்கள் வாகனத்திற்கு வழங்கப்பட்டுள்ளன. இந்த டயர்கள் கொள்வனவு செய்தமைக்காக வழங்கப்பட்ட 2024.04.30 ஆம் திகதிய கொள்வனவு பற்றுச்சீட்டின்படி 2024.06.25 களஞ்சியத்திற்கு டயர்கள் பெறப்பட்டதாகக் கூறும் இருப்புச் சான்றிதழ் உள்ளடக்கப்பட்டுள்ளது. இது தொடர்பில் கணக்காளரிடம் (விநியோகம்) 2025 மார்ச் 18 ஆம் திகதி விசாரித்த போது வாகனத்தில் இருந்து அகற்றப்பட்ட டயர்களை களஞ்சியத்திற்கு ஒப்படைக்காததால் பணம் செலுத்தவில்லை என்பது உறுதிசெய்யப்பட்டது.

iii. இதன்படி, வாகன பதிவு புத்தகத்தின்படி 2024.09.30 ஆம் திகதி 04 டயர்கள் வாகனத்திற்கு பொருத்தப்பட்டதாக இடப்பட்ட பதிவு மோசடியான பதிவு எனவும், டயர்களை கொள்வனவு செய்யப்பட்டு வாகனத்தில் பொருத்தப்பட்டு wheel alignment மற்றும் wheel balancing செய்யப்பட்டதாகக் கூறி சமர்ப்பிக்கப்பட்ட பற்றுச்சீட்டு என்பது உறுதியானது.

(இ) 2001 ஒக்டோபர் 30 ஆம் திகதிய 02- 117/2001 எனும் இலக்க சுகாதார அமைச்சின் சுற்றறிக்கையின்படி, வைத்தியசாலையினுள் மேற்கொள்ளப்படும் ஒரு பரிசோதனைக்காக ரூ.22.50 மாதிரிக் கொடுப்பனவு வழங்கப்பட்டுள்ளதுடன், இந்த கொடுப்பனவு பல்வேறு வகையான பரிசோதனைகள் நடத்தப்பட்ட துறைகளுக்கும் பொருந்தும் வகையில் மேற்கொள்ளப்பட்டுள்ளது. எனினும் இந்த கொடுப்பனவை பெறுவதற்கான சோதனையை எவ்வாறு வரையறுப்பது மற்றும் நவீன தொழில்நுட்ப உபகரணங்களைப் பயன்படுத்தி பல்வேறு வகையான பரிசோதனைகளுக்கு இந்த கொடுப்பனவு எவ்வாறு பயன்படுத்தப்பட வேண்டும் என்பதை அமைச்சு தீர்மானிக்காததால், அரச வைத்தியசாலைகளினால் பல்வேறு துறைகளுக்காக பல்வேறு வழிகளில் இந்த இந்த கொடுப்பனவு செலுத்தப்பட்டுள்ளது. மஹரகம அபேக்ஷா வைத்தியசாலையினால் நேரியல் முடுக்கி சிகிச்சை இயந்திரம் மூலம் செய்யப்படும் கதிர்வீச்சு சிகிச்சைக்கான கொடுப்பனவுகளை செலுத்துவது தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வில் பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

i. நேரியல் முடுக்கி சிகிச்சை இயந்திரம் மூலம் ஒரு நோயாளிக்கு ஒரு நேரத்தில் வழங்கப்படும் சிகிச்சைக்காக 03 சிகிச்சை கதிரியலாளர்களை இணைத்து அந்த நோயாளிக்கான கதிர்வீச்சு சிகிச்சை விஷேட மருத்துவ நிபுணரினால் நிர்ணயிக்கப்படும் கோணம் (புலம்) அளவுகளுக்கு மேலதிகமாக மேலும் 10 புலன்களை சேர்த்து இந்த கொடுப்பனவு வழங்கப்பட்டுள்ளதுடன், சில சந்தர்ப்பங்களில் ஒரு நோயாளிக்கு ஒரே நேரத்தில் இரண்டு இடங்களுக்கு கதிர்வீச்சு சிகிச்சை வழங்கும் போது மேலே குறிப்பிட்ட

மேலதிக புலன்கள் 10 இற்கு இந்த இரண்டு தனித்தனி இடங்களுக்கும் மொத்தம் 20 புலன்களாகக் கொண்டு கொடுப்பனவுகள் வழங்கப்பட்டன.

ii. நேரியல் முடுக்கி சிகிச்சை இயந்திரம் மூலம் சிகிச்சை மேற்கொள்ளும் போது, துல்லியத்தை உறுதி செய்து சிகிச்சை வழங்குவதற்கு சிகிச்சை கதிரியலாளர் இருவர் போதுமானது என 2021 ஜூன் 22 ஆம் திகதி பிரதிப் பணிப்பாளர் நாயகம் (மருத்துவ சேவை) 1 இன் தலைமையிலான குழுவும் மற்றும் அந்த நிலைமை மேலும் 2022 மார்ச் 15 ஆம் திகதி சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் தலைமையிலான குழுவும் உறுதிப்படுத்தியிருந்தாலும், மஹரகம அபேக்ஷா வைத்தியசாலையினால் 2024 பெப்ரவரி 12 மற்றும் 13 ஆம் திகதிகள் தவிர மற்ற நாட்களில் ஒரே சிகிச்சைக்காக 03 கதிரியலாளர்களுக்கு சம்பளம் மற்றும் கொடுப்பனவுகளை வழங்கியுள்ளது.

iii. வைத்தியசாலையில் பணிபுரியும் 36 சிகிச்சை கதிரியலாளர்களில் யாரும் வைத்தியசாலையின் முக்கிய சிகிச்சைப் பிரிவுகளில் ஒன்றான அயடீன் சிகிச்சை பிரிவிற்கு வைத்தியசாலையின் தினசரி சேவை சுழற்சி மூலம் ஒதுக்கப்படவில்லை என்பதுடன், வைத்தியசாலையினால் நோயாளிகளுக்கு செய்யப்படும் அனைத்து அயடீன் சிகிச்சைகளும் பணி நேரத்திற்கு செய்யப்பட்டன. அயடீன் சிகிச்சை வழங்கும் போது சிகிச்சை கதிரியலாளர்கள் இருவர் ஈடுபடுவதுடன், நோயாளிக்கு வழங்கப்படும் அயடீன் மாத்திரைகள் / திரவங்களில் அடங்கியுள்ள அயடீன் கலவை மில்லி கியுரின் அளவின் அடிப்படையில் மில்லி கியுரி 1 இற்கு ரூ. 22.50 மேலதிக கடமைப்படி வங்கப்பட்டுள்ளது.

iv. நேரியல் முடுக்கி சிகிச்சை இயந்திரம் 2 (LA 2) மற்றும் 3 (LA 3) ஆகிய இரு இயந்திரங்களில் பதிவு செய்யப்பட்ட தகவல்களின்படி, 2023 ஜனவரி மற்றும் மார்ச் மாதங்களில் மேலதிக கடமை காலத்தினுள் (மதியம் 12 மணி முதல் பிற்பகல் 2 மணிவரை மற்றும் பிற்பகல் 4 மணிக்கு பின்னர்) முறையே 997 மற்றும் 1283 புற்று நோயாளர்களுக்கு சிகிச்சையளிக்கப்பட்ட போதிலும், கதிரியல் சிகிச்சையாளர்கள் அந்த மாதங்களுக்கு மேலதிக பணி கொடுப்பனவுகளை பெறும் போது அவ்வாறு சிகிச்சையளிக்கப்பட்ட நோயாளிகளின் எண்ணிக்கை முறையே 1910 மற்றும் 2183 என தவறாக பதிவு செய்து மேலதிக 28,126 புலன்களுக்கு ரூ. 632,835 மேலதிகமாக செலுத்தப்பட்டுள்ளது.

v. 2023 ஆம் ஆண்டில் 36 சிகிச்சை கதிரியலாளர்களுக்கு வழங்கப்பட்ட சராசரி மாதாந்த கொடுப்பனவு சுமார் ரூ. 5,793,747 ஆக இருந்ததுடன், பெரும்பாலானவை உத்தியோகத்தர்களுக்கு அவர்களின் அடிப்படை மாத சம்பளத்தை விட நான்கு மடங்கு அதிகமாக கொடுப்பனவாக செலுத்தப்பட்டுள்ளது.

(ஈ) 2021 ஆம் ஆண்டில் கல்முனை அஷ்ரப் ஞாபகார்த்த வைத்தியசாலைக்குரிய இரவெளிக்கண்டம் (Iravelikkandam) என்ற காணிக்கு மொத்தம் ரூ. 1,408,750 மதிப்புள்ள மண் கன மீட்டர் 575 இடுவதற்கு ஒப்பந்ததாரருடன் ஒப்பந்தம் கையெழுத்தான போதிலும், மண் கன மீட்டர் 2235.86 மீட்டருக்கு இட்டதாக பணம் செலுத்தப்பட்டுள்ளது. அதன்படி, மதிப்பிடப்பட்ட பெறுமதியை விட 288 சதவீதம் அதிகமாக செலுத்தப்பட்டுள்ளதுடன், கணக்காய்வு உத்தியோகத்தர்களின் பங்கேற்புடன் 2025 மார்ச் 26 ஆம் திகதி மேற்கொள்ளப்பட்ட கூட்டு பௌதீக ஆய்வின் போது கன மீட்டர் மண் சுமார் 1779.6 மீட்டருக்கு இடப்பட்டுள்ளமை உறுதி செய்யப்பட்டது. அதன்படி, மண் கன மீட்டர் 456.26 இற்காக ரூ. 1,117,837 மேலதிகமாக செலுத்தப்பட்டமை உறுதி செய்யப்பட்டது. அத்துடன், இடப்பட்ட மண் அனுமதிக்கப்பட்ட மண் என்பதையும் மண் குறித்த சுருக்கத்தை (compaction report) உறுதிப்படுத்தும் ஆய்வக அறிக்கைகள் பெறப்படாததால் மண்ணுக்கு செலுத்தப்பட்ட முழு கட்டணமும் தவறானது என்பதும் கண்டறியப்பட்டது.

4.5. **நட்டம் மற்றும் இழப்பு**

சமர்ப்பிக்கப்பட்ட நிதி கூற்றுகளில் செயற்பாட்டுத் திட்டங்கள் மற்றும் அபிவிருத்தித் திட்டங்களுடன் தொடர்பாக தயாரிக்கப்பட்ட நட்டம் மற்றும் கைவிடல் பற்றிய கூற்று (குறிப்பு (i)) மற்றும் புத்தகத்தில் இருந்து வெட்டி நீக்குதல் குறித்த கூற்று (குறிப்பு (ii)) தொடர்பில் பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) அமைச்சினால் தயாரிக்கப்பட்ட வைத்தியசாலைகள் மற்றும் நிறுவனங்களினால் சமர்ப்பிக்கப்பட்ட நட்டம் மற்றும் கைவிடல் தொடர்பான கூற்று (குறிப்பு (ை)) ஆய்வின் போது பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

i. சுகாதார அமைச்சினால் தயாரிக்கப்பட்ட நட்டம் மற்றும் கைவிடுதல் பற்றிய கூற்றின்படி அதன் மதிப்பு 31.98 மில்லியன் ரூபா என்ற போதிலும், வைத்தியசாலை மற்றும் நிறுவனங்களினால் தயாரிக்கப்பட்ட கூற்றுகளின்படி அந்த மதிப்பு 160.64 மில்லியன் ரூபா ஆகும். அதன்படி 128.66 மில்லியன் ரூபா வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

ii. வைத்தியசாலைகள் மற்றும் நிறுவனங்களினால் தயாரிக்கப்பட்ட 2024 டிசம்பர் 31 ஆம் திகதிக்கு தொடர்ந்தும் அறவிடுவதற்கு அல்லது கைவிடுவதற்கு உள்ள நட்டம் பற்றிய கூற்றில் முழு மதிப்பு 160.64 மில்லியன் ரூபா ஆகும். அதில் 47.53 மில்லியன் ரூபா 05 வருடங்களுக்கு மேற்பட்ட பெறுமதி என்பதுடன், அது மொத்த பெறுமதியில் 30 சதவீதமாகும். மேலும், கால பகுப்பாய்வு சமர்ப்பிக்கப்படாத பெறுமதி 24.30 மில்லியன் ரூபா ஆகும்.

iii. இலங்கை தேசிய வைத்தியசாலையில் ரூ.17,000 மதிப்புள்ள 34 மருத்துவ சான்றிதழ்கள் காணமமல் போனமை குறித்து வைத்தியசாலையினால் சமர்ப்பிக்கப்பட்ட கூற்றில் குறிப்பிடப்பட்டவில்லை என்றாலும், அமைச்சினால் தயாரிக்கப்பட்ட கூற்றில் அந்த மதிப்புகள் சேர்க்கப்பட்டுள்ளன.

iv. அமைச்சினால் தயாரிக்கப்பட்ட கூற்றில் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையின் ரூ. 362,702 மதிப்புள்ள காசோலை காணாமல் போனமை தொடர்பில் குறிப்பிடப்பட்டுள்ள போதிலும் அதனை உறுதிசெய்வதற்கு உரிய நிறுவனத்தினால் இழப்பு மற்றும் நட்டம் தொடர்பான கூற்று சமர்ப்பிக்கப்படவில்லை.

(ஆ) வைத்தியசாலைகள் மற்றும் நிறுவனங்களினால் தயாரிக்கப்பட்ட நி.ஒ 109 இன் கீழ் புத்தகத்தில் இருந்து வெட்டி நீக்குதல் மற்றும் அறவிடுதல் குறித்த அறிக்கைகளின்படி, 11 வைத்தியசாலைகள் மற்றும் நிறுவனங்கள் தொடர்பாக மதிப்பாய்வு செய்யப்பட்ட ஆண்டில் ரூ. 23.62 ஆன நட்டங்களில் 2.66 மில்லியன் ரூபா புத்தகத்தில் இருந்து வெட்டி நீக்கப்பட்டுள்ளது. எனினும், அமைச்சினால் தயாரிக்கப்பட்ட கூற்றின் குறிப்பு ii இன்படி மேற்படி 11 வைத்தியசாலைகள் மற்றும் நிறுவனங்களுடன் தொடர்பான 34.92 மில்லியன் ரூபா சேர்க்கப்பட்டுள்ளதுடன், நட்டத்தில் ரூ. 760,553 மட்டுமே அறவிடப்பட்டு 35.68 மில்லியன் ரூபாவை புத்தகத்தில் இருந்து வெட்டி நீக்கப்பட்டுள்ளது. அது தொடர்பில் மேலும் பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

i. குருணாகல் பொது வைத்தியசாலையில் மருந்துகளின் காலாவதி தொடர்பான இழப்புகளின் மதிப்பு ரூ. 717,047 எனவும் வைத்தியசாலையினால் தயாரிக்கப்பட்ட கூற்றில் அது 7.17 மில்லியன் ரூபா எனவும் குறிப்பிடப்பட்டிருந்தது. அதேபோல் மருந்துகளின் காலாவதி தொடர்பான இழப்பு ரூ. 63,371 என வைத்தியசாலையினால் சமர்ப்பிக்கப்பட்ட

கூற்றில் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் அமைச்சினால் சமர்ப்பிக்கப்பட்ட கூற்றில் அந்த பெறுமதி சேர்க்கப்படவில்லை.

ii. அனுராதபுரம் பொது வைத்தியசாலையில் 6.16 மில்லியன் ரூபா மதிப்புள்ள காலாவதியான மருந்துகள் பற்றி வைத்தியசாலையினால் தயாரிக்கப்பட்ட கூற்றில், வெட்டி நீக்காது முன்னோக்கி கொண்டு செல்லும் இருப்பாகக் காட்டப்பட்டுள்ளதுடன், அமைச்சினால் சமர்ப்பிக்கப்பட்ட கூற்றில் அந்த மதிப்பு சேர்க்கப்படவில்லை.

iii. காலி தேசிய வைத்தியசாலையினால் தயாரிக்கப்பட்ட புத்தகத்தில் இருந்து வெட்டி நீக்குதல் மற்றும் அறவிடுதல் பற்றிய கூற்றில் 4 சந்தர்ப்பங்களுக்குரிய ரூ. 218,775 குறிப்பிடப்பட்டிருந்தாலும், அமைச்சினால் சமர்ப்பிக்கப்பட்ட கூற்றில் அந்த பெறுமதி சேர்க்கப்படவில்லை. மேலும் நோயாளர் காவுகை வண்டி விபத்து தொடர்பாக ரூ. 26,500 இழப்புகளில் ரூ. 25,000 இனை அறவிடுவது தொடர்பில் வைத்தியசாலையினால் சமர்ப்பிக்கப்பட்ட கூற்றில் குறிப்பிடப்பட்டுள்ள போதிலும், அமைச்சினால் தயாரிக்கப்பட்ட கூற்றில் அது சேர்க்கப்படவில்லை.

iv. அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலையில் 2.63 மில்லியன் ரூபா மருந்துகள் காலாவதியாதல் மற்றும் மாத்தளை மாவட்ட பொது வைத்தியசாலையில் 4.61 மில்லியன் ரூபா மருந்துகள் காலாவதியாதல் தொடர்பில் புத்தகத்தில் இருந்து வெட்டி நீக்குதல் மற்றும் அறவிடுதல் பற்றி அமைச்சினால் சமர்ப்பிக்கப்பட்ட கூற்றில் குறிப்பிடப்பட்டுள்ள போதிலும், வைத்தியசாலைகளினால் தயாரிக்கப்பட்ட அறிக்கைளில் சேர்க்கப்படவில்லை.

v. உயிரியல் மருத்துவ பொறியியல் சேவை பிரிவில் 1.08 மில்லியன் ரூபா இழப்பு தொடர்பாக புத்தகத்தில் இருந்து வெட்டி நீக்குதல் மற்றும் அறவிடுதல் தொடர்பில் வைத்தியசாலையினால் சமர்ப்பிக்கப்பட்ட கூற்றில் குறிப்பிடப்பட்டுள்ள போதிலும், அமைச்சினால் தயாரிக்கப்பட்ட அறிக்கைளில் சேர்க்கப்படவில்லை.

vi. அமைச்சினால் தயாரிக்கப்பட்ட அறிக்கைளில் குறிப்பிடப்பட்டுள்ள ஆரம்ப சுகாதார பராமரிப்பு அமைப்பை வலுப்படுத்தும் திட்டத்தின் ரூ. 89,000 மதிப்புள்ள மடிக்கணினி திருடப்பட்டமை மற்றும் சிலாபம் பொது வைத்தியசாலையில் மருந்துகள் காலாவதியானதால் இழப்பு 3.93 மில்லியன் ரூபா தொடர்பாக புத்தகத்தில் இருந்து வெட்டி நீக்குதல் மற்றும் அறவிடுதல் பற்றிய அமைச்சினால் சமர்ப்பிக்கப்பட்ட கூற்றில் குறிப்பிடப்பட்டுள்ள போதிலும், அதனை உறுதிப்படுத்துவதற்கு சம்பந்தப்பட்ட இரு நிறுவனங்களின் இழப்பு மற்றும் நட்டம் பற்றிய கூற்று சமர்ப்பிக்கப்படவில்லை.

(இ) 11 வைத்தியசாலைகள் மற்றும் நிறுவனங்கள் குறிப்பு (i) படிவம் வெற்று அறிக்கையாகவும், 19 வைத்தியசாலைகள் மற்றும் நிறுவனங்கள் குறிப்பு (ii) படிவம் வெற்று அறிக்கையாகவும் சமர்ப்பித்திருந்தன. அதன்படி, அந்த வைத்தியசாலைகள் மற்றும் நிறுவனங்களில் மதிப்பாய்வு ஆண்டில் எவ்வித இழப்பு அல்லது சேதங்கள் (வாகன விபத்துகள் உட்பட) ஏற்படவில்லை என்பது கணக்காய்வின் போது சிக்கலாக காணப்பட்டது.

(ஈ). அமைச்சின் சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் அலுவலகம் உட்பட 26 வைத்தியசாலைகள் மற்றும் நிறுவனங்களினால் குறிப்பு (i) மற்றும் 28 வைத்தியசாலைகள் மற்றும் நிறுவனங்களினால் குறிப்பு (ii) படிவம் சமர்ப்பிக்காமை மற்றும் சமர்ப்பிக்கப்பட்ட படிவங்களை அடிப்படையாகக் கொண்டு இந்த அடிப்படை கூற்று தயாரிக்கப்பட்டுள்ளதால் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுகளின் உண்மைத் தன்மை குறித்து பிரச்சனையாக உள்ளது.

(உ). இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் நிதி ஒழுங்குவிதிகளின் நி.ஒ 110 இன் விதிகளின் பிரகாரம் அதன் கீழுள்ள படிவத்தின்படி இழப்புகள் தொடர்பான பதிவேடு பராமரிக்கப்பட வேண்டும் என்றாலும், அமைச்சு அதற்கேற்ப நடவடிக்கை எடுக்கவில்லை என்பதுடன், தொற்று நோயியல் பிரிவு இழப்புகளின் பதிவேட்டை புதுப்பிக்காததால், பின்வரும் தடுப்பூசிகள் காலாவதியானதை பதிவு செய்யவில்லை என்பது மாதிரி கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது.

i. கோவிட் 19 அவசர சிகிச்சை மற்றும் சுகாதார அமைப்புகளை தயார்படுத்தலுக்கான மூன்றாவது மேலதிக நிதியுதவி திட்டத்தின் நிதி ஒதுக்கீடு மூலம் 2021 டிசம்பர் மற்றும் 2022 ஜனவரி மாதங்களில் 16,102 மில்லியன் ரூபா செலவில் கோவிட் 19 நோய்க்காக 14 மில்லியன் /பைசர் தடுப்பூசிகள் கொள்வனவு செய்துள்ளது. இந்த தடுப்பூசிகளில் காலாவதியான தடுப்பூசி பற்றிய விபரங்களை கணக்காய்விற்கு சமர்ப்பிக்குமாறு அறிவிக்கப்பட்ட போதிலும், அந்த தகவல்கள் 2025 மார்ச் 14 ஆம் திகதி வரை கணக்காய்விற்கு சமர்ப்பிக்கவில்லை. மத்திய தடுப்பூசி களஞ்சியத்தின் இருப்பு பதிவேட்டின்படி இந்த திட்டத்தின் கீழ் மற்றும் பிற வழிமுறைகளின் கீழ் பெறப்பட்ட 20.7 மில்லியன் ரூபா ஒன்றாக இருப்பு பதிவேட்டில் பதிந்துள்ளதுடன், அதில் 7.5 மில்லியன் தடுப்பூசிகள் களஞ்சியத்திலேயே காலாவதியாகி விட்டன. மத்திய தடுப்பூசி களஞ்சியத்தினால் வழங்கப்பட்ட எத்தனை தடுப்பூசிகள் ஒவ்வொரு நிறுவனத்திற்கும் உள்ளே காலாவதியாகிவிட்டன என்பது குறித்த தகவல் மத்திய தடுப்பூசி களஞ்சியத்தில் இல்லை.

ii. கோவிட் 19 தடுப்பூசி மறுசீரமைப்பு திட்டத்தினால் திருப்பிச் செலுத்தப்பட்ட 105 மில்லியன் அமெரிக்க டொலர் மற்றும் மீதமுள்ள அமைச்சின் நிதி ஒதுக்கீடுகள் மூலம் செலவிடப்பட்ட ஒரு யுனிட்டுக்கு 7 அமெரிக்க டொலர் என்ற விலையில் Sino pharm தடுப்பூசிகள் 16.86 மில்லியன் கொள்வனவு செய்யப்பட்டுள்ளதுடன், இதில் 1.78 மில்லியன் தடுப்பூசிகள் மத்திய களஞ்சியத்தில் காலாவதியாகின. மேலும், மத்திய தடுப்பூசி களஞ்சியத்தினால் வழங்கப்பட்ட தடுப்பூசிகளில் எத்தனை அந்த நிறுவனங்களில் காலாவதியாகின என்பது குறித்த தகவல் மத்திய தடுப்பூசி களஞ்சியத்தில் இல்லை.

(ஊ) மருத்துவ விநியோகப் பிரிவிற்கு சொந்தமான மருந்து களஞ்சியங்களில் 2009 ஆண்டு முதல் 2020 ஆம் ஆண்டு வரையான காலத்தினுள் ஏற்பட்டதாக அடையாளம் காணப்பட்ட மருந்து சேதம் மற்றும் இழப்பு சம்பவங்கள் 285 தொடர்பாக மேலும் அறவிடப்பட வேண்டிய அல்லது வெட்டி நீக்குவதற்கு உள்ள ரூ. 452,275,428 நட்டம் நிதிக்கூற்றுகளில் இழப்பு மற்றும் கைவிடல் குறித்து நிதி அறிக்கைகளில் சேர்க்கப்படவில்லை.

(எ) மருத்துவ விநியோகப் பிரிவினால் நிதி ஒழுங்குவிதிகள் 110 (1) இன்படி இழப்பு தொடர்பான பதிவேடு புதுப்பித்து பராமரிக்கப்படவில்லை.

(ஏ) 2021 முதல் 2024 வரையிலான ஆண்டுகளில் ஏற்பட்ட மருந்து காலாவதி, தரத் தோல்வி மற்றும் மருந்துகள் பற்றாக்குறை என்பவற்றை அடையாளம் கண்டு நிதி ஒழுங்குவிதிகள் 110 (2) இன்படி இழப்பு மற்றும் கைவிடல் குறித்து நிதிக்கூற்றுகளில் சேர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

(ஐ) மருத்துவ விநியோகப்பிரிவிற்கு சொந்தமான கொடியாவத்தை இலக்கம் 53 களஞ்சியம் 2016 மே 18 ஆம் திகதி வெள்ளத்தினால் மூழ்கியதால் ஏற்பட்ட இழப்பு ரூபா 405,576,870 என கணக்கிடப்பட்டுள்ளதுடன் அதில் ரூ. 206,311,814 இனை மாத்திரம் காப்புறுதி கூட்டுத்தாபனத்தினால் 2017 ஜனவரி 30 மற்றும் 2017 செப்டம்பர் 21 ஆம் திகதிகளில் வழங்கப்பட்டுள்ளது. அதன்படி தொடர்ந்து அறவிட வேண்டிய தொகை ரூ. 199,265,056 என்பதுடன், 07 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் கடந்துள்ள போதிலும் அது தொடர்பில் நி.ஒ

101 முதல் 113 இற்கு ஏற்ப தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை என்பது கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது.

4.6 **பொருளாதார இலாபமற்ற பரிவர்த்தனைகள்**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2023 ஆம் ஆண்டில் 34.2 மில்லியன் ரூபா செலவில் சுகாதார அமைச்சினால் கொள்வனவு செய்து வைத்தியசாலைகளுக்கு வழங்கப்பட்ட Automated Immunoassay/ Hormone analyzer (Mindray Clia 2000i) 10 உபகரணங்களின் பயன்பாடு தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வில் பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

i. இந்த உபகரணங்கள் 2022 டிசம்பர் 16 ஆம் திகதி முதல் 2023 ஜூன் 28 ஆம் திகதி வரை வைத்தியசாலைகளுக்கு வழங்கப்பட்டுள்ளன. எனினும், சம்பந்தப்பட்ட வைத்தியசாலைகள் இந்த உபகரணங்களை பயன்படுத்தி பரிசோதனைகளை மேற்கொள்ள குறிப்பிடத்தக்க தாமதம் ஏற்பட்டது அல்லது 2025 ஜனவரி 23 ஆம் திகதி வரை பயன்படுத்தப்படவில்லை என்பது அவதானிக்கப்பட்டது. அதன்படி இந்த கொள்வனவு, தேவை மற்றும் திறன் பற்றிய ஆய்வுகள் இல்லாமல் செய்யப்பட்டது என்பது அவதானிக்கப்பட்டது. இந்நிலைமையால் 04 உபகரணங்களுக்காக செலவிடப்பட்ட 13.68 மில்லியன் ரூபா முற்றிலும் பயனற்ற செலவாக மாறியுள்ளது.

ii. கொள்வனவு செய்யப்பட்ட இந்த உபகரணத்தின் ஊடாக 49 வகையான சோதனைகளை செய்யும் திறன் கொண்டவை என்றாலும், கணக்காய்விற்கு வழங்கப்பட்ட தகவல்களின்படி, வைத்தியசாலைகளினால் அதில் 08 வகையான சோதனைகள் மட்டுமே செய்யப்பட்டிருந்தன. அதன்படி, உண்மையான தேவை அடையாளம் காணாமல் இந்த உபகரணம் வாங்கப்பட்டிருப்பது அவதானிக்கப்பட்டது. உண்மையான தேவை அடையாளம் காணப்பட்டு, அந்த சோதனைகளை மட்டும் செய்யும் திறன் கொண்ட உபகரணங்கள் கொள்வனவு செய்திருந்தால், குறைந்த யுனிட் விலையில் கொள்வனவு செய்திருக்கலாம் என்பது கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது. இந்த உபகரணம் தொடர்பில் மாத்தளை வைத்தியசாலையில் மேற்கொள்ளப்பட்ட கூடுதல் ஆய்வின் போது பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

- சுகாதார அமைச்சின் ஊடாக ரூ. 3,420,000 செலவில் கொள்வனவு செய்யப்பட்டு 2022 டிசம்பர் 27 ஆம் திகதி மாத்தளை மாவட்ட பொது வைத்தியசாலையின் ஆய்வுகூடத்தில் நிறுவப்பட்ட Minray-CLIA 2000 i வகை Hormone Analyzer இயந்திரத்திற்கான உள்நாட்டு முகவர் நிறுவனத்தினால் வழங்கிய Test Menu இன்படி இந்த இயந்திரத்தின் மூலம் 99 வகையான சோதனைகளைச் செய்ய முடியும். எனினும் மாத்தளை மாவட்ட பொது வைத்தியசாலையினால் 05 வகையான பரிசோதனைகள் மட்டுமே செய்யப்பட்டிருப்பதால் இந்த இயந்திரம் குறைவாகவே பயன்படுத்தப்பட்டது. இயந்திரம் குறைவாக பயன்படுத்தப்பட்ட போதிலும், அதன் தன்னியக்க செயற்பாட்டுக்கு தேவையான பொருட்கள் (Consumables) மற்றும் வினைப் பொருட்களை வாங்குவதற்காக ஆண்டுக்கு 12 மில்லியன் ரூபாவிற்கும் அதிகமாக செலவிட நேரிட்டுள்ளது.

- இயந்திரத்தின் கொள்முதல் தொடர்பான ஏல நிபந்தனை இலக்கம் 23 இன்படி, இயந்திரத்தின் பயன்பாட்டுக்குத் தேவையான உதிரிப் பாகங்கள் (Consumables) மற்றும் வினைப் பொருட்களின் அமெரிக்க டொலர் விலை அடுத்த 05 ஆண்டுகளுக்கு நிலையானதாக இருக்க வேண்டும் எனவும்

குறிப்பிடப்பட்டுள்ளதுடன், தற்போதைய மாற்று விகிதம் இன் கீழ் இலங்கை ரூபாவில் விலைகள் சமர்ப்பிப்பதாக தெரிவு செய்யப்பட்ட விநியோகத்தர் தெரிவத்துள்ளார்.

- எனினும், வைத்தியசாலை வினைப்பொருட்களை கொள்வனவு செய்வதற்கான விலைமனுக்களை கோரும் போது இயந்திரத்தின் விநியோகத்தரினால் விலைமனுக்கள சமர்ப்பிக்கப்படும் தினத்திற்கு நிலவும் மாற்று விகிதத்தற்குப் பதிலாக 06 மாதங்களுக்கு நீடிக்கக்கூடிய உயர் மாற்று விகிதத்தை (Forward Exchange Rate) பயன்படுத்தி விலைகள் சமர்ப்பித்துள்ளன. அவ்வாறு விலைகள் சமர்ப்பித்துள்ள போதிலும் கோரப்பட்ட வினைப் பொருட்களை 03 முதல் 04 மாதங்களுக்குள் வழங்கப்பட்டுள்ளன. விநியோகத்தரினால் சமர்ப்பிக்கப்பட்ட 6 மாதங்களுக்கான முன்னோக்கிய மாற்று விகிதம் மற்றும் வினைப் பொருட்களின் விநியோக திகதிக்கு பொருந்தக்கூடிய மத்திய வங்கி மாற்று விகிதத்தையும் ஒப்பிடும் போது (Selling Rate) விநியோகத்தரினால் முன்னோக்கிய மாற்று விகிதத்தை (Forward Rate) பயன்படுத்துவதால் சுமார் ரூ.1,447,256 அதிக விலை செலுத்த வேண்டியிருந்தது.

- 2022 இலக்கம் 25 எனும் சமூகப் பாதுகாப்பு வரி (Social Security Contribution Levy) சட்டத்தின் பிரிவு 3 (2) (a) மற்றும் (b) பிரிவுகளின் விதிகளின் கீழ் வரி விலக்கு பட்டியல் (1 st Shedule-Item No. 12) மற்றும் நிதி, பொருளாதார நிலைப்படுத்தல் மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சின் பணிப்பாளர் நாயகத்தினால் சுங்க பணிப்பாளர் நாயகத்திற்கு 2022 ஒக்டோபர் 18 ஆம் திகதி அனுப்பிய FP/01/01/5801/SSL 2022 எனும் இலக்க கடிதத்தில் சமூகப் பாதுகாப்பு வரி விடுவிப்பு பட்டியலின்படி வழங்கப்பட்ட வினைப் பொருட்கள் SSCL வரியில் இருந்து விடுவிக்கப்பட்டமை அவதானிக்கப்பட்ட போதிலும், விநியோகத்தரினால் 02 சந்தர்ப்பங்களில் SSCL வரியுடன் விலைகளை சமர்ப்பித்துள்ளதால், ரூ. 38,007 வரியும் மற்றும் அதன் அடிப்படையில் ரூ. 5,701 ஏயுவு வரி என ரூ. 43,708 கூடுதலாக செலுத்தப்பட்டுள்ளது.

(ஆ) வைத்தியசாலையினால் உருவாக்கப்படும் மருத்துவக் கழிவுகளை நிர்வகிக்க மஹமோதர போதனா வைத்தியசாலைக்கு 2009 ஆம் ஆண்டு மானியமாக பெறப்பட்ட Hydroclave கழிவு முகாமைத்துவ அலகு, வைத்தியசாலைக்கு கிடைத்த நாளில் இருந்து பயன்படுத்தப்படாத நிலையில் ஜேர்மன் இலங்கை நட்பு மகளிர் வைத்தியசாலைக்கும் அதே நிறுவனம் அதே பிராண்டில் மருத்துவக் கழிவு முகாமைத்துவ அலகை (ஒரு உபகரணம்) 2023 டிசம்பர் 28 ஆம் திகதி கொள்வனவு செய்துள்ளது. இருப்பினும் இந்த இயந்திரத்தைப் பயன்படுத்திய போதிலும், பாதிக்கப்பட்ட கழிவுகளின் அளவில் மாற்றங்கள் இல்லாமை, ஈரத்தன்மை உண்டாகுதல் மற்றும் துர்நாற்றம் வீசுதல், ஒரு Shredder இயந்திரத்தைப் பயன்படுத்த முடியும் என்றாலும், அது நடைமுறைக்கு சாத்தியமில்லை மற்றும் விலை உயர்வு, Hydroclave உபகரணம் சரியாக செயற்படுகிறதா என்பதை நுண்ணுயிரியலாளரிடமிருந்து உறுதிப்படுத்தல் பெறப்படாமை போன்ற காரணங்களினால் வைத்தியசாலை அதனை ஆரம்ப 05 நாட்கள் மட்டும் பயன்படுத்திய பின்னர் கழிவு முகாமைத்து நடவடிக்கைகளுக்கு பயன்படுத்தவில்லை. எனவே, அதற்காக செலவிடப்பட்ட பணம் வீணடிக்கப்பட்டது. அதன்படி, தனியார் விநியோகத்தர்களுக்கு வைத்தியசாலை கழிவுகளை எடுத்துச் செல்வதற்கு அனுமதித்ததால் 2024 மே மாதம் முதல் 2024 டிசம்பர் இறுதி வரை 8.14 மில்லியன் ரூபா செலுத்தப்பட்டுள்ளமை அவதானிக்கப்பட்டது.

(இ) ஜேர்மன் இலங்கை நட்பு மகளிர் வைத்தியசாலையின் பிரதான சமையலறையில் உள்ள 20 சமையல் உபகரணங்கள் வைத்தியசாலை திறக்கப்பட்ட 2024 மார்ச் 07 ஆம் திகதி முதல் பயன்படுத்தப்படவில்லை என்பதும், 03 உபகரணங்கள் பல்வேறு காரணங்களால் சேதமடைந்திருப்பதும் பௌதீக ஆய்வில் கண்டறியப்பட்டது. அவற்றை வாங்குவதற்கு செலவிடப்பட்ட அரச பணம் வீணடிக்கப்பட்டது என்பது அவதானிக்கப்பட்டது.

(ஈ) கேகாலை போதனா வைத்தியசாலையில் தினமும் சேரிக்கப்படும் மருத்துவக் கழிவுகள் உட்பட, பொதுச் சூழலில் நேரடியாக அகற்ற முடியாத கிட்டத்தட்ட 365 கிலோ கழிவுகளை எரிக்க கிட்டத்தட்ட ரூ. 17 மில்லியன் ரூபா செலவில் ஒரு எரியூட்டி கட்டி 2024 ஜூன் 07 அன்று அதன் செயற்பாடு சோதிக்கப்பட்ட போதிலும் ஊழியர்களுக்கு முறையான பயிற்சிகள் வழங்காமை மற்றும் முறையாக வைத்தியசாலைக்கு ஒப்படைக்கப்படாததாலும்/ ஏற்றுக்கொள்ளப்படாததாலும் ஒரு கிலோ கழிவிற்கு ரூ.185 (வரியின்றி) செலவில் தனியார் நிறுவனம் அகற்றிய காரணத்தால் வருடத்திற்கு சுமார் 24 மில்லியன் ரூபாவிற்கும் அதிகமான தேவையற்ற செலவு செய்ய நேர்ந்துள்ளது.

(உ) கேகாலை போதனா வைத்தியசாலையினால் 2019, 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளில் கொள்வனவு செய்யப்பட்ட ரூ. 34,485,827 மதிப்புள்ள 04 இயந்திரங்கள் கொள்வனவு செய்வதற்கான தேவை மற்றும் இயந்திரத்தின் செயற்பாடு தொடர்பில் முறையான சாத்தியக்கூறு ஆய்வு நடத்தாமல், கொள்வனவு செய்யப்பட்டுள்ளது. இதன் விளைவாக, இந்த இயந்திரம் பயன்படுத்தப்படாமல் அல்லது மற்றொரு வைத்தியசாலைக்கு வழங்கப்படாமல் செயலிழந்து காணப்பட்டன.

(ஊ) கண்டி தேசிய வைத்தியசாலையினால் 03 உயிரியல் மருத்துவ உபகரணங்களுக்கான பழுதுபார்ப்பதற்காக 2023 ஆம் ஆண்டில் 13.1 மில்லியன் ரூபா செலவிடப்பட்டுள்ளது, இருப்பினும் அந்த இயந்திரங்கள் மிகக் குறுகிய காலத்தினுள் அதாவது 1 - 6 மாத காலத்தினுள் மீண்டும் மீண்டும் ஒரே பிரச்சனைகள் அல்லது வேறு பிரச்சனைகள் பதிவாகியுள்ளது. அதன்படி, பழுதுபார்த்த பிறகு நீண்ட காலம் அவற்றை பயன்படுத்த முடியாது என்பதும், அதிக செலவில் மேற்கொள்ளப்பட்ட பழுதுபார்ப்புகளின் நேர்மறையான முடிவுகள் சாதகமான சூழ்நிலையில் காணப்படவில்லை.

4.7 **கணக்காய்வு விசாரணைகளுக்கு பதில் வழங்கப்படாமை**

தேவைக்கு ஏற்றவாறு குறிப்பிட்ட காலக்கெடுவிற்குள் அனைத்து கணக்காய்வு விசாரணைகளுக்கும் கணக்காய்வாளர் நாயகத்திற்கு பதிலளிக்கப்படுவதை உறுதி செய்ய வேண்டும் என்றாலும், 2025 ஏப்ரல் 07 நிலவரப்படி பதிலளிக்கப்படாத மொத்த கணக்காய்வு விசாரணைகளின் எண்ணிக்கை 117 என்பதுடன், ஒரு வருடத்திற்கும் மேலாகியும் பதிலளிக்கப்படாத கணக்காய்வு விசாரணைகளின் எண்ணிக்கை 27 ஆகும்.

4.8 **முகாமைத்துவ பலவீனங்கள்**

பின்வருவன அவதானிக்கப்பட்டன.

(அ) எம்பிலிப்பிட்டிய மாவட்ட பொது வைத்தியசாலையில் சுத்திகரிப்பு சேவை வழங்குதல் தொடர்பில் பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

i. ஒப்பந்த நிபந்தனை 2.7 இன்படி, சுத்திகரிப்பு சேவையில் ஈடுபடுத்தப்பட வேண்டிய ஊழியர்களில் குறைந்தபட்சம் 20 சதவீதம் ஆண் ஊழியர்கள் இருக்கவேண்டும். எனினும், கணக்காய்வுத் தினத்தில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வின்படி அது 9 சதவீதமாக இருந்தது.

ii. ஒப்பந்த நிபந்தனை 12 இன்படி, ஒவ்வொரு சேவை சுழற்சியும் ஆரம்பிக்க முன்னர் அந்த ஒவ்வாரு சேவை நிலையத்திலும் சேவையில் ஈடுபடுத்தப்படும் சுத்திகரிப்பு ஊழியர்களின் பெயர் பட்டியல் மற்றும் அவர்களின் அடையாள அட்டை இலக்கம் என்பன ஒப்பந்த நிறுவனத்தினால் நிறுவனத்தலைவருக்கு சமர்ப்பிக்க வேண்டும் எனினும், அவ்வாறு சமர்ப்பித்திருக்கவில்லை.

iii. ஒப்பந்த நிபந்தனை 13.5 இன்படி, மாதாந்தம் தேவைப்படும் உபகரணங்கள் மற்றும் இரசாயனப் பொருட்களின் அளவை ஒவ்வொரு மாதமும் வைத்தியசாலையினால் அறிவிக்கப்படும் திகதியில் தொற்று கட்டுப்பாட்டு பிரிவின் தாதி உத்தியோகத்தருக்கு அல்லது தொற்று கட்டுப்பாட்டு பிரிவின் பொறுப்பான அலுவலரிடம் ஒப்படைக்கப்பட வேண்டும் என்றாலும், உபகரணங்கள் மற்றும் இரசாயனப் பொருட்களை ஏற்றுக்கொண்டதற்கான பிரதியில் தொற்று கட்டுப்பாட்டு பிரிவின் உத்தியோகத்தர் கையொப்பமிடாத காரணத்தால் பொருட்களை ஏற்பதற்கு தொற்று கட்டுப்பாட்டு பிரிவின் உத்தியோகத்தர் பங்கேற்றாரா என்பது உறுதிப்படுத்தப்படவில்லை.

iv. ஒப்பந்த நிபந்தனை 11 இன்படி, பணம் செலுத்துவதற்கு முன், பணம் செலுத்தும் ஆவணங்களுடன் ஒதுக்கப்பட்டுள்ள ஒவ்வொரு பிரிவிலும் பணிகள் திருப்திகரமாக நிறைவேற்றப்பட்டுள்ளன என்பதை சம்பந்தப்பட்ட உத்தியோகத்தரிடம் இருந்து உத்தரவாதம் பெறுவது அவசியமாக இருந்த போதிலும், சுத்திகரிப்பு பணிகளை மதிப்பிடுவதற்கு எந்த முறைகளும் செயல்படுத்தப்படவில்லை.

v. ஒப்பந்த நிபந்தனை 01 (x) இன்படி, விநியோகத்தரினால் சுத்திகரிப்பு நோக்கங்களுக்காக வழங்கப்பட வேண்டிய உபகரணங்களில் வழங்கப்பட்ட அளவை உறுதி செய்வதற்கு 2024 ஜூன் 10 கணக்காய்வுத் தின நிலவரப்படி இருப்புப் பதிவேடு அல்லது பிற ஆதார ஆவணம் பராமரிக்கப்படாததால் அதற்காக செலுத்தப்பட்ட ரூ. 445,500 மதிப்புள்ள உபகரணங்களின் (ஒரு மாதத்திற்கு 74,250 வீதம் 2023 ஒக்டோபர் முதல் 2024 மார்ச் வரை) பெறுமதியை துல்லியமாக சரிபார்க்க முடியவில்லை.

vi. சுத்திகரிப்பு சேவைக்காக கட்டணம் செலுத்தும் போது, பொது பணிகளுக்கென ஒரு மாதத்திற்கு ரூ. 406,891 வீதம் 06 மாதங்களுக்கு ரூ. 2,441,346 செலுத்தியுள்ளதுடன், அதில் ரூ. 2,082,530 செலுத்தியதை உறுதிப்படுத்துவதற்கு பற்றுச்சீட்டுகள் அல்லது ஏற்றுக் கொள்ளக்கூடிய நிதி ஆதாரங்கள் இருக்கவில்லை.

vii. ஒப்பந்த நிபந்தனை 2.19 இன்படி, தொழிலாளர்களின் வரவு மற்றும் வெளியேறுதல் குறித்து கையொப்பமிட ஒரு பதிவேடு பராமரிக்கப்பட வேண்டும் என்பதுடன், அதனை ஒரு அங்கீகரிக்கப்பட்ட உத்தியோகத்தரின் ஆய்வுக்காக தினமும் சமர்ப்பிக்கப்பட வேண்டும். எனினும், சுத்திகரிப்பு நிறுவனத்தினால் பகல் மற்றும் இரவு சேவை சுழற்சிக்கான வரவு மற்றும் வெளியேறுதல் 2 பதிவேடுகள் பராமரிக்கப்படுகிறது என்பதுடன், அதில் இரவு சேவை சுழற்சி தொடர்பான வரவு மற்றும் வெளியேறுதல் பதிவேடு மட்டுமே ஆய்விற்கு உட்படுத்தப்பட்டுள்ளது.

(ஆ) இரத்தினபுரி போதனா வைத்தியசாலையில் உலர் உணவுப் பொருட்கள் வழங்குதல் மற்றும் நோயாளிகளுக்கும் கனிஷ்ட ஊழியர்களுக்கும் சமைத்த உணவு வழங்குதல் தொடர்பில் பினவரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

i. 2024 ஜனவரி முதல் ஒக்டோபர் வரையிலான உலர் உணவுப் பொருட்கள் விநியோகம் தொடர்பில் ஆராய்ந்த போது நோயாளிகளுக்கு தேவையான சத்தான உணவை

வழங்குவதற்காக விநியோகிக்கப்பட வேண்டிய மீன், கருவாடு, முட்டை, பால்மா, ஆரஞ்சு மற்றும் அவக்காடோ பழங்கள் பல நாட்களில் வழங்கப்படவில்லை.

ii. உலர் உணவுப் பொருட்களுக்காக விலைமனுக்கள் கோரும் போதும், அதிகபட்ச விலையை நிர்ணயிக்கும் போதும் நிலவும் சந்தை விலை ஏற்ற இறக்கங்களுக்கு கவனம் செலுத்தவில்லை என்றும் 16 உலர் உணவுப் பொருட்களுக்கு சந்தை விலையை விட அதிக விலை செலுத்தியதால் 2024 ஆம் ஆண்டில் ரூ. 9,462,819 இழப்பு ஏற்பட்டதாகவும் அவதானிக்கப்பட்டது.

iii. 2024 செப்டெம்பர் மற்றும் ஒக்டோபர் மாதங்களில் மட்டும் உணவுகளை ஆடர் செய்து அதைப் பெறாத ஊமியர்களின் எண்ணிக்கை காலையில் 644 ஆகவும், மதியம் 2236 ஆகவும், இரவில் 2032 ஆகவும் இருந்தது. அதன்படி, அதிகளவு உணவு மீதமாகியதுடன், அந்த மீதமாகிய அளவு புத்தங்களில் பதிவு செய்யப்படவில்லை.

iv. 2024 நவம்பர் 25 ஆம் திகதி கணக்காய்வின் மூலம் கனிஷ்ட ஊழியர்களுக்கு உணவு விநியோகம் குறித்த பௌதீக ஆய்வில் B மற்றும் C பிரிவுகளில் உணவுப் பதிவுப் புத்தகங்கள் அந்த இடத்தில் இருக்கவில்லை என்பதுடன், ஓவசியர் எவரும் உணவு பகிர்ந்தளிக்கும் பணியில் பங்கேற்கவில்லை. இதன் காரணமாக பங்கிடப்படும் உணவின் மொத்த அளவு கண்டறியப்பட முடியவில்லை என்பதுடன், கனிஷ்ட ஊழியர்களுக்கு உணவு வழங்குவது தொடர்பில் பராமரிக்கப்படும் உணவு பதிவு புத்தகங்கள் புதுப்பிக்கப்பட்ட விதம் கணக்காய்வின் போது சர்ச்சைக்குரிய விடயமாக இருந்தது.

(இ) 2024 ஜூலை 30 ஆம் திகதி கையொப்பமிடப்பட்ட இரத்தினபுரி போதனா வைத்தியசாலையின் சுத்திகரிப்பு சேவை வழங்குவதற்கான திருத்தப்பட்ட ஒப்பந்தத்தில், ஒப்பந்த நிபந்தனை இலக்கம் 10 இன்படி, ஒவ்வொரு பிரிவிலும் பணிகள் திருப்திகரமாக முடிக்கப்பட்டுள்ளதாக சம்பந்தப்பட்ட அதிகாரிகள் சான்றளித்த பின்னர் பணம் செலுத்தப்பட வேண்டும். எனினும், சுத்திகரிப்பு பணிகளின் குறித்த விபரங்களைப் பெறாமல் 2024 ஜனவரி, பெப்ரவரி மற்றும் மார்ச் மாதங்களுக்காக ஒப்பந்ததாரருக்கு ரூ. 34,778,055 செலுத்தியுள்ளது.

(ஈ) குளியாப்பிட்டிய போதனா வைத்தியசாலையில் சிறுநீரக நோயாளிகளுக்கு குருதி மாற்றூட்டல் இயந்திரங்கள் (Dialysis) 05 மட்டுமே உள்ளன. கணக்காய்வுத் திகதியின்படி 42 நோயாளிகள் அதன் மூலம் டயாலிசிஸ் சிகிச்சைகள் பெற்றுவரும் அதே நேரத்தில் பிற வாட்டுகளில் உள்ள ஆபத்தான நோயாளிகளும் அவசர சிகிச்சைக்காக இந்த பிரிவுக்கு பரிந்துரைக்கப்படுகிறார்கள். Dialysis தேவைப்படும் மேலும் 42 நோயாளிகள் காத்திருப்போர் பட்டியலில் உள்ளனர். காத்திருப்போர் பட்டியலில் இருந்த நோயாளிகளில் மூன்று பேர் இறந்துவிட்டதாகக் கூறப்படுகிறது. அறிக்கையிடப்பட்ட நோயாளிகளில் வைத்தியசாலையின் அதிகார வரம்பிற்குள் உள்ள 16 நோயாளிகள் வேறு வைத்தியசாலைகளில் Dialysis செய்து கொள்கின்றனர். வைத்தியசாலையின் அதிகார வரம்பிற்குள் உள்ள நோயாளிகளின் உயிருக்கு ஏற்படும் ஆபத்தைக் குறைக்க Dialysis இயந்திரங்களின் எண்ணிக்கையை அதிகரிக்க வேண்டிய அவசியம் உள்ளதுடன், வைத்தியசாலை வளாகத்தில் இதற்குப் போதுமான இடமின்மை பிரச்சினை இருப்பதாக கணக்காய்வின் போது கண்டறியப்பட்டது. இந்த வைத்தியசாலை போதனா வைத்தியசாலையாக மேம்படுத்தப்பட்டதன் மூலம் நோயாளிகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ள போதிலும், அத்தியவசிய வசதிகள் அதிகரிக்கப்படவில்லை என்பது மேலும் அவதானிக்கப்பட்டது.

(உ) கண்டி தேசிய வைத்தியசாலையில் மூன்று கதிரியலாளர்கள் வழங்கிய தகவல்களின்படி, 2024 மார்ச் 06 நிலவரப்படி, CT ஸ்கேன் பரிசோதனை காத்திருப்பு பட்டியலில் 1738 நோயாளிகள் இருந்தனர். அந்த நோயாளிகளுக்கான காத்திருப்புக் காலம் 2026 மார்ச் 12 ஆம் திகதிவரை

தொடர்ந்தது. இருப்பினும், ஒரு நோயாளி தனது CT ஸ்கேன் பெற கிட்டத்தட்ட இரண்டு ஆண்டுகள் காத்திருப்பு பட்டியலில் காத்திருக்க வேண்டியிருந்தது.

(ஊ) 1855 நோயாளிகள் பரிசோதனைக்காக காத்திருப்போர் பட்டியலில் காத்திருந்த நிலையில், கண்டி தேசிய வைத்தியசாலையில் உள்ள MRI இயந்திரம் மூலம் காலை 8 மணி முதல் 5 மணி வரை மட்டுமே பரிசோதனைகள் மேற்கொள்ளப்படுவதுடன், பி.ப 8 மணிமுதல் மறுநாள் காலை 8 மணிவரை பயன்படுத்தவில்லை என்பது அவதானிக்கப்பட்டது.

(எ) கண்டி தேசிய வைத்தியசாலையில் Ultrasound Scan 08 வகையான பரிசோதனைகளை மேற்கொள்வதற்காக 2024 மார்ச் 06 நிலவரப்படி மூன்று வைத்தியர்களுடன் தொடர்பான 10,551 நோயாளிகளுக்கு 14 காத்திருப்போர் பட்டியல்கள் பராமரிக்கப்பட்டு வந்தன. அதன்படி அந்த பரிசோதனைகளைச் செய்ய 02 மாதங்களும் 21 நாட்கள் முதல் 09 மாதங்களும் 20 நாட்கள் வரை காத்திருப்பு பட்டியலில் காத்திருக்க வேண்டியிருந்தது.

(ஏ) கண்டி தேசிய வைத்தியசாலைக்கு பல்வேறு நோய்களுக்காக தங்கியிருந்து சிகிச்சைபெற ஞாயிற்றுக் கிழமை நாட்களில் வரும் நோயாளிகளில் எலும்பியல் மற்றும் சத்திர சிகிச்சைக்காக வரும் நோயாளிகளை வைத்தியசாலையில் அனுமதிப்பதற்குப் பதிலாக பேராதனை வைத்தியசாலைக்கு திருப்பியனுப்ப நடவடிக்கை எடுக்கப்பட்டமை அவதானிக்கப்பட்டது.

(ஐ) கண்டி தேசிய வைத்தியசாலையில் 08 ஜெனரேட்டர்கள் 08 இடங்களில் நிறுவப்பட்டுள்ளன. இந்த 08 ஜெனரேட்டர்கள் 08 தனித்தனி அலகுகளுக்கு மின்சாரம் வழங்கும் வகையில் நிறுவப்பட்டுள்ளன. இருப்பினும் இந்த ஜெனரேட்டர்கள் ஒன்றோடொன்று இணைக்கப்படாததால், மின்சாரத் தடை ஏற்படும் வேளையில் ஒரு குறிப்பிட்ட பிரிவில் உள்ள ஜெனரேட்டர் செயலிழந்தால் குறைந்தபட்சம் அந்த பிரிவில் உள்ள மிக அத்தியவசிய அலகுகளுக்கு மின்சாரத்தை பெற முடியாது.

(ஒ) கண்டி தேசிய வைத்தியசாலை வளாகத்திற்குள் மின்சாரம் வழங்குவதற்காக பொருத்தப்பட்டுள்ள மின் வயரிங் குறித்து குறிப்பிட்ட வரைபடம் எதுவும் இல்லை. இது பாதுகாப்பான மின்சார விநியோகத்தில் பாதிப்பாக இருந்தது. மேலும் எலிகள் மற்றும் குரங்குகளினால் மின்சார வயர்கள் சேதமடைந்திருந்தன.

(ஓ) கம்பளை ஆதார (போதனா) வைத்தியசாலையில் உயிர்வேதியல், இரத்தவியல் மற்றும் நுண்ணுயிரியல் ஆகிய மூன்று துறைகளுக்குரிய ஆய்வுகூட சோதனைகள் ஒரே பிரிவில் மேற்கொள்ளப்படுவதால் பகுப்பாய்வு இயந்திரங்கள், குளிர்சாதனப் பெட்டிகள் மற்றும் ஏனைய உபகரணங்கள் அனைத்தும் ஒரே இடத்தில் நிறுவப்பட்டுள்ளதுடன், இடம் மிகவும் குறைவாக இருப்பதால் ஆய்வுகூட சேவைகளை திறமையாகவும் முறையாகவும் பராமரிப்பதற்கு அது ஒரு தடையாக உள்ளது.

(ஔ) சுகாதார அமைச்சினால் Tzu Chi Foundation உதவியுடன் சிலாபம் பொது வைத்திசாலைக்கு வழங்கப்பட்ட சுமார் 77 மில்லியன் ரூபா மதிப்புள்ள Oxygen Generating Plant அமைப்பு 2022 ஜனவரி 08 ஆம் திகதி ஒரு தனியார் நிறுவனத்தினால் வைத்தியசாலை வளாகத்தில் நிறுவப்பட்டு அதன் தீவிர சிகிச்சைப் பிரிவு, சிசுக்களுக்கான பிரிவு, அவசர சிகிச்சைப் பிரிவு மற்றும் வாட்டு இலக்கம் 17 இன் தீவிர கண்காணிப்புப் பிரிவு போன்றவற்றுக்கான சேவையை வழங்கியுள்ளது. 2023 மற்றும் 2024 ஆம் ஆண்டுகளுக்கான ஒக்சிஜன் உற்பத்தி இயந்திரத்தின் சேவை மற்றும் பராமரிப்புக்காக சம்பந்தப்பட்ட தனியார் நிறுவனத்துடன் ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட்ட நிலையில், USAID உதவியின் கீழ் 2023 செப்டெம்பர் மாதம் ஒக்சிஜன் உற்பத்தி இயந்திரத்தின் பராமரிப்பு மற்றும் ஒக்சிஜனின் தூய்மைத் தன்மையை அளவிடுவதற்கு தேவையான உபகரணக் கருவிகள் (18 பொருட்கள்) வைத்தியசாலைக்கு கிடைக்கப் பெற்றதுடன், அவை கணக்காய்வுத் தினமான 2024 ஒக்டோபர் 07 நிலவரப்படி பயன்படுத்தப்படாமல் பணிப்பாளரின் அறையில் களஞ்சியப்படுத்தப்பட்டு இருந்தன. மேற்படி Oxygen Generating இயந்திரத்தின் 2024/2025 ஆம் ஆண்டுக்கான வருடாந்த சேவை மற்றும் பராமரிப்பு ஒப்பந்தத்திற்காக ரூ. 2,463,542 மதிப்பில்

ஒப்பந்தம் செய்யப்பட்ட போதிலும், 2024 செப்டம்பர் 18 இல் இந்த இயந்திரம் செயலிழந்து காணப்பட்டதுடன், கணக்காய்வில் பௌதீக ஆய்வு மேற்கொள்ளப்பட்ட 2025 மார்ச் 12 ஆம் நிலவரப்படி அது இயல்பாக்க நிலைக்கு கொண்டுவரப்படவில்லை. அடிக்கடி இவ்வாறு செயலிழப்பதால் இந்த இயந்திரத்தினால் வழங்கப்படும் ஒரு அலகு ஒக்சிஜனுக்கு 47 லீட்டர் கொண்ட ஒக்சிஜன் சிலிண்டர் வெளியில் இருந்து கொள்வனவிற்காக 2023 ஆம் ஆண்டுக்காக ரூ. 452,100 உம், 2024 ஆம் ஆண்டுக்காக ரூ. 1,102,200 செலவிட வேண்டியிருந்தது.

(∴) சுகாதார, போசணை மற்றும் சுதேச வைத்திய அமைச்சின் மருத்துவ விநியோகப் பிரிவினால் மேற்கொள்ளப்பட்ட மருத்துவப் பொருட்கள் மற்றும் விநியோகச் செயல்முறை குறித்த 2018 மார்ச் 14 ஆம் திகதி கணக்காய்வாளர் நாயகத்தின் விஷேட கணக்காய்வு அறிக்கையின் பரிந்துரை 8.30 இன்படி, மருந்துப் பொருட்களுக்குரிய வெப்பநிலை வரும்பிற்குள் களஞ்சியப்படுத்தப்படாவிடின், அவற்றின் தரம் சேதமடைவதால் மருந்துகளைக் கொள்வனவு செய்யும் போது டெண்டர் மாதிரிகள் மற்றும் பெறப்படும் மாதிரிகள் வைத்தியசாலைகளுக்கு வழங்கப்பட்டு அவை பயன்படுத்தி முடியும் வரை சேமிக்கப்பட வேண்டும் என பரிந்துரை செய்துள்ளது. எனினும், கிட்டத்தட்ட ஏழு வருடங்கள் கடந்துள்ள போதிலும் அந்த மாதிரிகளை சேமித்து வைப்பதற்கு 2024 டிசம்பர் 31 நிலவரப்படி எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்பதுடன், அந்த மாதிரி களஞ்சியத்தை தயாரிப்பதற்கு ஒதுக்கப்பட்ட குளிரூட்டப்பட்ட களஞ்சியம் கணக்காய்வுத் தினம் வரை எந்தப் பயன்பாட்டுக்கும் பயன்படுத்தப்படவில்லை என்பதும் பௌதீக ஆய்வில் அவதானிக்கப்பட்டது. மேலும் இந்த மாதிரி களஞ்சியத்தின் நவீனமயமாக்கலுக்கு மருத்துவ விநியோகப்பிரிவின் பிரதிப் பணிப்பாளரினால் 2024 மே 08 ஆம் திகதி பெறப்பட்ட ரூ.100,000 முற்பணத்தில் மாதிரி களஞ்சியத்தின் பிரதான கதவை புதுப்பித்தலுக்குத் தேவையான பொருட்கள் கொள்வனவு செய்யப்பட்ட போதிலும், அந்தப் பொருட்கள் உரிய நோக்கத்திற்காகப் பயன்படுத்தாமல் வேறு தேவைகளுக்காக பயன்படுத்தப்பட்டுள்ளது.

(க) 2024 ஆம் ஆண்டில் வெளிநாட்டு நிறுவனங்களிடமிருந்து மருத்துவ விநியோகப் பிரிவிற்கு பெறப்பட்ட நன்கொடைகளை துறைமுகத்திலிருந்து விடுவிப்பதற்காக 38 சந்தர்ப்பங்களில் ரூ. 321,385,888 இற்கும் அதிகமான தாமதக் கட்டணம் மற்றும் கிடங்கு கட்டணம் செலுத்தப்பட்டுள்ளதுடன், இவற்றில் 07 சந்தர்ப்பங்களில் குளிரூட்டப்பட்ட கொள்கலன்களுக்கான மின்சார செலவு ரூ. 65,330,550 உட்பட ரூ. 115,457,621 தாமதக் கட்டணம் மற்றும் கிடங்கு கட்டணம் செலுத்தப்பட்டுள்ளமை கணக்காய்வில் கண்டறியப்பட்டது. வெளிநாட்டு நிறுவனங்களில் இருந்து இலங்கையில் உள்ள வைத்தியசாலைகள் மற்றும் சுகாதார நிறுவனங்களுக்குப் பெறப்படும் நன்கொடைகள் தொடர்பான முறையான ஒருங்கிணைப்பு இல்லாததால், மருத்துவ விநியோகப் பிரிவின் வார்.∴ப் பிரிவிற்கு கிடைப்பதில் ஏற்படும் தாமதம் மற்றும் தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் ஆணையத்திடமிருந்து ஒப்புதல் பெறுவதில் ஏற்படும் தாமதம் இதற்கு தாக்கம் செலுத்துவதாகவும், அதற்காக 26 முதல் 306 நாட்கள் வரையிலான காலம் எடுப்பதாகவும், இதன் விளைவாக 08 சந்தர்ப்பங்களில் நன்கொடை அனுமதிக்காக 10 மில்லியன் ரூபா தாமதக் கட்டணம் மற்றும் கிடங்கு கட்டணம் செலுத்தப்பட்டுள்ளமை அவதானிக்கப்பட்டது. சில சந்தர்ப்பங்களில் முன் அறிவிப்புகளை மருத்துவ விநியோகப் பிரிவின் வார்.∴ப் பிரிவிற்கு வழங்கத் தவறியதன் காரணமாக அனுமதி செயல்முறைகளைத் தொடங்குவதில் ஏற்பட்ட தாமதம் காரணமாக துறைமுகம் உரிய பங்குகளை ஏலம் விட ஏல அறிவிப்புகளை வெளியிட்டுள்ளமை கணக்காய்வில் அவதானிக்கப்பட்டதுடன், லாரிகள் கெப் வண்டிகள் மற்றும் மருத்துவ உபகரணங்களை அனுமதிப்பதில் ஏற்படும் தாமத கட்டணம் மருத்துவ விநியோகப் பிரிவின் மருந்துகளை கொள்வனவு செய்வதற்கான செலவின விடயத்தில் இருந்து செலவிடப்பட்டுள்ளமையும் கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது.

(ங) மருத்துவ விநியோகப் பிரிவினால் திட்டமிட்டபடி மருத்துவப் பொருட்களை முகாமைத்துவம் செய்யாத காரணத்தால் 2024 ஆம் ஆண்டில், குருணாகல் போதனா வைத்தியசாலை மற்றும் கேகாலை பொது வைத்தியசாலையினால் ரூ.10,782,466 மதிப்புள்ள மருந்துகள் மற்றும் ரூ. 3,184,000 மதிப்புள்ள சத்திர சிகிச்சைப் பொருட்கள் உள்ளூர் கொள்முதல்களின் கீழ் கொள்வனவு செய்யப்பட்டுள்ளதுடன், மருத்துவ விநியோகப் பிரிவினால் குருணாகல் போதனா

வைத்தியசாலையின் மருத்துவக் களஞ்சியத்திற்கு மருந்துகளின் ரூ. 50,445,026 இற்கு அதிக மதிப்புள்ள 26 வகையான மருந்துகள் களஞ்சிய கட்டிடத்தின் தரைத்தளத்தில் மற்றும் முதலாம் மாடியின் நடைபாதையில் 2025 பெப்ரவரி 27 நிலவரப்படி களஞ்சியப்படுத்தப்பட்டுள்ளது. இவ்வாறு நடைபாதையில் களஞ்சியப்படுத்தப்பட்ட காலம் 02 நாட்கள் முதல் 01 வருடமும் 07 மாதங்கள் என்பது அவதானிக்கப்பட்டது.

(ச) 2024 ஆம் ஆண்டில் 55 சந்தர்ப்பங்களில் கேகாலை பொது வைத்தியசாலையினால் மருத்துவ விநியோகப் பிரிவிற்கு அனுப்பப்பட்ட ரூ.2,680,284 மதிப்புள்ள மருந்துகள் மற்றும் சத்திர சிகிச்சைப் பொருட்கள் கொள்முதலின் கீழ் கொள்வனவு செய்வதற்கும், நீர் கொழும்பு மாவட்ட பொது வைத்தியசாலையினால் 10 சந்தர்ப்பங்களில் ரூ. 308,725 மதிப்புள்ள 09 வகையான இரசாயனப் பொருட்களை கொள்வனவு செய்வதற்கு அனுமதி வழங்குவதற்கு மருத்துவ விநியோகப் பிரிவினால் 04 நாட்கள் முதல் 46 நாட்கள் வரை காலம் எடுத்துள்ளது.

(ஞ) நோயாளிகளின் அல்ட்ராசவுண்ட் ஸ்கேன் பரிசோதனைகள் செய்வதற்கு குருணாகல் போதனா வைத்தியசாலையில் 2024 ஒக்டோபர் நிலவரப்படி செயல்படக்கூடிய 03 இயந்திரங்கள் மட்டுமே இருந்தன. 02 இயந்திரங்கள் செயலிழந்துள்ளன. இதன் காரணமாக 2024 ஒக்டோபர் 10 கணக்காய்வுத் தினத்தில் இருந்து 2025 மே வரை உடலின் பல்வேறு பாகங்கள்/ உறுப்புகளுக்கான ஸ்கேன் பரிசோதனைகளுக்காக திகதிகள் வழங்கப்பட்ட நோயாளிகளின் எண்ணிக்கை 2138 என்பதுடன், அந்த நோயாளிகள் கடுமையான சிரமத்திற்கும் உயிருக்கு ஆபத்தான நிலைகளுக்கும் ஆளாகியிருப்பதும் அவதானிக்கப்பட்ட போதிலும், பழுதுபார்ப்பு போன்ற நடவடிக்கைகள் மூலம் நெரிசலைக் குறைக்க போதுமான நடவடிக்கைகள் எடுக்கவில்லை.

(ட) வைத்தியசாலை அமைப்பில் நிறுவப்பட்ட மையப்படுத்தப்பட்ட காற்றுச்சீரமைப்பி அமைப்புகள், சத்திர சிகிச்சை அறைகளின் பாதுகாப்பான செயற்பாடுகளுக்கு அத்தியவசிய காரணியாகும். ஆவற்றின் மூலம், சத்திர சிகிச்சைகளின் போது சேரும் தீங்கு விளைக்கும் கிருமிகளைக் கொண்ட வாயுக்கள் தொடர்ந்து அகற்றப்படுகின்றன. அதன்படி, மையப்படுத்தப்பட்ட காற்றுச்சீரமைப்பி அமைப்புகள் வைத்தியசாலைக்கு அவசியமான காரணியாக இருந்தாலும், கண்டி தேசிய வைத்தியசாலையில் உள்ள 08 மையப்படுத்தப்பட்ட காற்றுச்சீரமைப்பி அமைப்புகளில் 50 மில்லியன் ரூபாவிற்கும் அதிக மதிப்புள்ள 04 அமைப்புகள் 04 மாதங்கள் முதல் 25 ஆண்டுகள் வரை செயலிழந்த நிலையில் இருந்தன.

(ண) சிறுவர்களுக்கான விஷேட மருத்துவ பிரிவிற்கு Ventilator அவசியமான உபகரணம் என்பதுடன், அதனை இயக்குவதற்கு Compressor மிகவும் அவசியமானதாகும். கம்பளை ஆதார (போதனா) வைத்தியசாலையில் சிறுவர்களுக்கான விஷேட மருத்துவ பிரிவில் மாதத்திற்கு சுமார் 200 சிறுவர்கள் சிகிச்சை பெறுவதுடன், அந்த பிரிவிற்குத் தேவையான மருத்துவ காற்றை வழங்கப் பயப்படுத்தப்படும் இரண்டு Compressor இயந்திரமும் 2018 முதல் செயல்படவில்லை. அதில் ஒரு இயந்திரத்தை சரி செய்ய முடியாது என உயிரியல் மருத்துவ பொறியியலாளர் கூறியுள்ளதுடன், மற்றைய இயந்திரங்களும் 2023 டிசம்பர் 18 ஆம் திகதி முதல் செயலிழந்த நிலையில் இருந்தன.

(த) உயிரியல் மருத்துவ பொறியியலாளரினால் கம்பளை ஆதார (போதனா) வைத்தியசாலையில் வாட்டு இலக்கம் 10 இற்கு 2020 செப்டெம்பர் 15 ஆம் திகதி வழங்கப்பட்ட Zoll மாதிரி Transport Ventilator இயந்திரம் செயலிழந்துள்ளது. இது தொடர்பில் வைத்தியசாலை பணிப்பாளரினால் உயிரியல் மருத்துவ பொறியியல் பிரிவிற்கு 2022 ஒக்டோபர் 22 ஆம் திகதி அறிவித்துள்ள போதிலும், நோயாளிகளுக்கு இயந்திர காற்றோட்டத்தை வழங்கும் மற்றும் அவர்களின் உயிர்களின் பாதுகாப்பிற்கு பெரிதும் பங்களிக்கும் இந்த இயந்திரம் 2024 ஜனவரி 22 நிலவரப்படி இயல்பு நிலைக்கு திரும்பவில்லை.

(ந) நாகொட போதனா வைத்தியசாலையின் ஆய்வுகூட பிரிவின் நடவடிக்கைகள் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வில் பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

i. ஆய்வுகூட இயந்திரங்களுக்காக கொள்வனவு செய்யப்பட்ட வினையாக்கி கருவிகளைப் பெறுதல், களஞ்சியப்படுத்தல், மற்றும் விநியோக நடவடிக்கைகளை ஒரு முறையான முறையின்படி ஆய்வுகூடம் ஊடாக மேற்கொள்ளப்பட வேண்டும் எனினும், ஒவ்வொரு இயந்திரத்திற்கும் கொள்வனவு செய்யப்பட்ட வினையாக்கிகள் சம்பந்தப்பட்ட இயந்திரங்களுக்குப் பொறுப்பான ஆய்வுகூட தொழில்நுட்பவியலாளரினால் விநியோகத்தர்களிடம் இருந்து பெறப்பட்டு ஆய்வுகூடத்தில் களஞ்சியப்படுத்தப்பட்டன.

ii. போதனா வைத்தியசாலையாக, வைத்தியசாலையின் அங்கீகரிக்கப்பட்ட பணியாளர்களின்படி, மருத்துவ ஆய்வுகூட தொழில்நுட்பவியலாளர் பதவியின் கீழ் 45 பணியாளர்கள் பணியமர்த்தப்பட வேண்டும். எனினும், 2024 ஆம் ஆண்டின் இறுதிக்குள் 19 ஆய்வுகூட தொழில்நுட்பவியலாளர் பதவி வெற்றிடங்கள் காணப்பட்டதால் அது தினசரி ஆய்வுகூட சேவைகளை வழங்குவதில் மிகப்பெரிய பிரச்சனையாக மாறியுள்ளது.

(ம) 1952 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க சுகாதார சேவை சட்டத்தின் அமுலாக்கம் தொடர்பில் பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

i. சுகாதார சேவைகள் திணைக்களத்திற்கு சட்டரீதியான அதிகாரங்களை வழங்குதல், அதன் பொறுப்புகளை தீர்மானித்தல், பிராந்திய வைத்தியசாலை சபைகள் மற்றும் வைத்தியசாலை குழுக்களை நியமித்தல், பொது சுகாதாரத்திற்குரிய மாகாண நிர்வாக நிறுவனங்களால் மிக சிறந்த நிர்வாகத்தை நிறுவுதல் என்பவற்றை நோக்கமாகக் கொண்டு நிறைவேற்றப்பட்ட இந்த சட்டம் தற்போதைய மாற்றங்களுக்கு ஏற்றவாறு திருத்துவதற்கு பொறுப்பான தரப்பினரால் நடவடிக்கை எடுக்கப்படவில்லை. இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் அரசியலமைப்பின் 13 வது திருத்தம் மற்றும் 1987 ஆம் ஆண்டின் 42 ஆம் இலக்க மாகாண சபைகள் சட்டம் நிறைவேற்றப்பட்டதன் மூலம் இந்தச் சட்டம் திருத்தப்பட்டிருக்க வேண்டும். எனினும், 2024 ஆம் ஆண்டு வரை எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

ii. 1952 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க சுகாதார சேவை சட்டத்தின் 2 (1) மற்றும் 2 (2) இல் குறிப்பிடப்பட்டுள்ளபடி, சுகாதார சேவைகள் திணைக்களம் மற்றும் அதன் பிரிவுகளின் தற்போதைய செயல்பாடு, மாகாண சபைகள் செயற்படுத்தப்பட்டதன் மூலம் நிறுவப்பட்ட மாகாண சுகாதார சேவைகள் திணைக்களத்திற்கு இந்த பந்தி தாக்கம் செலுத்தும் முறை மற்றும் மத்திய அரசின் சுகாதார திணைக்களம் தற்போது செயற்பாட்டில் இல்லாததால் இந்த பந்தி எவ்வாறு செயல்படுத்தப்படுகின்றன என்பது குறித்த தகவல்களை வழங்குமாறு கோரப்பட்டு கிட்டத்தட்ட 21 மாதங்கள் கடந்துள்ள போதிலும் இது தொடர்பில் கணக்காய்விற்கு எந்த பதிலும் வழங்கப்படவில்லை.

iii. சட்டத்தின் பிரிவு 4 (1) இல் குறிப்பிடப்பட்டுள்ள தேசிய சுகாதார சபை 2006 ஆண்டின் பின்னர் கூடவில்லை. இதன்படி, அமைச்சின் சட்டபூர்வ விதிகளின்படி செயல்படவில்லை என்பது அவதானிக்கப்பட்டது. இதன்படி, இந்த சட்டத்தின் மூலம் எதிர்பார்க்கப்படும் நோக்கங்களை வெற்றிகரமாக அடையமுடியவில்லை.

iv. சட்டத்தின் பிரிவு 9 (1) மற்றும் 11 (1) பிரிவின் கீழ் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரினால் வைத்தியசாலை சபைகள் (Hospital Borad) மற்றும் வைத்தியசாலை குழுக்கள் (Hospital Committees) நியமிக்கப்பட வேண்டும் என்பதுடன், இந்த வைத்தியசாலை சபைகள் மற்றும் வைத்தியசாலை குழுக்கள் அமைச்சரினால் வர்த்தமானி அறிவித்தலில் வெளியிடப்பட வேண்டும் எனினும், சட்டத்தின் விதிகளின்படி

வைத்தியசாலை சபைகள் மற்றும் வைத்தியசாலை குழுக்களின் நியமனங்கள் எதுவும் செய்யப்படவில்லை. அமைச்சினால் எந்தவொரு வைத்தியசாலைக்கும் வைத்தியசாலை சபைகளை நியமிக்கவில்லை என்பதும், 37 வைத்தியசாலைகளுக்கு மட்டும் வைத்தியசாலை குழுக்கள் நியமிக்கப்பட்டிருப்பதும் அவதானிக்கப்பட்டது. எனினும், இந்த குழுக்களின் அமைப்பும் குழுத் தலைவரின் நியமனமும் சட்டத்தின் விதிகளின்படி செய்யப்பட்டன என்பதை கணக்காய்வில் உறுதிப்படுத்தவில்லை. மேலும், இந்த வைத்தியசாலை குழுக்கள் எதுவும் அரச வர்த்தமானியில் வெளியிடப்படவில்லை.

v. சட்டத்தின் பிரிவு 10 (5) இன்படி, வைத்தியசாலை குழு அறிக்கைகளில் பிரதிகள் மற்றும் சட்டத்தின் 14 வது பிரிவின்படி வருடாந்த அறிக்கை அமைச்சிற்கு வழங்கப்படவேண்டும் எனினும், வைத்தியசாலை குழு நியமிக்கப்பட்ட 37 வைத்தியசாலைகளில் 08 வைத்தியசாலைகள் மட்டுமே குழு வருடாந்த அறிக்கையை சமர்ப்பித்துள்ளதுடன், எந்தவொரு வைத்தியசாலையும் குழுக்கூட்ட அறிக்கைகளை சமர்ப்பிக்கவில்லை.

(ய) சுகாதார அமைச்சிற்குரிய PA – 6192 எனும் இலக்க வாகனம் விபத்துக்குள்ளாகியமை மற்றும் வாகனத்தை மீண்டும் பழுதுபார்க்காமை தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வில் பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

i. இந்த வகனம் 2014 ஜனவரி 02 ஆம் திகதி பொலன்னறுவையின் முதுங்கம பகுதியில் விபத்துக்குள்ளானது. இலங்கை குடியரசின் நிதி ஒழுங்குவிதிகள் 102 (உ) இன்படி, அரசாங்க சொத்துகளுக்கு ஏற்பட்ட சேதம் தொடர்பாக நிதி ஒழுங்குவிதிகள் 104 (1) இன்படி விசாரணைகள் ஆரம்பிக்கப்பட வேண்டும் எனினும், இந்த விபத்து தொடர்பில் பொறுப்பான உத்தியோகத்தர்கள் அதன்படி செயற்படவில்லை.

ii. இந்த வாகனத்திற்கான முழு காப்பீட்டுக் கொள்கை இலங்கை காப்பீட்டுக் கூட்டுத்தாபனத்திடமிருந்து பெறப்பட்டு, அதன்படி விபத்து தொடர்பான காப்பீட்டு இழப்பை பெற விண்ணப்பம் செய்துள்ளது. இருப்பினும், விபத்து நடந்த நேரத்தில், வாகனத்தை ஓட்டிச் சென்ற சாரதியாக காப்பீட்டு விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ள சாரதி உண்மையிலேயே வாகனத்தை ஓட்டவில்லை என்பது காப்பீட்டு நிறுவனம் மேற்கொள்ளப்பட்ட விசாரணையில் உறுதிப்படுத்தப்பட்டதால், காப்பீட்டு வழங்கப்பட மாட்டாது என காப்பீட்டு நிறுவனம் சுகாதார செயலாளருக்கு 2014 மார்ச் 20 ஆம் திகதி எழுத்துமூலம் அறிவித்துள்ளது. இதற்கு அமைச்சு உடன்படவில்லை என்றாலும், இது தொடர்பாக முறையான விசாரணை நடத்தப்பட்டதா என்பதை கணக்காய்வில் உறுதிப்படுத்த முடியவில்லை.

iii. அப்போதைய விடயப் பொறுப்பு அமைச்சரின் ஊழியர்களுக்கு ஒதுக்கப்பட்ட இந்த வாகனத்தின் விபத்து தொடர்பில் அமைச்சின் போக்குவரத்துப் பிரிவினால் 2014 ஜனவரி 16 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்ட TRD/Accident/2014- 04 எனும் இலக்க கோப்பு 2014 ஜூன் 20 ஆம் திகதி அமைச்சு அலுவலகத்திற்கு கொண்டுவரப்பட்டு அது காணாமல் ஆக்கியுள்ளது. அதன் பின்னர் தற்காலிக கோப்பு ஆரம்பிக்கப்பட்டு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதுடன், அசல் கோப்பு 2024 டிசம்பர் வரை கண்டுபிடிக்கப்படவில்லை. இந்த கோப்பு காணாமல் போனமை தொடர்பில் முறையான விசாரணைகள் மேற்கொள்ளப்படவில்லை.

iv. தொடர்ந்து காப்பீட்டு நிறுவனம் காப்பீட்டு இழப்பீடு செலுத்த மறுத்து வந்துள்ளதுடன், 2015 மார்ச் 03 ஆம் திகதி பணிப்பாளர் (போக்குவரத்து) இனால் இந்த வாகனம் அதுவரை பழுதுபார்க்க நடவடிக்கை எடுக்காததால் அது குறித்து ஆலோசணைகளை பிரதான சட்ட அலுவரிடம் கோரப்பட்டது. எனினும், அது தொடர்பாக அறிவுறுத்தல்கள்

வழங்கப்பட்டதற்கான எந்த ஆதாரமும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கவில்லை. இந்த சூழ்நிலையில் விபத்து நடந்து சுமார் 11 ஆண்டுகள் கடந்து விட்ட போதிலும் இந்த வாகனம் பழுதுபார்க்கப்படாமல் முல்லேரியாவில் உள்ள ஒரு கேரேஜில் நிறுத்தப்பட்டுள்ளது. இந்நிலைமை பொறுப்பான உத்தியோகத்தர்களின் ஒரு பொறுப்பற்ற செயலாக கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது.

v. இந்த வாகனத்தை பழுதுபார்ப்பதற்காக 2015 டிசம்பர் 08 ஆம் திகதி ரூ. 1,894,000 மதிப்பீட்டை ஒரு கேரேஜினால் வழங்கப்பட்டுள்ளதுடன், 2021 ஜனவரி 11 ஆம் திகதி பணிப்பாளர் (போக்குவரத்து) இனால் மேற்கொள்ளப்பட்ட விலைமனுக் கோரலுக்கு அமைய ரூ. 1,166,950 (குறைந்தபட்ச விலை) மதிப்பீடு பெறப்பட்டது. பணிப்பாளர் (போக்குவரத்து) இனால் 2020 நவம்பர் 18 ஆம் திகதி பிரதான சட்ட அலுவலரிடம் அரசாங்க செலவில் இந்த வாகனத்தை பழுதுபார்ப்பதற்கான சாத்தியம் குறித்து விசாரிக்கப்பட்ட போதும் அதற்கான எந்த பதிலும் கிடைக்கவில்லை.

vi. விபத்து நடந்து சுமார் இரண்டு ஆண்டுகளுக்குப் பிறகு, 2016 மார்ச் 28 ஆம் திகதி இது தொடர்பில் சட்டமா அதிபரின் ஆலோசனையைப் பெற சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தினால் நடவடிக்கை எடுக்கப்பட்டது. அது தொடர்பில் சட்டமா அதிபர் திணைக்களத்தினால் 2018 செப்டம்பர் 07 ஆம் திகதி அரண்டு நிறுவனங்களும் அரச நிறுவனங்கள் என்பதால் 2018 மே 22 ஆம் திகதி அமைச்சரவைத் தீரமான இலக்கம் 75(i)(c) இன்படி செயல்படுமாறு சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த அமைச்சரவைத் தீர்மானத்தின்படி இது குறித்து விடயப் பொறுப்பு அமைச்சரினால் அமைச்சரவையின் கவனத்திற்கு கொண்டுவந்திருக்க வேண்டும். 2024 டிசம்பர் வரை சட்டமா அதிபரினால் வழங்கப்பட்ட அறிவுறுத்தல்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

vii. விபத்து நடந்து சுமார் 10 ஆண்டுகளுக்கு பிறகு 2024 ஜூலை 05 ஆம் திகதி இந்த விபத்து தொடர்பில் நி.ஒ 104 இன்படி ஒரு ஆய்வுக் குழு நியமிக்கப்பட்டது. எனினும் இது தொடர்பில் விசாரணைப் பிரிவு நடாத்திய விசாரணைக்குரிய அறிக்கை 2024 டிசம்பர் வரை வழங்கப்படவில்லை.

(ப) சுகாதார அமைச்சிற்கு சொந்தமான 414 வாகனங்களுக்குரிய 473 கோவைகள் 2022 ஆம் ஆண்டில் அழிக்கப்பட்டுள்ளதுடன், இது தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வில் பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

i. 2019 ஏப்ரல் 22 ஆம் திகதி கணக்காய்வாளர் நாயகத்தினால் வழங்கப்பட்ட சுகாதார, போசணை மற்றும் சுதேச மருத்துவ அமைச்சின் வாகனங்கள் முகாமைத்துவம் தொடர்பான விஷேட கணக்காய்வு அறிக்கையில், அமைச்சிற்கு சொந்தமான வாகனங்களின் முகாமைத்துவம் தொடர்பான உள்ளக நிர்வாகத்தில் காணப்படும் பலவீனங்கள் தொடர்பில் சுட்டிகாட்டியிருந்தது. இந்த விஷேட கணக்காய்வு அறிக்கை மூலம் அமைச்சிற்கு சொந்தமான ஏராளமான வாகனங்கள் காணாமல் போனமை அல்லது தகவல்கள் அறியமுடியாமை குறித்து சுட்டிகாட்டியிருந்தது. 2022 ஆம் ஆண்டில் வாகன கோவைகள் அழித்தலின் போது அதில் விஷேட கணக்காய்வு அறிக்கை மூலம் தகவல்களைக் கண்டறிய முடியாத அல்லது காணாமல் போனதாக அடையாளம் காணப்பட்ட வாகனங்கள் தொடர்பில் ஆராய்ந்து அந்த வாகனங்கள் குறித்து போதுமான தகவல்கள் கண்டறியப்படவில்லை. இவ்வாறான நிலைமையின் கீழ் வாகனங்கள் தொடர்பான 473 கோப்புகளை அழிப்பதற்கான முன்மொழிவுகளை சமர்ப்பிக்கும் போது மற்றும் அதற்கான அனுமதியை பெற முன் இந்த வாகனங்கள் தொடர்பாக அன்றைய தினத்திற்குரிய நிலைமை குறித்து போதுமான கவனம் செலுத்தப்பட்டிருக்க வேண்டும். எனினும், அவ்வாறான கண்டறியாமல் இந்த வாகனக் கோவைகளில் அழித்தலுக்காக

அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இவ்வாறு அகற்றப்பட்ட வாகன கோவைகளில் 17 விஷேட கணக்காய்வு அறிக்கை மூலம் காணாமல் போன அல்லது தகவல்கள் அற்ற வாகனங்கள் என குறிப்பிட்டுள்ள போதிலும், அந்த கோவைகள் அழிக்கப்பட்டுள்ளன.

ii. மேற்படி விஷேட கணக்காய்வு அறிக்கை மூலம் சுட்டிக்காட்டப்பட்ட அவதானிப்புகள் தொடர்பில் அமைச்சினால் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் மற்றும் வழங்கப்பட்ட பரிந்துரைகளை செயற்படுத்துவதில் ஏற்பட்ட முன்னேற்றம் தொடர்பாக ஆராய்ந்து வழங்கப்பட்ட MED/B/MH/01/2022/64 எனும் இலக்க 2024 ஜூலை 23 ஆம் திகதிய கணக்காய்வு விசாரணையின்படி மற்றும் அந்த கணக்காய்வு விசாரணை தொடர்பாக எடுக்கப்பட்ட நடவடிக்கைகளை ஆராய்ந்து வழங்கப்பட்ட MED/B/MH/01/2024/03 எனும் இலக்க 2024 ஜூலை 23 ஆம் திகதிய கணக்காய்வு விசாணையின்படி காணாமல் போன அல்லது தகவல்கள் அற்ற வாகனங்கள் என அடையாளம் காணப்பட்ட 196 வாகனங்களுக்குரிய கோவைகள் 2022 ஆம் ஆண்டில் அழிக்கப்பட்டுள்ளன. இந்த கோவைகளை அழிக்கும் போது அந்த வாகனங்களின அன்றைய தினத்திற்குரிய நிலைமை குறித்து கண்டறியப்பட்டிருப்பின் இந்த வாகனங்களை பற்றிய தகவல்களை கண்டறிந்திருக்க முடியும்.

(ம) சுகாதார அமைச்சின் செயலாளரின் 2001 மே 03 ஆம் திகதிய MH/FS/28/2001 எனும் இலக்க கடிதத்தின் மூலம் உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் பணியில் இருந்து இடைநீக்கம் செய்யப்பட்ட களுத்துறை பொது வைத்தியசாலையின் கடமையாற்றிய சட்ட வைத்தியருக்கு பதவி இடைநீக்கம் செய்யப்பட்ட காலத்திற்கு அரை சம்பளம் வழங்குமாறு சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தினால் 2001 ஜூலை 03 ஆம் திகதி அறிவிக்கப்பட்டுள்ளது. பணி இடைநீக்கம் செய்யப்பட்ட நிலையில் 2002 மார்ச் 09 ஆம் திகதி இந்த மருத்துவர் முறையான அனுமதியின்றி வெளிநாடு சென்றிருந்தார். இதன்படி சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் 2003 மார்ச் 10 ஆம் திகதிய கடிதத்தின்படி அவர் 2002 ஜூன் 01 ஆம் திகதி முதல் பதவி வெறிதாக்கப்பட்டதாக கருதி நடவடிக்கை எடுக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வில் பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

i. 2022 பெப்ரவரி 03 ஆம் திகதி மேற்படி மருத்துவரின் தனிப்பட்ட கோவையை கணக்காய்விற்கு சமர்ப்பிக்குமாறு சுகாதார அமைச்சின் பணிப்பாளர் நிர்வாகம் (மருத்துவ சேவை II) இற்கு விடுக்கப்பட்ட கோரிக்கைக்கு 2022 பெப்ரவரி 09 ஆம் திகதி கோப்பு சேவையில் உள்ள கோப்புகளில் இல்லாததால், அது காப்பகத்தில் உள்ளதா என ஆராய்ந்து அறிவிப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ள போதிலும் 2025 மார்ச் 15 ஆம் திகதிவரை அந்த கோப்பு கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்படவில்லை.

ii. 2022 ஏப்ரல் 05 ஆம் திகதி களுத்துறை போதனா வைத்தியசாலையினால் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட மேற்படி மருத்துவரின் தனிப்பட்ட கோப்பு தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வில் பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

- தாபன விதிக்கோவையின் II வது அத்தியாயத்தின் 8.1 வது பிரிவின்படி, ஒரு பதவிக்கு நியமிக்கப்பட்ட ஒரு நபருக்கு அவரின் சேவை தொடர்பாக நியதிகள் அல்லது நிபந்தனைகள் அடங்கிய நியமனக்கடிதம் வழங்கப்பட வேண்டும் எனினும், 1990 செப்டம்பர் 15 ஆம் திகதி ஆரம்ப மருத்துவ தர மருத்துவர் பதவிக்கு நியமனம் வழங்கப்பட்ட இந்த மருத்துவருக்கு முறையான நியமனக்கடிதம் வழங்கப்பட்டமைக்கான ஆதாரங்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை.

- தாபன விதிக்கோவையின் VI வது அத்தியாயத்தின் பிரிவு 2.2 இன்படி, ஓய்வூதிய சம்பளம் உரித்துடைய உத்தியோகத்தர்கள் தொடர்பான நடத்தை பதிவுகளைப் பராமரிக்கும் போது அந்த நடத்தைப் பதிவேட்டில் அடிப்படைத் தகவல்களை உள்ளிட்டு பதவி நிலை உத்தியோகத்தரின் கையொப்பம் பெறப்படவில்லை என்பதுடன், 1998 ஜூலை 01 திகதியன் பின்னர் அந்த நடத்தை பதிவேடு பராமரிக்கப்படவில்லை என்பது அவதானிக்கப்பட்டது.

- 2000 நவம்பர் 27 ஆம் திகதி வாகன கடனாக ரூ. 415,100 ஐ மேற்படி மருத்துவருக்கு வழங்கப்பட்ட போதிலும், அந்த தகவல்கள் கடன் அட்டையில் உள்ளிடப்படவில்லை என்பது அவதானிக்கப்பட்டது. இந்த வாகன கடன் தொகைக்குரிய ஆவணங்கள் சமர்ப்பிக்கப்படவில்லை என 2001 ஆகஸ்ட் 08 ஆம் திகதி உத்தியோகத்தருக்கு அறிவித்துள்ள போதிலும் அந்த கடன் தொகையை அறவிட்டதற்கான எந்த ஆதாரமும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கவில்லை. எனினும், 2021 ஆம் ஆண்டிற்காக கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட அமைச்சின் அரச உத்தியோகத்தர்களின் முற்பண கணக்கின்படி அவரிடமிருந்து வாகன கடன் தொகை அறவிடப்பட்டிருக்கவில்லை.

- அரச ஊழியர்களின் முற்பண B கணக்கு 2021 இன்படி, பதவி இடைநீக்கம் செய்யப்பட்ட உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய கடன் மீதியின் பிரகாரம் மேற்படி மருத்துவர் பதவி இடைநீக்கம் செய்யப்பட்டு 20 ஆண்டுகள் 07 மாதங்களுக்கும் மேலாகிவிட்ட போதிலும், 2021 டிசம்பர் 31 ஆம் திகதிக்கு ரூ. 337,000 இடர் கடன் மீதி காணப்பட்டது. இந்த கடன் தொகை கடனாளியிடமிருந்து அல்லது பிணையாளியிடம் இருந்து அறவிடுவதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கவில்லை. இது தொடர்பில் அரசாங்க நிதி சுற்றறிக்கை 2020/01 இன் பகுதி 1 இன் பிரிவு 3.10 மற்றும் நிதி ஒழுங்குவிதிகள் 113(6)(ஆ) இன்படி நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

- 1999 ஆகஸ்ட் 16 ஆம் திகதி பணிப்பாளர் நிர்வாகம் (மருத்துவ சேவை) இனால் களுத்துறை தேசிய சுகாதார நிறுவனத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ளவாறு இந்த மருத்துவரின் நியமனம் நிரந்தரமாக்கப்படாத காரணத்தால் வாகன இறக்குமதி பத்திரம் வழங்க முடியாது என அறிவித்துள்ளது. எனினும், 1994 மே 09 ஆம் திகதி அரச சேவைகள் ஆணைக் குழு செயலாளரின் கடிதத்தின் ஊடாக அவர் மருத்துவ அலுவலர் II ஆம் தரத்திற்கு பதவியுயர்த்தப்பட்டுள்ளார். மேலும் கணக்காய்விற்கு சமரப்பிக்கப்பட்ட கோப்பில் நியமனம் நிரந்தரமாக்கப்பட்ட கடிதம் இல்லாத போது அவருக்கு வாகன கடன் வழங்கப்பட்ட முறை கணக்காய்வில் சிக்கலாக இருந்தது.

- மருத்துவர் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட ஆரம்ப விசாரணைகளில் செய்யப்பட்ட பரிந்துரைகளை செயற்படுத்துவதில் ஏற்பட்ட முன்னேற்றம் மற்றும்38 மருத்துவர்களின் தனிப்பட்ட கோவைகள் காணாமல் போனமை குறித்து இலங்கை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்படும் என தெரிவிக்கப்பட்ட போதிலும் அதன் முன்னேற்றம் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை.

(ய) சுகாதார அமைச்சிற்கு சொந்தமான NB – 2699 எனும் இலக்க வாகனத்தின் பழுதுபார்ப்பு தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வில் பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

i. இந்த வாகனத்தின் கியர்களை மாற்றுவதில் சிரமம்படுவதாக சாரதி திகதியிடப்படாத கடிதத்தின் மூலம் தெரிவித்துள்ளதுடன், 2024 மார்ச் 19 ஆம் திகதி போக்குவரத்து

அதிகாரியினால் வழங்கப்பட்ட பரிந்துரையின் அடிப்படையில் 2024 ஏப்ரல் 05 முகவர் நிறுவனத்திடமிருந்து ஒரு மதிப்பீடு கோரப்பட்டது. முகவர் நிறுவனம் 2024 ஏப்ரல் 29 ஆம் திகதி ரூ. 204,895 மதிப்பீட்டை சமர்ப்பித்துள்ளதுடன், அந்த தொகையில் வாகனத்தை பழுதுபார்ப்பதற்காக 2024 ஜூன் 05 ஆம் திகதி முகவர் நிறுவனத்திற்கு வாகனம் அனுப்பப்பட்டது. அந்த நிறுவனம் 2024 ஜூன் 11 ஆம் திகதி ரூ. 198,523 இற்கான பில் சமர்ப்பிக்கப்பட்டு அது செலுத்தப்பட்டது. மீண்டும் ஆகஸ்ட் 29 ஆம் திகதி வாகனம் அதிவேக வீதியில் பயணித்துக் கொண்டிருக்கும் போது கியர் இறுக்கமான காரணத்தால் வாகனம் ஓடாமல் நின்றுவிட்டது.

ii. இதன்படி, வாகன முகவர் நிறுவனத்திற்கு அனுப்பப்பட்டதுடன், முகவர் நிறுவனத்தினால் ரூ. 985,789 மதிப்பீட்டை 2024 ஆகஸ்ட் 29 ஆம் திகதி வழங்கியது. தேவையான உதிரிப் பாகங்கள் முகவர் நிறுவனத்திடம் இல்லை எனக்கூறி 2024 செப்டம்பர் 13 ஆம் திகதி மற்றொரு நிறுவனத்திடமிருந்து விலைமனு கோரியுள்ளது. அதன்படி, ரூ. 488,100 மதிப்பீடு வழங்கப்பட்டு, அந்த தொகைக்கு வாகனம் பழுதுபார்க்கப்பட்டது. இதன்படி ஒரே பிரச்சனைக்காக இரண்டு சந்தர்ப்பங்களில் இரண்டு வெவ்வேறு பழுதுபார்ப்புகள் செய்துள்ளதுடன், இது தொடர்பில் இந்த வாகனத்திற்குரிய முகவர் நிறுவனத்திடமிருந்து பெற முன்மொழியப்பட்ட அறிக்கை கணக்காய்விற்கு சமர்ப்பிக்கவில்லை. மேலும் இந்த அறிக்கையை பெறுவதற்கு அனுப்பப்பட்ட கடிதத்துடன் இந்த வாகனத்தை பழுதுபார்த்த பின்னர் மீண்டும் ஒப்படைக்கப்பட்ட கியர் அமைப்பில் இருந்து அகற்றப்பட்ட பாகங்கள் ஆய்வுக்காக முகவர் நிறுவனத்திற்கு அனுப்பப்பட்டது என்பது உறுதிசெய்யப்படவில்லை.

iii. இந்த வாகனத்தின் ரேடியேட்டரை மாற்றுவதற்காக 2024 ஜூன் 14 ஆம் திகதி முகவர் நிறுவனம் வழங்கிய ரூ. 359,765 மதிப்பீட்டில் டொயோட்டா உண்மையான உதிரிப் பாகங்களைப் பயன்படுத்தி செய்ய முன்மொழியப்பட்டிருந்தாலும், டொயோட்டா உண்மையான உதிரிப் பாகங்களுக்குப் பதிலாக உள்நாட்டு உதிரிப்பாகங்களை பயன்படுத்தி பழுதுபார்ப்பதற்கு பெறப்பட்ட முறையான அனுமதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. மேலும் இங்கு குறிப்பிடப்படும் சில டொயோட்டா உண்மையான உதிரிப் பாகங்களின் விலையுடன் ஒப்பிடும் போது உள்நாட்டு உதிரிப்பாகங்களின் விலை அதிகரித்ததற்கான காரணங்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கவில்லை.

(ழ) பொலன்னறுவை தேசிய சிறுநீரக விஷேட வைத்தியசாலைக்கு சுத்திகரிப்பு சேவை வழங்குவதற்காக தேசிய ரீதியில் போட்டியுடனான விலைமனுக் கோரலின் கேள்வி ஆவணங்களின் இணைப்பு V இல் பிரிவு 5 இன்படி செலவுகள் தயாரிக்கும் போது ஊழியர்களுக்கு வழங்கப்படும் ஊழியர் சேமாலாப நிதியம் மற்றும் ஊழியர் பாதுகாப்பு நிதி செலவுகளும் சேர்க்கப்பட வேண்டும் என தெளிவாக குறிப்பிடப்பட்டுள்ளதால், மாதாந்தம் சுத்திகரிப்பு சேவைக்கான கொடுப்பனவு செலுத்தும் போது சம்பந்தப்பட்ட தொழிலாளிகளுக்கு அந்த நிதிகள் செலுத்தப்படுகின்றனவா என்பது குறித்து உறுதிப்படுத்துவது பொறுப்பு வைத்தியசாலைக்கு உள்ளது. எனினும், ‘‘ஊழியர் சேமாலாப நிதியம் மற்றும் ஊழியர் பாதுகாப்பு நிதி வழங்குதல் தொடர்பான விபரங்கள் ஒவ்வொரு மாதமும் உரிய பில்லுடன் சமர்ப்பித்தல் வேண்டும்’’ என்பது ஒப்பந்தத்தில் சேர்க்கப்படவில்லை என்பதால் சம்பந்தப்பட்ட நிறுவனத்தால் ஊழியர் சேமாலாப நிதியம் மற்றும் ஊழியர் பாதுகாப்பு நிதியை தொழிலாளர்களுக்கு வழங்கப்படுகின்றனவா என்பது குறித்து வைத்தியசாலையினால் உறுதி செய்ய முடியாமல் உள்ளது.

(ர) 2024 ஜூலை 30 கணக்காய்வு தினத்தில், எல்பிட்டிய வைத்தியசாலையினால் பயன்படுத்தப்படும் 9 வானங்களின் காப்புறுதி காலாவதியாகி இருந்ததுடன் அந்த காப்புறுதி இன்றி 16 நாட்கள் முதல் 09 மாதங்கள் வரை வாகனங்கள் செலுத்தப்பட்டுள்ளன.

(ல) 2024 டிசம்பர் 01 ஆம் திகதி முதல் 09 ஆம் திகதிவரையான தரவுகளை ஆராய்ந்த போது இரத்தினபுரி போதனா வைத்தியசாலையின் சில சத்திர சிகிச்சை மற்றும் மருத்துவ வாட்டுகளில் படுக்கைகள் போதுமானதாக இருக்காத நிலையில், இதேபோன்ற மற்றொரு சத்திர சிகிச்சை மற்றும் மருத்துவ வாட்டுகளில் படுக்கைகள் மேலதிகமாக காணப்பட்டதுடன் நோயாளர்களுக்கு சிரமம் ஏற்படாதவாறு பொருத்தமான ஒரு முகாமைத்துவ முறைமை நிறுவப்படவில்லை.

(வ) இரத்தினபுரி போதனா வைத்தியசாலையில் 2024 டிசம்பர் 04 திகதிவரை அறிவிக்கப்படாமல் வேலைக்கு சமூகமளிக்காத 09 சுகாதார பணி உவியாளர்களிடம் இருந்து அறவிட வேண்டிய ரூ.139,724 இனை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

(ழ) இரத்தினபுரி போதனா வைத்தியசாலையில் கழிவுகளை அகற்றும் போது எடை அளவிடப் பயன்படுத்தப்படும் தரைத் தராசுகள் ஆண்டுதோறும் அளவீடுகள் திணைக்களத்தினால் அளவீடு செய்யப்பட்டு அதன் துல்லியத் தன்மை சரிபார்க்கப்பட வேண்டும் எனினும், 2023 மே மாதம் 10 ஆம் திகதி தராசுகள் வாங்கப்பட்ட போது பெறப்பட்ட உறுதிப்படுத்தலில் இருந்து கணக்காய்வுத் தினமான 2024 நவம்பர் 28 நிலவரப்படி கொள்வனவு செய்யப்பட்டு ஒரு வருடம் கடந்துவிட்ட போதிலும் எடை மற்றும் அளவீட்டு உரிமம் பெறப்படவில்லை.

(ள) கொழும்பு வடக்கு போதனா வைத்தியசாலைக்காக ஒதுக்கப்பட்ட வைத்தியசாலையில் இருந்து சுமார் 2.5 கிலோமீட்டர் தொலைவில் உள்ள எலபிடிவல வீட்டுத் தொகுதியில் ஒரு திட்டமிடப்பட்ட வீடும் 25 பொது சேவைகள் வீடுகளும் இருந்தன. இந்த எலபிடிவல வீட்டுத் தொகுதியில் உள்ள வீடுகள் திருமணமான மருத்துவர்களுக்கு மட்டுமே ஒதுக்கப்பட்டுள்ளதுடன், 2025 ஜனவரி மாதம் 15 மற்றும் 16 ஆம் திகதிகளில் மேற்கொள்ளப்பட்ட பௌதீக ஆய்வில் இந்த வீடுகளில் 19 வீடுகள் காலியாக இருந்தன. அதில் 18 வீடுகள் 4 ஆண்டுகளுக்கும் மேலாக வெற்றிடமாக இருப்பது கணக்காய்வில் தெரியவந்துள்ளது. இந்த வீடுகள் மற்றும் சுற்றியுள்ள சூழல் முறையாக பராமரிக்கப்படாத காரணத்தால் தற்போது பயன்படுத்தப்படும் மற்றும் பயன்படுத்தப்படாத வீடுகளும் பாழடைந்து வருகின்றன.

(ற) மேற்கூறிய உப அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள வீடுகளின் கீழ் வரும் வடக்கு போதனா வைத்தியசாலையில் அமைந்துள்ள MN/Q/MAJ/111 எனும் இலக்க வீடு கதிரியக்க நிபுணர்களுக்காக ஒதுக்கப்பட்டிருந்தது. எனினும் வைத்தியசாலையில் நிறுவப்பட்ட இரத்த வங்கிக் கிளையின் சாரதியின் கோரிக்கைக்கு அமைய 2023 பெப்ரவரி 15 ஆம் திகதி முதல் தற்காலிக அடிப்படையில் சாரதிக்கு வழங்கப்பட்டது. மேலும், இந்த வைத்தியசாலையில் பணியாற்றும் குடும்பநல உத்தியோகத்தர் ஒருவரும் தனக்கு வீடு அல்லது அறை வழங்குமாறு 2023 ஒக்டோபர் 04 ஆம் திகதி கோரியிருந்த போதிலும் அந்த கோரிக்கைக்கு வைத்தியசாலை நிர்வாகம் அனுமதி வழங்கவில்லை. இருப்பினும், இந்த உத்தியோகத்தர் 2023 ஒக்டோபர் 31 ஆம் திகதி முதல் இந்த வீட்டில் வசித்து வருவது கணக்காய்வில் தெரியவந்தது. இந்த அரச வீட்டை இரண்டு உத்தியோகத்தர்கள் பயன்படுத்தி வந்த போதிலும் அதற்காக எவ்வித கட்டணமும் வைத்தியசாலையினால் அறவிடப்படவில்லை என்பது மேலும் அவதானிக்கப்பட்டது.

(ன) ஹோமியோபதி வைத்தியசாலைக்கு அதன் தொடக்கத்திலிருந்து மதிப்பாய்வு ஆண்டுவரை ஆய்வுகூட தொழில்நுட்பவியலாளர் இல்லை என்றபோதிலும், 2003 ஆம் ஆண்டில் சுகாதார அமைச்சினால் 07 ஆய்வுகூட உபகரணங்கள், ஒரு குளிரூட்டி, ஒரு அலுமாரி வழங்கப்பட்டுள்ளன. இந்த உபகரணங்கள் 20 ஆண்டுகளுக்கும் மேலாக பயன்படுத்தப்படாமல் இருந்தன. எனினும், அவற்றை வேறு வைத்தியசாலைகளுக்கு வழங்குவதற்கு வைத்தியசாலை நிர்வாகம் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. 2024 ஆம் ஆண்டில் மீண்டும் சுதேச மருத்துவ பிரிவினால் ரூ.2,366,443 மதிப்புள்ள 03 ஆய்வுகூட இயந்திரங்களை வழங்கியுள்ளது.

(ஜ) ஜனாதிபதி செயலகம் வெளியிட்ட 2022 செப்டம்பர் 09 ஆம் திகதிய PS/CSA/00/1/4/1 எனும் இலக்க அரச செலவு முகாமைத்துவ சுற்றறிக்கையின் பிரிவு 3.3 இன்படி அங்கீகரிக்கப்பட்ட உதவி பணியாளர்களின் ஏனைய உத்தியோகத்தர்களுக்காக 02 வாகனங்கள் மட்டுமே ஒதுக்கப்பட வேண்டும் என குறிப்பிடப்பட்டுள்ள போதிலும், இராஜாங்க அமைச்சரின் 04 உதவிப் பணியாளர்களுக்கு 2023 ஆம் ஆண்டில் மற்றும் 05 உதவிப் பணியாளர்களுக்கு 2024 ஆம் ஆண்டில் முறையே ரூ.2,416,883 மற்றும் ரூ.2,165,649 எரிபொருள் கொடுப்பனவு வழங்கப்பட்டுள்ளது.

(ஸ) பொலன்னறுவை மாவட்ட பொது வைத்தியசாலை 2022 ஆம் ஆண்டில் போதனா வைத்தியசாலையாக மாற்றுவதற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளதுடன், சுகாதார மற்றும் வெகுஜன ஊடக அமைச்சு செயலாளரின் 2024 டிசம்பர் 31 ஆம் திகதிய HM/CF01/FR135/2025 எனும் இலக்க கடிதத்தின் மூலம் போதனா வைத்தியசாலைக்குரிய நிதி அதிகாரங்கள் வழங்கப்பட்ட போதிலும், 2025 ஜனவரி 19 நிலவரப்படி போதனா வைத்தியசாலையாக மாற்றுவதற்கான வர்த்தமானி அறிவித்தல் வெளியிட நடவடிக்கை எடுக்கவில்லை என்பதுடன், போதனா வைத்தியசாலைக்குரிய ஊழியர்களின் எண்ணிக்கையை திருத்துவதற்கு எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

(ஷ) 2024 மே 01 ஆம் திகதி முதல் 2025 ஏப்ரல் 30 ஆம் திகதி வரையான காலத்திற்காக பொலன்னறுவை போதனா வைத்தியசாலையின் உணவகத்தை பராமரிப்பதற்கு தொடர்பில் இரு தரப்பினரும் கையெழுத்திட்ட ஒப்பந்தத்தின் 13.2 இன்படி வழங்கப்பட்ட விலைகள் வைத்தியசாலையின் கொள்ளல் குழுவின் அனுமதியின்றி மாற்றப்பட கூடாது எனினும், ஒப்பந்ததாரர் மேற்படி ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விலைகளை விட மரக்கறி, முட்டை மற்றும் இறைச்சி உணவு பொதிகளுக்கு முறையே ரூ.10, ரூ.80 மற்றும் ரூ.130 என கூடதல் விலைக்கு ஊழியர்கள் மற்றும் வெளி நபர்களிடமிருந்து அறவிடப்படுவதாக 2025 ஜனவரி 30 ஆம் திகதி அவதானிக்கப்பட்டது. ஒப்பந்தத்தின் 3.1 இன்படி மாதாந்த வாடகையான ரூ.1,172,000 முந்தைய மாதத்திற்காக அடுத்த மாதம் 5 ஆம் திகதிக்கு முன்னர் செலுத்த வேண்டும் எனினும் 2024 ஜூன் மாதம் முதல் ஒப்பந்ததார் அவ்வாறு வாடகை செலுத்தவில்லை எனினும் ஒப்பந்தத்தின் பிரிவு 3.3 இன்படி மாதாந்த வாடகை செலுத்துவதற்கு 30 நாட்கள் தாமதித்தால் வைப்புச் செய்யப்பட்டுள்ள பாதுகாப்பு வைப்புத் தொகையில் இருந்து உரிய நிலுவைத் தொகை மற்றும் தாமத கட்டணங்களை அறவிடுவதற்கு வைத்தியசாலை நிர்வாகம் நடவடிக்கை எடுக்கவில்லை. மேலும், 2024 டிசம்பர் 31 ஆம் திகதி நிலவரப்படி ஒப்பந்ததாரரினால் செலுத்த வேண்டிய மாத வாடகை, மின் கட்டணம் மற்றும் தாமத கட்டணம் ரூ. 2.851,786 என்பதுடன் இது பாதுகாப்பு வைப்புத் தொகையின் 81 சதவீதமாகும்.

(ஹ) பொலன்னறுவை போதனா வைத்தியசாலையின் இருதய வடிகுழாய் சேவை 24 மணிநேரமும் இயங்கிய போதிலும், முன்னுரிமைப் பட்டியலில் மற்றும் Routine இல் 2025 பெப்ரவரி 10 நிலவரப்படி முறையே 192 நோயாளர்கள் 2025 ஜூன் மாதம் வரையிலும் 1,517 நோயாளிகள் 2026 இறுதிவரை காத்திருப்போர் பட்டியலில் இருப்பதால், இந்த பிரிவின் திறனை அதிகரித்து காத்திருப்போர் பட்டியலில் காத்திருப்பதற்கான காலத்தை குறைப்பது தொடர்பில் கவனம் செலுத்தப்படவில்லை.

(கூ) தினமும் சுமார் 200 கிலோ மருத்துவக் கழிவுகள் சேகரிக்கப்பட்ட போதிலும், அவற்றை முறையாக அகற்றுவதற்கான முறை குளியாப்பிட்டிய போதனா வைத்தியசாலையில் நிறுவப்படாததால் அவை வைத்தியசாலை வளாகத்தில் குவிந்து கிடந்தன. மேலும் 2024 ஏப்ரல் 25 ஆம் திகதி முதல் மெட்டாமைசர் இயந்திரத்தின் செயற்பாடுகள் தடைபட்டதால் குவிந்திருந்த அதிக அளவிலான மருத்துவக் கழிவுகள் வைத்தியசாலை வளாகத்திற்கு கடுமையான சூழல் மற்றும் சுகாதார அச்சுறுத்தலை ஏற்படுத்தியதால், 2024 டிசம்பர் மாதத்தில் ஒரு தனியார் நிறுவனத்திற்கு ரூ. 9,203,950 செலுத்தி கழிவுகள் அகற்றப்பட்டன. தனியார் நிறுவனம் எடையின் அடிப்படையில் விலை நிர்ணயம் செய்துள்ளதுடன், மழைக் காலங்களில் நீர் சேர்வதால் கழிவுகளின் எடை அதிகரிக்கும் போது செலவும் அதிகரித்துள்ளது. மேலும் மருத்துவக் கழிவுகள்

தவிர பாவணையில் இருந்து நீக்கப்பட்ட கண்ணாடி, இலத்திரனியல் பொருட்கள் என்பனவும் அதிகளவில் வைத்தியசாலை வளாகத்தில் குவிந்திருந்தன. இதன்படி வைத்தியசாலையில் கழிவுகளை அகற்றுவதற்கான முறையான அமைப்பு நிறுவப்படாத காரணத்தால் அதிக செலவுகள் மற்றும் சுகாதார பாதிப்பு என்பன ஏற்பட்டன.

(ஸ்ரீ) 2023 டிசம்பர் 31 ஆம் திகதிய சுகாதார அமைச்சின் செயலாளரின் 2024 ஆம் ஆண்டுக்கான நிதி அதிகாரமளித்தல் சுற்றறிக்கையின் 10.3.2 இன்படி, கொள்வனவு செய்யப்படும் பொருட்களை இன்வன்ரி செய்தல் தொடர்பில் வைத்தியசாலை பணிப்பாளரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள போதிலும், 2024 ஆம் ஆண்டில் காலி தேசிய வைத்தியசாலைக்கு கொள்வனவு செய்யப்பட்ட மொத்தம் 10.091 மில்லியன் ரூபா மதிப்புள்ள 57 பொருட்கள் இன்வன்ரி செய்யப்படவில்லை.

(கா) 2009 மார்ச் 27 ஆம் திகதி வெளியிடப்பட்ட இல. 02/19/2009 எனும் சுகாதார பாதுகாப்பு மற்றும் போசணை அமைச்சின் செயலாளரின் சுற்றறிக்கையின் பிரிவு 04 (x) இன்படி, 24 மணித்தியால சேவையை தொடர்ந்து பராமரிக்காத பணி அட்டவணையின்படி கடமைகளைச் செய்யாத தாதி உத்தியோகத்தர்களுக்கு மேலதிக நேர கொடுப்பனவு கணக்கிடும் போது அரச சேவையில் உள்ள ஊழியர்களுக்குப் பொருந்தக்கூடிய பொது விதிமுறைகளுக்கு இணங்க மேலதிக நேர கொடுப்பனவு கணக்கிடப்பட வேண்டும்) என குறிப்பிடப்பட்டுள்ள போதிலும், காலி தேசிய வைத்தியசாலையில் தர முகாமைத்துவப் பிரிவில் பணியமர்த்தப்பட்ட தாதி உத்தியோகத்தர்களுக்கு 2024 ஆம் ஆண்டில் மொத்தம் ரூ. 807,181 மேலதிக நேர கடமைக் கொடுப்பனவை சுற்றறிக்கையின் விதிகளுக்கு முரணாக வழங்கப்பட்டுள்ளது.

(ஙா) ஜேர்மன் இலங்கை நட்பு மகளிர் வைத்தியசாலையில் தீ பாதுகாப்பு அமைப்பு செயலிழந்து காணப்பட்டமை மற்றும் தீயணைக்கும் கருவிகள் 2024 டிசம்பர் 31 திகதி காலாவதியானதால், திடீர் தீ விபத்துக்களை சந்திக்க முடியாத நிலை காணப்படுவதுடன், இதனால் நோயாளிகள் மற்றும் ஊழியர்கள் மட்டுல்லாமல் வைத்தியசாலை கட்டிடங்களும், உபகரணங்களும் மிகவும் ஆபத்தான நிலையில் காணப்படுகின்றமை அவதானிக்கப்பட்டது.

(சா) ஜேர்மன் இலங்கை நட்பு மகளிர் வைத்தியசாலை மற்றும் வைத்தியசாலையின் பாதுகாப்பு அதிகாரிகள் அலுவலகம் ஆகியவற்றில் பராமரிக்கப்படும் பாதுகாப்பு உத்தியோகத்தர்களின் இரவு வரவு பதிவேடுகளில் உள்ளிடப்பட்ட தகவல்கள் ஒன்றுக்கொன்று வேறுபட்டு இருப்பது அவதானிக்கப்பட்டதுடன், இரவு சேவை சுழற்சிகளில் பாதுகாப்பு உத்தியோகத்தர்களின் வரவு சரிபார்க்கப்படாமல் மற்றும் சரியான மேற்பார்வை இல்லாமல் பணம் செலுத்தப்பட்டமை அவதானிக்கப்பட்டது. அதன்படி, 2024 ஜூலை 31 ஆம் வரையிலான கணக்காய்வு மாதிரிகள் ஆராய்ந்த காலத்தில், ஒழுங்கற்ற வருகை மற்றும் புறப்பாடு பதிவுகளில் உள்ள தகவல்களின் அடிப்படையில் மொத்தம் ரூ. 2.859 மில்லியன் ஒழுங்கற்ற முறையில் செலுத்தப்பட்டுள்ளது.

(ஞா) மஹமோதர போதனா வைத்தியசாலையில் 2020 டிசம்பர் முதல் 2023 ஒக்டோபர் வரையிலான காலத்திற்கு மொத்தம் ரூ. 952,600 மதிப்புள்ள உணவக வாடகை, ஒப்பந்தத்தின்படி அறவிடுவதற்கு 2025 மார்ச் கணக்காய்வு தின நிலவரப்படி வைத்தியசாலை நிர்வாகம் தவறியுள்ளது.

(டா) ஜேர்மன் இலங்கை நட்பு மகளிர் வைத்தியசாலை, 2024 ஜனவரி 01 ஆம் திகதி முதல் ஒப்பந்ததாரரால் செலுத்தப்படாத 2.94 மில்லியன் ரூபா நிலுவையில் உள்ள பில்களை அறவிடுவதற்கோ அல்லது ஒப்பந்ததாரருக்கு செலுத்திய கட்டணத்தில் ஏதேனும் கழிப்புகளைச் செய்யவோ நடவடிக்கை எடுக்கவில்லை. மேலும், ஒவ்வொரு மாதத்திற்கும் மின்சார கட்டணத்தை மட்டும் செலுத்தியதால் 2025 ஜனவரி 31 நிலவரப்படி நிலுவை மற்றும் கூடுதல் கட்டணம் மொத்தம் 27.23 மில்லியன் ரூபா மின்சார சபைக்கு செலுத்த வேண்டியிருந்தது.

(அஅ) 2022 ஜனவரி முதல் ஆகஸ்ட் வரை மஹமோதர போதனா வைத்தியசாலை தொடர்பாக வ/அ இலங்கை மின்சார (பிரைவேட்) லிமிடெட் நிறுவனத்தினால் வழங்கப்பட்ட பில்லின் அளவீட்டில் ஏற்பட்ட தொழில்நுட்ப பிழை காரணமாக மீட்டர் வாசிப்பு தவறாக பதிவு செய்யப்பட்டது. அந்த பிழைகள் சரி செய்யப்பட்டு புதிய பில்கள் தயாரிக்கப்பட்டு, 3.62 மில்லியன் ரூபா அந்த நிறுவனத்திற்கு செலுத்தப்பட வேண்டியிருந்தாலும், கணக்காய்வுத் தினம் வரை அந்த கட்டணங்கள் செலுத்தப்படவில்லை. மேலும் மஹமோதர தாதியர் கல்லூரிக்காக 2015 நவம்பர் முதல் 2021 ஒக்டோபர் வரையிலான காலத்திற்காக மின் கட்டணம் கணக்கிடுதல் அரச ஒழுங்குமுறைக்கு ஏற்ப (GV வகை) மேற்கொள்ளப்படாததால் மொத்தம் 2.96 மில்லியன் ரூபா கூடுதலாக வ/அ இலங்கை மின்சார (பிரைவேட்) லிமிடெட் நிறுவனத்திற்கு செலுத்தியுள்ளதுடன், அவ்வாறு கூடுதலாக செலுத்தப்பட்ட கட்டணங்களை அறவிடுவதற்கு எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

(ஆஆ) மாதிரி கொடுப்பனவுகளை செலுத்தும் போது சோதனைகளின் எண்ணிக்கையை கணக்கில் எடுக்கப்பட வேண்டும் எனினும், அதற்கு மாறாக பரிசோதனைகளின் சேர்க்கப்பட்டுள்ள சேர்மங்களுக்கான தனித்தனி கொடுப்பனவுகளை கணக்கீடு செய்ததால், கண்டி தேசிய வைத்தியசாலை 2023 ஆகஸ்ட் மாதம் மருத்துவ தொழில்நுட்பவியலாளர்களுக்கு ரூ. 57,500 கூடுதலாக செலுத்தியுள்ளது.

(இஇ) கண்டி தேசிய வைத்தியசாலையில் கடமை நேரத்திற்குப் புறம்பாக செய்யப்படும் ஒரு CT பரிசோதனைக்கு ரூ. 75 மேலதிக கொடுப்பனவை கதிரியக்கவியலாளர்கள் பெற முடியும் என்ற நிலையில், இந்த வைத்தியசாலையில் கதிரியக்கவியலாளர்கள் இருவர் சேவையில் ஈடுபடுத்தப்பட்டதன் மூலம் கடமை நேரத்திற்குப் புறம்பாக செய்யப்படும் ஒரு CT பரிசோதனைக்கு ரூ. 150 செலவிட்டுள்ளது.

(ஈஈ) 2010 ஆம் ஆண்டு முதல் 2024 மார்ச் 18 ஆம் திகதி வரை கண்டி தேசிய வைத்தியசாலையில் மின்சார ஒப்பந்தம் வழங்கப்பட்ட தனியார் நிறுவனத்தின் கீழ் பணியாற்றும் அலுவலர்களுக்காக சம்பளம் வழங்கும் போது அவர்களுக்கான ஊழியர் சேமலாப நிதிக்கு பங்களிப்புத் தொகையை சேவை பெறுநரினால் செலுத்தவில்லை. அதன்படி, ஒப்பந்ததாரருக்கு மாதாந்த கொடுப்பனவுகளை செய்யும் போது கண்டி தேசிய வைத்தியசாலை உத்தியோகத்தர்களினால் ஊழியர் சேமலாப நிதிக்கு அவர்கள் பணம் செலுத்தினார்களா என்பது குறித்து உறுதிப்படுத்தல் பெறாமல் கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

(உஉ) கண்டி தேசிய வைத்தியசாலையில் X-ray பரிசோதனைகளை மேற்கொள்ளும் போது அழைப்பு கடமையாக, கடமை நேரத்திற்கு புறம்பாக மேற்கொள்ளப்படும் அதாவது, பி.ப 12.00 மணி முதல் பி.ப 2.00 மணி வரை 02 மணித்தியாலத்திற்காக பி.ப 4.00 மணி முதல் மறுநாள் காலை 8.00 மணி வரையான காலம் பொருந்தும். அந்த காலத்திற்கான மாதிரி கொடுப்பனவு வழங்கும் போது ஒரு நோயாளிக்காக ஒதுக்கப்பட்டு அவருக்காக மேற்கொள்ளப்படும் பரிசோதனைகளின் எண்ணிக்கையை அடிப்படையாகக் கொண்டு மாதிரி கொடுப்பனவுகள் வழங்கப்படுகின்றன. அதன்படி, ஒரு குறிப்பிட்ட முறை இல்லாமல் ஒரு நோயாளியின் பல பரிசோதனைகளுக்கு மாதிரி கொடுப்பனவுகள் வழங்கப்பட்டுள்ளன. மேலும் பொது சுற்றறிக்கை இலக்கம் 02 – 117/2001 இன்படி மாதிரி கொடுப்பனவாக ஒரு பரிசோதனைக்கு ரூ. 22.50 செலுத்தப்பட வேண்டும் என்றாலும், அந்த நேரத்தில் பணியாற்றிய இரு கதிரியலாளர்களுக்கும் ரூ. 22.50 வீதம் ஒரு பரிசோதனைக்காக ரூ. 45 வழங்கப்பட்டுள்ளது. அதன்படி, 2024 பெப்ரவரி மாதத்திற்கு கடமை

நேரத்திற்கு புறம்பாக மேற்கொள்ளப்பட்ட X-ray பரிசோதனைகளுக்காக கதிரியலாளர்களுக்கு ரூ. 56,425.50 மேலதிகமாக வழங்கப்பட்டுள்ளது.

(ஊஊ) கண்டி தேசிய வைத்தியசாலையில் டீசல் சேமிப்பதற்காக முறையே லீட்டர் 13310 மற்றும் லீட்டர் 10000 கொள்ளளவு கொண்ட எரிபொருள் தொட்டிகள் 02 உள்ளன. இதில் 2023 ஒக்டோபர் 27 அன்று பெறப்பட்ட 9380 லீட்டர் டீசல் 2024 ஆகஸ்ட் 30 நிலவரப்படி மீதமாக இருந்தது. டீசல் எரிபொருளை சேமிக்கக்கூடிய சராசரிக் காலம் 06 முதல் 12 மாதங்கள் வரை ஆகும். முறையான களஞ்சிய வசதிகளின் கீழ் இந்த காலம் 18 முதல் 24 மாதங்கள் வரை அதிகரிக்கிறது. இருப்பினும், அவ்வாறு சேமிக்கப்பட்ட பழைய டீசலின் எரி பொருள் திறன் குறைதல், நிலைத் தன்மை குறைதல், நுண்ணுயிர் வளர்ச்சி போன்ற பாதகமான நிலைமைகள் காரணமாக அவற்றை பயன்படுத்தும் இயந்திரங்களுக்கு சேதத்தை ஏற்படுத்தும் என்பது அவதானிக்கப்பட்டது.

(எஎ) 2023 ஆம் ஆண்டில் உபகரணங்கள் பழுது பார்ப்பதற்காக வெளி முகவர் நிறுவனங்களுக்கு தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவின் பரிந்துரைகளின் அடிப்படையில் 60 நாட்கள் வரை பொதுவான பழுதுபார்க்கும் காலம் வழங்கப்பட்ட போதிலும், அந்த ஆண்டில் பழுதுபார்ப்பதற்காக அனுப்பப்பட்ட 05 உபகரணங்கள் பழுதுபார்த்து மீண்டும் கண்டி தேசிய வைத்தியசாலைக்கு ஒப்படைக்க 4 முதல் 10 மாதங்கள் வரை ஆனது. மேலும், அந்த 05 உபகரணங்களுக்கான பழுதுபார்க்கும் பணிக்காக ரூ.27,538,925 செலவிடப்பட்டுள்ளது என்பதுடன், தாமதங்களுக்கு தாமதக் கட்டணம் அறவிடப்படவில்லை. மேலும், வணிக மதிப்புள்ள உபகரணங்களை ஒப்பந்தம் இல்லாமல் நீண்ட காலமாக வெளி இடத்தில் வைத்திருப்பது அவற்றின் பாதுகாப்பிற்கு நேரடி தாக்கத்தை ஏற்படுத்தியது.

(ஏஏ) கண்டி தேசிய வைத்தியசாலையின் போக்குவரத்துப் பிரிவின் அபிவிருத்தி உத்தியோகத்தர் ஒருவர் சாரதி ஒருவருடன் இணைந்து 2023 ஜூன் 17 ஆம் திகதி தனிப்பட்ட நோக்கத்திற்காக JL – 5147 எனும் இலக்க கெப் வாகனத்தை 150 கிலோ மீட்டர் தூரம் பயணிப்பதற்கு பயன்படுத்தியுள்ளனர். மேலும் அந்த பயணத்தை முடித்த பிறகு, அந்த நோக்கத்திற்காக மோசடியான பதிவுகளை தயாரிக்கவும் அவர்கள் நடவடிக்கை எடுத்துள்ளனர். இருப்பினும், வைத்தியசாலையினால் இது தொடர்பில் சம்பந்தப்பட்ட உத்தியோகத்தரிடமிருந்து எரிபொருள் கொடுப்பனவை மட்டும் மீண்டும் அறவிட நடவடிக்கை எடுத்துள்ளது. இருப்பினும், மேற்படி உத்தியோகத்தர்கள் தாபன விதிக் கோவையின் முதலாவது உப அட்டவணையின் கீழ் குற்றம் செய்ததால், அவர்களுக்கு எதிராக முறையான ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

(ஐஐ) கண்டி தேசிய வைத்தியசாலையின் மருந்து களஞ்சியத்தில் பணிபுரியும் சுகாதார உதவியாளர்கள் தொடர்பில் முறையான மேற்பார்வை மேற்கொள்ளப்படுவதில்லை என்பதுடன், பரிசோதிக்கப்பட்ட மாதிரிகளின்படி கடமை இல்லாத நேரங்களில் கடமையாற்றியதாக பதிவு செய்யப்பட்டு அந்த களஞ்சியத்தில் பணியாற்றும் 05 சுகாதார பணி உதவியாளர்கள் 2023 ஒக்டோபர், நவம்பர், டிசம்பர் மாதங்களிலும் மற்றும் 2024 மே, ஜூன், ஜூலை மாதங்களில் மட்டும் மோசடியாக பெறப்பட்ட மேலதிக நேர கொடுப்பனவின் மதிப்பு ரூ. 239,782 ஆகும்.

(ஒஒ) பேராதனை போதனா வைத்தியசாலையின் வளாகத்தில் அமைந்துள்ள 3 மாடி மருத்துவ ஆய்வுகூட தொழில்நுட்பவியலாளர் பயிற்சிக் கல்லூரி பேராதனை வைத்தியசாலையின் சேவைகளை விரிபடுத்துவதற்காக சுகாதார அமைச்சின் செயலாளரின் 2024 மார்ச் 11 ஆம் திகதிய ETR/D/MLT/09/2023 எனும் இலக்க கடிதத்தின்படி வைத்தியசாலையினால் கையகப்படுத்தப்பட்டது. எனினும், கையகப்படுத்தப்பட்ட நேரத்தில் அந்த நிறுவனத்தில் பணியாற்றிய ஐந்து ஊழியர்கள் மற்றும் இன்வன்ரி பொருட்கள், ஆய்வுகூட உபகரணங்கள், இரசாயனப் பொருட்கள் மற்றும் நூலக புத்தகங்கள் போன்ற மனித மற்றும் பௌதீக வளங்களைப் பயன்படுத்துவது தொடர்பாக திட்டமிட்ட முறையில் தேவையான முடிவுகள் எடுக்காத காரணத்தால் 2024 டிசம்பர் 31 நிலவரப்படி அந்த வளங்கள் குறைவாக பயன்படுத்தப்படுவது அவதானிக்கப்பட்டது.

(ஒஒ) நுவரெலியா மாவட்ட போது வைத்தியசாலையில் திருமணமானவர்களுக்காக 65 அரச வீடுகள் உள்ளதுடன், அவை அட்டவணைப்படுத்தப்பட்டவை அல்லது அட்டவணைப்படுத்தப்படாதவை என பிரிக்கப்படவில்லை என்பதுடன் வாடகை அறவிடுதல் தொடர்பில் தாபன விதிக் கோவையில் குறிப்பிடப்பட்டுள்ள விதிகள் பின்பற்றப்படவில்லை. மேலும் வசதிகளை வழங்குவதற்காக ரூ. 990,000 வாடகை அடிப்படையில் வாங்கப்பட்ட வீட்டிற்கு வாடகை நிர்ணயிக்கப்பட்டபடி அறவிடத் தவறியதால் ரூ.679,968 இழப்பு ஏற்பட்டுள்ளது.

(ஙக) சுகாதார அமைச்சின் ஊடாக ஆஸ்திரேலிய கடனின் கீழ் சுகாதார அமைச்சினால் செயற்படுத்தப்படும் அரச வைதியசாலைகளில் மருத்துவக் கழிவு முகாமைத்துவ திட்டத்தின் கீழ் 2017 ஜூன் 16 அன்று சிலாபம் பொது வைத்தியசாலைக்கு அ.டொ 701,335.83 மதிப்புள்ள Metamizer இயந்திரம் வழங்கப்பட்டது. இருப்பினும், வைத்தியசாலையின் மருத்துவக் கழிவுகள் அகற்றும் பணி 2021 ஆம் ஆண்டு வழங்கப்பட்ட incinerator இயந்திரத்தைப் பயன்படுத்தி மேற்கொள்ளப்படுவதால், இந்த இயந்திரம் அவசியமில்லை எனவும் வைத்தியசாலையின் வாட்டு வசதிகளை வழங்குவதற்கு வைத்தியசாலை வளாகத்தில் இருந்து அதை அகற்றுமாறும் வைத்தியசாலையினால் அமைச்சின் செயலாளருக்கு தொடர்ந்து கோரிக்கை விடுத்து வந்த போதிலும், கணக்காய்வுத் தினமான 2025 மார்ச் 12 நிலவரப்படி இயந்திரம் வைத்தியசாலை வளாகத்தில் செயலற்ற நிலையில் இருந்தது.

(ஙஙு) சிலாபம் பொது வைத்தியசாலையின் விஷேட மருத்துவ நிபுணர்கள் மற்றும் ஏனைய மருத்துவர்களுக்கு வீடு வசதிகளை வழங்குவதற்கு போதியளவு அரச வீடுகள் வைத்தியசாலையில் காணப்படாமை மற்றும் புதிதாக கட்டுவதற்கான திட்டங்கள் இல்லாத காரணத்தால் 2023, 2022 மற்றும் 2024 ஆம் ஆண்டுகளில் உத்தியோக பூர்வ வீடுகளுக்காக வெளித் தரப்பினருக்கு செலுத்த நேரிட்ட தொகை ரூ.6,290,700 உம், ரூ. 6,294,100 மற்றும் ரூ. 6,284,952 ஆகும்.

(சச) அனுராதபுரம் வைத்தியசாலையில் நிறுவப்பட்டுள்ள கழிவு நீர் அகற்றல் அமைப்பு 03 ஆண்டுகளுக்கு மேலாக செயலிழந்து காணப்பட்டதுடன், வைத்தியசாலையில் இருந்து வெளியேற்றப்படும் மலம்/ கழிவு நீர் சுகாதார முறையில் சுற்றுச் சூழலுக்கு வெளியேற்றாமல் அனுராதபுரம் நகரத்திற்கு குடிநீரை வழங்கும் மல்வத்து ஓயாவுடன் தொடர்பான குளங்கள் மற்றும் வாய்க்கால்களுக்கு படிப்படியாக வெளியேற்றப்படுவதுடன், மத்திய சுற்றுச் சூழல் அதிகார சபை வைத்தியசாலைக்கு எச்சரிக்கை கடிதங்களை வழங்கியுள்ள போதிலும் அது தொடர்பில் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை.

(ஞஞ) ஆஸ்திரேலிய கடனின் கீழ் சுகாதார அமைச்சினால் செயற்படுத்தப்படும் அரச வைத்தியசாலைகளில் மருத்துவக் கழிவு முகாமைத்துவ திட்டத்தின் கீழ் கழிவுகளை துண்டு துண்டாக நறுக்குவதற்காக அனுராதபுரம் போதனா வைத்தியசாலை வளாகத்தில் நிறுவப்பட்டுள்ள Metamizer இயந்திரம் 2022 ஆம் ஆண்டு முதல் செயலிழந்து படிப்படியாக சிதைவடைந்து வருவதுடன், அந்த இயந்திரத்தால் முன்னர் துண்டாக்கப்பட்ட கழிவுகள் மற்றும் மருத்துவக் கழிவுகள் வைத்தியசாலை வளாகத்தில், வளாகத்தின் எல்லையில் உள்ள கால்வாய் ஓரத்தில் 02 ஆண்டுகளுக்கும் மேலாக பாதுகாப்பற்ற முறையில் துவித்து வைக்கப்பட்டுள்ளமை அவதானிக்கப்பட்டது. மேற்படி கழிவுகள் கால்வாய்க்குள் செல்வதை தடுக்க எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

(டட) 1980 ஆண்டு இலக்கம் 47 எனும் தேசிய சுற்றுச் சூழல் சட்டத்தின் பிரிவு 23 (அ) தொடர்பான விதிமுறைகளை விதித்து 2022 ஜனவரி 27 ஆம் திகதி வெளியிடப்பட்ட 2264/18 எனும் அதி விஷேட வர்த்தமானி அறிவித்தலின்படி அனுராதபுரம் போதனா வைத்தியசாலையும் சுற்றுச் சூழல் அதிகார சபையிடமிருந்து சுற்றுச் சூழல் பாதுகாப்பு அனுமதிப் பத்திரத்தைப் பெற வேண்டும் என்றாலும், சுற்றுச்சூழல் அனுமதிப்பத்திரத்தை வழங்குவதற்கு பரிசீலிக்கப்பட வேண்டிய தேவைகளை வைத்தியசாலை செயல்படுத்தாததால் 2017 ஆம் ஆண்டு முதல் சுற்றுச்சூழல் அனுமதிப்பத்திரம் வழங்கப்படவில்லை என்பது கணக்காய்வில் தெரியவந்தது.

(ணண) ஹம்பாந்தோட்டை மாவட்ட பொது வைத்தியசாலையின் சத்திர சிகிச்சைக் கூடத்தில் உள்ள சத்திர சிகிச்சைப் பொருட்களுக்கான களஞ்சியத்திற்கு களஞ்சிய பொறுப்பாளர் நியமிக்கப்படாமல் அதன் சாவி பக்கத்து அறையில் பணியாற்றும் தாதியரின் பொறுப்பில் இருந்ததுடன், சத்திர சிகிச்சைப் பெறல் மற்றும் விநியோகிப்பதை பதிவதற்கு இருப்பு பதிவேடு பராமரிக்கப்படவில்லை. பொருட்களைப் பெற்றுக்கொள்ளும் பிரிவுகளுக்கு பொறுப்பான தாதியர்களின் கோரிக்கைக்கு அமைய சத்திர சிகிச்சைப் பொருட்கள் எந்த ஆவணத்திலும் பதிவு செய்யப்படாமல் பெறப்பட்டன. சத்திர சிகிச்சை களஞ்சியத்தில் உள்ள இருப்பு குறித்து ஆவணப்படுத்தப்பட்ட தகவல்கள் எதுவும் இல்லாததால் ஆர்டர் செய்யும் போது அலுமாரியில் உள்ள பொருட்களின் அளவு கணக்கிடப்பட்டு கொள்முதல் தேவை தீர்மானிக்கப்பட்டது.

(தத) ஹம்பாந்தோட்டை மாவட்ட பொது வைத்தியசாலையில், எந்தப் பணிகளும் மாற்றப்படாமல், ஒரே தாதி உத்தியோகத்தர் சத்திர சிகிச்சைக்கூடத்தின் மருந்துகளுக்குப் பொறுப்பாக 2022 டிசம்பர் 18 ஆம் திகதி முதல் பணியமர்த்தப்பட்டுள்ளார். மாதிரி கணக்காய்வின் போது, 14 மருந்துகளுக்கான இருப்பு புத்தகங்கள் 02 முதல் 30 நாட்களுக்கு சமநிலைபடுத்தாத நிலை அவதானிக்கப்பட்டது.

(நந) ஹம்பாந்தோட்டை மாவட்ட பொது வைத்தியசாலையினால் எலும்பு மற்றும் எலும்பு சத்திர சிகிச்சையின் கீழ் மேற்கொள்ளப்படும் முழங்கால் மற்றும் இடுப்பு எலும்பு மாற்று சத்திர சிகிச்சைக்குத் தேவையான TKR, THR சாதன தொகுதிகள் பெறல், வழங்குதல் மற்றும் இருப்பு உள்ளிட்ட இருப்புப் பதிவேடு பராமரிக்கப்படவில்லை. அந்த சாதனங்கள் சில பாகங்கள் நோயாளியின் உடல் அளவீடுகளுடன் பொருந்தாத சந்தர்ப்பங்களில், விநியோக நிறுவனம் சத்திர சிகிச்சையின் போது பொருந்தாத பாகங்களை பரிமாற்றம் செய்துகொண்ட போதிலும் அத்தகைய பரிமாற்றத்திற்கு முறையான ஒப்புதல் பெறப்படவில்லை.

(பப) LW-1558 எனும் இலக்க நோயாளர் காவுகை வண்டி 2021 ஜூன் 22 ஆம் திகதி விபத்துள்ளாகி சுமார் ரூ.2,698,925 இழப்பு ஏற்பட்டு பழுதுபார்க்கப்படாமல் கேகாலை போதனா வைத்தியசாலையில் 3½ ஆண்டுகளுக்கு மேலாக பழுதுபார்க்கப்படாமல் செயலிழந்து காணப்படுவதுடன், விபத்து தொடர்பில் நிதி ஒழுங்குவிதிகளின்படி முறையான விசாரணைகள் மேற்கொள்ளாமை பழுதுபார்ப்பு செய்யாததற்கு முக்கிய காரணமாகும். நோயாளர் காவுகை வண்டி விபத்துக்குள்ளான வேளையில் எந்த காப்பீடும் இல்லாமல் ஓடிய காரணத்தால் இழப்பை ஈடுசெய்ய முடியாத நிலை காணப்பட்டதுடன், வேறு பொறுப்பான தரப்பினரை கண்டறிந்து நட்டத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

(மம) கேகாலை போதனா வைத்தியசாலையில் பொது மக்கள் புகார்கள் பதிவேடு பராமரிக்கப்பட்ட போதிலும், அதில் போதுமான தகவல்கள் சேர்க்கப்படவில்லை என்பதுடன், பெறப்பட்ட அனைத்து புகார்களும் அதில் உள்வாங்கப்படவில்லை. புகார்கள் தொடர்பாக முறையான மற்றும் போதுமான நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

(யய). எம்பிலிப்பிட்டிய மாவட்ட பொது வைத்தியசாலைச் சொந்தமான இல. LW-0896 என்ற நோயாளர் காவுகை வண்டி, பணியில் இருந்த நாட்களில் பணிப்பாளரின் தனிப்பட்ட இல்லத்திற்குச் செல்ல பயன்படுத்தப்பட்டிருப்பது ஓட்டுநர் பதிவுகளை ஆராந்த போது கண்டறியப்பட்டது.

(ரர). எம்பிலிப்பிட்டிய மாவட்ட பொது வைத்தியசாலையினால் மேற்கொள்ளப்படும் கட்டுமானத் தொழில்களுக்கு தனித்தனி முறையான தொழில் கோப்புகள் பராமரிக்கப்படவில்லை என்பதுடன், பராமரிக்கப்பட்ட பொது கோப்புகள் முறையாக இலக்கம் இடப்பட்டு பராமரிக்கப்படவில்லை. மேலும், பிரதான அலுவலகக் கட்டிடத்தின் கட்டுமானத் தொழிலுக்காக தயாரிக்கப்பட்ட ரூ. 643,807 விஷேட உப அட்டவணை கட்டணம் (SSR) அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தர் ஒருவரினால் அங்கீகரிக்கப்படவில்லை என்பதுடன், மேற்படி தொழில்துறையின் பணி விடய இலக்கம் 24 இன் கீழ் Floor Rendering Cement வேலைக்கு 121.6 சதுர மீட்டருக்கு ரூ. 188,496 செலுத்தியுள்ள போதிலும், முடிக்கப்பட்ட உண்மையான அளவு 45.1 சதுர மீட்டர் என்பதால் முடிக்கப்படாத 76.5 சதுர மீட்டருக்காக ரூ.118,565 கூடுதலாக செலுத்தப்பட்டிருப்பது அவதானிக்கப்பட்டது.

(லல). மின்சாரம் மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி அமைச்சினால் 2017 ஆம் ஆண்டில் செயல்படுத்தப்பட்ட சூரிய மின்சக்தி அமைப்பு திட்டத்தின் கீழ் அரச நிறுவனங்களுக்கு சூரிய மின்சக்தி திட்டத்தின் மூலம் எம்பிலிப்பிட்டிய மாவட்ட பொது வைத்தியசாலையில் நிறுவப்பட்டுள்ள சூரிய மின்சக்தி அமைப்பு தொடர்ந்து இயங்குகிறதா, உற்பத்தி செய்யப்படும் மின்சார அலகுகளின் எண்ணிக்கை எவ்வளவு மற்றும் அதன் மூலம் வைத்தியசாலையின் மின்சாரக் கட்டணம் குறைக்கப்பட்டதா என்பது குறித்து எந்த தகவலும் இல்லை. மேலும், வைத்தியசாலைக்கு கிடைக்கும் மின்சாரக் கட்டணங்களில் இது தொடர்பாக எந்த குறிப்புகளும் இல்லை என்பதுடன், சூரிய மின்சக்தி அமைப்பு மூலம் உற்பத்தி செய்யப்படும் மின்சார அலகுகளின் எண்ணிக்கை மற்றும் அதன் செயல்பாடுகள் குறித்த தகவல்களைப் பெற அறிமுகப்படுத்தப்பட்ட கணினி மென்பொருள் பற்றிய எந்த விழிப்புணர்வும் இருக்கவில்லை.

(வவ) எம்பிலிப்பிட்டிய மாவட்ட பொது வைத்தியசாலையில் சேவையை வெறிதாக்கிய மருத்துவ அலுவலர்கள், மூன்று தாதி உத்தியோகத்தர்கள் மற்றும் நான்கு சுகாதார பணி உதவியாளர்கள் ஆகியோரிடமிருந்து அறவிட வேண்டிய சம்பளம், கொடுப்பனவு மற்றும் ஊழியர் கடன் 2025 மார்ச் 31 நிலவரப்படி மொத்தம் ரூ. 367,061 அறவிட வேண்டியிருந்தது.

(ழழ) தேசிய நோய்த் தடுப்பு திட்டத்தை வலுப்படுத்தல் மற்றும் வினைத்திறனான தடுப்பூசி முகாமைத்துவ திட்டத்தை செயல்படுத்தும் நோக்கில் தொற்று நோயியல் பிரிவுக்கு 2024 ஆம் ஆண்டில் 10 குளிரூட்டப்பட்ட லாரிகள் மற்றும் 21 கெப் வாகனங்கள் ஐக்கிய நாடுகளின் சிறுவர் நிதியத்தால் வழங்கப்பட்டன. அது தொடர்பில் பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

i. 2024 பெப்ரவரி 20 ஆம் திகதி இந்த 10 லாரிகளும் துறைமுகத்திற்கு கொண்டு வரப்பட்ட போதிலும், அனுமதி செயல்முறைக்கு கிட்டத்தட்ட மூன்று மாதங்கள் எடுத்ததால், ரூ. 66,377,703 சுங்க மற்றும் அனுமதிக் கட்டணங்களுடன் மேலதிகமாக ரூ. 36,187,060 கிடங்கு கட்டணம் செலுத்த வேண்டியிருந்தது. அனுமதிக்குப் பிறகு அவை பதிவு செய்யும் வரை 2024 ஜூன் 28 ஆம் திகதியில் இருந்து 08 மாதங்கள் எந்த பயன்பாடும் இல்லாமல் மருத்துவ விநியோகப் பிரிவு வளாகத்தில் நிறுத்தப்பட்டிருந்தன.

ii. ரூ. 102,564,763 செலவில் வெளியேற்றப்பட்ட இந்த பத்து குளிர்சாதன லாரிகளின் பக்கவாட்டு வேலிகள் மற்றும் வாகனப் பதிவை அமைச்சு அதிகாரிகள் உடனடியாக செய்யத் தவறியதால் கிட்டத்தட்ட ஒரு வருடமாக துறைமுகத்திலும் மருத்துவ விநியோகப் பிரிவிலும் நிறுத்தி வைக்கப்பட்டதால் வாகனத்தின் இயந்திரம் பாதிக்கப்படும் என்பதும், இந்த வாகனங்களின் பெட்டரிகள் செயல் இழக்கும் என்பதும் இதனால் மேலதிக செலவுகள் ஏற்பட வழிவகுக்கும் என்பதும், மருத்துவ விநியோகப் பிரிவிற்கு

மருத்துவப் பொருட்களை எடுத்துவரும் கொள்கலன் லாரிகள் மற்றும் மருந்துகளை எடுக்கவரும் லாரிகள் என்பன மருத்துவ விநியோகப் பிரிவிற்குள் நுழைவதில் தடை ஏற்பட்டமை அவதானிக்கப்பட்டது.

iii. தடுப்பூசி போக்குவரத்து செயல்முறையை எளிதாக்குவதற்கும், துறையில் உள்ள நோய்த் தடுப்பு கிளினிக் நிலையங்களுக்கு தடுப்பூசிகளை கொண்டு செல்லும் செயல்முறைகளை வினைத்திறனாக்குவதற்கும் ஐக்கிய நாடுகளின் சிறுவர் நிதியத்தால் 21 டபள் கெப் வண்டிகள் வழங்கப்பட்டதுடன், ரூ.144,911,309 சுங்க மற்றும் அனுமதிக் கட்டணம் மற்றும் 51 நாட்கள் துறைமுகத்தில் தடுத்து வைக்கப்பட்டதன் காரணமாக ரூ. 5,849,501 கிடங்கு கட்டணமும், காப்பீட்டுக் கட்டணமாக ரூ.1,034,559 உம் செலுத்தப்பட்டுள்ளமை அவதானிக்கப்பட்டது. இந்த துறைமுகக் கட்டணங்கள் மற்றும் காப்பீட்டுக் கட்டணங்கள் மருத்துவ விநியோகப் பிரிவின் மருந்துகள் கொள்வனவிற்கான செலவு தலைப்பில் இருந்து (111-02-25-003-1204) செலுத்தப்பட்டுள்ளதுடன், சுகாதார அமைச்சினால் வழங்கப்பட்ட ஒதுக்கீடு தீர்ந்து போனதால் ரூ.7,519,753 அனுமதிக் கட்டணம் இன்னும் செலுத்தப்பட வேண்டியிருப்பது மேலும் அவதானிக்கப்பட்டது.

iv. இந்த 21 டபள் கெப் வண்டிகளில் 07 வண்டிகள் ஐக்கிய நாடுகளின் சிறுவர் நிதியத்திடம் கோரப்பட்ட போது முன்னுரிமைகளாக அடையாளம் காணப்பட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகங்கள் மற்றும் சுகாதார மருத்துவ அதிகாரிகள் அலுவலகங்களுக்கு புறம்பாக சுகாதார அமைச்சின் கீழ் இயற்கும் 07 பிற பிரிவுகளுக்கு வழங்கப்பட்டுள்ளமையானது, முதன்மை நோக்கத்திற்கு மாறாக செயற்பட்டமை மேலும் அவதானிக்கப்பட்டது.

(ளள) 2024 ஆம் ஆண்டினுள் மருத்துவ விநியோக நிலைமை மோசமடைந்தமை தொடர்பில் பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

i. அரச வைத்தியசாலைகளுக்கு வழங்கப்பட்ட மருத்துவ விநியோகங்களில் ரூ. 4,213,348,539 மதிப்புள்ள மருந்துகள் சத்திர சிகிச்சை மற்றும் இரசாயனப் பொருட்கள் 2024 ஆம் ஆண்டில் தரத் தோல்வி காரணமாக பாவணையில் இருந்து நீக்கப்பட்டுள்ளதுடன், மேலும், ரூ. 1,367,940,344 மதிப்புள்ள மருந்துகள் தரமின்மை காரணமாக தற்காலிகமாக பாவணையில் இருந்து நிறுத்தப்பட்டுள்ளமை அவதானிக்கப்பட்டது. தரமற்ற மருத்துவப் பொருட்களில் பலவற்றில் புலப்படும் துகள்கள் காணப்பட்டமை, பிரித்தானியா மருந்தக விபரக்குறிப்புகளுக்கு இணங்காமை (does not confirm to BP specification), அமெரிக்க மருந்தக விபரக்குறிப்புகளுக்கு இணங்காமை (doesn't not confirm to USP specification), பொதியிடல் வழிகாட்டல்களுக்கு இணங்காமை, நிற மாற்றம், உடைந்த மாத்திரைகள், கண்ணாடித் துண்டுகள், பாதகமான எதிர்வினைகள் போன்றவை கண்டறியப்பட்டமை போன்ற காரணங்களால் பயன்பாட்டில் இருந்து நீக்கப்பட்டன அல்லது பயன்பாட்டில் இருந்து நிறுத்தப்பட்டன.

ii. அவ்வாறு தர தோல்வியுற்ற பயன்பாட்டில் இருந்து நீக்கப்பட்ட மருத்துவப் பொருட்களில் பற்றீரியா தொற்று, தோல் நோய்கள், மன நோய்கள், நீரிழிவு நோய், கல்லீரல் நோய்கள் போன்றவற்றுக்காக பயன்படுத்தப்படும் மருந்துகளும், நுண்ணுயிர் எதிர்ப்பிகளாகப் பயன்படுத்தப்படும் மருந்துகளும் காணப்பட்டமை மேலும் அவதானிக்கப்பட்டது.

iii. தரத் தோல்வியுற்ற மருத்துவப் பொருட்களுக்காக 2023 ஆம் ஆண்டு சுற்றறிக்கை வெளியிடப்பட்ட தரத் தோல்வியுற்ற மருத்துவப் பொருட்களுக்காக, 2024 டிசம்பர் 31 நிலவரப்படி இலங்கை அரச மருந்தக உற்பத்திக் கூட்டுத்தாபனத்திடம் இருந்து அறவிடப்பட வேண்டிய ரூ. 127,065,713 இனை 2025 மார்ச் 31 வரை அறவிடப்படவில்லை என்பதுடன், அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனம் உற்பட பிற வெளித்தரப்பினரிடமிருந்து அறவிடப்பட வேண்டிய தொகை எவ்வளவு என்பது குறித்து தகவல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை.

(றற) கண் நோயாளிகளுக்காக செய்யப்பட்ட கண்புரை சத்திர சிகிச்சைக்குப் பிறகு பயன்படுத்தப்படும் Prednisolone Acetate Eye Drop மருந்து மருத்துவ விநியோகப் பிரிவின் இலக்கம் 2021/SPC/N/R/P/00043 எனும் ஆர்டர் மூலம் ஆர்டர் செய்யப்பட்டதுடன், 2023 ஆம் ஆண்டில் ரூ.3,631,093 மதிப்புள்ள 50,000 குப்பிகளைப் பெற்ற சுமார் 1 ½ மாதங்களுக்குப் பிறகு மருந்து தர தோல்வியுற்றது என்பது அவதானிக்கப்பட்டது. மருத்துவ விநியோகப் பிரிவினால் இந்த மருந்து வைத்தியசாலைகளுக்கு வழங்குவதற்கு முன் முறையான மருந்துகளின் தரத்தை சரிபார்க்க நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்பதும், கொழும்பு தேசிய கண் வைத்தியசாலை மற்றும் நுவரெலியா மாவட்ட வைத்தியசாலைகளில் நோயாளிகள் கண் ஒவ்வாமையால் பாதிக்கப்பட்டுள்ளனர் என்பது கணக்காய்வாளர் நாயகத்தின் இலக்கம் SPR/2024/03 மற்றும் 2024 மே 10 திகதியிட்ட விஷேட கணக்காய்வு அறிக்கையிலும் அவதானிக்கப்பட்டது. இது தொடர்பாக பின்வரும் விடயங்களும் அவதானிக்கப்பட்டன.

i. நுவரெலியா மாவட்ட பொது வைத்தியசாலையில் மேற்படி மருந்தை பயன்படுத்தியதால் பார்வையை இழந்த நோயாளிகளுக்கு வழங்க வேண்டிய இழப்பீட்டுத் தொகையைத் தீர்மானிக்க நியமிக்கப்பட்ட தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவின் அறிக்கையின்படி நுவரெலியா மாவட்ட பொது வைத்தியசாலையில் இந்த மருந்தினால் அவதானத்திற்கு உட்பட்ட 17 நோயாளிகளில் ஒரு கண்ணில் நிரந்தர பார்வை இழப்பு காரணமாக (Permanent visual loss) 12 நோயாளர்கள் சட்டபூர்வமாக பார்வை அற்றவர்களாகி விட்டனர் (Legally blind) எனவும், மேலும் மூன்று நோயாளிகள் 70 சதவீதத்திற்கும் அதிகமாக பார்வையை இழந்துள்ளனர் (70% permanent blindness, 75% permanent loss of vision) எனவும் கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது. மேலும், இந்த மருந்தைப் பயன்படுத்தியதால் பாதிக்கப்பட்ட பிற வைத்தியசாலைகளில் உள்ள நோயாளிகள் குறித்து விசாரணைகள் நடத்தப்பட்டதாக கணக்காய்வில் அவதானிக்கப்படவில்லை.

ii. நுவரெலியா மாவட்ட பொது வைத்தியசாலையில் கண் வாட்டில் நடந்த சம்பவம் குறித்து விசாரணை நடாத்துவதற்கு 2023 ஜூன் 13 ஆம் திகதி நியமிக்கப்பட்ட குழுவின் பரிந்துரைக்கு அமைய, இந்த கடுமையான தோல்வி நோயாளிகளுக்கு கடுமையான பாதிப்பை ஏற்படுத்தி உள்ளது எனவும், உற்பத்தியாளரை கருப்புப் பட்டியலில் சேர்க்க வேண்டும் எனவும், பாதிக்கப்பட்டவர்களுக்கு நிறுவனம் மூலம் இழப்பீடு பெறப்பட வேண்டும் எனவும், தரமற்ற மருந்துகளை வழங்கும் நிறுவனங்களிடமிருந்து இழப்பீடு பெற கொள்முதல் ஆவணங்களில் விதிகள் சேர்க்கப்பட வேண்டும் எனவும், தேசிய மருந்துகள் தர பாதுகாப்பு ஆய்வுகூடத்தின் மூலம் எழுமாறான ஆய்வுகளை அதிகரிக்க வேண்டும் எனவும் முன்மொழியப்பட்டுள்ளது. மேலும் 2024 பெப்ரவரி 12 ஆம் திகதி நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில், இந்த சம்பவத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்கு வழங்கப்பட வேண்டிய இழப்பீட்டுத் தொகையைத் தீர்மானிக்கவும், அவர்களுக்கு கருணை உதவித் தொகை அல்லது முழு இழப்பீட்டை தாமதமின்றி வழங்கவும், வைத்தியசாலைகளுக்கு மருந்துகளை வழங்க முன் அவற்றின் தரத்தை பரிசோதிப்பதற்கான ஒரு முறையை அறிமுகப்படுத்தவும், மருந்துகளை பரிசோதிக்க ஆய்வகங்களை அதிகபட்சமாக பயன்படுத்தவும், தரமற்ற மருந்துகளின்

விநியோகத்தர்களுக்கு எதிராக ஒப்பந்த தீர்மானங்களுக்கு மேலதிகமாக பொது சட்டத்தின் விதிகளின்படி சேதங்களுக்கு இழப்பீடு பெறுவதற்கு பொருத்தமான நடவடிக்கைகளை எடுக்கவும் சுகாதார செயலாளருக்கு உத்தரவிடப்பட்டது. எனினும் இந்த சம்பவம் நடந்து 2025 ஏப்ரல் 10 ஆம் திகதிக்கு கிட்டத்தட்ட 02 வருடங்கள் கடந்த போதிலும், சம்பந்தப்பட்ட நோயாளிகளுக்கு இழப்பீட்டை வழங்க தவறியுள்ளது என்பதும், மருந்தினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிறுவனத்திடமிருந்து இழப்பீடு பெற இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்பதும், தரமற்ற மருந்துகளை விநியோகிக்கும் நிறுவனங்களிடமிருந்து இழப்பீட்டைப் பெறுவதற்கான கொள்முதல் ஆவணங்களில் பொருத்தமான விதிகளை சேர்க்க அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனம் இதுவரை நடவடிக்கை எடுக்கவில்லை என்பதும், அத்தகைய விநியோகத்தர்களை கருப்புப் பட்டியலில் சேர்க்க எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்பதும் கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது.

(னன) மருத்துவ விநியோகப் பிரிவினால் 2023 ஒக்டோபர் 09 மற்றும்18 ஆம் திகதிகளில் வெளியிடப்பட்ட MSD/Q/P/2023/56 மற்றும் MSD/Q/Special/2023/4 சுற்றறிக்கைகள் ஊடாக Human Immunoglobulin மற்றும் Rituximab உட்பட மருந்துகள் தரத் தோல்வி காரணமாக பயன்பாட்டிலிருந்து நீக்கப்பட்டன. நாட்டில் பெரும் பரபரப்பை ஏற்படுத்திய இந்த 02 மருந்துகளின் கொள்முதல் செயல்முறை, விநியோகம் மற்றும் தரத் தோல்வி, மருந்தை உற்பத்தி செய்வதற்கான இரத்த பிளாஸ்மா கொள்முதல் விடயங்கள் உள்ளடங்கிய ''2022.'.2023 ஆம் ஆண்டுகளில் மருந்துகளின் தேவை, கொள்முதல், வழங்கல், விநியோகம் மற்றும் ஒழுங்குபடுத்தல்'' தொடர்பில் 2024 மே 10 ஆம் திகதி கணக்காய்வாளர் நாயகத்தின் விஷேட கணக்காய்வு அறிக்கை மூலமும் விடயங்கள் வெளிப்படுத்தப்பட்டது. எனினும், இந்த 02 மருந்துகளும் தரத்தோல்வியுற்று 2025 ஏப்ரல் 10 கணக்காய்வு தின நிலவரப்படி 1 ½ வருடங்கள் கடந்த போதிலும், 2023 ஜனவரி 13 ஆம் திகதி விநியோகத்தருக்கு வழங்கப்பட்ட இலக்கம் ICL/EOI/P1/174/2022 எனும் கொள்முதல் ஆணையின் பந்தி 09 இன்படி இதுவரை சம்பந்தப்பட்ட விநியோக நிறுவனத்திடமிருந்து ரூ.180,366,697 மதிப்புள்ள மருந்துகளைக் கொள்வனவு செய்வதற்கான விபரக்குறிப்பு மற்றும் 25 சதவீதமான நிர்வாகச் செலவுகளை அறவிடுவதற்கு சுகாதார அமைச்சினால் நடவடிக்கை எடுக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டது.

(ஜஜ) 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளில் சுகாதார அமைச்சின் தேசிய சுகாதார மேம்பாட்டு நிதியத்திற்கு இலங்கை கிரிகெட் நிறுவனத்திலிருந்து 2,500,000 அ.டொலரும் மற்றும் வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியகத்திலிருந்து 100,000,000 ரூபாவும் நன்கொடையாக கிடைத்துள்ளதுடன், மருந்துகள் கொள்வனவிற்காக அந்த நிதி அரச மருந்தக கூட்டுத்தாபனத்திற்கு வழங்கியது. அது தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

i. நாட்டில் ஏற்பட்ட நிதி மற்றும் பொருளாதார நெருக்கடியை எதிர்கொண்டு, சுகாதாரத் துறையின் மேம்பாட்டுக்காக 02 மில்லியன் அ.டொலர் ரிஜ்வே சீமாட்டி சிறுவர் வைத்தியசாலை மற்றும் காசல் வீதி மகளிர் வைத்தியசாலை என்பவற்றுக்கு நன்கொடையாக வழங்க இலங்கை கிரிக்கெட் நிறுவனத்தின் நிர்வாகம் இணங்கிய போதிலும், 2022 ஜுலை 08 ஆம் திகதி இலங்கை கிரிக்கெட் நிறுவனத்தினால் 2,000,000 அ.டொலரை சுகாதார அமைச்சின் மேம்பாட்டு நிதிக்கு வழங்கி உள்ளதுடன், சுகாதார மேம்பாட்டு நிதியத்தினால் அதில் 1,999,998 அ.டொலரை Meropenem injection 1g மற்றும் 500mg மருந்துகளை கொள்வனவு செய்வதற்காக 2022 செப்டம்பர் 16 ஆம் திகதி அரச மருந்தக கூட்டுத்தாபனத்திற்கு வழங்கியது. இந்த 02 மில்லியன் டொலர் சுகாதார துறையின் முன்னேற்றத்திற்காக ரிஜ்வே சீமாட்டி சிறுவர் வைத்தியசாலை மற்றும் காசல் வீதி மகளிர் வைத்தியசாலைகளுக்கு நன்கொடையாக வழங்குவதாக கூறப்பட்ட போதிலும் பின்னர் அந்த நிதி மருந்துகளை கொள்வனவு செய்ய பயன்படுத்தப்பட்ட காரணத்தை கணக்காய்விற்கு சமர்ப்பிக்கவில்லை.

ii. மேற்படி 02 மருந்துகளுக்குமாக 2022 செப்டம்பர் 16 ஆம் திகதி அரச மருந்தக கூட்டுத்தாபனத்திற்கு நிதி கிடைக்கப்பெற்ற நிலையில், அரச மருந்தக கூட்டுத்தாபனம் அந்த இரு மருந்துகளின் விலைப்பட்டியல், சேவைக்கட்டணங்கள் மற்றும் பிற செலவுகள் உட்பட மொத்தம் ரூ. 817,114,333 பற்றுச் சீட்டு தீர்ப்பதற்காக 2022 நவம்பர் 28 ஆம் திகதி மருத்துவ விநியோகப் பிரிவிற்கு அனுப்பியுள்ளதுடன், அதனை மருத்துவ விநியோகப் பிரிவு அந்த தொகையை அரச மருந்தக கூட்டுத்தாபனத்திற்கு செலுத்தியுள்ளது.

iii. இலங்கை கிரிகெட் நிறுவனத்தினால் சுகாதார மேம்பாட்டு நிதியத்திற்கு வழங்கப்பட்ட 2.5 மில்லியன் அ.டொலரில் மீதமுள்ள 500,000 அ.டொலர்களைப் பயன்படுத்தி புற்று நோய்க்குப் பயன்படுத்தப்படும் 19 தேர்ந்தெடுக்கப்பட்ட மருந்துகளை கொள்முதல் செய்து வழங்குவதற்காக 2023 பெப்ரவரி முதல் ஆகஸ்ட் வரையான காலத்தினுள் 500,000 அ.டொலர்களை தேசிய சுகாதார மேம்பாட்டு நிதியத்தினால் அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனத்திற்கு வழங்கியிருந்த போதிலும், அதில் 17 மருந்துகளை கொள்முதல் மற்றும் விநியோகத்திற்காக அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனத்தினால் மீண்டும் மருத்துவ விநியோகப் பிரிவிற்கு உண்மைக்குப் புறம்பாக ரூ. 154,573,714 இற்கான விலைப்பட்டியல் மற்றும் விநியோகத்திற்கான 10 சதவீத விநியோகக் கட்டணமான ரூ. 11,124,098 உட்பட ரூ. 165,697,812 மதிப்புள்ள பற்றுக் குறிப்புகள் மற்றும் பில் தீர்வு ஆவணங்களை சமர்ப்பித்துள்ளது. அதன்படி, 2023 ஏப்ரல் 20 ஆம் திகதி முதல் 2024 2024 ஆகஸ்ட் 06 ஆம் திகதி வரை 09 பில் தீர்வு ஆவணப் பட்டியல்கள் மூலம் மேற்படி தொகை கோரப்பட்டிருப்பது அவதானிக்கப்பட்டது.

iv. அரச மருந்தகக் கூட்டுத்தாபனத்தின் நிர்வாக பணிப்பாளரினால் அப்போதைய மருத்துவ விநியோகப் பிரிவின் பிரதிப் பணிப்பாளர் நாயகத்திற்கு மற்றும் மருத்துவ விநியோகப் பணிப்பாளருக்கு பிரதியிட்டு சுகாதார செயலாளருக்கு அனுப்பப்பட்ட 2023 ஒக்டோபர் 30 ஆம் திகதிய கடிதத்தின்படி உரிய நிதி இலங்கை கிரிகெட் நிறுவனத்தினால் வழங்கப்படுகிறது என தெரிவித்திருந்த போதிலும், அதில் கவனம் செலுத்தாமல், கணக்காய்வு நேரத்தில் 05 தீர்வு ஆவணங்களுக்குரிய 10 வகை மருந்துகளுக்கு ரூ. 117,723,972 இற்கான பில்களை 2023 ஆகஸ்ட் 08 மற்றும் நவம்பர் 13 ஆகிய இரு தினங்களில் மருத்துவ விநியோகப்பிரிவினால் அரச மருந்தக கூட்டுத்தானத்திற்கு செலுத்தி உள்ளது.

v. மேற்படி 19 மருந்துகளில் 02 மருந்துகளை கொள்வனவு செய்து வழங்குவதற்காக தேசிய சுகாதார மேம்பாட்டு நிதியத்தினால் 12,150 டொலர் தொகையை 2023 பெப்ரவரி 03 ஆம் திகதி அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனத்திற்கு வழங்கியிருந்தாலும் கணக்காய்வுத் தினமான 2025 பெப்ரவரி 02 நிலவரப்படி, கிட்டத்தட்ட 02 ஆண்டுகள் கடந்த பின்னர் அந்த மருந்துத் தொகை மருத்துவ விநியோகப் பிரிவின் களஞ்சியத்திற்கு கிடைக்கவில்லை என்பது கணினி தரவுகளில் இருந்து கண்டறியப்பட்டது.

vi. மருத்துவ விநியோகப் பிரிவிற்கு கிடைக்கப்பெற்ற மீதமுள்ள 06 மருந்துகளுக்கு ரூ. 45,055,479 செலுத்த வேண்டிய தொகையை செலுத்துவதற்கும் கணக்காய்வுத் தின நிலவரப்படி வவுச்சர்கள் தயாரிக்கப்பட்டிருந்ததுடன், இந்த கொடுப்பனவுகளுக்கு 2024 ஆகஸ்ட் 30 ஆம் திகதி மற்றும் செப்டெம்பர் 10 ஆம் திகதிகளில் விநியோகப் பிரிவின் உத்தியோகத்தர்களினால் கொடுப்பனவு வவுச்சர்களைத் தயாரித்து சரிபார்க்கப்பட்டு, பிரதான கணக்காளர் (விநியோகம்) மற்றும் பணிப்பாளர் (மருத்துவ விநியோகப் பிரிவு) இனால் அந்த கொடுப்பனவுகள் பரிந்துரை செய்யப்பட்டுள்ளன. அந்த பரிந்துரையின் அடிப்படையில் மருத்துவ விநியோக பிரதிப் பணிப்பாளர் நாயகத்தினால் கொடுப்பனவு அங்கீகரிக்கப்பட்டுள்ளது. அதன்படி, இந்த கொடுப்பனவுகள் தொடர்பில் சம்பந்தப்பட்ட உத்தியோகத்தர்கள் புரிதலுடன் செயற்படவில்லை என்பது அவதானிக்கப்பட்டது.

vii. வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தினால் 2023 ஜனவரி 23 ஆம் திகதி தேசிய சுகாதார மேம்பாட்டு நிதியத்திற்கு வழங்கப்பட்ட 100 மில்லியன் ரூபா நிதி 2023 ஆகஸ்ட் 17 அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனத்திற்கு வழங்கப்பட்டது. இந்த மானியத்தைப் பயன்படுத்தி புற்று நோயாளிகளுக்கு 42 அத்தியவசிய மருந்துப் பொருட்களை விரைவில் வழங்குமாறு, 2023 பெப்ரவரி 06 ஆம் திகதி மருத்துவ விநியோகப் பிரிவின் பிரதிப் பணிப்பாளர் நாயகத்தினால் அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனத்தின் தலைவருக்கு அறிவித்துள்ளதுடன், மேற்படி உத்தரவுகளில் இருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட 15 வகையான மருந்துகளுக்கு 2023 பெப்ரவரி 15 ஆம் திகதி மருந்துகள் உற்பத்தி, விநியோகம் மற்றும் ஒழுங்குறுத்துகை பிரிவினால் அவசர கொள்முதலின் கீழ் விலைமனுக்கள் கோரப்பட்டன. விலைமனு கோரல் 2023 பெப்ரவரி 15 ஆம் திகதி பி.ப 13.15 ஆரம்பிக்கப்பட்டதுடன் விலைமனு திறத்தல் 2023 பெப்ரவரி 17 ஆம் திகதி மு.ப 10.00 மணிக்கு மேற்கொள்ளப்பட்டது. விலைகளை சமர்ப்பிக்க 02 நாட்களுக்கும் குறைவான கால அவகாசமே வழங்கப்பட்டதால் அதிகமான விநியோகத்தர்களுக்கு தங்கள் விலைமனுக்களை சமரப்பிக்க முடியவில்லை என்பது கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது.

viii. மேற்படி 02 நாட்களுக்கும் குறைவான காலத்தினுள் விலைமனுக்கள் கோரப்பட்ட போதிலும், கொள்ளல் தீர்மானம் பெறுவதற்கு கிட்டத்தட்ட ஒரு மாத காலமும், தேர்ந்தெடுக்கப்பட்ட விநியோகத்தருக்கு கொள்முதல் ஆடர்களை (இன்டென்ட்கள்) வழங்க 30 - 41 நாட்களுக்கு இடைப்பட்ட காலமும், இன்டென்ட்கள் வழங்கப்பட்ட தினத்தில் இருந்து மருந்து இருப்புகளைப் பெறுவதற்கு 80 நாட்கள் முதல் 191 நாட்கள் வரை எடுத்தமை "அவசர தேவை" என்ற சொல் விநியோகத்தர்களுக்கு விலைமனுக்களை சமர்ப்பிப்பதற்கு மட்டுமே பொருந்தியது என்பது கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது.

ix. மருந்துகள் உற்பத்தி, விநியோகம் மற்றும் ஒழுங்குறுத்துகை பிரிவின் மேலதிக செயலாளரினால் மேற்படி 15 மருந்துகளை கொள்வனவு செய்வதற்கான விலைகளை மதிப்பீடு செய்ய 2023 பெப்ரவரி 22 ஆம் திகதி 07 உறுப்பினர்களைக் கொண்ட ஒரு விலைக்குழு மட்டுமே நியமிக்கப்பட்டது என்பதுடன், புற்றுநோய் மருந்துகள் போன்ற குறிப்பிட்ட மருந்துகளை மதிப்பிடுவதற்கு எந்த தொழில்நுட்ப அறிவுள்ள எந்தவொரு விஷேட மருத்துவர் அல்லது நிபுணர் நியமிக்கப்படவில்லை என்பதுடன், சுகாதாரத்துறை அவசர கொள்முதல் வழிகாட்டல்களின் 2.1 வது பந்தியின்படி தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுக்கள் நியமிக்கப்படாத சந்தர்ப்பங்களில், அவசர கொள்முதல் குழுவினால் தொழில்நுட்ப நிபுணர்களிடமிருந்து ஆலோசனைகளை பெற வேண்டும் என்ற போதிலும், அத்தகைய நடவடிக்கை எடுக்கப்பட்டதா என்பதை கணக்காய்வில் உறுதிப்படுத்த முடியவில்லை.

x. மேலும் மேற்படி வழிகாட்டல்களின் 2.1 வது பந்தியின்படி சுகாதாரத் துறையினால் அவசர கொள்வனவு செயல்முறைகளின் கீழ் கொள்வனவு செய்யப்பட்ட பொருட்களின் கொள்வனவுக்கான அத்தியவசியத்தை நியாயப்படுத்தி கொள்வனவு செய்யப்பட்ட பொருட்கள், விநியோகத்தர் மற்றும் பெறுமதி உள்ளிட்ட மாதாந்த அறிக்கைகள் சுகாதார அமைச்சரினால் அமைச்சரவையின் ஒப்புதலுக்காக சமர்ப்பிக்கப்பட வேண்டும் என்பதுடன், கொள்ளல் பிரிவின் உள்ளக கணக்காய்வாளரினால் கொள்முதல் செயல்முறைகள் கண்காணிக்கப்பட்டு கொள்ளல் முறையின் முடிவில் நியாயமான மற்றும் பயனுள்ள செயல்முறையை உறுதி செய்வதற்கான அறிக்கை சமர்ப்பிக்கப்பட வேண்டும். எனினும், மேற்படி 15 வகையான மருந்துகளின் கொள்வனவு தொடர்பாக எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

xi. 2015 ஆம் ஆண்டின் 05 ஆம் இலக்க தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகார சபை சட்டத்தின் 58, 82 மற்றும் 101 பந்திகளின்படி அனைத்து மருந்துகளின் இறக்குமதி, உற்பத்தி, விற்பனை மற்றும் விநியோகத்திற்காக தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகார சபையில் பதிவு செய்வது கட்டாயம் என்பதுடன், மருந்துகளின் தரம், பாதுகாப்பு மற்றும் செயற்திறனை அதிகார சபை உறுதி செய்ய வேண்டும். இருப்பினும், இதைப் பொருட்படுத்தாமல், இந்த அதிகார சபையில் பதிவு செய்யப்படாத 11 மருந்துகளுக்கான பதிவில் இருந்து விலக்கு சான்றிதழ்கள் (EOR) அடிப்படையில் விநியோகத்தர்கள் தேரந்தெடுக்கப்பட்டனர். மேலும் இந்த மருந்துகளில் 09 மருந்துகள் பதிவில் இருந்து விலக்கு அளிப்பதற்கான முறையான குழுவின் ஒப்புதல் இல்லாமல் ஒரு விஷேட நடைமுறையின் (Special pathway) கீழ் வழங்கப்பட்டுள்ளன. எனவே, பதிவிலிருந்து விலக்கு அளிப்பதற்கான ஒப்புதலை வழங்கும் போது குழுவினால் கவனத்தில் கொள்ளப்படும் விலை நியாயம், மருந்துகள் குறித்து தொடர்புடைய கல்லூரியின் கருத்து, மருந்தின் தேவை, தற்போதுள்ள ஒத்த பதிவு செய்யப்பட்ட மருந்துகளின் எண்ணிக்கை, மருந்தின் பதிவு நிலை, விநியோகத்தர் மற்றும் உற்பத்தியாளர்களின் பதிவு நிலை, தரம் குறித்து முந்தைய சிக்கல்கள் காணப்பட்டமை போன்ற காரணிகள் மீது கவனம் செலுத்தாமல் மற்றும் மருந்துகளின் தரம், பாதுகாப்பு செயற்திறனை உறுதிப்படுத்தும் ஆவணங்களை மதிப்பீடு செய்யாமல் கொள்முதல் ஆணை, இன்டென்ட்கள் மற்றும் விலைப்பட்டியல் போன்ற ஆடர்களை உறுதிப்படுத்தும் ஆவணங்களை மட்டுமே ஆய்வு செய்யப்பட்டு உரிய அனுமதி வழங்கியுள்ளது.

xii. மேற்படி 15 மருந்துகள், 2024 ஜூலை முதல் ஒக்டோபர் வரையான காலத்தில் மருத்துவ விநியோகப் பிரிவிற்கு கிடைத்துள்ளதுடன், அவற்றின் விலைப்பட்டியல் மதிப்பு ரூ. 132,897,018 உம், 4 வீத சேவைக்கட்டணம் ரூ. 5,315,881 உம் உள்ளடங்களாக மொத்த மதிப்பு ரூ. 138,212,899 ஆகும். வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தினால் பெறப்பட்ட 100 மில்லியன் ரூபா சுகாதார மேம்பாட்டு நிதியத்தால் 2023 ஆகஸ்ட் 17 ஆம் திகதி அரச மருந்தக கூட்டுத்தாபனத்திற்கு வழங்கப்பட்ட போதிலும், கூட்டுத்தாபனத்தினால் மருத்துவ விநியோகப் பிரிவிற்கு அந்த மதிப்பைக் கழிக்காமல் மொத்த பெறுமதி ரூ. 138,212,899 இனையும் செலுத்துவதற்கு பற்றுச்சீட்டுகளை சமர்ப்பித்துள்ளதுடன், மருத்துவ விநியோகப் பிரிவினாலும் ஏற்கனவே 100 மில்லியன் ரூபா செலுத்தப்பட்டது என்பதை கருத்தில் கொள்ளாமல் மொத்த மதிப்புக்கான கட்டண வவுச்சர்களையும் தயாரித்தது என்பதுடன் கணக்காய்வின் பின்னர் அரச மருந்தக கூட்டுத்தாபனத்தின் முகாமையாளர் (விநியோகத்தற்குப் பிந்தைய செயல்பாடுகள்) இன் 2024 ஒக்டோபர் 11 ஆம் திகதிய கடிதத்தின் மூலம் 100 மில்லியன் ரூபாவிற்கான தொகையை மொத்த மதிப்பில் இருந்து கழிக்குமாறு மருத்துவ விநியோகப் பிரிவின் கணக்காளருக்கு அறிவித்துள்ளது. அதன்படி, அரச மருந்தக கூட்டுத்தாபனம் மற்றும் மருத்துவ விநியோகப் பிரிவின் அதிகாரிகள் வேண்டுமென்றே அல்லது அலட்சியமான நடவடிக்கைகள் காரணமாக, 100 மில்லியன் ரூபா கூடுதலாக செலுத்த வாய்ப்பு இருந்ததாகவும், இதன் விளைவாக நிதி முறைக்கேடு ஏற்படும் அபாயம் இருந்ததாகவும் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

xiii. புரிதல் இல்லாமல் அல்லது கவனக் குறைவாக செயல்படுதல், அரச மருந்தக கூட்டுத்தாபனத்தின் அதிகாரிகள் வேண்டுமென்றே அல்லது அலட்சியமான நடவடிக்கைகள் காரணமாக ரூ. 117.72 மில்லியன் மற்றும் ரூ. 817.11 மில்லியன் என மொத்தம் ரூ. 934.83 மில்லியன் கூடுதலாக செலுத்தப்பட்டுள்ளமை கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது. அதன்படி, ஒரு வருடத்திற்கும் மேலாக அரசாங்க நிதி ரூ. 934.83 மில்லியன் மற்றும் கிட்டத்தட்ட 02 வருட காலம் 12,150 அ.டொ அரச மருந்தக கூட்டுத்தாபனத்தினாலும் முறையற்ற முறையில் தடுத்து வைக்கப்பட்டது எனவும், 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளுக்காக இலங்கை மத்திய வங்கியின் விஷேட டொலர்

கணக்கு மூலம் அரச மருந்தக கூட்டுத்தாபனத்திற்கு வழங்கப்பட்ட 49,680 அ.டொ தொடர்பிலும் பற்றுச் சீட்டுகள் அதே முறையில் தயாரிக்கப்பட்டு கொடுப்பனவிற்காக மருத்துவ விநியோகப் பிரிவிற்கு அனுப்பப்பட்டமை கணக்காய்வில் மேலும் அவதானிக்கப்பட்டது. அதன்படி, பொருளாதார நெருக்கடி நிலவிய 2022/ 2023 காலத்தில் பிற அத்தியவசிய மருத்துவப் பொருட்களை கொள்வனவு செய்வதற்குப் பயன்படுத்தக்கூடிய ரூ. 934.83 மில்லியன் மற்றும் 61,830 அ.டொ அரச நிதியம் கணக்காய்வில் வெளிப்படுத்தப்படும் வரை 02 ஆண்டுகளுக்கும் மேலாக அதிகாரிகளின் அலட்சியத்தால் தேவையில்லாமல் அரச மருந்தக கூட்டுத்தாபனத்தால் நிறுத்தி வைக்க நடவடிக்கை எடுத்தமை சுகாதாரத் துறைக்கு ஏற்படுத்தப்பட்ட தாக்கம் அளவிட முடியாது என்பது கணக்காய்வில் வெளிப்படுத்தப்பட்டது.

(ஸஸ) 2025 ஆம் ஆண்டளவில் ரத்து செய்யப்பட்ட மருந்துகள் உற்பத்தி, விநியோகம் மற்றும் ஒழுங்குறுத்துகை அமைச்சு பராமரிக்கப்பட்ட HQ Colombo கட்டிடத்தின் முதலாம் மாடியின் Rare wing பகுதி மற்றும் ஐந்தாவது மாடி என்பன குத்தகை அடிப்படையில் பெறப்படும் போது பாதுகாப்பு வைப்புத் தொகை மற்றும் மின்சார வைப்புத் தொகையாக லங்கா ரியாலிட்டி டெவலொப்மென்டஸ் (பிரைவேட்) லிமிடட் நிறுவனத்திற்கு செலுத்தப்பட்ட ரூ. 7,570,493 இனை ஒப்பந்தம் காலாவதியாக முன் மாதாந்த வாடகைக்கு ஈடுசெய்யப்படவில்லை என்பதுடன், 2024 டிசம்பர் 31 ஆம் திகதி ஒப்பந்த காலம் நிறைவடைந்து 14 மாதங்கள் கடந்துள்ள போதிலும், அந்த வைப்புத் தொகை அறவிடப்படவில்லை. இது தொடர்பில் சட்ட நடவடிக்கை எடுக்க சட்டமா அதிபர் திணைக்களத்திற்கு அறிவித்துள்ள போதிலும், இன்றுவரை எந்த சட்ட நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்பதுடன், இந்த வைப்புத் தொகையை வசூலிக்க நடவடிக்கை எடுக்காதது குறித்து விசாரணை நடத்தப்பட்டு, சம்பந்தப்பட்ட தரப்பினரிடம் இருந்து அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பது அவதானிக்கப்பட்டது.

(ஷஷ) மருத்துவ விநியோகப் பிரிவின் 04 பிரிவுகளின் உத்தியோகத்தர்களில் ஒரு உத்தியோகத்தர் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டதால், இன்வன்ரி பொருட்களுக்குப் பொறுப்பான உத்தியோகத்தர் பொருட்களை முறையாக ஒப்படைக்காமல் வெளிநாடு சென்றதாலும், களஞ்சியத்திற்குப் பொறுப்பான வேறு இரண்டு உத்தியோகத்தர்கள் பதவியை கைவிட்டதாலும் அந்த பிரிவுகளின் இன்வன்ரியில் உள்ள பொருட்கள் 2023 ஆம் ஆண்டுக்கான பொருட் கணக்கெடுப்பு செய்யப்படவில்லை என்பதுடன், கணக்கெடுப்பின் போது வெளிப்படுத்தப்படும் பற்றாக்குறைகளை மீட்டெடுக்க அல்லது அதிகப்படியானவற்றை ஆவணப்படுத்தவோ 2025 ஜனவரி 17 நிலவரப்படி எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

(ஹஹ) சுகாதார அமைச்சின் செயலாளரின் இலக்கம் SM/PSRP/14/2022/SWASTHA-Vel.II மற்றும் 2023 டிசம்பர் 04 ஆம் திகதிய கடிதத்தின்படி மருந்துகளின் வருடாந்த இருப்பு கணக்கெடுப்பு சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தினால் அங்கீகரிக்கப்பட்ட கணக்கெடுப்பு சபையினால் ஆண்டுதோறும் டிசம்பர் 31 இற்குள் மேற்கொள்ளப்பட வேண்டும் எனினும், 2023 மற்றும் 2024 ஆம் ஆண்டுகளுக்கான மருந்துகள் இருப்பு கணக்கெடுப்பு கணக்காய்வுத் தினமான 2025 மார்ச் 10 நிலவரப்படி எந்த வைத்தியசாலையிலும் நடத்தப்படவில்லை.

(கூஷகூஷ) பொலன்னறுவை போதனா வைத்தியசாலையின் கதிரியக்க பிரிவில் A அறையில் நிறுவப்பட்ட சுமார் 7 மில்லியன் ரூபா மதிப்புள்ள Table Detector, பகுதியான 2021 நவம்பர் 20 ஆம் திகதி செயல் இழந்தமையினால் ஏற்பட்ட இழப்பு தொடர்பில் நிதி ஒழுங்குவிதிகள் 104 இன்படி முறையான விசாரணை மேற்கொள்ளப்படவில்லை.

(ஸ்ரீஸ்ரீ) உலக வங்கி கடன் உதவியின் கீழ் செயல்படுத்தப்பட்ட கோவிட் - 19 அவசரகால பதில் மற்றும் சுகாதார அமைப்புகளை தயார்படுத்தல் திட்டத்தின் நிதி ஒதுக்கீடுகளுடன் UNOPS நிறுவனத்தின் ஊடாக கொள்வனவு செய்யப்பட்ட Blood Glucose Strips சத்திர சிகிச்சைப் பொருள் மற்றும் Atracurium Besylate மற்றும் Nitroglycerine Sublingual Tablets 0.5 mg (GTN) ஆகிய 02 மருத்துவப் பொருட்கள் வைத்தியசாலைகளுக்கு விநியோகிக்கப்படாமல் மருத்துவ விநியோகப் பிரிவின் களஞ்சியத்தில் காலாவதியாகி இருந்ததுடன், இது தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வில் பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

i. நோயாளிகளின் குருதியில் சீனி மட்டத்தை அளவிடப் பயன்படுத்தப்படும் Blood Glucose Strips – Adults பொருளுக்கு ஆடர் செய்யப்பட்ட அ.டொ 600,000 மதிப்புள்ள (சுமார் 219 மில்லியன் ரூபா) 5,000,000 யுனிட்டுகளில் 50 சதவீதமான அதாவது ரூ. 109,500,000 மதிப்புள்ள 2,500,000 யுனிட்டுகள் 2023 மார்ச் 20 ஆம் திகதி மருத்துவ விநியோகப் பிரிவின் களஞ்சிய இலக்கம் 54 இற்கு பெறப்பட்டன. சம்பந்தப்பட்ட ஆவணங்கள் கிடைக்காததை காரணம் காட்டி, பொருட்களின் ரசீதைப் பதிவு செய்யாமல் மேற்படி இருப்பு கிட்டத்தட்ட 01 வருடம் 09 மாதங்கள் மேற்படி களஞ்சியத்தில் இருந்ததுடன், 2025 ஜனவரி 31 நிலவரப்படி மருத்துவ விநியோகப் பிரிவின் களஞ்சியத்தில் அந்த இருப்பு வைத்தியசாலைகளுக்கு விநியோகிக்கப்படாமல் கலாவதியாகி விட்டமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

ii. இந்த காலகட்டத்தில் UNOPS நிறுவனத்தின் ஊடாக வழங்கப்பட்ட இருப்பு தொடர்பான ஆவணங்களில் உள்ள குறைபாடுகள் காரணமாக, மருந்துகளின் இருப்புகளை தற்காலிகமாக களஞ்சியப்படுத்தும் தவறான முறையை மருத்துவ விநியோகப் பிரிவு பின்பற்றி உள்ளதாகவும், சிரேஷ்ட உதவிப் பணிப்பாளரின் அறிவுறுத்தலின்படி இந்த இருப்புடன் தொடர்புடைய விலைப்பட்டியல்கள், பொதி பட்டியல்கள் போன்றவை இல்லாமல் களஞ்சிய பொறுப்பாளரினால் மேற்படி இருப்பு ஏற்றுக்கொண்டதும் அவதானிக்கப்பட்டது. 02 மாதங்களுக்குப் பிறகு, அதாவது 2023 மே 31 அன்று இருப்பு கட்டுப்பாட்டுப் பிரிவால் அந்த ஆவணங்கள் பெறப்பட்ட போதிலும், UNOPS நிறுவனத்தின் மூலம் வழங்கப்படும் மருத்துவப் பொருட்களை ஒருங்கிணைக்க மருத்துவ விநியோகப் பிரிவில் திட்ட ஒருங்கிணைப்பாளராக ஒரு மருந்தாளர் நியமிக்கப்பட்டுள்ள போதிலும், உத்தியோகத்தரின் அலட்சியம் காரணமாக காலாவதியானது என்பது கணக்காய்வில் கண்டறியப்பட்டது.

iii. 2023 ஆம் ஆண்டுக்காக மருத்துவ விநியோகப் பிரிவு களஞ்சியங்களில் நடத்தப்பட்ட வருடாந்த இருப்பு கணக்கெடுப்பில் இவ்வாறு GRN அல்லாத இருப்பு இருப்பதை இருப்பு கணக்கெடுப்பு ஆய்வு சபைக்கு வெளிப்படுத்தியிருக்க வேண்டும் எனினும், அவ்வாறு வெளிப்படுத்தல்கள் செய்யப்படாததால், தொடர்புடைய ஆய்வு சபை அதன் ஆய்வு நடவடிக்கைகள் சரியாகவும் பொறுப்புடனும் நடத்தவில்லை என்பது அவதானிக்கப்பட்டது. கணக்கெடுப்பு நடவடிக்கைகள் சரியாக நடத்தப்பட்டிருந்தால், இந்த பொருட்கள் காலாவதியாவதை தடுத்திருக்க முடியும் என்பதும் அவதானிக்கப்பட்டது.

iv. Blood Glucose Strips பொருளுடன் தொடர்பாக 2021 மற்றும் 2022 ஆண்டுகளுக்கான அரச மருந்தக கூட்டுத்தாபனத்திற்கு சமர்ப்பிக்கப்பட்ட பிரதான ஆடரில் உள்ள சிக்கல்கள் காரணமாக அந்த நேரத்தில் வைத்தியசாலைகளில் இந்த பொருளுக்கான தட்டுப்பாடு இருந்ததுடன், 2022 ஆம் ஆண்டில் வைத்தியசாலையினால் ரூ. 59,607,902 இற்கு பிராந்திய கொள்முதல் செய்துள்ளதுடன், உத்தியோகத்தர்களின் அலட்சியம் காரணமாக மருத்துவ விநியோகப் பிரிவில் 2.5 மில்லியன் யுனிட் இருப்பு இருந்த போதிலும் அந்த இருப்பை வைத்தியசாலைகளுக்கு வழங்காத காரணத்தால் 2023 ஆம் ஆண்டில் வைத்தியசாலையினால் ரூ. 52,097,126 இற்கு பிராந்திய கொள்முதல்

செய்யப்பட்டது என்பது அவதானிக்கப்பட்டது. அரச மருந்தக கூட்டுத்தாபனத்தின் ஊடாக முன்னர் ஒரு யுனிட் ரூ.11 இற்கு கொள்வனவு செய்யப்பட்ட இந்த பொருள் UNOPS நிறுவனத்தின் ஊடாக ஒரு யுனிட் ரூ. 43 இற்கும், இருப்பு பற்றாக்குறை காரணமாக வைத்தியசாலைகளினால் ஒரு யுனிட் ரூ. 83 முதல் ரூ. 112 வரை அதிக விலையில் கொள்வனவு செய்யப்பட்டுள்ளமை அவதானிக்கப்பட்டது.

v. விபரக்குறிப்புகளின்படி, இந்தப் பொருளுடன் இலவசமாக வழங்கப்பட வேண்டிய Blood glucose meter 2000 மற்றும் Lancet pin 4,980,000 உம் அ.டொ 87,680 செலவு செய்து திட்டத்தின் ஊடாக கொள்வனவு செய்துள்ளதுடன், Blood Glucose Strips யுனிட் 2.5 மில்லியன் காலாவதியானதால் Lancet pin யுனிட் 2.5 மில்லியன் பயன்படுத்த முடியாத வகையில் பயனற்றதாகவும் மாறும் அபாயம் உள்ளது என்பது கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது.

vi. காலாவதியான Blood Glucose Strips 2.5 மில்லியன் யுனிட்களுக்கான செலவு, அனுமதிக் கட்டணம் மற்றும் பிராந்திய கொள்வனவு செய்ததன் மூலம் அரசாங்கத்திற்கு ரூ. 198,057,949 இழப்பை ஏற்படுத்திய அலட்சியமாக செயற்பட்ட அதிகாரிகள் மீது தாபன விதிக்கோவையின் விதிகளின்படி எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்பது அவதானிக்கப்பட்டது.

vii. இது தவிர, உலக வங்கி கடன் திட்டத்தின் கீழ் UNOPS நிறுவனத்தின் ஊடாக ஆடர் செய்யப்பட்ட 129,000 அ.டொ மதிப்புள்ள (சுமார் 38,055,000 ரூபா) Atracurium Besylate 25mg/2.5ml USP Injection மருந்து 250,000 யுனிட்கள் 2023 ஜூலை 06 ஆம் திகதி மருத்துவ விநியோகப் பிரிவிற்கு கிடைத்ததாகவும், குளிர்பதனச் சங்கிலி மருந்துகள் பெறப்படும் போது பராமரிக்கப்பட வேண்டிய வெப்பம் தொடர்பில் உறுதி செய்வதற்கு தேவையான வெப்ப நிலைத் தரவு அளவீடு பதிவுகள் இல்லாததால் இந்த மருந்துகள் நிராகரிக்கப்பட்டன என்பதுடன், இந்த அறிக்கை வெளியிடும் நேரத்தில் சுமார் 02 ஆண்டுகள் மருத்துவ விநியோகப் பிரிவின் குளிர்பதன களஞ்சியத்தில் களஞ்சியப்படுத்தி 2025 மார்ச் மாதத்தில் காலாவதியானது என்பதும் கணக்காய்வில் கண்டறியப்பட்டது. அவற்றை அகற்ற UNOPS எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்பது கணக்காய்வில் அவதானிக்கப்பட்டதுடன், இதற்கான செலவிற்கு மேலதிகமாக இந்த மருந்துக்கான அனுமதி மற்றும் துறைமுக தாமதக் கட்டணமாக ரூ. 829,811 செலுத்தப்பட்டுள்ளதும் கண்டறியப்பட்டது.

viii. மருத்துவ விநியோகப் பிரிவின் குளிர்பதன சேமிப்புத் திறன் குறைவாக இருப்பதால், நிராகரிக்கப்பட்ட மருந்துகளை இவ்வாறு குளிர்பதன களஞ்சியத்தில் சேமித்து வைப்பது கடினமானது என்பது அவதானிக்கப்பட்டதுடன், 2025 மார்ச் மாதத்தில் காலாவதியான இந்த நிராகரிக்கப்பட்ட மருந்துகளை குளிர்பதன களஞ்சியங்களில் மேலும் சேமித்து வைப்பது மருத்துவ விநியோகப் பிரிவிற்கு மேலதிக செலவு என்பது கணக்காய்வில் மேலும் அவதானிக்கப்பட்டது.

ix. UNOPS நிறுவனத்தின் மூலம் வாங்கப்பட்ட Nitroglycerine Sublingual Tablets 0.5 mg என்ற மருந்தும் மருத்துவ விநியோகப் பிரிவின் அளவுகோல்களுக்கு இணங்காததால், மருத்துவ விநியோகப் பிரிவினால் ஏற்றுக் கொள்ளப்படாத மருந்துகளின் ஒரு கையிருப்பாக இருப்பது அவதானிக்கப்பட்டதுடன், இந்த மருந்து மருத்துவ விநியோகப் பிரிவின் இரண்டாம் மாடியில் களஞ்சியப்படுத்தி வைக்கப்பட்டிருப்பதும் கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது. சுமார் 71 மில்லியன் ரூபா மதிப்புள்ள இந்த மருந்தை திரும்பப்பெறுவதற்கு UNOPS நிறுவனத்தினால் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்பது கணக்காய்வின் போது மேலும் அவதானிக்கப்பட்டது.

x. UNOPS நிறுவனத்தின் மூலம் வாங்கப்பட்ட Blood Glucose Strips, Atracurium Besylate மற்றும் GTN மருந்துகள் அனைத்தும் எந்தப் பயன்பாடுகளும் இல்லாமல் காலாவதியாகி கணக்காய்வு தின நிலவரப்படி மருத்துவ விநியோகப் பிரிவின் களஞ்சியத்தில் சேமிக்கப்பட்டுள்ளன என்பதுடன், இந்த மருந்துகளின் காலாவதியாவதை தடுக்கவும், மருத்துவ விநியோகப் பிரிவின் அளவுகோல்களின்படி இந்த மருந்தை விநியோகிக்கவும் அல்லது இந்த அனைத்து நடவடிக்கைகளையும் ஒருங்கிணைக்கவும் எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்பதுடன், இதற்கான ஏற்பட்ட மொத்த செலவு குறித்த தகவல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை.

xi. மேற்படி பொருளுக்கு மேலதிகமாக, தர தோல்வியுற்ற பொருட்களும் உட்பட ரூ. 890,163,110 மதிப்புள்ள 892 மருத்துவப் பொருட்கள் 2024 டிசம்பர் 31 நிலவரப்படி மருத்துவ விநியோகப் பிரிவிலும் வைத்தியசாலைகளிலும் காலாவதியாகி இருப்பது அவதானிக்கப்பட்டது.

(கி) நிதி ஒழுங்குவிதிகள் 104 இன்படி இழப்பு அல்லது சேதம் ஏற்பட்டவுடன் அதன் அளவு மற்றும் காரணங்களைக் கண்டறியவும், அதற்குப் பொறுப்பானவர்கள் அதனைத் தீர்க்கவும் விசாரணைகளைத் தொடங்க வேண்டும் எனினும், ரூ. 22,914,374 மதிப்புள்ள மருந்துகளின் பற்றாக்குறையும், ரூ. 218,045,669 மதிப்புள்ள மருந்துகள் காலாவதியாதலும், ரூ. 199,265,056 மதிப்புள்ள மருந்துகளின் சேதம் தொடர்பாகவும் 4 முதல் 15 ஆண்டுகள் வரையிலான காலம் கடந்துவிட்ட போதிலும் கணக்காய்வுத் தினமான 2024 டிசம்பர் 31 நிலவரப்படி நிதி ஒழுங்குவிதிகளுக்கு அமைய நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

(கீ) இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் தாபன விதிக் கோவையின் அத்தியாயம் XIX இன் பிரிவு 6.1 இன்படி, ஒரு குறிப்பிட்ட பதவிக்கு ஒதுக்கப்பட்ட உத்தியோகபூர்வ வீடுகள் தவிர ஏனைய அனைத்து வீடுகளின் குத்தகைக்காலம் 05 ஆண்டுகள் என்றபோதிலும், இதற்கு இணங்காமல், அங்கொட தேசிய மனநல நிறுவனத்தின் 75 உத்தியோகத்தர்கள் குத்தகைக் காலத்தை விட 25 நாட்கள் முதல் 15 ½ ஆண்டுகள் வரையிலான காலத்திற்கு வீடுகளில் வசித்து வந்த காரணத்தாலும், தற்காலிக அடிப்படையில் அரச வீடுகளை பெற்ற 14 உத்தியோகத்தர்கள் வழங்கப்பட்ட காலங்களை விட 01 முதல் 05 ஆண்டுகள் வரை வீடுகளில் தங்கியிருந்த காரணத்தால் காத்திருப்பு பட்டியலில் உள்ள வீட்டு விண்ணப்பதாரர்கள் நிர்ணயிக்கப்பட்ட காலத்திற்குள் வீடுகளைப்பெற முடியாமல் காத்திருப்புப் பட்டியலில் காத்திருக்க வேண்டியிருந்தது.

(கு) இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் தாபன விதிக் கோவையின் அத்தியாயம் XIX இன் பிரிவு 7.2 இன்படி, குத்தகை காலத்திற்கு அப்பால் ஒரு வீட்டில் வசிக்கும் உத்தியோகத்தர்களிடம் இருந்து சம்பந்தப்பட்ட காலத்திற்கு அபராத வாடகை வசூலிக்கப்பட வேண்டும் என்றாலும், அங்கொடை தேசிய மனநல நிறுவனத்தின் அரச நிறுவனங்களில் 05 ஆண்டுகளுக்கும் மேலாக வசிக்கும் 75 உத்தியோகத்தர்கள் மற்றும் தற்காலிக அடிப்படையிலும் பிற சேவை நிலையங்களிலும் பணியாற்றும் 17 உத்தியோகத்தர்களிடம் இருந்து அபராத வாடகை அறவிடும் போது, 2022 ஜனவரி 31 நிலவரப்படி மதிப்பிடப்பட்ட மதிப்பை பயன்படுத்தாமல் 2018 ஆம் ஆண்டின் மதிப்பீட்டின் மதிப்பின் அடிப்படையில் அபராத வாடகை மதிப்பீட்டு மதிப்பு மட்டும் சுமார் ரூ. 1,031,623 குறைவாக அறவிடப்பட்டது.

(கூ) அங்கொடை தேசிய மனநல நிறுவனத்தில் ஒவ்வொரு சேவை வகையின்படி வகைப்படுத்தப்பட்ட அரசாங்க வீட்டு வகைகளுக்கான காத்திருப்புப் பட்டியலில் மொத்தம் 230 பேர் இருந்த போதிலும், அது தொடர்பில் எவ்வித கவனமும் செலுத்தாமல் அந்த 05 வகையைச் சேர்ந்த 24 வீடுகள் தொடர்புடைய சேவை வகைகளுக்கு புறம்பான தரப்பினருக்கு வழங்கப்பட்டன. மேலும், நிறுவனத்திற்கு சொந்தமான 03 அட்டவணைப்படுத்தப்பட்ட வீடுகள் அந்த வீடுகளைப் பயன்படுத்த உரிமை பெற்ற அதிகாரிகளுக்கு வழங்கப்படவில்லை.

(கெ) 2022 முதல் 2024 வரையான காலத்தில் காலி தேசிய வைத்தியசாலைக்கு, ருஹுணு பல்கலைக்கழகத்தின் ஊடாக மற்றும் சம சுகாதார அறிவிடயல் பீடத்தின் ஊடாக வந்து Elective கற்கைகளை பயிலும் முறையே 73 மற்றும் 876 வெளிநாட்டு மாணவர்களிடமிருந்து மொத்தம் 168.19 மில்லியன் ரூபா பெறப்பட்டுள்ளதுடன், அந்த பணத்தில் காலி தேசிய வைத்தியசாலைக்கு செலுத்தவேண்டிய 25.9 சதவீதத்திற்கு சமமான 43.56 மில்லியன் ரூபா அதாவது 2024 ஆம் ஆண்டுக்கான பல்கலைக்கழக நிதி உப குழுவின் தீர்மானத்தின்படி மருத்துவ பீடத்தினால் காலி தேசிய வைத்தியசாலைக்கு செலுத்த வேண்டிய 250,000 ரூபாவுடன் சேர்த்து மொத்தம் 43.81 மில்லியன் ரூபா 2025 மார்ச் மாதம் கணக்காய்வு தினம் வரை சம்பந்தப்பட்ட பீடத்தினால் வைத்தியசாலைக்கு அனுப்பப்படவில்லை.

(கே) 2022 முதல் 2024 வரையிலான காலகட்டத்தில், ஜேர்மன் இலங்கை நட்பு மகளிர் வைத்தியசாலைக்கு, ருஹுணு பல்கலைக்கழகத்தின் ஊடாக மற்றும் சம சுகாதார அறிவிடயல் பீடத்தின் ஊடாக வந்து Elective கற்கைகளை பயிலும் முறையே 122 மற்றும் 83 வெளிநாட்டு மாணவர்களிடமிருந்து மொத்தம் 12.07 மில்லியன் ரூபா பெறப்பட்டுள்ளதுடன், அந்த பணத்தில் ஜேர்மன் இலங்கை நட்பு மகளிர் வைத்தியசாலைக்கு செலுத்தவேண்டிய 25.9 சதவீதத்திற்கு சமமான 3.13 மில்லியன் ரூபா அதாவது 2024 ஆம் ஆண்டுக்கான பல்கலைக்கழக நிதி உப குழுவின் தீர்மானத்தின்படி மருத்துவ பீடத்தினால் காலி தேசிய வைத்தியசாலைக்கு செலுத்த வேண்டிய 100,000 ரூபாவுடன் சேர்த்து மொத்தம் 3.23 மில்லியன் ரூபா 2025 மார்ச் மாதம் கணக்காய்வு தினம் வரை ஒவ்வொரு பீடத்தினாலும் வைத்தியசாலைக்கு அனுப்பப்படவில்லை.

(கொ) அனுராதபுரம் போதனா வைத்தியசாலையின் உள்ளகநோயாளிகளுக்கு மற்றும் கனிஷ்ட ஊழியர்களுக்கு உணவு வழங்குவதற்காக சமையலறைக்குத் தேவையான உலர் உணவுப் பொருட்களை வழங்கும் ஒப்பந்தம் கடந்த 05 ஆண்டுகளாக ஒரே விநியோகத்தருக்கு வழங்கப்பட்டுள்ளதுடன், அந்த ஒப்பந்ததாரர் இதற்கு முன்னர் உலர் உணவுப் பொருட்கள் வழங்குவதில் சிக்கல்கள் எழுந்துள்ள சந்தர்ப்பங்கள் இருந்த போதிலும் இது குறித்து அவதானம் செலுத்தப்படவில்லை.

(கோ) எம்பிலிப்பிட்டிய மாவட்ட பொது வைத்தியசாலையின் பணிப்பாளரின் உத்தியோகபூர்வ இல்லத்தை மேம்படுத்தல், பொருட்கள் மற்றும் சேவைகளை வழங்குதல் தொடர்பாக நடத்தப்பட்ட கணக்காய்வில் பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

i. கொள்முதல் வழிகாட்டுதல்களைப் பின்பற்றாமல் எம்பிலிப்பிட்டிய மாவட்ட பொது வைத்தியசாலையின் பணிப்பாளர் இல்லத்திற்கு ரூ. 239,535 மதிப்புள்ள தளபாடங்கள் மற்றும் மின்சார உபகரணங்கள் ஆர்டர் செய்யப்பட்டு விநியோகிக்கப்பட்டுள்ளதுடன், தாபன விதிக்கோவையின் அத்தியாயம் xix இன் 1.1 பிரிவின் கீழ் உப அட்டவணைப்படுத்தப்பட்ட வீடு அதாவது திணைக்களத்தினுள் ஒரு குறிப்பிட்ட பதவிக்கு அல்லது தரத்திற்கு ஒதுக்கப்பட்ட இல்லத்திற்காக தளபாடங்கள் ஒதுக்கீடுகள் இல்லை என்றாலும், 2024 டிசம்பர் 26 ஆம் திகதிய DGH/EMB/F10/OFF.FUR.02/2024 எனும் இலக்க எம்பிலிப்பிட்டிய வைத்தியசாலை பணிப்பாளரின் வேண்டுகோளின்படி, 2025 ஜனவரி 08 ஆம் திகதிய BO3/DGH-Embilipitiya/com/2023 எனும் சுகாதார அமைச்சின் பிரதிப் பணிப்பாளர் நாயகம் (விநியோகம்) இன் கடிதத்தின் மூலம் பணிப்பாளர் இல்லத்திற்கு தளபாடங்களைப் பெறுவதற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

ii. வைத்தியசாலையின் தேவைக்காக கொள்வனவு செய்யப்பட்ட ரூ. 258,755 மதிப்புள்ள 06 தளபாடங்கள் மற்றும் மின் சாதனங்கள் பணிப்பாளர் இல்லத்தில் பயன்படுத்தப்பட்டுள்ளன.

iii. வைத்தியசாலை பணிப்பாளருக்கு வழங்கப்பட்ட வீட்டில் 2024 டிசம்பர் 02 ஆம் திகதியின் பின்னர் ஒரு கோழிக் கூடு கட்டப்பட்டப்பட்டுள்ளதுடன், இதைத்தவிர சீமெந்தி கற்கள் மற்றும் வலைகளைப் பயன்படுத்தி கட்டப்பட்டிருந்த மற்றொரு பகுதி இடிக்கப்பட்டிருப்பதும் 2025 மார்ச் 25 ஆம் திகதி மேற்கொள்ளப்பட்ட பௌதீக ஆய்வில் கண்டறியப்பட்டது.

iv. பணிப்பாளர் வீட்டைச் சுற்றி ரூ. 28,000 செலவில் 14 கம்பி கம்பங்களைப் பயன்படுத்தி அமைக்கப்பட்ட வேலையை அகற்றி மதில் கட்டப்பட்டிருந்ததுடன், மதில் கட்டும் போது கழற்றப்பட்ட கம்பிகள் எவையும் வைத்தியசாலை வளாகத்தில் இருக்கவில்லை.

v. பணிப்பாளருக்கு வழங்கப்பட்ட வீட்டின் முற்றத்தில் பயிர் செய்கை மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன், வைத்தியசாலைக்கு கொள்வனவு செய்யப்பட்ட நீர் உபகரணங்களைப் பயன்படுத்தி 2025 பெப்ரவரி மாதத்தில் பயிர்களுக்கு தண்ணீர் வழங்க குழாய்கள் பொருத்தப்பட்டிருந்தன.

vi. பணிப்பாளருக்கு வழங்கப்பட்ட வீட்டின் புதுப்பித்தல் பணிக்காக அவ்வப்போது ரூ. 158,221 மதிப்புள்ள பொருட்கள் வாங்கப்பட்டிருந்ததுடன், வீட்டில் மேற்கொள்ளப்பட்ட புதுப்பித்தல் நடவடிக்கைகள் எவை என்பது கணக்காய்வில் கண்டறிய முடியவில்லை.

vii. அரசாங்க வீட்டுக்காக பாதுகாப்பு உத்தியோகத்தர்களை நியமிப்பதற்கான ஏற்பாடுகள் இல்லாவிட்டாலும், வைத்தியசாலை பணிப்பாளருக்கு வழங்கப்பட்ட வீட்டுக்கு வைத்தியசாலை பாதுகாப்பு சேவையைச் சேர்ந்த இரண்டு பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் பணியமர்த்தப்பட்டிருந்தனர்.

(கௌ) நாகொட போதனா வைத்தியசாலையின் மருத்துவ கழிவுகளை அகற்றுதல் தொடர்ப்பில் மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வில் பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

i. வைத்தியசாலையில் உருவாக்கப்படும் மருத்துவக் கழிவுகளை அகற்றுவதற்காக தனியார் நிறுவனத்துடன் செய்து கொள்ளப்பட்ட முத்தரப்பு ஒப்பந்த விதிமுறைகளின்படி, சம்பந்தப்பட்ட தனியார் நிறுவனத்தினால் வைத்தியசாலைக்கு வழங்க வேண்டிய கழிவுகளை வேறுபிரித்தல் மற்றும் சேமித்து வைப்பதற்குத் தேவையான வர்ணக் குறியீடு கொண்ட பொதி பைகள் வழங்கப்படாத காரணத்தால் 2021 ஆம் ஆண்டு பெப்ரவரி முதல் 2023 ஆம் ஆண்டு இறுதி வரை மஞ்சள் நிற பைகளை கொள்வனவு செய்ததற்காக வைத்தியசாலைக்கு ரூ. 3,717,974 இழப்பு ஏற்பட்டது.

ii. 2024 ஆம் ஆண்டு ஏப்ரல், மே மற்றும் ஜூன் ஆகிய 03 மாதங்களுக்கு வைத்தியசாலையின் மருத்துவக் கழிவுகளை அகற்ற பயன்படுத்துவதற்கு 5260 மஞ்சள் நிற பைகள் மட்டுமே உரிய நிறுவனத்தினால் வழங்கியிருந்தாலும், வைத்தியசாலையின் மாதாந்திர தேவையான 7000 மஞ்சள் பைகளுடன் ஒப்பிடும் போது இந்த அளவு எவ்விதத்திலும் போதுமானதாக இருக்கவில்லை. மேலும் மருத்துவக் கழிவுகளை சேமிப்பதற்கு குறைந்தபட்சம் 300 gauge தடிப்பு கொண்ட பைகள் வழங்கப்பட வேண்டும் என்றபோதிலும், வழங்கப்பட்ட பைகளின் தடிப்பு 110 gauge மட்டுமே ஆகும்.

5. நிலையான அபிவிருத்தி

5.1 நிலையான அபிவிருத்தி இலக்குகளை அடைவதற்கான முன்னேற்றம்

சுகாதார அமைச்சுக்கான 42நிலையான அபிவிருத்தி குறிகாட்டிகள் இனங்காணப்பட்டுள்ளதுடன், அவற்றில் 26 குறிகாட்டிகள் மதிப்பாய்வில் உள்ள ஆண்டுக்கான முன்னேற்றத்தை அறிக்கையிடவில்லை. முன்னேற்றம் பதிவாகிய பின்வரும் குறிகாட்டிகள் தேவையான செயல்திறன் அளவை எட்டவில்லை.

(அ) குறியீட்டு எண் 3.2.1 இன்படி, 5 வயதிற்கு குறைந்த குழந்தைகளின் இறப்பு விகிதம் 2030 ஆம் ஆண்டுக்குள் 100,000 இற்கு 7 என்ற மதிப்பில் பராமரிப்பதற்கான இலக்கு நிர்ணயிக்கப்பட்ட போதிலும், 2023 டிசம்பர் 31 நிலவரப்படி 12.5 ஆக இருந்த அந்த மதிப்பு 2024 டிசம்பர் 31 அன்று 12.2 வரை பாதகமாக அதிகரித்துள்ளது.

(ஆ) குறியீட்டு எண் 3.2.2 இன்படி, புதிதாக பிறக்கும் குழந்தைகளின் இறப்பு எண்ணிக்கை 2030 ஆம் ஆண்டுக்குள் 1000 நேரடி பிறப்புகளுக்கு 4 என்ற மதிப்பில் பராமரிப்பதற்கான இலக்கு நிர்ணயிக்கப்பட்ட போதிலும், 2021 டிசம்பர் 31 நிலவரப்படி 6.5 ஆக இருந்த அந்த மதிப்பு 2023 டிசம்பர் 31 அன்று 7.2 ஆக பாதகமாக அதிகரித்துள்ளதுடன், 2024 ஆம் ஆண்டுக்கான தகவல்களை சமர்ப்பிக்கவில்லை.

(இ) குறியீட்டு எண் 3.3.5.2 இன்படி, மனித ரேபிஸ் இறப்புகளின் எண்ணிக்கை 2030 ஆம் ஆண்டளவில் பூச்சியமாக இருக்க இலக்கு நிர்ணயிக்கப்பட்ட போதிலும், 2023 ஆம் ஆண்டில் அது 16 ஆக காணப்பட்டதுடன், 2024 டிசம்பர் 31 நிலவரப்படி 20 ஆக அதிகரித்துள்ளது.

(ஈ) குறியீட்டு எண் 3.3.5.3 இன்படி, 2030 ஆம் ஆண்டளவில் யானைக் கால் நோய் தொடர்பான புதிய நிணநீர் அழற்சி சந்தர்ப்பங்கள் பூச்சியமாக இருக்க இலக்கு நிர்ணயிக்கப்பட்ட போதிலும், 2023 இல் 908 ஆக இருந்த எண்ணிக்கை 2024 ஆம் ஆண்டில் அது 1109 ஆக அதிகரித்துள்ளது.

(உ) குறியீட்டு எண் 3.3.5.4 இன்படி, சிகிச்சைக்காக தொழுநோயாளிகளின் வருகை 2030 ஆம் ஆண்டளவில் 1,000 என்ற மதிப்பை பேணுவதற்கு இலக்கு நிர்ணயிக்கப்பட்ட போதிலும், 2021 ஆம் ஆண்டில் 993 எனும் சிறந்த மதிப்பாக இருந்தது. எனினும், அது 2022 ஆம் ஆண்டில் 1,580 ஆக பாதகமாக அதிகரித்துள்ளதுடன், 2024 ஆம் ஆண்டில் 1350 என குறைந்த மதிப்பாக இருந்தது.

(ஊ) குறியீட்டு எண் 3.3.5.5 இன்படி, தொழுநோயான Leishmaniasis அறிக்கையிடப்படும் மதிப்பு 2030 ஆம் ஆண்டளவில் 100,000 இற்கு 1 என்ற மதிப்பில் பராமரிப்பதற்கான இலக்கு நிர்ணயிக்கப்பட்ட போதிலும் 2023 ஆம் ஆண்டில் 4277 ஆக இருந்த எண்ணிக்கை 2024 ஆம் ஆண்டில் 4448 ஆக பாதகமாக அதிகரித்துள்ளது.

(எ) குறியீட்டு எண் 3.6.1 இன்படி, வீதி விபத்துக்களினால் ஏற்படும் இறப்பு வீதம் 2023 நிலவரப்படி 100,000 இற்கு 10.74 என இலக்கு நிர்ணயிக்கப்பட்ட போதிலும் 2023 ஆம் ஆண்டில் 10.53 ஆக இருந்த மதிப்பு 2024 ஆம் ஆண்டில் 11.5 ஆக பாதகமாக அதிகரித்துள்ளது.

(ஏ) குறியீட்டு எண் 3.8.1.3 இன்படி, தடுப்பூசி பாதுகாப்பு இலக்கு 2023 ஆம் ஆண்டளவில் 100 சதவீதம் இலக்கு நிர்ணயிக்கப்பட்ட போதிலும் 2023 ஆம் ஆண்டில் 98 சதவீதம் ஆக இருந்ததுடன், 2024 ஆம் ஆண்டில் அது 96.7 சதவீதமாக பாதகமாக குறைந்துள்ளது.

(ஒ) குறியீட்டு எண் 3.8.1.9 இன்படி, சிகிச்சை நிலை எதுவாக இருந்தாலும்18 வயதிற்கு மேற்பட்ட பெரியவர்களிடையே அதிகரிக்காத இரத்த அழுத்தத்தின் வயது தரப்படுத்தப்பட்ட பரவல் (Age –—Standardized Prevalence of Non-raised blood pressure) இன் மதிப்பு 2030 ஆம் ஆண்டளவில் 80 போன்ற மதிப்பில் பராமரிப்பதற்கான இலக்கு நிர்ணயிக்கப்பட்ட போதிலும், மதிப்பாய்வு ஆண்டின் இறுதியில் அது 65.2 சதவீதமாக இருந்தது.

6. மனிதவள முகாமைத்துவம்

6.1 இணைக்கப்பட்ட பணியாளர்கள், உண்மையான பணியாளர்கள் மற்றும் தனிநபர் சம்பளத்திற்கான செலவு

இது தொடர்பாக பின்வருவன அவதானிக்கப்பட்டன.

(அ) ஊழியர்கள் தொடர்பான குறிப்பிட்ட வடிவங்களில் கணக்காய்விற்கு தகவல்களைச் சமர்ப்பிக்க கோரப்பட்ட போதிலும், அதற்கேற்ப தகவல்கள் தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்படவில்லை என்பதுடன், திட்டமிடல் பிரிவினால் மின்னஞ்சல் ஊடாக 2025 மார்ச் 25 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2024 டிசம்பர் 31 நிலவரப்படி சம்பள அளவுகளின்படி சுகாதார அமைச்சு மற்றும் அதன் கீழுள்ள அனைத்து வைத்தியசாலைகளுக்குரிய அங்கீகரிக்கப்பட்ட ஊழியர்கள் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வில் சம்பள அளவுகளின்படி அங்கீகரிக்கப்பட்ட மொத்த ஊழியர்களின் எண்ணிக்கை 97,986 பேர் என்ற போதிலும், 2024 டிசம்பர் 31 நிலவரப்படி ஊழியர்களின் தகவல்களின்படி உண்மையான ஊழியர்கள் 84,106 என்பது கண்டறியப்பட்டது. இதன் காரணமாக மொத்த ஊழியர்களின் பற்றாக்குறை 13,880 ஆக இருந்ததுடன், இது 14 சதவீத உயர் எண்ணிக்கையாகும். வைத்தியசாலைகள், நிறுவனங்கள் மற்றும் பிரிவுகளில் ஊழியர்கள் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட மாதிரி கணக்காய்வில் பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

i. றிட்ஜ்வே சிறுவர் சீமாட்டி வைத்தியசாலையில் 64 வெவ்வேறு பதவிப் பிரிவுகளின் கீழ் அங்கீகரிக்கப்பட்ட ஊழியர்கள் 2682 என்பதுடன், உண்மையான ஊழியர்கள் 2181 ஆகும். அதில் 55 பதவி வகைகளுக்கு 523 ஊழியர் வெற்றிடங்கள் காணப்பட்டதுடன், விஷேட மருத்துவ நிபுணர் பதவிகளில் 22 உத்தியோகத்தர்கள் மேலதிகமாக பணியமர்த்தப்பட்டுள்ளனர். அங்கீகரிக்கப்பட்ட 14 பதவிகளில் எந்த வெற்றிடங்களும் நிரப்பப்படவில்லை என்பதுடன் அதில் 08 பதவிகளுக்கு மட்டும் பதில் சுகாதார பணி உதவியாளர்கள் நியமிக்கப்பட்டிருந்தனர். இவற்றில் ஒளிப்பதிவாளர் பதவிக்காக 2000 ஆம் ஆண்டு செப்டெம்பர் 08 ஆம் திகதி முதல் வெற்றிடம் காணப்பட்டதுடன், இந்த பதவிக்கு பதில் கடமைக்காக 2012 ஆகஸ்ட் 28 முதல் சுகாதார பணி உதவியாளர் ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளதுடன், அவர் சுமார் 12 ஆண்டுகளாக பதில் கடமையாற்றி வருகிறார்.

ii. கேகாலை போதனா வைத்தியசாலையின் அங்கீகரிக்கப்பட்ட ஊழியர்கள் மற்றும் உண்மையான ஊழியர்கள் தொடர்பில் ஆராயப்பட்ட போது 58 பதவிகளுக்கு அங்கீகரிக்கப்பட்ட ஊழியர்கள் 1682 என்றபோதிலும், 2024 நவம்பர் 30 நிலவரப்படி உண்மையான ஊழியர்கள் 1538 ஆகும். இதனால் 33 பதவிகளில் 187 வெற்றிடங்களும், 06 பதவிகளில் 43 மேலதிகமாகவும் காணப்பட்டனர்.

iii. 2024 டிசம்பர் 31 நிலவரப்படி, குளியாப்பிட்டிய போதனா வைத்தியசாலையில் 35 பதவிகளில் 137 வெற்றிடங்கள் நிலவியதுடன், இவற்றில் 11 விஷேட மருத்துவ நிபுணர்கள், 09 மருத்துவர்கள், 07 தாதி உத்தியோகத்தர்கள், 12 தாதியர் சகோதரிகள், 38 பரிசாரகர்கள் என அத்தியவசிய பதவிகளில் வெற்றிடங்கள் காணப்பட்டதால் வினைத்திறனான சுகாதார சேவையை வழங்குவதற்கு இற்த வெற்றிடங்கள் தடையாக இருப்பது அவதானிக்கப்பட்டது.

iv. பேராதனை போதனா வைத்தியசாலையில் அங்கீகரிக்கப்பட்ட 682 தாதி உத்தியோகத்தர்கள், 04 விஷேட தாதி உத்தியோகத்தர்கள், 20 தாதியர் சகோதரிகள் ஆகும். ஆனால் நடப்பு ஆண்டில் 01 விஷேட தர தாதி உத்தியோகத்தர் மற்றும் 30 தாதி உத்தியோகத்தர் பதவிகள் வெற்றிடங்கள் காணப்பட்டன.

v. பொலன்னறுவை மாவட்ட பொது வைத்தியசாலையில் அங்கீகரிக்கப்பட்ட 30 பதவியணிகளில் 115 வெற்றிடங்கள் காணப்பட்டன.

(ஆ) கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட சம்பள அளவுகளின்படி ஊழியர்களின் தகவல்களை ஆராய்ந்த போது, 2023 ஆம் ஆண்டில் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் 96,642 என்றும், 2024 ஆம் ஆண்டில் 1,544 புதிய பதவிகள் உருவாக்கப்பட்ட பின்னர் 2024 ஆம் ஆண்டில் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் 97,986 என்றும் குறிப்பிடப்பட்டுள்ள போதிலும், 2023 ஆம் ஆண்டில் ஒப்பந்த அடிப்படையிலும் மற்றும் 21 பிற சம்பள அடிப்படையிலும் அங்கீகரிக்கப்பட்ட ஊழியர்களின் எண்ணிக்கை 96,442 என்பது அவதானிக்கப்பட்டது.

(இ) டெங்கு கட்டுப்பாட்டு நடவடிக்கைகளுக்காக 2017 ஆம் ஆண்டில் ஒப்பந்த அடிப்படையில் முறைசாரா முறையில் ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட 1,102 நுளம்பு ஒழிப்பு உதவியாளர்கள் பணியமர்த்தப்பட்ட போதிலும், அதில் 671 பதவிகளுக்கு மட்டுமே 2024 ஆம் ஆண்டில் ஒப்புதல் பெறப்பட்டுள்ளது.

(ஈ) கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின்படி, 2023 மற்றும் 2024 ஆம் ஆண்டுகளில் அங்கீகரிக்கப்பட்ட ஊழியர்களில் 06 பதவிகளின் பெயர்கள் சேர்க்கப்படவில்லை மற்றும் அங்கீகரிக்கப்படாத 06 பதவிகள் சேர்க்கப்பட்டுள்ளன என்பதுடன், இவ்வாறு அங்கீகரிக்கப்படாத பதவிகள் சேர்க்கப்பட்டதற்கான காரணங்கள் கணக்காய்விற்கு தெளிவுபடுத்தப்படவில்லை.

(உ) மேலும், 2023 மற்றும் 2024 ஆம் ஆண்டுகளில் அங்கீகரிக்கப்பட்ட பதவியணிகளில் இல்லாத 14 பதவிகள் தொடர்பாக 137 உத்தியோகத்தர்கள் 2024 டிசம்பர் 31 நிலவரப்படி சுகாதார அமைச்சிலும், அதன் கீழுள்ள நிறுவனங்களிலும் பணியாற்றி வருவது அவதானிக்கப்பட்டதுடன், அவ்வாறு அங்கீகரிக்கப்படாத சேவைகளில் உத்தியோகத்தர்களை தக்கவைத்துக்கொள்ளல் மற்றும் தேவைக்கேற்ப சேவைகளை அங்கீகரிக்கத் தவறியமையினால் பதவிகளுக்கு உத்தியோகத்தர்களை நியமிக்கவும் சம்பளம் மற்றும் கொடுப்பனவுகளை வழங்கவும் வழங்கப்பட்ட அதிகாரம் கணக்காய்வில் சிக்கலாக இருந்தது.

(ஊ) கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின்படி 279 பதவிகளுக்குரிய 14,853 உத்தியோகத்தர்களுக்கான பற்றாக்குறையும், 37 பதவிகளுக்குரிய 937 உத்தியோகத்தர்கள் மேலதிகமாகவும் பணியமர்த்தப்பட்டுள்ளனர். இவற்றில் 58 பதவிகளுக்குரிய 14,536 உத்தியோகத்தர்கள் நிறுவனத்தினுள் பற்றாக்குறையாக இருந்ததுடன், சில நிறுவனங்களில் 3,484 ஊழியர்கள் கூடுதலாகவும் இருப்பது அவதானிக்கப்பட்டதுடன், இவ்வாறு கூடுதல் மற்றும் பற்றாக்குறையை நிவர்த்தி செய்யாமல் பணியாளர்களை இவ்வாறு பணியமர்த்துவது நிர்வாகத்தின் பலவீனம் என்பது கண்டறியப்பட்டது.

(எ) கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின்படி மேற்படி கூடுதல் மற்றும் பற்றாக்குறை காணப்படும் பதவிகளுக்கு மேலதிகமாக மேலும் 229 பதவிகளுக்கு 3,581 உத்தியோகத்தர்கள் பற்றாக்குறை இருந்தது. இது தொடர்பில் அவதானம் செலுத்தப்பட்டு உரிய பதவிகளைத் தொடர்ந்து பராமரிப்பது அவசியமெனின், அந்த பதவிகளின் வெற்றிடங்களை நிரப்புவதற்கு அல்லது அவசியமற்ற பதவிகளை ஒடுக்குவதற்கு நடவடிக்கை எடுப்பது அவசியம் என்பது அவதானிக்கப்பட்டது.

(ஏ) கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின்படி, மேற்படி கூடுதல் மற்றும் பற்றாக்குறை நிலவிய பதவிகளுக்கு மேலதிகமாக மேலும் 31 பதவிகளுக்கு 694 உத்தியோகத்தர்கள் கூடுதலாக காணப்பட்டனர். இவ்வாறு அனுமதியின்றி பதவிகளுக்கு உத்தியோகத்தர்களை ஆட்சேர்ப்பு செய்வதற்கு மற்றும் கொடுப்பனவுகளை வழங்குவதற்கும் வழங்கப்பட்ட அதிகாரம் கணக்காய்வில் சிக்கலாக இருந்தது.

(ஐ) முகாமைத்துவ சேவைத் திணைக்களத்தால் 2017 நவம்பர் 07 ஆம் திகதி அமைச்சின் பணிப்பாளர் நாயகம் (திட்டமிடல்) என்ற பெயரில் இலங்கை முகாமைத்துவ சேவையின் விஷேட தரத்தின் ஒரு பதவிக்கு ஒப்புதல் அளித்துள்ள போதிலும் அந்தப் பதவியை நிரம்ப எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

(ஒ) சுகாதார அமைச்சிற்கு ஆட்சேர்ப்பு செய்யப்பட்டு தற்காலிகமாக விடுவிக்கப்பட்ட ஊழியர்கள் தொடர்பான தகவல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை.

(ஓ) அனுராதபுரம் போதனா வைத்தியசாலை பணிப்பாளர் பதவிக்கு 2017 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்தில் பதில் கடமைக்காக மருத்துவ அலுவலர் ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளதுடன், 07 வருடங்கள் கடந்த போதிலும் அதற்கு நிரந்தர உத்தியோகத்தரை நியமிக்க நடவடிக்கை எடுக்கவில்லை.

(ஔ) 2009 பெப்ரவரி 20 ஆம் திகதியிட்ட 1589/30 ஆம் இலக்க விஷேட வர்த்தமானி அறிவித்தல் மற்றும் அரச சேவைகள் ஆணைக் குழுவின் நடைமுறை விதிகள் XVIII ஆம் அத்தியாயத்தின் 193 ஆம் பிரிவின்படி, ஒவ்வொரு அரச ஊழியர்களும் இடமாற்றங்களுக்கு உட்பட்டவர்கள் என்ற போதிலும், அதற்கேற்ப நடவடிக்கைகள் எடுக்காத சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன. அவற்றில் சில பின்வருமாறு.

i. 2024 செப்டெம்பர் 30 நிலவரப்படி, ரிஜ்வே சீமாட்டி சிறுவர் வைத்தியசாலையின் ஊழியர்களில் 05 முதல் 10 வருட சேவைக் காலத்தைக் கொண்ட 520 உத்தியோகத்தர்களும், 10 முதல் 20 வருட சேவைக் காலத்தைக் கொண்ட 389 உத்தியோகத்தர்களும், 20 முதல் 30 வருட சேவைக் காலத்தைக் கொண்ட 219 உத்தியோகத்தர்களும், 30 வருடத்திற்கும் மேற்பட்ட 33 உத்தியோகத்தர்களும் சேவையாற்றி வருகின்றனர்.

ii. கண்டி தேசிய வைத்தியசாலையின் தாதி ஊழியர்களுக்கு குறிப்பிடப்பட்ட உள்ளக இடமாற்ற கொள்கை அல்லது நடைமுறை எதுவும் இல்லை என்பதுடன், கண்டி தேசிய வைத்தியசாலையில் 426 தாதி உத்தியோகத்தர்கள் 10 தொடக்கம் 31 வருடங்கள் வரை நீண்ட காலமாக ஒரே பிரிவில் பணியாற்றி வருகின்றனர். மேலும், தாதி ஊழியர்கள் பற்றிய தகவல்களைக் கொண்ட தரவுத்தள அமைப்பு வைத்தியசாலையில் நிறுவப்பட்டிருக்கவில்லை.

iii. 26 பதவிகளுக்குரிய 422 உத்தியோகத்தர்கள் 06 வருடங்கள் முதல் 33 வருடங்களுக்கு இடைப்பட்ட காலம் பொலன்னறுவை போதனா வைத்தியசாலையில் தொடர்ச்சியாக பணியாற்றி வருவது அவதானிக்கப்பட்டது.

(க) 2022 டிசம்பர் 14 ஆம் திகதிய 2310/29 எனும் இலக்க அதிவிஷேட வர்த்தமானி அறிவித்தலில் வெளியிடப்பட்ட அரச சேவைகள் ஆணைக்குழுவின் நடைமுறை விதிகள் XV ஆம் அத்தியாயத்தின் 214 ஆம் பிரிவின்படி, சேவையை வெறிதாக்கியதாக கருதப்பட்ட உத்தியோகத்தர் ஒருவருக்கு அதனை உடனடியாக பதிவுத் தபாலில் அறிவிப்பதற்கு நடவடிக்கை எடுப்பது நிறுவனத் தலைவரின் பொறுப்பாகும். எனினும், பொலன்னறுவை தேசிய சிறுநீரக வைத்தியசாலையில் சேவைக்கு சமூகமளிக்காத 03 பதவிகளைச் சேர்ந்த 12 உத்தியோகத்தர்களுக்கு சேவை வெறிதாக்கல் அறிவிப்பு 24 நாள் முதல் 788 நாட்கள் தாமதித்து அறிவிக்கப்பட்டுள்ளது. மேலும் பொலன்னறுவை போதனா வைத்தியசாலையில்

சேவைக்கு சமூகமளிக்காத 08 பதவிகளுக்குரிய 39 உத்தியோகத்தர்களுக்கு சேவை வெறிதாக்கல் அறிவிப்பு 24 நாள் முதல் 788 நாட்கள் தாமதித்து அறிவிக்கப்பட்டுள்ளது.

(ங) தாதி உத்தியோகத்தர்களின் தனிப்பட்ட கோப்புகளில் உள்ள குறைபாடுகள் உத்தியோகத்தர்களை ஆட்சேர்ப்பு செய்யும் போது மற்றும் தாதி உத்தியோகத்தர்களுக்கு பயிற்சிகள் வழங்கும் போது முறையாகத் தொடங்கி பராமரிக்க தவறுதல், சுகாதார அமைச்சின் பல்வேறு நிறுவனங்களுக்கிடையேயான தொடர்பு, அறியாமை அல்லது மோசடி நடவடிக்கைகள் போன்ற காரணங்களால் கண்டி தேசிய வைத்தியசாலையில் 2003 ஜூலை 27 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்ட தாதி உத்தியோகத்தர்களின் சேவை 2024 டிசம்பர் 31 வரை உறுதிப்படுத்தப்படவில்லை. மேலும், 1984 தாதி பயிற்சிக்கு உள்வாங்கப்பட்டு 1988 ஜூலை 18 ஆம் திகதி தாதி உத்தியோகத்தராக நியமனம் பெற்ற ஒரு உத்தியோகத்தரின் தனிப்பட்ட கோப்பில் 02 பிறப்புச் சான்றிதழ்கள் மற்றும் 02 தேசிய அடையாள அட்டைகள் மூலம் ஒன்றுக்கொன்று முரணான தகவல்கள் தனிப்பட்ட கோப்பிற்கு மோசடியாக வழங்கப்பட்டுள்ளது. ஆவணங்களின்படி, அந்த உத்தியோகத்தர் 2022 நவம்பர் 01 ஆம் திகதி ஓய்வு பெறவிருந்த போதிலும், போலி ஆவணங்கள் சமர்ப்பித்து அவை அம்பலமான தினமான 2023 ஆகஸ்ட் 20 ஆம் திகதிவரை சேவையில் இருந்து மோசடியாக செயல்பட்டுள்ளதுடன், ஓய்வுபெற வேண்டிய தினத்தின் பிறகும் அவர் 10 மாதங்களுக்கு ரூ. 648,680 சம்பளம் மற்றும் கொடுப்பனவுகள் வழங்கப்பட்டுள்ளன.

(ச) 2002 ஆம் ஆண்டு ஜனவரி 07 ஆம் திகதி முதல் கதிரியலாளராக நியமனம் பெற்ற உத்தியோகத்தர் ஒருவர் தேவையான தகைமைகளைப் பூர்த்தி செய்து அவர் ஓய்வு பெற்றுச் சென்று 08 மாதங்கள் கடந்து 2024 ஆகஸ்ட் 30 வரையிலும் சேவை உறுதிப்படுத்த சுகாதார அமைச்சு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. மேலும், சேவை விலக்கின் கீழ் அரச சேவையில் மருந்தாளராக 2017 மார்ச் 20 ஆம் திகதி கண்டி தேசிய வைத்தியசாலைக்கு நியமனம் பெற்ற இலங்கை இராணுவத்தில் ஓய்வு பெற்ற அலுவலர் ஒருவருக்கு அரச நிர்வாக சுற்றறிக்கை 03/2018 இன் 06 வது பந்தியின்படி, சம்பளத்துடன் உரித்துடையதாகும் வாழ்க்கைச் செலவுக் கொடுப்பனவின் மீதமுள்ள பாதி மாதாந்திர கொடுப்பனவுடன் வழங்கப்பட வேண்டும் எனினும், முழு வாழ்க்கைச் செலவுக் கொடுப்பனவும் அவருக்கு வழங்கப்பட்டுள்ளது. அதன்படி, அவருக்கு மேலதிகமாக செலுத்தப்பட்ட தொகை ரூ. 398,830 என கணக்கிடப்பட்டுள்ளது.

பி.ஜீ தர்ஷன
சிரேஷ்ட உதவிக் கணக்காய்வாளர் நாயகம்
கணக்காய்வாளர் நாயகத்திற்காக

அத்தியாயம் 4

செயலாற்றுகைக் குறிகாட்டிகள்

4.1 நிறுவனத்தின் செயல்திறன் குறிகாட்டிகள்

சேவைகளை வழங்குவதில் அதிக செயல்திறன் மற்றும் விளைதிறனை அடைவதற்கு சுகாதாரத் துறையில் செயல்பாடு கண்காணிப்பு ஒரு முக்கிய பங்கை வகிக்கிறது. தேர்ந்தெடுக்கப்பட்ட குறிகாட்டிகளைப் பயன்படுத்தி செயல்திறனை அளவிட முடியும், இதன் மூலம் சுகாதார நிறுவன இலக்குகள் மற்றும் நோக்கங்கள் காலப்போக்கில் கண்காணிக்கலாம். இந்தத் தேவையைப் பூர்த்தி செய்ய சுகாதார அமைச்சு ஒரு தேசிய சுகாதார செயல்திறன் கட்டமைப்பை அடையாளம் கண்டுள்ளது. இந்த குறிகாட்டிகளை சுகாதார செயல்திறனை பகுப்பாய்வு செய்து கண்காணிக்கவும், பணியாளர்கள் நியமனம் மற்றும் வளங்களை ஒதுக்கீடு செய்வது தொடர்பான மூலோபாய முடிவுகளை அடிப்படையாகக் கொள்ளவும் அடித்தளமாகப் பயன்படுத்தலாம். தேர்ந்தெடுக்கப்பட்ட சில முக்கியமான குறிகாட்டிகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

குறிகாட்டி	2021	2022	2023	2024
100,000 உயிர் பிறப்புகளுக்கு தாய்வழி இறப்பு விகிதம் (குடும்ப சுகாதார பணியக தரவு)	47.04*	33	25	DNA
I 1000 உயிருள்ள பிறப்புகளுக்கு குழந்தை இறப்பு விகிதம் (குடும்ப சுகாதார பணியக தரவு)	9.1	10.1	10.4	
1000 பிறப்புகளுக்கு ஐந்து வயதுக்குட்பட்ட குழந்தைகளின் இறப்பு விகிதம் (குடும்ப சுகாதார பணியக தரவு)	10.5	12.0	12.5	12.1
காசநோய் சிகிச்சை நல்விளைவு விகிதம் (தேசிய காசநோய் கட்டுப்பாடு மற்றும் மார்பு நோய்களுக்கான திட்ட தரவு)	79.4	78.1	79	DNA
டெங்கு இறப்பு விகிதம் (டெங்கு கட்டுப்பாட்டு பிரிவு)	0.08	0.09	0.07	0.05
டெங்கு தொடர்பான இறப்புகளின் எண்ணிக்கை		72	62	24
15 வயதுக்குட்பட்ட குழந்தைகளில் தொழுநோய் பாதிப்பு (தொழுநோய் எதிர்ப்புத் திட்டத் தரவு)		DNA		
தற்போது ஆன்டிரெட்ரோவைரல் சிகிச்சையைப் பெறும் எச்.ஐ.வி.யுடன் வாழும் மக்களின் சதவீதம் (தேசிய பாலியல் பரவும் நோய்கள் மற்றும் எய்ட்ஸ் கட்டுப்பாட்டு திட்ட தரவு)	66.59	68.00	71	DNA
1,000 பாதிக்கப்படாத மக்கள் தொகையில் புதிய எச்ஐவி தொற்றுகளின் எண்ணிக்கை (தேசிய பாலியல் பரவும் மற்றும் எய்ட்ஸ் கட்டுப்பாட்டு திட்ட தரவு)	0.01	0.01	0.01	0.01

சுகாதாரப் பணியாளர் அடர்த்தி (10,000 மக்கள்தொகைக்கு) (ஆண்டு சுகாதார அறிக்கை தரவு)	மக்கள் தொகை 22,156,000	மக்கள் தொகை 22,181,000	மக்கள் தொகை 22,037,000	மக்கள் தொகை 21,916,000
மருத்துவ நிபுணர்கள்	1.33 (2,946)	1.28 (2839)	1.25 (2756)	DNA
மருத்துவ அலுவலர்கள் (நிர்வாகிகள் மற்றும் நிபுணர்கள் தவிர)	8.77 (19,432)	9.21 (20,426)	9.58 (21,119)	DNA
பல் மருத்துவ அலுவலர்கள்	0.79 (1,757)	0.76 (1,689)	0.73 (1604)	DNA

குறிகாட்டி	2021	2022	2023	2024
தாதிய அலுவலர்கள்	1.33 (2,946)	1.28 (2839)	1.25 (2756)	DNA
மருந்தாளர்கள் மற்றும் மருந்து கலவையாளர்கள்	22.46 (49,765)	22.77 (50,516)	24.18 (53,283)	DNA
மேற்பார்வை மருத்துவமாதுகள் மற்றும் மருத்துவமனை மருத்துவமாதுகள் உள்ளிட்ட மருத்துவமாதுகள்	1.68 (3,716)	1.66 (3,676)	1.64 (3625)	DNA
ஆதார மருத்துவமனை மற்றும் அதற்கு மேற்பட்ட மருத்துவமனைகளில் அத்தியாவசிய மருந்துகளின் இருப்பு (SARA கணக்கெடுப்பு தரவு)			DNA	
வளர்ச்சி குன்றிய 5 வயதுக்குட்பட்ட குழந்தைகள் (குடும்ப சுகாதார பணியக தரவு தரவு)	7.4	9.2	10.3	10.5
5 வயதுக்குட்பட்ட குழந்தைகள், எடை குறைந்து போனவர்கள் (குடும்ப சுகாதார பணியக தரவு தரவு)	8.2	10.1	10.0	9.2
குழந்தைகளுக்கான தடுப்பூசி: டிப்தீரியா-டெட்டனஸ்-பெர்டுசிஸ் கொண்ட தடுப்பூசியை மூன்று முறை பெறும் குழந்தைகளின் சதவீதம் (தொற்றுநோயியல் பிரிவு தரவு)	<95	<95	<95	<95
இருதய நோய், புற்றுநோய், நீரிழிவு நோய் அல்லது நாள்பட்ட சுவாச நோய் காரணமாக ஏற்படும் இறப்பு விகிதம் (உலகளாவிய சுகாதார ஆய்வக தரவு)				
மருத்துவமனை- 10,000 நோயாளி நாட்களுக்கு MRSA பாக்டீரியா விகிதம்				
கீழ் பிரிவு சிசேரியன் பிரிவு (LSCS) அறுவை சிகிச்சைக்குப் பிந்தைய தள தொற்று விகிதத்தின் சதவீதம்				மருத்துவமனை செயல்திறன் அட்டவணைகளில் மருத்துவமனை வாரியான தரவு

சத்திர சிகிச்சை கூட பட்டியலின்படி ஒரு மாதத்தில் ஒத்திவைக்கப்பட்ட தேர்ந்தெடுக்கப்பட்ட அறுவை சிகிச்சைகளின் விகிதம் அல்லது குறியிடப்பட்ட அறுவை சிகிச்சைகளில் காத்திருப்பு கால அளவு				
அறுவை சிகிச்சை பாதுகாப்பு சரிபார்ப்புப் பட்டியலைப் பின்பற்றும் விகிதம்				
ஆய்வக அறிக்கைகள் இல்லாமல் வெளிநோயாளர் பிரிவில் காத்திருப்பு நேரம் (நிமிடங்கள்)				

DNA = தரவு கிடைக்கவில்லை

உள்நாட்டு மருத்துவத் துறையின் செயல்திறன் குறிகாட்டிகள்

- உள்நாட்டு மருத்துவ சேவையின் தரம்
- தரமான மூலிகை மூலப்பொருட்கள் மற்றும் தரமான தரப்படுத்தப்பட்ட மருந்துகளின் உற்பத்தி.
- பாரம்பரிய மருத்துவம் மற்றும் மருத்துவ அறிவைப் பாதுகாத்தல்
- உள்நாட்டு மருத்துவத் துறையில் ஆராய்ச்சி வாய்ப்புகளை விரிவுபடுத்துதல்.
- ஆரம்ப சுகாதாரப் பராமரிப்பு மற்றும் தொற்றா நோய்க் கட்டுப்பாட்டுக்கு உள்நாட்டு மருத்துவத்தின் பங்களிப்பு.

வரி அமைச்சக மருத்துவமனைகளின் செயல்திறன் குறிகாட்டிகள் (அடிப்படை மருத்துவமனைகள் மற்றும்)

- **தேசிய மருத்துவமனைகள்**

காட்டி	இலங்கை தேசிய மருத்துவமனை	கண்டி தேசிய வைத்தியசாலை	தேசிய வைத்தியசாலை காலி
இந்த ஆண்டு டெங்கு இறப்பு விகிதம்	1	0	0.51
வருடத்தில் மாரடைப்பு நோயால் அனுமதிக்கப்பட்ட நோயாளிகளில் இறப்பு விகிதம்	11	9	13.5
படுக்கைகளின் எண்ணிக்கை	3,318	2,741	2,066
படுக்கை வசதி விகிதம்	78	60	75.88
ஆண்டு முழுவதும் செய்யப்பட்ட பெரிய அறுவை சிகிச்சைகளின் எண்ணிக்கை	38,306	17,330	12,184
ஆண்டு முழுவதும் கிடைக்கும் தொற்றா நோய் மேலாண்மைக்கான அத்தியாவசிய மருந்துகளின் சதவீதம்	Indoor 88.24 Out door 52.94	52.63	90.20
வருடத்திற்கு ஒரு MLTக்கு செய்யப்படும் விசாரணைகளின் எண்ணிக்கை	55,770	25,435	48,366
மருந்துகளுக்கான மொத்த ஒதுக்கீட்டில், மருந்துகளுக்கான உள்ளூர் கொள்முதல் செலவினத்தின் சதவீதம்	22.33	98.48	13.89
வருடத்தில் சிசேரியன் விகிதம் (100 உயிருள்ள பிறப்புகளுக்கு சிசேரியன் எண்ணிக்கை)	NA	45	NA
ஆண்டுக்கான LSCS தொற்றுக்குப் பிந்தைய விகிதம்	NA	17.04	NA
வருடத்தில் குறைந்தது ஒரு திறன் மேம்பாட்டுத் திட்டத்தையாவது மேற்கொண்ட ஊழியர்களின் சதவீதம் (வகை வாரியாக)			
1. மருத்துவர்கள்	23.89	14.12	55
2. செவிலியர்கள்	91.67	17.63	84
3.மற்ற தொழில்நுட்ப அதிகாரிகள்	33.26	28.85	68
4.சிறு ஊழியர்கள்	9.50	3.87	54.6
ஒரு மருத்துவரிடம் ஒரு நாளைக்குப் பார்க்கப்படும் பொது OPD நோயாளிகளின் சராசரி எண்ணிக்கை	26	34	90

NA = பொருந்தாது

➢ **போதனா மருத்துவமனைகள்**

காட்டி	மருத்துவமனையின் பெயர்										
	போதனா வைத்தியசாலை அனுராதபுரம்	போதனா மருத்துவமனை பதுளை	போதனா வைத்தியசாலை மட்டக்களப்பு	கொழும்பு வடக்கு ராகம போதனா மருத்துவமனை	கொழும்பு தெற்கு கஞ்சபோவில போதனா மருத்துவமனை	போதனா வைத்தியசாலை யாழ்ப்பாணம்	போதனா வைத்தியசாலை கஹந்தூறை	போதனா வைத்தியசாலை குளியாபிட்டிய	போதனா மருத்துவமனை குருநாகல்	பேராதனை போதனா மருத்துவமனை	போதனா வைத்தியசாலை இரத்தினபுரி
இந்த ஆண்டு டெங்கு இறப்பு விகிதம்	0	0	0.11	0	0		0.2	0		0.11	
வருடத்தில் மாரடைப்பு நோயால் அனுமதிக்கப்பட்ட நோயாளிகளில் இறப்பு விகிதம்	9.39	12.17	8.87	8.50	6.00 1st Q		4.9	3.77		12.20	
படுக்கைகளின் எண்ணிக்கை	1,939	1,468	1,257	1,837	1,281		1,164	640		1,000	
படுக்கை வசதி விகிதம்	68.13	65.40	51.89	63.70	76		62.9	61.13		69	
ஆண்டு முழுவதும் செய்யப்பட்ட பெரிய அறுவை சிகிச்சைகளின் எண்ணிக்கை	17,329	18,324	6,398	11,492	5,983		7,240	5,603		5,583	
ஆண்டு முழுவதும் கிடைக்கும் தொற்றா நோய் மேலாண்மைக்கான அத்தியாவசிய மருந்துகளின் சதவீதம்	100	60.80	68.75	95	85.70		74	84.21		66.60	

வருடத்திற்கு ஒரு MLTக்கு செய்யப்படும் விசாரணைகளின் எண்ணிக்கை	48,069	42,509	59,715	733,476	63,556		51,035	31,598		30,575	
மருந்துகளுக்கான மொத்த ஒதுக்கீட்டில், மருந்துகளுக்கான உள்ளூர் கொள்முதல் செலவினத்தின் சதவீதம்	100	3.14	4.78	3.92	99.26		4.5	100		1.98	
வருடத்தில் சிசேரியன் விகிதம் (100 உயிருள்ள பிறப்புகளுக்கு சிசேரியன் எண்ணிக்கை)	37.06	46.90	35.22	46.24	44.89		42.3	46.51		52.00	
ஆண்டுக்கான LSCS தொற்றுக்குப் பிந்தைய விகிதம்	1.43	0.80	0.19	1.05	0.48		0.13	0.26		0.95	
வருடத்தில் குறைந்தது ஒரு திறன் மேம்பாட்டுத் திட்டத்தையாவது மேற்கொண்ட ஊழியர்களின் சதவீதம் (வகை வாரியாக)											
1. மருத்துவர்கள்	39.31	81.60	60.78	41.00	10.00		23.7	22.05		1.70	
2. செவிலியர்கள்	23.94	114.80	67.50	90.00	55.00		50	24.00		46.11	
3. பிற தொழில்நுட்ப அதிகாரிகள்	39.39	76.90	10.68	30.00	-		20.60	25.00		19.38	
4. சிறு ஊழியர்கள்	0.49	40.90	51.00	0.02	29.00		11.90	14.08		32.80	
ஒரு மருத்துவரிடம் ஒரு நாளைக்குப் பார்க்கப்படும் பொது OPD நோயாளிகளின் சராசரி எண்ணிக்கை	66	82	61	62	27		52	49		24	

➢ **சிறப்பு மருத்துவமனைகள்**

காட்டி	அபேக்ஷா மருத்துவமனை மஹாராகம	கேஸில் ஸ்ட்ரீட் மகளிர் மருத்துவமனை	டி சொய்சா மகளிர் மருத்துவமனை	லேடி ரிட்ஜ்வே பெண்களுக்கான நட்பு மருத்துவமனை (கற்பித்தல்) - காலி	லேடி ரிட்ஜ்வே குழந்தைகளுக்கான மருத்துவமனை	இலங்கை தேசிய பல மருத்துவமனை (கற்பித்தல்)	தேசிய கண் மருத்துவமனை	தேசிய தொற்று நோய்கள் நிறுவனம் முல்லேரியா	தேசிய மனநல நிறுவனம் முல்லேரியாவா பிரதேச நகரம்
இந்த ஆண்டு டெங்கு இறப்பு விகிதம்	0	0	0	9.1	0		0	0.28	NA
வருடத்தில் மாரடைப்பு நோயால் அனுமதிக்கப்பட்ட நோயாளிகளில் இறப்பு விகிதம்	NA	0	0	NA	0		0	7.6	DNA
படுக்கைகளின் எண்ணிக்கை	1,015	473	290	411	1049		503	300	1,355
படுக்கை வசதி விகிதம்	69	55.30	70.13	48.20	55		46.62	41.00	72.17
ஆண்டு முழுவதும் செய்யப்பட்ட பெரிய அறுவை சிகிச்சைகளின் எண்ணிக்கை	3,088	4,917	2,819	4,923	6,020		27,255	-	NA
ஆண்டு முழுவதும் கிடைக்கும் தொற்றா நோய் மேலாண்மைக்கான அத்தியாவசிய மருந்துகளின் சதவீதம்	69.68	88.45	93	100	87.50		88.88	87.50	54.55
வருடத்திற்கு ஒரு MLTக்கு செய்யப்படும் விசாரணைகளின் எண்ணிக்கை	31,360	21,970	27,603	28,818	38,212		14,732	22,870	16,155
மருந்துகளுக்கான மொத்த ஒதுக்கீட்டில், மருந்துகளுக்கான உள்ளூர் கொள்முதல் செலவினத்தின் சதவீதம்	14.19	100	27.03	1.30	81.60		32.38	5	5.56

காட்டி	அபேக்ஷா மருத்துவமனை மஹாராகம	காசல் வீதி மகளிர் மருத்துவமனை	டி சொய்சா மகளிர் மருத்துவமனை	ஜெர்மன்-இலங்கை பெண்களுக்கான நட்பு மருத்துவமனை (போதனா) - காலி	லேடி ரிட்ஜ்வே குழந்தைகளுக்கான மருத்துவமனை	இலங்கை தேசிய பல் மருத்துவமனை (போதனா)	தேசிய கண் மருத்துவமனை	முஸ்லீரியா தேசிய தொற்று நோய்கள் நிறுவனம்	தேசிய மனநல நிறுவனம், முஸ்லீரியா புதிய நகரம்
வருடத்தில் சிசேரியன் விகிதம் (100 உயிருள்ள பிறப்புகளுக்கு சிசேரியன் எண்ணிக்கை)	NA	41.72	38.81	41.70	NA		NA	NA	NA
ஆண்டுக்கான LSCS தொற்றுக்குப் பிந்தைய விகிதம்	NA	0.88	1.10	0.66	NA		NA	NA	NA
வருடத்தில் குறைந்தது ஒரு திறன் மேம்பாட்டுத் திட்டத்தையாவது மேற்கொண்ட ஊழியர்களின் சதவீதம் (வகை வாரியாக)									
1. மருத்துவர்கள்	59.50	61.20	79.00	75.50	96.26		24.00	100	25.64
2. செவிலியர்கள்	72.00	67.48	81.00	27.70	94.25		21.62	66.00	6.90
3. பிற தொழில்நுட்ப அதிகாரிகள்	41.70	38.83	66.60	48.20	68.00		30.00	71.00	78.00
4. சிறு ஊழியர்கள்	43.80	60.00	78.43	36.20	29.19		0	100	7.10
ஒரு மருத்துவரிடம் ஒரு நாளைக்கு சராசரியாகப் பார்க்கப்படும் பொது OPD நோயாளிகளின் எண்ணிக்கை	NA	22	05	62	51		49	58	02

காட்டி	தேசிய சிறுநீரகவியல், டயாலிசிஸ் மற்றும் மாற்று அறுவை சிகிச்சை நிறுவனம் மாவிகாவத்தை	வெலிசறை சுவாச நோய்களுக்கான தேசிய மருத்துவமனை	தேசிய சிறுநீரகவியல் சிறப்பு மருத்துவமனை பொலன்னறுவை	வாத நோய் மற்றும் மறுவாழ்வு மருத்துவமனை, ராகம	சிறுமாவோ பண்டாரநாயக்க விசேட சிறுவர் வைத்தியசாலை பேராதனை
இந்த ஆண்டு டெங்கு இறப்பு விகிதம்	0	NA	0	NA	0
வருடத்தில் மாரடைப்பு நோயால் அனுமதிக்கப்பட்ட நோயாளிகளில் இறப்பு விகிதம்	0	NA	NA	NA	0
படுக்கைகளின் எண்ணிக்கை	60	564	292	218	343
படுக்கை பயன்படுத்தப்பட்ட விகிதம்	56.70	46.17	60.90	60.77	49.90
ஆண்டு முழுவதும் செய்யப்பட்ட பெரிய அறுவை சிகிச்சைகளின் எண்ணிக்கை	147	1,228	177	NA	2,263
ஆண்டு முழுவதும் கிடைக்கும் தொற்றா நோய் மேலாண்மைக்கான அத்தியாவசிய மருந்துகளின் சதவீதம்	NA	100	69.75	0	-
வருடத்திற்கு ஒரு MLTக்கு செய்யப்படும் விசாரணைகளின் எண்ணிக்கை	22,436	23,987	47,957	20,296	22.63
மருந்துகளுக்கான மொத்த ஒதுக்கீட்டில், மருந்துகளுக்கான உள்ளூர் கொள்முதல் செலவினத்தின் சதவீதம்	1.35	3.7	Under DGHP	0	-

காட்டி	தேசிய சிறுநீரகவியல், டயாலிசிஸ் மற்றும் மாற்று அறுவை சிகிச்சை நிறுவனம் மாளிகாவத்தை	வெலிசறை சுவாச நோய்களுக்கான தேசிய மருத்துவமனை	தேசிய சிறுநீரகவியல் சிறப்பு மருத்துவமனை பொலன்னறுவை	வாத நோய் மற்றும் மறுவாழ்வு மருத்துவமனை, ராகம	சிறிமாவோ பண்டாரநாயக்க விசேட சிறுவர் வைத்தியசாலை பேராதனை
வருடத்தில் சிசேரியன் விகிதம் (100 உயிருள்ள பிறப்புகளுக்கு சிசேரியன் எண்ணிக்கை)	NA	NA	NA	NA	NA
ஆண்டுக்கான LSCS தொற்றுக்குப் பிந்தைய விகிதம்	NA	NA	NA	NA	NA
வருடத்தில் குறைந்தது ஒரு திறன் மேம்பாட்டுத் திட்டத்தையாவது மேற்கொண்ட ஊழியர்களின் சதவீதம் (வகை வாரியாக)					
1. மருத்துவர்கள்	28.00	45.60	25.00	50.00	0
2. செவிலியர்கள்	71.00	73.50	251.90	74.00	57.00
3.மற்ற தொழில்நுட்ப அதிகாரிகள்		32.50	-	84.00	0
4. சிறு ஊழியர்கள்		140	65.28	96.50	0
ஒரு மருத்துவரிடம் ஒரு நாளைக்கு சராசரியாகப் பார்க்கப்படும் பொது OPD நோயாளிகளின் எண்ணிக்கை	No OPD	15	01	18	26

NA - பொருந்தாது

காட்டி	மருத்துவமனையின் பெயர் மருத்துவமனையின் பெயர்	
காட்டி	ஸ்ரீ ஜெயவர்தனபுர பொது மருத்துவமனை	விஜய குமாரதுங்க நினைவு வைத்தியசாலை
இந்த ஆண்டு டெங்கு இறப்பு விகிதம்	00	00
வருடத்தில் மாரடைப்பு நோயால் அனுமதிக்கப்பட்ட நோயாளிகளில் இறப்பு விகிதம்	9.30	00
படுக்கைகளின் எண்ணிக்கை	1008	137
படுக்கை ஆக்கிரமிப்பு விகிதம்	57.11	70
ஆண்டு முழுவதும் செய்யப்பட்ட பெரிய அறுவை சிகிச்சைகளின் எண்ணிக்கை	4,619	11,024
ஆண்டு முழுவதும் கிடைக்கும் தொற்றா நோய் மேலாண்மைக்கான அத்தியாவசிய மருந்துகளின் சதவீதம்	100	100
வருடத்திற்கு ஒரு MLTக்கு செய்யப்படும் விசாரணைகளின் எண்ணிக்கை	33,431	17,836
மருந்துகளுக்கான மொத்த ஒதுக்கீட்டில், மருந்துகளுக்கான உள்ளூர் கொள்முதல் செலவினத்தின் சதவீதம்	4.10	89.61

	ஸ்ரீ ஜெயவர்தனபுர பொது மருத்துவமனை	விஜய குமாரதுங்க நினைவு வைத்தியசாலை
வருடத்தில் சிசேரியன் விகிதம் (100 உயிருள்ள பிறப்புகளுக்கு சிசேரியன் எண்ணிக்கை)	58.94	NA
ஆண்டுக்கான LSCS-க்குப் பிந்தைய தொற்று விகிதம்	0	NA
வருடத்தில் குறைந்தது ஒரு திறன் மேம்பாட்டுத் திட்டத்தையாவது மேற்கொண்ட ஊழியர்களின் சதவீதம் (வகை வாரியாக)		
1. மருத்துவர்கள்	17.83	0
2. செவிலியர்கள்	5.57	32.46
3. பிற தொழில்நுட்ப அதிகாரிகள்	22.00	46.60
4. சிறு ஊழியர்கள்	96.00	0
ஒரு மருத்துவரிடம் ஒரு நாளைக்கு சராசரியாகப் பார்க்கப்படும் பொது OPD நோயாளிகளின் எண்ணிக்கை	27	60

➢ **மாவட்ட பொது மருத்துவமனைகள்**

